ஏப்ரல் 2022

WINMEEN.COM
LEARNING LEADS TO RULING

# நடப்பு நிகழ்வுகள்






| வ. எண் | பொருளடக்கம் |
|---|---|
| 01. | ஏற்றுமதியில் இந்தியாவின் சாதனை<br>(India's Achievement in Export) |
| 02. | 'பத்ம பூஷன்' விருது பெற்ற முதல் பாரா – தடகள வீரர்<br>(First para-athlete to receive the Padma Bhushan in India) |
| 03. | 2022 மார்ச் – ஜிஎஸ்டி வசூல்<br>(2022 March – GST Collection) |
| 04. | மியாமி ஓப்பன்<br>(Miami Open) |
| 05. | 2022 – புவி மணி நேரம்<br>(2022 – Earth Hour) |
| 06. | MSME சர்வதேச உச்சிமாநாடு<br>(MSME International Summit) |
| 07. | ஆட்டிசம் விழிப்புணர்வு நாள்<br>(Autism Awareness Day) |
| 08. | 2022 – BIMSTEC உச்சிமாநாடு<br>(2022 – BIMSTEC Summit) |
| 09. | IMEX – 2022 |
| 10. | தேசிய கடல்சார் நாள்<br>(National Maritime Day) |
| 11. | தேசிய நீர் விருதுகள்<br>(Nationa Water Awards) |
| 12. | உலக வானிலை நாள்<br>(World Meteorological Day) |
| 13. | 2022 – ICC மகளிர் உலகக்கோப்பை<br>(ICC Women's World Cup 2022) |
| 14. | TATA Neu |
| 15. | She Auto |
| 16. | அம்பேத்கர் பிறந்தநாள் – சமத்துவ நாள்<br>(Ambedkar's Birthday as Equality Day) |
| 17. | COP 28 – காலநிலை உச்சி மாநாடு<br>(COP 28 – Climate Summit) |
| 18. | CUET-க்கு எதிரான தீர்மானம்<br>(Resolution against CUET) |
| 19. | தேசிய பாதுகாப்பான தாய்மை நாள்<br>(National Safe Motherhood Day) |
| 20. | உலக மர நகரம்<br>(World Tree City) |

**1.** UNEP 'வருடாந்திர பிராண்டியர் அறிக்கை, 2022'இன் படி, உலக அளவில் ஒலி மாசுபட்ட நகரங்களில் 2ஆவது இடத்தில் உள்ள இந்திய நகரம் எது?




அ) மும்பை

**ஆ) மொராதாபாத் ☑**

இ) கான்பூர்

ஈ) பாட்னா

✓ ஐநா சுற்றுச்சூழல் திட்டத்தால் வெளியிடப்பட்ட சமீபத்திய 'Annual Frontier' அறிக்கை – 2022'இன்படி, உத்தர பிரதேச மாநிலத்தின் மொராதாபாத், உலக அளவில் அதிக ஒலி மாசுபட்ட நகரங்களில் 2ஆவது இடத்தில் உள்ளது.

✓ 2021–இல் WHO நிர்ணயித்த 55 dB–க்கு எதிராக, 114 டெசிபல் ஒலி மாசுபாட்டை அந்நகரம் பதிவு செய்தது. ஐந்து இந்திய நகரங்களை உள்ளடக்கிய உலகெங்குமுள்ள 61 நகரங்களின் பட்டியலில் டாக்கா முதலிடத்தில் உள்ளது.

---

**2.** சமீப அரசாங்கத் தரவுகளின்படி, 2022ஆம் ஆண்டு நிலவரப்படி, நாட்டிலேயே அதிக ODF+ சிற்றூர்களைக் கொண்ட மாநிலம் எது?

அ) தமிழ்நாடு

**ஆ) தெலுங்கானா ☑**

இ) குஜராத்

ஈ) மகாராஷ்டிரா

✓ நாட்டில் 50,000 ODF பிளஸ் கிராமங்கள் உள்ளன என்று அரசாங்கம் சமீபத்தில் அறிவித்தது. ODF+ கிராமம் என்பது திறந்தவெளி மலங்கழித்தலற்ற நிலையைத் தக்கவைத்து, திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மையை உறுதி செய்து, பார்வைக்கு தூய்மையாக இருக்கும் கிராமமாகும்.

✓ 13,960 ODF+ கிராமங்களுடன் தெலுங்கானா மாநிலம் முதலிடத்தில் உள்ளது. 11,477 ODF+ உடன் தமிழ்நாடு 2 ஆம் இடத்திலும்; 3,849 ODF+ உடன் மத்திய பிரதேசம் மாநிலம் 3ஆம் இடத்திலும் உள்ளது.

---

**3.** கரடுமுரடான பற்கள்கொண்ட டால்பின்கள் (*Steno bredanensis*) முதன்முறையாக இந்தியாவின் எம்மாநிலம் /யூடியில் நேரடியாகக் காணப்பட்டது?



அ) கேரளா

**ஆ) இலட்சத்தீவுகள் ☑**

இ) கோவா

ஈ) மகாராஷ்டிரா

✓ இலட்சத்தீவுகளில் உள்ள சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையின் கடல் பாலூட்டிகள் ஆராய்ச்சிக் குழு, இந்தியக் கடற்பகுதியில் முதன்முறையாக கரடுமுரடான பற்கள் கொண்ட ஓங்கில்களை (*Steno bredanensis*) நேரடியாகக் கண்டதாகத் தெரிவித்துள்ளது.

---

**4.** 'இராஷ்ட்ரிய சமற்கிருதி மகோத்சவம் – 2022' தொடங்கியுள்ள மாநிலம் / UT எது?



அ) இராஜஸ்தான்

**ஆ) ஆந்திர பிரதேசம் ☑**

இ) குஜராத்

ஈ) உத்தர பிரதேசம்

✓ அமுதப்பெருவிழாவின் ஒருபகுதியாக, 'இராஷ்ட்ரிய சமற்கிருதி மகோத்சவம்–2022' ஆனது ஆந்திர பிரதேசத்தில், ஆளுநர் விஸ்வபூசன் ஹரிசந்தன் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. 'இராஷ்ட்ரிய சமற்கிருதி மகோத்சவம்' என்பது கலாசார அமைச்சகத்தின் முதன்மை திருவிழா ஆகும். இது இந்திய நாட்டின் வளம்மிகுந்த கலாச்சார பாரம்பரியத்தை பாதுகாக்கவும், மேம்படுத்தவும் மற்றும் பிரபலப்படுத்தவும் நோக்கம் எனக் கொண்டுள்ளது. முதல் 'இராஷ்ட்ரிய சமற்கிருதி மகோத்சவம்' ஆனது கடந்த 2015ஆம் ஆண்டில் ஏற்பாடு செய்யப்பட்டது.

---

**5.** 2022ஆம் ஆண்டில் சிறந்த திரைப்படத்திற்கான ஆஸ்கர் விருதை வென்ற திரைப்படம் எது?




அ) King Richard

ஆ) The Power of Dog

**இ) CODA ☑**

ஈ) West Side Story

✓ 94ஆம் அகாதமி விருதுகளில், சியான் ஹெடரின் 'CODA' 'சிறந்த படத்திற்கான' ஆஸ்கர் விருதை வென்றது.

✓ 'கிங் ரிச்சர்ட்' படத்திற்காக வில் ஸ்மித் சிறந்த நடிகராகவும், சிறந்த நடிகைக்கான விருதை ஜெசிகா சாஸ்டெய்னும் வென்றனர். அரியானா டிபோஸ், 'வெஸ்ட் சைட் ஸ்டோரி' படத்திற்காக சிறந்த குணச்சித்திர நடிகைக்கான விருதை வென்றார்.

---

**6.** 2021–2022 நிதியாண்டில், ஏற்றுமதியில் இந்தியா எந்த மைல்கல் சாதனையை எட்டியது?

அ) $200 பில்லியன் ஆ) $300 பில்லியன் EXPORT

**இ) $400 பில்லியன் ☑** ஈ) $500 பில்லியன்

✓ இந்தியா சமீபத்தில் முதன்முறையாக ஒரு நிதியாண்டில் $400 பில்லியன் டாலர் ஏற்றுமதி இலக்கை எட்டியுள்ளது.

✓ இந்தச் சாதனையானது திட்டமிட்டதைவிட 9 நாட்களுக்கு முன்னதாகவே எட்டப்பட்டுள்ளது.

✓ 2020–21 நிதியாண்டில் இந்தியாவின் சரக்கு ஏற்றுமதி $298.1 பில்லியன் டாலர்களாக இருந்தது.

---

**7.** எம்மாநிலம் / யூனியன் பிரதேசத்தின் முதலமைச்சராக புஷ்கர் சிங் தாமி பதவியேற்றார்?



அ) மணிப்பூர் ஆ) கோவா

**இ) உத்தரகாண்ட் ☑** ஈ) பஞ்சாப்

✓ பாஜக தலைவர் புஷ்கர் சிங் தாமி தொடர்ந்து இரண்டாவது முறையாக உத்தரகாண்ட் முதல்வராக பதவியேற்றார். அவருடன் 8 கேபினட் அமைச்சர்களும் பதவிப்பிரமாணம்

செய்து கொண்டனர். மலையக மாநிலமான உத்தரகண்ட்–டின் 12ஆவது முதலமைச்சராக தாமி பதவியேற்றார்.

---

**8. 'அனைத்து மனித உரிமை மீறல்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் கண்ணியம் தொடர்பான உண்மைக்கான உரிமைக்கான உலக நாள்' அனுசரிக்கப்படும் தேதி எது?**

அ) மார்ச்.22

**ஆ) மார்ச்.24 ☑**

இ) மார்ச்.26

ஈ) மார்ச்.28

✓ மார்ச்.24 அன்று, 'அனைத்து மனித உரிமை மீறல்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் கண்ணியம் தொடர்பான உண்மைக்கான உரிமைக்கான உலக நாள் – *International Day for the Right to the Truth Concerning Gross Human Rights Violations and for the Dignity of Victims*' அனுசரிக்கப்படுகிறது. ஐநா பொது அவையால் கடந்த 2010ஆம் ஆண்டில் இந்த நாள் அறிவிக்கப்பட்டது.

---

**9. இந்தியாவில், 'பத்ம பூஷன்' விருது பெற்ற முதல் பாரா–தடகள வீரர் யார்?**



**அ) தேவேந்திர ஜஜாரியா ☑**

ஆ) மாரியப்பன் தங்கவேலு

இ) அவனி லெகாரா

ஈ) பவீனா படேல்

✓ இந்தியாவில், 'பத்ம பூஷன்' விருது பெற்ற முதல் பாரா–தடகள வீரர் தேவேந்திர ஜஜாரியா ஆவார். 'பத்ம பூஷன்' என்பது இந்தியாவில் குடிமக்களுக்கு வழங்கப்படும் 3ஆவது உயரிய விருதாகும். தேவேந்திர ஜஜாரியா, கடந்த 2004–இல் ஏதென்ஸில் நடந்த பாராலிம்பிக்ஸில் முதல் தங்கம், 2016 ரியோ விளையாட்டுப் போட்டிகளில் 2ஆவது தங்கம், 2020 டோக்கியோ ஒலிம்பிக்கில் வெள்ளி உட்பட பல பாராலிம்பிக் பதக்கங்களை வென்றுள்ளார்.

✓ பாரா–ஷூட்டர் வீராங்கனையான அவனி லெகாராவுக்கு 'பத்மஸ்ரீ' விருது வழங்கப்பட்டுள்ளது.

---

**10. 2025ஆம் ஆண்டுக்குள் எத்தனை புதிய வானூர்தி நிலையங்களை அமைப்பதற்கு இந்தியா இலக்கு நிர்ண–யித்துள்ளது?**

அ) 110 **ஆ) 220 ☑**

இ) 330 ஈ) 440

✓ 2025ஆம் ஆண்டுக்குள் 220 புதிய வானூர்தி நிலையங்–களை அமைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாக மத்திய உள்நாட்டு விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா அறிவித்தார்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இந்திய புவியியல் ஆய்வுத்துறை புதிய தலைமை இயக்குநர் இன்று பொறுப்பேற்பு**

இந்திய புவியியல் ஆய்வுத்துறையின் தலைமை இயக்குநராக தமிழ்நாட்டைச்சேர்ந்த முனைவர் எஸ் ராஜு, பொறுப்பேற்கிறார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பு:

இந்திய புவியில் ஆய்வுத்துறையின் கூடுதல் தலைமை இயக்குநராக 2018–ஆம் ஆண்டு முதல் பணியாற்றிவரும் இவர், தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள பசுவந்தனை கிராமத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர்.

---

**2. மெட்ரோ ரயில்கள் இனி காலை 5 முதல் இரவு 11 மணி வரை இயக்கம்**

பொதுமக்களின் வசதிக்காக வியாழக்கிழமை முதல் அனைத்து நாள்களிலும் காலை 5 முதல் இரவு 11 மணி வரை மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும் என சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி திங்கள் முதல் சனிக்கிழமை வரை, நெரிசல்மிகு நேரமான காலை 8 முதல் காலை 11 மணி வரையிலும், மாலை 5 முதல் இரவு 8 மணி வரையிலும் 5 நிமிட இடை வெளியிலும், மற்ற நேரங்களில் 10 நிமிட இடை வெளியிலும், இரவு 10 முதல் 11 மணி வரை 15 நிமிட இடைவெளியிலும் ரயில்கள் இயக்கப்படுகின்றன.

ஞாயிற்றுக்கிழமை மற்றும் அரசு விடுமுறை நாள்களில் காலை 5 முதல் இரவு 10 மணி வரை 10 நிமிட இடை வெளியிலும், இரவு 10 முதல் 11 மணி வரை 15 நிமிட இடைவெளியிலும் ரயில்கள் இயக்கப்படும் என நிர்வாகம் தெரிவித்துள்ளது.

---

**3. 100 நாள் வேலை திட்டத்திற்காக ₹949 கோடி ஒதுக்கீடு – தமிழ்நாடு அரசு அரசாணை வெளியீடு**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் படி 100 நாள் வேலை திட்டத்திற்காக ₹949 கோடி ஒதுக்கீடு செய்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டு உள்ளது.

இதில் மத்திய அரசு சார்பில் 75% நிதியும், மாநில அரசு சார்பில் 25% நிதியும் ஒதுக்கப்பட்டதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

---

**4. நீதிமன்ற உத்தரவுகள் விரைந்து கிடைக்க 'ஃபாஸ்டர்' புதிய மென்பொருளை அறிமுகம் செய்தார் தலைமை நீதிபதி**

நீதிமன்ற உத்தரவுகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு விரைந்து கிடைக்க, 'ஃபாஸ்டர்' என்ற புதிய மென்பொருளை இந்திய உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி அறிமுகம் செய்தார். மின்னணு தொழினுட்பம் மூலம் பிணை உட்பட பல்வேறு வழக்குகளில் நீதிமன்றங்கள் பிறப்பிக்கும் உத்தரவுகள் அதிகாரிகளை விரைந்து சென்று சேரும் வகையில் 'ஃபாஸ்டர்' (Faster) என்ற மென்பொருளை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி N V ரமணா அறிமுகம் செய்து வைத்தார்.

---

**1.** **நடப்பு 2022இல் கத்தாரில் நடைபெறக்கூடிய FIFA உலகக்கோப்பைப் போட்டிகளின் அதிகாரப்பூர்வ வழங்கு–நராக அறிவிக்கப்பட்டுள்ள இந்திய நிறுவனம் எது?**

அ) டாடா

ஆ) பேடியெம்

**இ) BYJU'ஸ் ☑**

ஈ) சொமேடோ

✓ இந்திய கல்விசார் தொழில்நுட்ப நிறுவனமான BYJU'ஸ். 2022இல் கத்தாரில் நடக்கும் FIFA உலகக்கோப்பைப் போட்டிகளின் அதிகாரப்பூர்வ வழங்குநராக அறிவிக்கப்–பட்டுள்ளது. 2022 FIFA உலகக்கோப்பையானது 2022 நவ.21 முதல் டிச.18 வரை கத்தாரில் நடைபெறவுள்ளது.

---

**2.** **'சுரக்ஷா கவாச்–2' என்பது இந்திய இராணுவம் மற்றும் பின்வரும் எந்த மாநிலத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டுப் பாதுகாப்புப் பயிற்சியாகும்?**



அ) தமிழ்நாடு

ஆ) தெலுங்கானா

இ) குஜராத்

**ஈ) மகாராஷ்டிரா ☑**

✓ 'சுரக்ஷா கவாச்–2' என்பது புனேவிலுள்ள லுல்லா நகரில் இந்திய இராணுவம் மற்றும் மகாராஷ்டிரா காவல்துறை ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு கூட்டு பாதுகாப்பு பயிற்சியாகும். புனேவில் பயங்கரவாத நடவடிக்கைகளை எதிர்கொள்ள ராணுவமும் காவல்துறையும் மேற்கொண்ட நடைமுறைகளை ஒருங்கிணைப்பதே இந்தப் பயிற்சியின் நோக்கமாகும்.

---

**3.** **செர்தார் பெர்டிமுகமெடோவ் என்பவர் கீழ்காணும் எந்த நாட்டின் அதிபர் தேர்தலில் வெற்றி பெற்றார்?**

**அ) துர்க்மெனிஸ்தான் ☑**



ஆ) ஈரான்

இ) பாகிஸ்தான்

ஈ) ஆப்கானிஸ்தான்

✓ துர்க்மெனிஸ்தான் அதிபர் தேர்தலில் நாற்பது வயதான செர்தார் பெர்டிமுகமடோவ் வெற்றி பெற்றுள்ளார். அவர் அந்நாட்டுத்தலைவரின் மகனாவார். சமீபத்தில் நடந்த தேர்தலில், பெர்டிமுகமடோவ் 72.97% வாக்குகளைப் பெற்று அவரது தந்தை குர்பங்குலிக்கை அடுத்து பதவி ஏற்றார் என மத்திய தேர்லாணையம் தெரிவித்துள்ளது.

---

**4.** **தோட்டக்கலைப்பயிர்களின் பரப்பளவு மற்றும் உற்பத்தி குறித்த 2020–21–இன் இறுதி மதிப்பீடுகளின்படி, 2020–21–இல் அவற்றின் மொத்த உற்பத்தி என்ன?**



அ) 134.60 மில்லியன் டன்

ஆ) 234.60 மில்லியன் டன்

**இ) 334.60 மில்லியன் டன் ☑**

ஈ) 434.60 மில்லியன் டன்

✓ வேளாண்மை மற்றும் உழவர்கள் நலத்துறையானது 2020–21ஆம் ஆண்டிற்கான இறுதி மதிப்பீடுகளையும், 2021–22ஆம் ஆண்டுக்கான முதலாவது முன்கூட்டிய மதிப்பீடுகளையும் பல்வேறு தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பளவு மற்றும் உற்பத்தியையும் வெளியிட்டது.

✓ 2020–21ஆம் ஆண்டில் மொத்த தோட்டக்கலை உற்பத்தி 334.60 மில்லியன் டன்னாக மதிப்பிடப்பட்டுள்ளது, இது 2019–20இல் எட்டப்பட்டதைவிட சுமார் 4.4% அதிகமாகும்.

✓ பழங்கள் மற்றும் காய்கறிகளின் உற்பத்தி முறையே 102.48 மில்லியன் டன் மற்றும் 200.45 மில்லியன் டன் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2021–22இல் மொத்த தோட்டக் கலை உற்பத்தி 2020–21–ஐவிட 333.3 மில்லியன் டன் (0.4% குறைவு) என மதிப்பிடப்பட்டுள்ளது.

---

**5.** **குறைகடத்தி சில்லுகள் உற்பத்திக்கு $52 பில்லியன் டாலர்களை மானியமாக வழங்குவதற்கான மசோதாவுக்கு அண்மையில் ஒப்புதல் அளித்த நாடு எது?**

அ) ரஷ்யா



**ஆ) அமெரிக்கா ☑**

இ) இங்கிலாந்து

ஈ) ஜெர்மனி

✓ குறைகடத்தி சில்லுகள் உற்பத்திக்கு $52 பில்லியன் டாலர்களை மானியமாக வழங்குவதற்கான மசோதா ஒன்றுக்கு அமெரிக்க செனட் ஒப்புதல் அளித்துள்ளது.

✓ "மாநாடு" எனப்படும் ஒரு முறையான செயல்முறையைத் தொடங்க, இச்சட்டம் பிரதிநிதிகள் சபைக்கு அனுப்பப்பட்டது.

---

**6.** **அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'ஜிங்கிங் ஜ்ரி: வாழும் வேர்ப்பாலங்கள்' அமைந்துள்ள மாநிலம் எது?**

அ) அஸ்ஸாம்



ஆ) சிக்கிம்

**இ) மேகாலயா ☑**

ஈ) ஜம்மு–காஷ்மீர்

✓ "ஜிங்கியெங் ஜ்ரி: வாழும் வேர்ப்பாலங்கள் – மேகாலயா மாநிலத்தின் கலாசார நிலப்பரப்புகள்" UNESCO உலக பாரம்பரிய தள தற்காலிக பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.

✓ இந்த வேர்ப்பாலங்கள் பல அழிவின் விளிம்பிலிருக்கும் தாவரங்கள் மற்றும் விலங்கினங்களுக்கு வாழ்விடமாக உள்ளன. ஆற்றின் இருபுறமும் நடப்பட்ட அத்திமரங்களின் உயிருள்ள வேர்களைப் பயன்படுத்தி, மேகாலயாவின் பழங்குடியினரால் கட்டப்பட்டவையாகும் இப்பாலங்கள்.

---

**7.** **'2030ஆம் ஆண்டை நோக்கி இந்திய வேளாண்மை' என்ற நூலை NITI ஆயோக் ஆனது எந்த நிறுவனத்துடன் இணைந்து வெளியிட்டது?**

அ) UNEP



**ஆ) FAO ☑**

இ) NABARD

ஈ) ICAR

- ✓ மத்திய உழவு மற்றும் உழவர்கள் நலத்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர், '2030ஆம் ஆண்டிற்கான இந்திய உழவு: உழவர்களின் வருமானம், ஊட்டச்சத்து பாதுகாப்பு & நிலையான உணவு மற்றும் பண்ணை அமைப்புகளை மேம்படுத்துவதற்கான பாதைகள்' என்ற தலைப்பிலான நூலை வெளியிட்டார்.
- ✓ NITI ஆயோக் மற்றும் விவசாயம் மற்றும் விவசாயிகள் நல, மீன்வளம், கால்நடை வளர்ப்பு மற்றும் பால்வள அமைச்சகங்களின் பேச்சுவார்த்தையின் விளைவுகளை இந்த நூல் எடுத்துக்கூறுகிறது. ஐநாவின் உணவு மற்றும் உழவு அமைப்பின் (FAO) ஆதரவின்கீழ் இந்நூல் உருவாக்கப்பெற்றதாகும்.

---

**8. அழிவின் விளிம்பிலிருக்கும் ஆலிவ் ரிட்லி ஆமைகளின் கூடுகளுக்குப் பெயர் பெற்ற ருஷிகுல்யா கடற்கரை அமைந்துள்ள மாநிலம் எது?**



அ) தமிழ்நாடு

**ஆ) ஒடிஸா ☑**

இ) மகாராஷ்டிரா

ஈ) ஆந்திர பிரதேசம்

- ✓ அண்மையில், 1,14,305 ஆலிவ் ரிட்லி ஆமைகள் கூடு கட்டுவதற்காக ருஷிகுல்யா ஆற்றின் முகத்துவாரத்திற்கு வந்து சாதனைபடைத்தன. ருசிகுல்யா கடற்கரையானது ஒடிஸாவின் கஞ்சம் மாவட்டத்தில் அமைந்துள்ளது.

---

**9. அரசு மின்–சந்தை (GeM) தளத்தின் தலைமைச் செயல் அதிகாரி (CEO) யார்?**



அ) நந்தன் நிலேகனி

**ஆ) P K சிங் ☑**

இ) அமிதாப் காந்த்

ஈ) இரமேஷ் சந்த்

- ✓ அனைத்து மத்திய அரசு அமைச்சகங்கள் & துறைகளின் சரக்குகள் மற்றும் சேவைகளை இணைவழியில் பெறுவதற்காக கடந்த 2016ஆம் ஆண்டு அரசு மின்னணு சந்தை (GeM) வலைத்தளம் தொடங்கப்பட்டது.
- ✓ இந்தத் தளம், இந்த நிதியாண்டில் ₹1 இலட்சம் கோடியைத் தாண்டியுள்ளதாக GeM–இன் தலைமைச் செயல் அதிகாரி அறிவித்தார். GeM, உலகளவில் முதல் ஐந்து மின்–அரசு கொள்முதல் அமைப்புகளுள் ஒன்றாகும்.
- ✓ இந்தத் தளத்திலிருந்து வாங்கும் முதல் 4 மாநிலங்கள் – உத்தரபிரதேசம், தில்லி, குஜராத் & மத்தியபிரதேசம் ஆகும்.

---

**10. சீனாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ள சாலமன் தீவுகள் அமைந்துள்ள பெருங்கடல்/கடல் எது?**



அ) அட்லாண்டிக் பெருங்கடல்

**ஆ) பசிபிக் பெருங்கடல் ☑**

இ) இந்திய பெருங்கடல்

ஈ) அரபிக்கடல்

- ✓ தென்–பசிபிக் பகுதியிலுள்ள 100க்கணக்கான தீவுகளைக் கொண்ட சாலமன் தீவுகள், சீனாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதை உறுதிப்படுத்தியுள்ளது.
- ✓ ஊடக அறிக்கைகளின்படி, ஆஸ்திரேலியாவின் வடக்கே உள்ள இத்தீவில் சீன இராணுவ தளம் அமைக்கப்படலாம். இந்த நடவடிக்கை அண்டை நாடான ஆஸ்திரேலியா & இந்தோ–பசிபிக் பகுதியில் உள்ள மற்ற மேற்கத்திய நட்பு நாடுகளிடையே கவலையைத் தூண்டியுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. GST வசூல் இதுவரை இல்லாத புதிய உச்சம்: மார்ச்சில் ₹1.42 இலட்சம் கோடி**

GST வசூல் இதுவரை இல்லாத அளவு கடந்த மார்ச் மாதத்தில் புதிய உச்சத்தை அடைந்துள்ளது.

தொடர்ந்து 8ஆவது மாதமாக GST வரி வருவாய் 1 லட்சம் கோடிக்கும் மேல் உயர்ந்துள்ளது. தொடர்ந்து 6ஆவது மாதமாக ₹1.30 இலட்சம் கோடிக்கும் அதிகமாகச் சென்றுள்ளது. இந்த நிலையில், இதுவரை இல்லாத அளவு GST வசூலில் இந்த மார்ச் மாதம் புதிய உச்சத்தை அடைந்துள்ளது. இந்த ஆண்டு மார்ச் மாதம் ₹1,42,095 கோடி GST வசூலாகியுள்ளது.

அதிகபட்ச மாதாந்திர GST வருவாயாக கடந்த ஜனவரி மாதம் ₹1,40,986 கோடி வசூலானது. இந்த ஆண்டு மார்ச் மாதம் வசூலான GST, கடந்த ஆண்டு மார்ச் மாத GST வசூலைவிட 15 சதவீதமும், கடந்த 2020–ஆம் ஆண்டு மார்ச் மாத GST வசூலைவிட 46 சதவீதமும் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

---

**2. சொத்து வரி உயர்வு ஏன்? எத்தனை சதவீதம் உயர்ந்துள்ளது? – தமிழ்நாடு அரசு**

கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவீனம் ஆகியவற்றை கருத்தில் கொண்டும், அடித்தட்டு மக்களின் பொருளாதார நிலையை கருத்தில் கொண்டும் சொத்து வரி சீராய்வு செய்யப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், "மத்திய அரசால் அமைக்கப்பட்ட 15ஆவது நிதி ஆணையமானது, தமது அறிக்கையில் 2022–2023ஆம் ஆண்டு முதல், உள்ளாட்சி அமைப்புகள், ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில், மானியம் பெறுவதற்கான தகுதியைப் பெறும்பொருட்டு, 2021 – 2022ஆம் ஆண்டில், சொத்துவரி தள வீதங்களை (Floor rates) அறிவிக்கை செய்ய வேண்டும் எனவும், மற்றும், மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு ஆண்டு தோறும் சொத்து வரி வீதத்தை உயர்த்திட வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது.

> மேலும், மத்திய அரசின் தூய்மை இந்தியா திட்டம் 20 மற்றும் அம்ருத் 20 ஆகிய திட்டங்களிலும் இதே நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளது

> பெருநகர சென்னை மாநகராட்சியின் பிரதான பகுதியில் (Core city) 1998ஆம் ஆண்டிலும், பெருநகர சென்னை மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகள் மற்றும் இதர நகர்ப்புர உள்ளாட்சிகளில் 2008ஆம் ஆண்டிலும், சொத்து வரி பொது சீராய்வு மேற்கொள்ளப்பட்டது.

> கடந்த ஜூலை 2013ஆம் ஆண்டு, சொத்து வரி பொது சீராய்வு மேற்கொள்வது தொடர்பாக, அரசாணை வெளியிடப்பட்டு, பின்னர் நவம்பர் 2019ஆம் ஆண்டில் நிறுத்தி வைக்கப்பட்டு சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்களை வழங்க குழுவும் அமைக்கப்பட்டது.

> இக்குழு, தற்போது அளித்துள்ள அறிக்கையில், சொத்து வரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்னர், சந்தை மதிப்பு குறியீடு (Market Rate), பணவீக்கம் (Inflation), செலவு பணவீக்க குறியீடு (Cost Inflation Rate), மொத்த உள்நாட்டு உற்பத்தி (GSDP) போன்ற காரணிகள் பரிசீலிக்கப்பட்டுள்ளது.

மொத்த விற்பனை விலை குறியீடானது (Wholesale Price Index) நாட்டின் பண வீக்கத்தை குறிப்பிடும் முக்கிய காரணியாக அமைந்துள்ளது. மொத்த விற்பனை விலை குறியீடு உயர்வை பரிசீலிக்கும் போது 1998 முதல் 2022 வரை பண வீக்கம் 297 மடங்காகவும், 2008 முதல் 2022 வரை 1.79 மடங்காகவும் உயர்ந்துள்ளது.

மேற்கண்டவாறு பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்து வரியில் பல ஆண்டுகளாக எந்த உயர்வும் இல்லாததால் உள்ளாட்சி அமைப்புகளின் மொத்த வருவாயில் சொந்த வருவாயின் பங்கு பெருமளவு குறைந்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் செலவீனம் பலமடங்கு உயர்ந்துள்ளது.

> மேற்குறிப்பிட்ட காரணங்களின் அடிப்படையில் தமிழகத்திலுள்ள நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் கீழ்க்கண்டவாறு சொத்து வரி சீராய்வு செய்யலாம் என பரிந்துரைக்கப்பட்ட குழுவின் அறிக்கையானது அரசால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

i. 600 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25 சதவீதம் மட்டும் சொத்து வரி உயர்த்தப்படுகிறது.

ii. 601 முதல் 1200 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50 சதவீதம் மட்டும் சொத்து வரி உயர்த்தப்படுகிறது.

iii. 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 75 சதவீதம் மட்டும் சொத்து வரி உயர்த்தப்படுகிறது.

iv. 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு100 சதவீதம் சொத்துவரி உயர்வு செய்யப்படவுள்ளது.

v. தற்போது உள்ள சொத்து வரியில், வணிக பயன்பாட்டு கட்டடங்களுக்கு 100 சதவீதமும், தொழிற்சாலை மற்றும் கல்வி நிலைய பயன்பாட்டு கட்டடங்களுக்கு 75 சதவீதமும் உயர்த்தப்படுகிறது.

> (i) அதேபோன்று, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் இதர 20 மாநகராட்சிகளில், சொத்து மதிப்பு உயர்வு 2022-23ஆம் நிதியாண்டில் உயர்த்தப்பட உள்ளது. சொத்து மதிப்பு உயர்வு குறித்த குழுவின் அறிக்கையின்படி, சென்னையின் பிரதான நகரப் பகுதியில் 600 சதுர அடிக்கு குறைவாக உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50 சதவீதமும், சென்னையோடு 2011ல் இணைக்கப்பட்ட பகுதிகள் மற்றும் இதர மாநகராட்சிகளில் 25 சதவீதம் உயர்த்திடவும். மேலும், சென்னையின் பிரதான நகரப் பகுதிகளில் உள்ள 600-1200 சதுர அடிபரப்பளவுள்ள குடியிருப்புகட்டடங்களுக்கு 75 சதவீதம், 1201-1800 சதுர அடி பரப்பளவுள்ள குடியிருப்புகட்டடங்களுக்கு 100 சதவீதம், 1801 சதுர அடிக்கு மேல் பரப்பளவுள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கான சொத்து வரி 150 சதவீதம் உயர்த்தவும், சென்னையோடு 2011-ல் இணைக்கப்பட்ட பகுதிகள் மற்றும் இதர மாநகராட்சிகளில், 600-1200 சதுர அடிபரப்பளவுள்ள குடியிருப்புகட்டடங்களுக்கு 50 சதவீதம், 1201-1800 சதுர அடி பரப்பளவுள்ள குடியிருப்புகட்டடங்களுக்கு 75 சதவீதம், 1801 சதுர அடிக்கு மேல் பரப்பளவுள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கான சொத்து வரி 100 சதவீதம் உயர்த்தவும்,

(ii) சென்னையின் பிரதான நகரப் பகுதிகளில் வணிக பயன்பாட்டு கட்டடங்களுக்கு 150 சதவீதமும், தொழிற்சாலை மற்றும் கல்வி நிலைய கட்டடங்களுக்கு 100 சதவீதமும், சென்னையோடு 2011-ல் இணைக்கப்பட்ட பகுதிகள் மற்றும் இதர மாநகராட்சிகளில் உள்ள வணிக பயன்பாட்டு கட்டடங்களுக்கு 100 சதவீதம், தொழில் மற்றும் கல்வி நிலையங்களுக்கு 75 சதவீதம், சொத்து வரியினை உயர்த்தவும் குழு பரிந்துரைத்துள்ளது. மேற்படி மாநகராட்சிகளின் சொத்து வரி உயர்வு தொடர்பான குழுவின் பரிந்துரையை அரசு ஏற்றுக்கொண்டு, அதனை செயல்படுத்திட சம்பந்தப்பட்ட மாநகராட்சியின் மாமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

> இதற்கு முந்தைய சொத்து வரி சீராய்வுகளின் போது, குடியிருப்புகளின் பரப்பளவிற்கு ஏற்றவாறு தனித்தனியாக பிரித்து சொத்து வரி சீராய்வு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. ஆனால் தற்போதைய சீராய்வு அடித்தட்டு மக்கள் அதிகம் பாதிக்கப்படாத வகையில் குடியிருப்புகளின் பரப்பளவை 4 வகைகளாக பிரித்து நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 1200 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள கட்டடங்கள், பெருநகர சென்னை மாநகராட்சியின் பிரதான (Core city) பகுதியில் 6240 சதவீதமும் ஆகவும், பெருநகர சென்னை மாநகராட்சியின் பிற பகுதிகள், மாநிலத்தின் பிற 20 மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் 88 சதவீதமும் அமைந்துள்ளது. ஆகவே, பெரும்பாலான மக்கள் 1200 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவுள்ள வீடுகளில் வசிப்பதால் இந்த வரி உயர்வு பெருமளவு பாதிப்பினை ஏற்படுத்தாது.

> கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவீனம் ஆகியவற்றை கருத்தில் கொண்டும், அடித்தட்டு மக்களின் பொருளாதார நிலையை கருத்தில் கொண்டும் சொத்து வரி சீராய்வு செய்யப்படுகிறது.

> தற்போது சொத்து வரி சீராய்வு, 2022-2023-ஆம் ஆண்டிற்கான முதலாம் அரையாண்டு முதல் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போது, தமிழகத்தில் உள்ள மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் நடைமுறையில் உள்ள சொத்து வரியானது, இந்தியாவில் உள்ள பல்வேறு மாநகரங்கள் மற்றும் நகரங்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைவாக உள்ளது.

சென்னை மாநகராட்சியில், 600 சதுர அடி பரப்பளவுள்ள குடியிருப்பு கட்டடத்திற்கு தற்போது விதிக்கப்படும் குறைந்தபட்ச சொத்துவரி ₹810 ஆகும். சீராய்விற்குப் பிறகு, இது, ₹1215 ஆக உயரும். ஆனால், இதே பரப்பளவு கொண்ட குடியிருப்பு கட்டடத்திற்கு, மும்பையில் ₹2,157 ஆகவும், பெங்களூருவில் ₹3.464 ஆகவும், கொல்கத்தாவில் ₹3,510 ஆகவும் மற்றும் புனேவில் ₹3,924ஆகவும் உள்ளது.

சென்னை மாநகராட்சியில், 600 சதுர அடி பரப்பளவுள்ள குடியிருப்பு கட்டடத்திற்கு தற்போது விதிக்கப்படும் அதிகபட்ச சொத்துவரி ₹3,240 ஆகும். சீராய்விற்குப் பிறகு. இது, ₹4.860 ஆக உயரும். ஆனால், இதே பரப்பளவு கொண்ட குடியிருப்பு கட்டடத்திற்கு, பெங்களூருவில் ₹8.660 ஆகவும், கொல்கத்தாவில் ₹15,984 ஆகவும், புனேவில் ₹17,112 ஆகவும்மற்றும் மும்பையில் ₹84,583 ஆகவும் உள்ளது.

கோயம்புத்தூர் மாநகராட்சியில், 600 சதுர அடி பரப்பளவுள்ள குடியிருப்பு கட்டடத்திற்கு தற்போது விதிக்கப்படும் குறைந்தபட்ச சொத்துவரி ₹204 ஆகும். சீராய்விற்குப் பிறகு, இது, ₹255 ஆக உயரும். ஆனால், இதே பரப்பளவு கொண்ட குடியிருப்பு கட்டடத்திற்கு, லக்னோவில் ₹648 ஆகவும், இந்தூரில் ₹ 1324 ஆகவும் மற்றும் அகமதாபாத்தில் ₹2.103 ஆகவும் உள்ளது.

கோயம்புத்தூர் மாநகராட்சியில், 600 சதுர அடி பரப்பளவுள்ள குடியிருப்பு கட்டடத்திற்கு தற்போது விதிக்கப்படும் அதிகபட்ச சொத்துவரி ₹972 ஆகும். சீராய்விற்குப் பிறகு, இது, ₹1215 ஆக உயரும். ஆனால், இதே பரப்பளவு கொண்ட குடியிருப்பு கட்டடத்திற்கு, லக்னோவில் ₹2,160 ஆகவும், இந்தூரில் ₹2,520 ஆகவும் மற்றும் அகமதாபாத்தில் ₹5,609ஆகவும் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### 3. அல் ரிஹ்லா

உலகக்கோப்பை கால்பந்து போட்டியின் ஆட்டங்களில் பயன்படுத்தப்படவிருக்கும் கால்பந்து தோகாவில் அறிமுகம் செய்யப்பட்டது.

'அல் ரிஹ்லா' என்று பெயரிடப்பட்டுள்ள இந்தப் பந்தை, 'அடிடாஸ்' நிறுவனம் தயாரித்துள்ளது. உலகக்கோப்பை கால்பந்து போட்டிக்காக தொடர்ந்து 14-ஆவது முறையாக அந்த நிறுவனம் தயாரித்துள்ள பந்து இது. 'அல் ரிஹ்லா' என்ற இந்த அரபு மொழிச் சொல்லின் பொருள், 'பயணம்' என்பதாகும்.

---

### 4. 6,000 இந்திய பொருள்களுக்கு வரி ரத்து

இந்தியா-ஆஸ்திரேலியா இடையேயான பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக ஒப்பந்தம் கையொப்பமானது.

இந்த ஒப்பந்தத்தின்மூலமாக இந்தியாவின் ஆயத்த ஆடைகள், தோல் பொருள்கள், ஆபரணங்கள் உள்ளிட்ட 6,000 பொருள்கள் ஆஸ்திரேலியாவின் சந்தைகளுக்கு வரியின்றி சென்றடையவுள்ளன.

---

### 5. 'நெசவு-2022' கைத்தறி கண்காட்சியை மத்திய அமைச்சர் சென்னையில் தொடங்கிவைத்தார்

இந்திய கைத்தறித் தயாரிப்புகள் மற்றும் கைவினைத் திறனை ஊக்குவிக்கும் முயற்சியில், நெசவாளர்களின் கைவினைப் பொருட்களைக்கொண்ட, "நெசவு-2022" கைத்தறி கண்காட்சியை மத்திய குடிசைத் தொழில் கழகம் நடத்துகிறது.

2022 ஏப்ரல் 2 முதல் 12 வரை, சென்னையில் இந்தக் கண்காட்சி நடைபெறுகிறது.

---

**1. 'துலிப் திருவிழா' என்பது இந்தியாவின் எந்த நகரத்தில் நடத்தப்படும் ஒரு விழாவாகும்?**

அ) சிம்லா

**ஆ) ஸ்ரீநகர் ☑**

இ) சண்டிகர்

ஈ) கௌகாத்தி



- ✓ ஜம்மு–காஷ்மீரின் ஸ்ரீநகரில் 10 லட்சத்துக்கும் அதிகமான துலிப் மலர்களைக் கொண்ட ஆசியாவின் மிகப்பெரிய துலிப் தோட்டம் பொதுமக்களின் பார்வைக்காகத் திறக்கப்–பட்டுள்ளது. இந்தத் துலிப் தோட்டம் வரவிருக்கும் துலிப் திருவிழாவிற்காக பல மாதங்களாக உருவாக்கப்பட்டது.
- ✓ ஆண்டுதோறும் வசந்தத்தின் தொடக்கத்தில் ஸ்ரீநகரில் நடைபெறும் துலிப் திருவிழா, உலகம் முழுவதிலுமிருந்து சுற்றுலாப்பயணிகளை வெகுவாக ஈர்க்கிறது.

---

**2. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'சஞ்சி கலை' நடைமுறையில் உள்ள மாநிலம் எது?**

அ) இராஜஸ்தான்

ஆ) ஹிமாச்சல பிரதேசம்

**இ) உத்தர பிரதேசம் ☑**

ஈ) குஜராத்



- ✓ 'சஞ்சி' கலையில் ஈடுபடும் மதுரா–பிருந்தாவனஞ்சார் கலைஞர்களை ஊக்குவிக்கும் திட்டம் ஏதேனுமுள்ளதா? என்று மக்களவை உறுப்பினரும் நடிகருமான ஹேமா மாலினி அரசிடம் கேள்வியெழுப்பினார்.
- ✓ சஞ்சி கலை என்பது ஒரு தனித்துவமான கைவினை வடிவமாகும். இது, காகிதத்தில் வெட்டப்பட்ட நேர்த்தியான வடிவமைப்புகள் மற்றும் படவடிவங்களைக் கொண்டு உள்ளது. வட இந்திய மாநிலமான உத்தர பிரதேசத்தில் உள்ள மதுராவில் தோன்றிய 'சஞ்சி' ஓவியம் பிருந்தாவன–த்திலும் வழக்கத்தில் உள்ளது.

---

**3. அடிமைத்தனத்தால் பாதிக்கப்பட்டோரை நினைவுறும் உலக நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ) மார்ச்.23

**ஆ) மார்ச்.25 ☑**

இ) மார்ச்.27

ஈ) மார்ச்.29



- ✓ 'அடிமைத்தனத்தால் பாதிக்கப்பட்டோரை நினைவுகூரும் உலக நாள்' ஆனது ஆண்டுதோறும் மார்ச்.25 அன்று அனுசரிக்கப்படுகிறது. "*Stories of Courage: Resistance to Slavery and Unity against Racism*" என்பது நடப்பு 2022 இல் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும்.

---

**4. சமீபசெய்திகளில் இடம்பெற்ற PACER முன்னெடுப்பைச் செயல்படுத்துகிற மத்திய அமைச்சகம் எது?**

**அ) புவி அறிவியல் ☑** ஆ) உள்துறை

இ) பாதுகாப்பு ஈ) அறிவியல் & தொழில்நுட்பம்

- ✓ துருவ அறிவியல் மற்றும் தாழ் வெப்ப மண்டல ஆராய்ச்சி (PACER) திட்டமானது புவி அறிவியல் அமைச்சகத்தின்கீழ் உள்ள தன்னாட்சி நிறுவனமான துருவ மற்றும் கடல்சார் ஆராய்ச்சிக்கான தேசிய மையத்தினால் (NCPOR) செயல்படுத்தப்படுகிறது. இது அண்டார்டிக் திட்டம், இந்திய ஆர்க்டிக் திட்டம், தென்பெருங்கடல் திட்டம் மற்றும் தாழ் வெப்ப மண்டலம் & காலநிலை திட்டம் ஆகியவற்றை உள்ளடக்கியது. இந்தத்திட்டம் அண்டார்டிகாவிற்கு 41வது இந்திய அறிவியல் பயணத்தை ஏற்பாடு செய்கிறது.
- ✓ PACER திட்டத்தை 2021–2026இலும் தொடர சமீபத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டது.

---

**5. 2021 – ஏற்றுமதி தயார்நிலைக் குறியீட்டில் முதலிடம் பிடித்த இந்திய மாநிலம்/UT எது?**

அ) தமிழ்நாடு

ஆ) மகாராஷ்டிரா

**இ) குஜராத் ☑**

ஈ) தெலுங்கானா



- ✓ NITI ஆயோக், போட்டித்திறன் மையத்துடன் இணைந்து ஏற்றுமதி தயார்நிலைப் பட்டியல் – 2021'ஐ வெளியிட்டது. இதில் பெரும்பாலான கடலோர மாவட்டங்கள், ஏற்றுமதியில் சிறப்பாகச் செயல்படுகின்றன. குஜராத் மாநிலம் 2ஆம் முறையாக முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- ✓ ஏற்றுமதி தயார்நிலைப் பட்டியல் கொள்கை, வர்த்தகச் சூழல், ஏற்றுமதிச் சூழல், ஏற்றுமதி செயல்பாடு என்ற 4 முக்கிய அம்சங்களின்படி, மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை இது தரவரிசைபடுத்துகிறது. இதில் 11 துணை அம்சங்களும் உள்ளன.

---

**6. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, '*Le Corbusier's Edict*' என்பதுடன் தொடர்புடைய இந்திய நகரம் எது?**

அ) மும்பை

ஆ) புது தில்லி

**இ) சண்டிகர் ☑**

ஈ) புதுச்சேரி



- ✓ சண்டிகரில் உள்ள கேபிடல் வளாகத்தில் 3 சிலைகளை நிறுவ பஞ்சாப் அரசு தீர்மானம் எடுத்துள்ளது. இதற்கு அந்நகரின் பாரம்பரிய நிபுணர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.
- ✓ 'சண்டிகரின் ஆணை' என்பது சண்டிகரின் திட்டமிடுபவர் லீ கார்பூசியரால் பரிந்துரைக்கப்பட்ட ஒரு விதி நூலாகும். சிலைகள் நிறுவலைத் தவிர, சுக்னா ஏரியில் வணிகக் கட்டமைப்புகள் ஏற்படுத்த முழுமையான தடை விதிக்கவும் இந்த ஆணை குறிப்பிடுகிறது.

---

**7. சரிஸ்கா புலிகள் காப்பகம் அமைந்துள்ள மாநிலம் எது?**

அ) பீகார்

**ஆ) இராஜஸ்தான் ☑**

இ) மத்திய பிரதேசம்

ஈ) கேரளா



- ✓ இராஜஸ்தான் மாநிலம் அல்வார் மாவட்டத்தில் உள்ள சரிஸ்கா புலிகள் காப்பகத்தில் சமீபத்தில் பயங்கர தீவிபத்து ஏற்பட்டது. அக்பர்பூர் மலைத்தொடரில் 8–10 சதுர கிமீ பரப்பளவு பாதிக்கப்பட்டுள்ளதால், நீர்த்தெளிக்கும் கருவிகள் பொருத்தப்பட்ட வான்படை ஹெலிகாப்டர்கள் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன. சரிஸ்கா புலிகள் காப்பகத்தில் மொத்தம் 27 புலிகள் உள்ளன.

---

**8.** '*Jal Shakti Abhiyan: Catch the Rain*' **பிரச்சாரமானது பின்வரும் எந்த ஆண்டில் முதலில் தொடங்கப்பட்டது?**



அ) 2015

ஆ) 2017

**இ) 2021 ☑**

ஈ) 2022

- ✓ புது தில்லியில் நடந்த மழைநீர் சேகரிப்பு இயக்கத்தின்கீழ் 3ஆவது தேசிய நீர் மேலாண்மை விருதுகளை வழங்கி ஜல்சக்தி திட்டத்தை இந்தியக்குடியரசுத்தலைவர் ராம்நத் கோவிந்த் தொடங்கிவைத்தார்.
- ✓ இந்திய அரசானது 2019இல், 'ஜல் சக்தி அபியான்' என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியது. அதே ஆண்டில், 'ஜல் ஜீவன் இயக்கம்' தொடங்கப்பட்டது. 2021ஆம் ஆண்டு மார்ச்.22 அன்று, 'உலக நீர் நாளன்று, குடிமக்களை நீரைச்சேமிக்க வலியுறுத்துவதற்காக, 'ஜல்சக்தி அபியான்: மழையைச்சேகரிக்கவும்' என்பது தொடக்கப்பட்டது.

---

**9.** **'இந்தியப் பெருஞ்சுவரும்' உலகின் இரண்டாவது மிக நீளச் சுவருமானது அமைந்துள்ள மாநிலம்/UT எது?**



அ) மேற்கு வங்கம்

**ஆ) இராஜஸ்தான் ☑**

இ) மகாராஷ்டிரா

ஈ) குஜராத்

- ✓ இராஜஸ்தான் மாநிலத்தின் உதய்பூருக்கு அருகில் உள்ள ஆரவல்லி மலைத்தொடரில் உள்ள, 'கும்பல்கர்' கோட்டை 'இந்தியாவின் பெருஞ்சுவர்' என்றும் அழைக்கப்படுகிறது.
- ✓ சீனப்பெருஞ்சுவருக்கு அடுத்தபடியாக உலகின் 2ஆவது நீளமான சுவர் இதுவாகும். மார்ச்.30 அன்று ராஜஸ்தான் உருவான நாள், 'இராஜஸ்தான் திவாஸ்' என்று கொண்டாடப்படுகிறது.
- ✓ 1949 மார்ச்.30 அன்று ஜோத்பூர், ஜெய்ப்பூர், ஜெய்சால்மர் மற்றும் பிகேனர் ஆகிய சமஸ்தானங்கள் ஒன்றிணைந்து 'மாபெரும் இராஜஸ்தான் யூனியன்' என்றானது. '2022', இராஜஸ்தான் திவாஸின் 73 ஆண்டுகளைக் குறிக்கிறது.

---

**10.** **நேரடிப் பயன் பரிமாற்றத்தை உறுதிசெய்வதற்காக நடுவண் துறை மற்றும் மத்திய நிதியுதவித் திட்டங்கள் இணைக்கப்பட்டுள்ள தளத்தின் பெயர் என்ன?**

**அ) DPT பாரத் இணையதளம் ☑**

ஆ) ஆத்மநிர்பார் DPT இணையதளம்

இ) பிரதான் மந்திரி DBT இணையதளம்

ஈ) அம்ருத் கால் DBT இணையதளம்

- ✓ DBT பாரத் போர்ட்டலில் 313 நடுவண் துறை மற்றும் 53 அமைச்சகங்களின் மத்திய நிதியுதவி திட்டங்கள் இணைக்கப்பட்டுள்ளன. பயனாளிகளுக்கு அவர்களின் வங்கிக்கணக்குகளில் மானியங்களை வரவு வைப்பதன் மூலம் வெளிப்படைத்தன்மையைக் கொண்டுவர நேரடிப் பயன்கள் பரிமாற்றம் திட்டம் தொடங்கப்பட்டது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இந்திய ஏற்றுமதி ₹32 லட்சம் கோடி: மத்திய அமைச்சர் பியூஷ் கோயல்**

நாட்டின் சரக்கு ஏற்றுமதி கடந்த 2021–22 நிதியாண்டில் சுமார் ₹32 லட்சம் கோடியை (418 பில்லியன் டாலர்) தாண்டி சாதனை படைத்துள்ளதாக மத்திய வர்த்தக, தொழிற்துறை அமைச்சர் பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் அவர் கூறியது: நாட்டின் சரக்கு ஏற்றுமதி 2021–22 நிதியாண்டில் சுமார் ₹32 லட்சம் கோடியை (418 பில்லியன் டாலர்) கடந்து சாதனை படைத்துள்ளது.

கடந்த மார்ச்.21–ஆம் தேதியே நமது இலக்கான 400 பில்லியன் டாலரை (₹30.4 லட்சம் கோடி) சரக்கு ஏற்றுமதி கடந்தது. இதுவரை எந்தவொரு மாதத்திலும் இல்லாத வகையில், கடந்த மார்ச் மாதம் மட்டுமே ₹3.06 இலட்சம் கோடி (40.38 பில்லியன்) மதிப்பில் ஏற்றுமதி நடந்தது.

**அதிகரிப்பு:** கடந்த 2019–20 நிதியாண்டில் வெறும் இரண்டு லட்சம் டன்னாக (₹500 கோடி) இருந்த கோதுமை ஏற்றுமதி, 2020–21–இல் 21.55 லட்சம் டன்னாகவும் (₹4,000 கோடி), 2021–22 நிதியாண்டில் 70 லட்சம் டன்னாகவும் (₹15,000 கோடி) அதிகரித்தது.

இந்தியாவில் விளையும் கோதுமை பெரும்பாலும் அண்டை நாடுகளுக்கே ஏற்றுமதி செய்யப்படுகிறது. குறிப்பாக வங்கதேசத்துக்கு மட்டுமே கடந்த நிதியாண்டில் 30.50 லட்சம் டன் கோதுமை (54 சதவீதம்) ஏற்றுமதி செய்யப்பட்டது.

சர்வதேச அளவில் கோதுமை உற்பத்தியில் இந்தியா 14.14 சதவீதத்துடன் 2–ஆம் இடம் வகித்தாலும் ஏற்றுமதியில் ஒரு சதவீதத்துக்கும் குறைவாகவே உள்ளது. நாட்டில் ஆண்டுக்கு 10.76 கோடி டன் கோதுமை உற்பத்தி செய்யப்படுகிறது.

---

**2. மியாமி ஓபன்: சாம்பியன் ஸ்வியாடெக்**

மியாமி ஓபன் டபிள்யுடிஏ டென்னிஸ் போட்டி இறுதி ஆட்டத்தில் போலந்தின் இளம் வீராங்கனை இகா ஸ்வியாடெக் சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் ஜான் ஐஷ்நர்–ஹர்காஸ் இணை கூல்ஹோப்–ஸ்கூப்ஸ்கி இணையை வென்று பட்டத்தைக் கைப்பற்றினர்.

---

### 3. 7–ஆவது முறையாக ஆஸ்திரேலியா உலக சாம்பியன்

ICC மகளிர் ஒருநாள் உலகக்கோப்பை போட்டியில் நடப்பு சாம்பியன் இங்கிலாந்தை 71 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி 7–ஆவது முறையாக சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது ஆஸ்திரேலியா. இதுவரை நடந்த 12 உலகக்கோப்பைகளில் தற்போது ஆஸ்திரேலிய மகளிர் அணி 7–ஆவது முறையாக உலக சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியுள்ளது.

**அலிஸா ஹீலி சாதனை:**

இதுவரை நடந்துள்ள ஆடவர் மற்றும் மகளிர் ஒருநாள் உலகக்கோப்பை இறுதி ஆட்டங்களில் அலிஸா ஹீலி அடித்த 170 ரன்களே அதிகபட்ச ரன்களாகும்.

---

### 4. வருணா பயிற்சி 2022 நிறைவு

இந்தியா – பிரான்ஸ் கடற்படைகளுக்கு இடையிலான 20ஆவது இருதரப்பு பயிற்சியான, 'வருணா 2022' நிறைவடைந்தது. இந்தாண்டு நடைபெற்ற பயிற்சி ஆழ்கடல் செயல்பாடுகளில் விரிவான வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது. இந்த ஆழ்கடல் தந்திரப் பயிற்சியில், அதிநவீன நீர்மூழ்கி எதிர்ப்பு போர் தந்திரம், துப்பாக்கி சுடுதல், கடல் பயண பரிணாமங்கள், சூழ்ச்சித் தந்திரங்கள் மற்றும் விரிவான வான் செயல்பாடுகள் இடம் பெற்றன. எதிர் எதிர் தளங்களில் ஹெலிகாப்டர்களை இறக்குதல் போன்ற பயிற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

இந்தியாவின் அதிநவீன நீர்மூழ்கி எதிர்ப்பு சாதனங்களும் இந்த பயிற்சி நிறைவு நிகழ்ச்சியில் இடம் பெற்றன. ஐஎன்எஸ் சென்னை போர்க் கப்பலில் சீ கிங் எம் கே 42பி, கடலோர ரோந்து விமானமான பி–8ஐ பிரெஞ்ச் கடற்படையின் FS கூர்பெட் கப்பலும் இந்தப் பயிற்சியில் பங்கேற்று போர் ஒத்திகைகளில் ஈடுபட்டன.

---

### 5. தேசிய தூயகாற்று திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிற்கு மொத்தம் ₹233 கோடி ஒதுக்கீடு

தேசிய தூயகாற்று திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிலுள்ள தூத்துக்குடிக்கு 2021 மார்ச் 31 வரை ₹3.06 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 15ஆவது நிதி ஆணையத்தின் (2020 –21) பரிந்துரையின்படி சென்னைக்கு ₹181 கோடி, மதுரைக்கு ₹31 கோடி மற்றும் திருச்சிராப்பள்ளிக்கு ₹21 கோடி என தமிழ்நாட்டிற்கு மொத்தம் ₹233 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

காற்றுத் தர நிதியின் கீழ் சென்னைக்கு ₹91 கோடி, மதுரைக்கு ₹15 கோடி மற்றும் திருச்சிராப்பள்ளிக்கு ₹11 கோடி என தமிழ்நாட்டிற்கு மொத்தம் ₹117 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

---

**1.** **அண்மையில் வெளியிடப்பட்ட 'பாலி பிரகடனம்' எதன் சட்டவிரோத வர்த்தகத்தைத் தடுப்பதை நோக்கமெனக் கொண்டுள்ளது?**

அ) தங்கம்

**ஆ) பாதரசம் ☑**



இ) வனவுயிரிகள்

ஈ) மனித உடலுறுப்புகள்

✓ பாதரசம் குறித்த மினமாட்டா தீர்மானம் பற்றிய (COP–4) உறுப்புநாடுகளின் நான்காவது கூட்டம் அண்மையில் இந்தோனேசியாவின் பாலியில் நடைபெற்றது.

✓ சுவிச்சர்லாந்தின் ஜெனிவாவில் நடைபெற்ற COP–5'இல் பாதரசத்துடன் கூடிய நான்கு வகையான பொருட்களின் பயன்பாட்டை மறு பரிசீலனை செய்வது குறித்து முடிவு செய்யப்பட்டது. சட்டவிரோத பாதரச வர்த்தகத்தைத் தடுக்க 'பாலி பிரகடனம்' வெளியிடப்பட்டது.

---

**2.** **ஜென்ஸ் ஸ்டோல்டன்பெர்க் என்பார் எந்த அமைப்பின் பொதுச்செயலாளராக உள்ளார்?**

அ) ஐரோப்பிய ஒன்றியம்

**ஆ) NATO ☑**



இ) G20

ஈ) G7

✓ வட அட்லாண்டிக் ஒப்பந்த கூட்டமைப்பின் (NATO) பொதுச் செயலாளர் ஜென்ஸ் ஸ்டோல்டன்பெர்க்கின் பதவிக்காலம் 2023 செப்.30 வரை ஓராண்டுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

✓ பிரஸ்ஸல்ஸில் நடந்த NATO உச்சிமாநாட்டில், அமெரிக்க அதிபர் ஜோ பைடனும் மற்ற NATO தலைவர்களும் ஜென்ஸ் சுடோல்டன்பெர்க்கின் பதவிக்காலத்தை நீட்டிக்க ஒப்புக்கொண்டனர். நார்வேயின் முன்னாள் பிரதமரான அவர், கடந்த 2014'இல் NATO பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்டார். அவரது பதவிக்காலம் கடந்த 2021 செப்டம்பரில் முடிவடைந்தது.

---

**3.** **இந்திய வானூர்தி நிலையங்கள் ஆணையமானது (AAI), உள்நாட்டு விமானப் போக்குவரத்து மேலாண்மை அமைப்புகளை உருவாக்குவதற்காக எந்நிறுவனத்துடன் கூட்டு சேர்ந்துள்ளது?**

அ) ISRO

ஆ) DRDO

**இ) BEL ☑**

ஈ) HAL

✓ இந்திய வானூர்தி நிலையங்கள் ஆணையம் அதன் R&D முன்னெடுப்பின்கீழ், உள்நாட்டு விமானப் போக்குவரத்து மேலாண்மை அமைப்புகளை கூட்டாக உருவாக்க பாரத் மின்னணு நிறுவனத்துடன் (BEL) ஒப்பந்தம் செய்துள்ளது. ஹைதராபாத்தில், 'WINGS இந்தியா–2022' நிகழ்ச்சியின் போது இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

---

**4.** **'பிரஸ்தான்' என்பது எந்த இந்திய ஆயுதப்படையால் நடத்தப்படும் ஒரு கடல்சார் பாதுகாப்புப் பயிற்சியாகும்?**

அ) இந்திய இராணுவம்

**ஆ) இந்திய கடற்படை ☑**

இ) இந்திய வான்படை

ஈ) இந்திய கடலோர காவல்படை

✓ 'பிரஸ்தான்' என்பது இந்திய கடற்படையால் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை நடத்தப்படும் ஒரு கடல்சார் பாதுகாப்புப் பயிற்சியாகும். இதில் இந்திய விமானப்படை, கடலோர காவல்படை, ONGC, மும்பை துறைமுக அறக் கட்டளை, சுங்கம், மாநில மீன்வளத்துறை, கடல்சார் காவல்படை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் பங்கேற்பு அடங்கும். இந்தப் பயிற்சியானது கடல்கடந்த பாதுகாப்பை உறுதிசெய்வதையும், கடல்சார் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள அனைத்து கடல்சார் பங்குதாரர்களின் முயற்சிகளையும் ஒருங்கிணைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**5.** **இந்தியாவின் முதல் பாதுகாப்பு நிதியத்தைத் தொடங்க முடிவு செய்துள்ள பரஸ்பர நிதியம் எது?**

அ) ஐசிஐசிஐ புருடென்ஷியல் பரஸ்பர நிதியம்

**ஆ) HDFC பரஸ்பர நிதியம் ☑**

இ) SBI பரஸ்பர நிதியம்

ஈ) கனரா ரோபெகோ பரஸ்பர நிதியம்

✓ HDFC பரஸ்பர நிதியம், இந்தியாவின் முதல் பாதுகாப்பு நிதியமான HDFC பாதுகாப்பு நிதிக்கான திட்டத் தகவல் ஆவணத்தை SEBI–யிடம் தாக்கல் செய்தது. இது ஒரு திறந்தநிலை சரிஒப்பு திட்டமாகும். இது பாதுகாப்பு மற்றும் அதுசார்ந்த துறை நிறுவனங்களில் முதலீடு செய்யும்.

---

**6.** **2021–22 நிதியாண்டில் தனிநபர் வருமானத்தின் அடிப்படையில் 3ஆமிடத்திலுள்ள இந்திய மாநிலம் எது?**

அ) மும்பை

**ஆ) புது தில்லி ☑**

இ) சண்டிகர்

ஈ) புதுச்சேரி

✓ 2021–22 பொருளாதார ஆய்வின்படி, சிக்கிம் மற்றும் கோவாவுக்கு அடுத்தபடியாக தனிநபர் வருமானத்தில் தில்லி மூன்றாவது இடத்தில் உள்ளது.

✓ இந்த ஆய்வின்படி, தில்லியின் தனிநபர் வருமானம் ஆண்டுக்கு ஆண்டு 16.81 சதவீதம் அதிகரித்து 2021–22 நிதியாண்டில் ₹4,01,982ஆக உள்ளது. தில்லியின் தனி நபர் வருமானம் 2021–22'இல் தேசிய சராசரியைவிட மூன்று மடங்கு அதிகமாக இருந்தது.

---

**7.** **'MSME செயல்திறனை உயர்த்துதல் மற்றும் விரைவுப் –படுத்துதலை' (RAMP) ஆதரிக்கின்ற நிறுவனம் எது?**

அ) பன்னாட்டுச் செலவாணி நிதியம்

**ஆ) உலக வங்கி ☑**

இ) UNICEF

ஈ) உலக பொருளாதார மன்றம்

✓ உலக வங்கியின் உதவியுடன் 'சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்களின் செயல்திறனை அதிகரித்தல் மற்றும் துரிதப்படுத்துதல்' திட்டத்திற்கு 808 மில்லியன் அமெரிக்க டாலர்கள் அல்லது ₹6,062.45 கோடி வழங்க மத்திய அமைச்சரவை ஒப்புதலளித்தது. இப்புதிய திட்டம் 2022–23ஆம் நிதியாண்டில் தொடங்கும்.

✓ சந்தை மற்றும் கடனுக்கான அணுகலை மேம்படுத்துதல், மத்தியிலும் மாநிலத்திலும் அமைப்புகள் மற்றும் நிர்வாகத்தை வலுப்படுத்துதல், மத்திய–மாநில இணைப்–புகள் மற்றும் கூட்டுகளை மேம்படுத்துதல், தாமதமான பணஞ்செலுத்துதல்குறித்த சிக்கல்களை களைதல் மற்றும் சிறு, குறு, நடுத்தர தொழில்களின் பசுமைப்படுத்துதல் போன்றவற்றை இத்திட்டம் நோக்கமாகக்கொண்டுள்ளது.

---

**8. மண்டலம் முழுவதும் 100 சதவீத மின்மயமாக்கலை நிறைவுசெய்துள்ள இரயில்வே பிரிவு எது?**

**அ) கொங்கன் இரயில்வே ☑**



ஆ) வடகிழக்கு எல்லைப்புற இரயில்வே

இ) கிழக்குக் கடற்கரை இரயில்வே

ஈ) தெற்கு மத்திய இரயில்வே

✓ கொங்கன் இரயில்வே சமீபத்தில் மண்டலம் முழுவதும் 100% மின்மயமாக்கலை நிறைவு செய்துள்ளது மற்றும் அது நிலையான வளர்ச்சிக்கான புதிய வரையறைகளை அமைத்துள்ளது. மகாராஷ்டிர மாநிலத்தின் ரோகா மற்றும் கர்நாடக மாநிலத்தின் தோக்கூர் இடையேயான 741 கிலோமீட்டர் நீளமுள்ள பாதையில், கொங்கன் இரயில்வே மின்மயமாக்கும் பணியை நிறைவு செய்துள்ளது. இந்த மின்மயமாக்கல் திட்டத்திற்கான செலவு ₹1287 கோடி.

---

**9. இந்தியாவின் எந்த ஆற்றின் கரையில் காசிரங்கா தேசியப் பூங்கா எந்த அமைந்துள்ளது?**

அ) கங்கை



ஆ) யமுனா

**இ) பிரம்மபுத்திரா ☑**

ஈ) சட்லெஜ்

✓ காசிரங்கா தேசியப் பூங்காவானது அஸ்ஸாமில் உள்ள ஒரு பாதுகாக்கப்பட்ட பகுதியாகும். இது பிரம்மபுத்திரா ஆற்றின் குறுக்கே பரவியுள்ளது. இந்தத் தேசியப் பூங்கா 2022–இல் 14ஆவது காண்டாமிருகக் கணக்கெடுப்பை வெற்றிகரமாக முடித்துள்ளது. 2018 புள்ளிவிவரங்களை ஒப்பிடும்போது 200 ஒற்றைக்கொம்பு காண்டாமிருகங்க–ள் அப்பூங்காவில் அதிகரித்துள்ளன.

---

**10. சிட்டி வங்கியின் இந்திய வாடிக்கையாளர் வங்கிசார் வணிகங்களை கையகப்படுத்திய வங்கி எது?**

அ) HDFC வங்கி

**ஆ) ஆக்சிஸ் வங்கி ☑**

இ) ஐசிஐசிஐ வங்கி

ஈ) YES வங்கி

✓ இந்திய தனியார் துறை வங்கியான ஆக்சிஸ் வங்கி, அமெரிக்க நாட்டு வங்கியான சிட்டி குழுமத்தின் இந்திய நுகர்வோர் வங்கிசார் வணிகங்களை கையகப்படுத்தி உள்ளது. 13 சந்தைகளில் அதன் சில்லறை வர்த்தக நடவடிக்கைகளிலிருந்து அவ்வங்கி வெளியேறுகிறது. இதன் மதிப்பு ₹12,325 கோடியாகும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. பெண்கள், பொதுமக்களுக்கான 'காவல் உதவி' செயலி அறிமுகம்**

காவல்துறை கட்டுப்பாட்டு அறையிலிருந்து நேரடியாக பெண்கள், பொதுமக்களுக்கான சேவை, 'காவல் உதவி' செயலியை முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

இதுகுறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், பொதுமக்கள் குறிப்பாக பெண்கள், அவசர காலங்களில் காவல்துறையின் உதவியை உடனடியாக பெறும் பொருட்டு, 60–க்கும் மேற்பட்ட சிறப்பம்சங்களுடன் 'காவல் உதவி' செயலி உருவாக்கப்பட்டுள்ளது. இந்தச் செயலியானது இந்திய மாநில காவல்துறையில் உருவாக்–கப்பட்டுள்ள செயலிகளில் முதன்மையாக விளங்கும்.

**'காவல் உதவி' செயலியின் சிறப்பம்சங்கள்:** 'அவசரம்' உதவி பொத்தான் – பொது மக்கள் குறிப்பாக பெண்கள் அவசர காலங்களில் சிவப்பு நிற 'அவசரம்' என்ற பொத்தானை அழுத்துவதன் மூலமாக, பயனாளர் விவரம், தற்போதைய இருப்பிட விவரம் மற்றும் வீடியோ, கட்டுப்பாட்டு அறையில் பெறப்பட்டு காவல் துறையின் அவசர சேவை வழங்கப்படும். அவசரகால அலைபேசி அழைப்பு வசதி (Dial–112/100/101) – பயனாளர்கள் அலைபேசியில் நேரடி புகார்களை தெரிவிக்க 'Dial–100' என்ற செயலி 'காவல் உதவி' செயலி மூலம் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. பதிவு செய்யப்பட்ட அலைபேசி எண்ணிலிருந்து அழைப்பதால், பயனாளர் விவரம் மற்றும் தற்போதைய இருப்பிட விவரம் அறியப்பட்டு துரித சேவை வழங்கப்படும்.

அலைபேசி வழி / புகாரளித்தல் (Mobile Based Complaint) – பயனாளர்கள், குறிப்பாக மகளிர், சிறார், முதியோர் ஆகியோர் அவசர கால புகார்களை, படங்கள் / குறுகிய அளவிலான வீடியோவை பதிவேற்றம் செய்து, புகாரை பதிவு செய்யலாம். இருப்பிட விவர பரிமாற்ற சேவைவசதி (Location sharing) – பயணங்கள் மேற்கொள்ளும் போது, அவசர காலத்தில் பயனாளர்கள், Whatsapp / Google Map வாயிலாக, நேரடி இருப்பிட விவரங்களை நண்பர் அல்லது உறவினருடன் பரிமாறும் வசதி செய்யப்பட்டு உள்ளது. இதன்மூலம் பயனாளர்களின் உறவினர் / நண்பர் வாயிலாக செல்லும் இருப்பிடம் அறியப்பட்டு, காவலர் விரைந்து செல்ல வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், காவல் நிலைய இருப்பிடம் மற்றும் நேரடி அழைப்பு வசதி (Police Station Locator), காவல் கட்டுப்பாட்டு அறையின் தொலைபேசி விவரம் அறிதல் (Control Room Directory), இணைய வழி பொருளாதார குற்றம் தொடர்பான புகார்கள் (Cyber Financial Related Complaint), இதர அவசர / புகார் உதவி எண் அழைக்கும்

வசதி (Other Emergency Helplines), அவசர கால அறிவிப்புகள் / இதர தகவல்கள் அறியும் வசதி (Alert / Notification messages), வாகன விவரம் அறிதல் (Vehicle Verification), போக்குவரத்து விதிமீறல் அபராதம் செலுத்தும் வசதி (e–Payment), தனிநபர் குறித்த சரிபார்ப்பு சேவை (Police Verification Services), தொலைந்த ஆவணங்கள் குறித்த புகார் (Lost Document Report), CSR / FIR –குறித்த விவரம், காவல்துறையின் சமூக ஊடக சேவைகள் (Social Media Connect), காவல்துறையின் குடிமக்கள் சேவை செயலி (TN Police Citizen App) / 112 இந்தியா (112–India App) ஆகிய வசதிகளையும் இச்செயலி மூலம் பொதுமக்கள் பெற்று பயன்பெறலாம்.

---

**2. வெளியுறவுச் செயலராக வினய் மோகன் குவாத்ரா நியமனம்**

மத்திய வெளியுறவு செயலராக வினய் மோகன் குவாத்ரா நியமிக்கப்படுவதாக மத்திய பணியாளர் அமைச்சகம் தெரிவித்தது.

தற்போது மத்திய வெளியுறவுச் செயலராக பதவி வகிக்கும் ஹர்ஷ்வர்தன் ஷ்ரிங்லா ஏப்.30–ஆம் தேதி பணி ஓய்வு பெறும் நிலையில், வினய் மோகன் குவாத்ரா அந்தப் பதவிக்கு நியமிக்கப்படுகிறார்.

---

**3. ஏப்.11–இல் இந்தியா–அமெரிக்கா 2+2 பேச்சுவார்த்தை**

இந்தியா, அமெரிக்கா இடையே ஏப்ரல் 11–ஆம் தேதி 2+2 பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது.

இதுதொடர்பாக தகவலறிந்த வட்டாரங்கள் கூறுகையில், "பாதுகாப்பு அமைச்சா் ராஜ்நாத்சிங், வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் ஆகியோர் அமெரிக்கா செல்லவுள்ளனர். அந்நாட்டுத் தலைநகர் வாஷிங்டனில் ஏப்ரல் 11–ஆம் தேதி அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் லாயிட் ஆஸ்டின், அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் ஆன்டனி பிளிங்கன் ஆகியோருடன் இருவரும் 2+2 பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளனர். அப்போது இந்தியா–அமெரிக்கா இடையிலான வெளியுறவு, பாதுகாப்பு உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசிக்கவுள்ளனர்.

அதனைத்தொடர்ந்து இம்மாத மத்தியில் இந்தியா–ஜப்பான் இடையே 2+2 பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தையில் இந்தியா, ஜப்பான் இடையே பாதுகாப்பு விவகாரங்களில் ஒத்துழைப்பை விரிவுபடுத்துவது, இந்தோ–பசிபிக் பிராந்தியத்தின் தற்போதைய நிலவரம் உள்ளிட்டவை குறித்து ஆலோசிக்கப்படவுள்ளது. QUAD கூட்டமைப்பில் இந்தியா, ஜப்பான், அமெரிக்கா, ஆஸ்திரேலியா இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

---

**4. இந்தியர்கள் இருவருக்கு 'கிராமி' விருது!**

பிரபல இசை விருதுகளில் ஒன்றான 'கிராமி' விருது இந்தியாவைச் சேர்ந்த இருவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

64–ஆவது கிராமி விருதுகள் வழங்கும் விழா அமெரிக்காவின் லாஸ் வேகஸ் நகரத்தில் நடைபெற்றது. அதில், 'டிவைன் டைட்ஸ்' என்ற பாடல் தொகுப்புக்காக பெங்களூரைச் சேர்ந்த ரிக்கி கெஜ், 'சிறந்த புதிய ஆல்பம்' என்ற பிரிவில் கிராமி விருதை வென்றார்.

ரிக்கி கெஜ் பெறும் இரண்டாவது கிராமி விருது இதுவாகும். அவர் ஏற்கெனவே 'வின்ட்ஸ் ஆஃப் சம்சாரா' என்ற பாடலுக்காக 2015–இல் கிராமி விருதைப் பெற்றுள்ளார்.

மும்பையில் பிறந்த பாடகியான பால்குனி ஷா, 'சிறார்களுக்கான சிறந்த ஆல்பம்' என்ற பிரிவில், 'எ கலர் புல் வேர்ல்டு' பாடலுக்காக கிராமி விருதைப் பெற்றார். அவர் வெல்லும் முதல் கிராமி விருது இதுவாகும்.

---

**1. கீழ்காணும் எந்த நகரத்தின் மூன்று மாநகராட்சிகளை ஒரே மாநகராட்சியாக இணைக்கும் மசோதா மக்களவை –யில் நிறைவேற்றப்பட்டது?**

அ) மும்பை

**ஆ) தில்லி ☑**

இ) கொல்கத்தா

ஈ) சென்னை




- ✓ சிறந்த திட்டமிடல் மற்றும் வளங்களை உகந்த முறையில் பயன்படுத்துவதற்காக, தில்லியின் 3 மாநகராட்சிகளை ஒருங்கிணைக்கும் நோக்கில், தில்லி மாநகராட்சிகள் (திருத்த) மசோதாவை மக்களவை நிறைவேற்றியது.
- ✓ இந்த மசோதாவின்மூலம், புதிய மாநகராட்சியின் கூட்டம் நடைபெறும் வரை தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சிலர்களின் செயல்பாடுகளை நிறைவேற்றும் ஒரு 'சிறப்பு அதிகாரி'ஐ நியமிக்க மத்திய அரசு முன்மொழிந்தது. இந்த மசோதா ஒருங்கிணைந்த அம்மாநகராட்சிக்கு கூடுதல் தன்னாட்சி அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

**2. 2022இல், சுவிஸ் ஓப்பன் சூப்பர் 300 பாட்மிண்டன் போட்டியில் வென்ற இந்திய வீரர் / வீராங்கனை யார்?**

அ) K ஸ்ரீகாந்த்

**ஆ) P V சிந்து ☑**

இ) சாய்னா நேவால்

ஈ) H S பிரணாய்



- ✓ பாசலில் நடந்த சுவிஸ் ஓப்பன் சூப்பர் 300 பாட்மிண்டன் போட்டியில், இரட்டை ஒலிம்பிக் பதக்கம் வென்ற P V சிந்து, தாய்லாந்தின் புசானன் ஓங்பாம்ருங்பானைத் வீழ்த்தி வெற்றி பெற்றார். P V சிந்து 21–16, 21–8 என்ற நேர் செட்களில் பாசலில் தனது 2ஆவது பட்டத்தை வென்றார்.
- ✓ முன்னதாக ஜனவரி மாதம் நடந்த சையத் மோடி இந்தியா இன்டர்நேஷனல் போட்டியில் சிந்து வெற்றி பெற்றார். பாசலில் நடந்த ஆடவர் ஒற்றையர் இறுதிப்போட்டியில் இந்தியாவின் H S பிரணாய், ஜொனாதன் கிறிட்டியிடம் தோல்வியடைந்தார்.

---

**3. பிரதான் மந்திரி கரீப் கல்யாண் அன்ன யோஜனாவின் ஆறாவது கட்டம், எந்த மாதம் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது?**

அ) ஜூன் 2022

ஆ) மே 2022

இ) ஆகஸ்ட் 2022

**ஈ) செப்டம்பர் 2022 ☑**



- ✓ மத்திய நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம், PMGKAY–ஐ 2022 செப்டம்பர் வரை நீட்டிக்க முடிவுசெய்துள்ளது. பிரதான் மந்திரி கரிப் கல்யாண் அன்ன யோஜனாவின் (PMGKAY)கீழ், ஐந்து கிகி உணவு தானியங்கள் (கோதுமை, அரிசி, குருணை) மாதந்தோறும் ஒவ்வொரு பயனாளிக்கும் இலவசமாக வழங்கப்படுகிறது. திட்டத்தின் Vஆம் கட்டம் 2022 மார்ச் மாதத்தில் முடிவடைய இருந்தது.

---

**4. 'பரவலாக்கப்பட்ட கழிவு மேலாண்மை தொழில்நுட்ப பூங்கா' திறக்கப்பட்டுள்ள மாநிலம்/UT எது?**

அ) தமிழ்நாடு

**ஆ) புது தில்லி ☑**

இ) மத்திய பிரதேசம்

ஈ) இராஜஸ்தான்



- ✓ இந்திய அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகரின் அலுவலகத்தின் 'வேஸ்ட் டு வெல்த்' திட்டம், கிழக்கு தில்லியில் 'பரவலாக்கப்பட்ட கழிவுமேலாண்மை தொழில் நுட்ப பூங்காவைத் திறந்துள்ளது.
- ✓ கிழை தில்லி மாநகராட்சியுடன் இணைந்து புதிய மாநகரா –ட்சி திடக்கழிவுகளை அங்கேயே செயலாக்குவதற்காக இது திறக்கப்பட்டது.

---

**5. 2022 – சன்சத் இரத்னா விருதுகளில் வாழ்நாள் சாத –னையாளர் APJ அப்துல்கலாம் விருதைப் பெற்றவர்கள் யார்?**

**அ) Dr H V ஹண்டே & வீரப்ப மொய்லி ☑**

ஆ) H D தேவகௌவுடா & வீரப்ப மொய்லி

இ) Dr H V ஹண்டே & S M கிருஷ்ணா

ஈ) H D தேவகௌவுடா &S M கிருஷ்ணா



- ✓ சன்சத் இரத்னா விருதுகள் குழுவின் 12ஆவது அமர்வின் போது, தமிழ்நாடு சட்டமன்றத்தின் 95 வயதான மூத்த ச ம உ–உம், முன்னாள் சுகாதார அமைச்சருமான Dr H V ஹண்டேவுக்கு வாழ்நாள் சாதனையாளர் APJ அப்துல் கலாம் விருது வழங்கப்பட்டது.
- ✓ கர்நாடக மானியல் முன்னாள் முதல்வர் வீரப்ப மொய்லி அவர்கட்கும் இவ்விருது வழங்கப்பட்டது. பிரைம் பாயின்ட் அறக்கட்டளையால் வழங்கப்பட்ட 2022 – சன்சத் ரத்னா விருதுகளில் கௌரவிக்கப்பட்ட 11 MP–களில் சுப்ரியா சுலே மற்றும் அமர் பட்நாயக் ஆகியோர் அடங்குவர்.

---

**6. 2022ஆம் ஆண்டு புவி மணிநேரத்தின் கருப்பொருள் என்ன?**

**அ) Shape our Future ☑**

ஆ) Stand for Environment

இ) Save our Children

ஈ) Decarbonise the Planet



- ✓ புவி நேரம் மார்ச் 26 அன்று இரவு 8:30 முதல் 9:30 மணி வரை அனுசரிக்கப்பட்டது. உலகெங்கிலும் உள்ள மக்கள் 1 மநேரம் வரை தேவையற்ற விளக்குகளை அணைத்து, காலநிலை மாற்றத்திற்கு எதிராக ஒரு நிலைப்பாட்டை எடுக்கும், சுற்றுச்சூழலுக்கான உலகின் ஒரு மிகப்பெரிய இயக்கம் இது. இது 2007–இல் சிட்னியில் ஒரு குறியீட்டு நிகழ்வாகத் தொடங்கியது. பின்னர் ஒவ்வோர் ஆண்டும் மார்ச் கடைசி சனிக்கிழமையன்று 180–க்கும் மேற்பட்ட நாடுகளில் அனுசரிக்கப்பட்டது.

---

**7.** கில்பர்ட் F ஹௌங்போ, எந்த உலகளாவிய அமைப்பின் தலைமை இயக்குநராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்?



அ) UNEP

**ஆ) ILO ☑**

இ) IMF

ஈ) WEF

- ✓ ILO ஆளும் குழு கில்பர்ட் F ஹௌங்போவை அமைப்பின் 11ஆவது தலைமை இயக்குநராகத் தேர்ந்தெடுத்துள்ளது. தற்போது, உழவு மேம்பாட்டுக்கான சர்வதேச நிதியத்தின் தலைவராக இருக்கும் ஹௌங்போ, 2022 அக்டோபரில் பதவியேற்கவுள்ளார்.
- ✓ ILOஇன் தலைமை இயக்குநர் பதவியை வகிக்கும் முதல் ஆப்பிரிக்கராவார் இவர். ஐக்கிய இராஜ்ஜியத்தைச் சேர்ந்த தற்போதைய தலைமை இயக்குநர் கை ரைடர், 2012 முதல் பதவி வகித்து வருகிறார்.

---

**8.** 2022 – WINGS இந்தியா நிகழ்வில், 'COVID சாம்பியன்' விருதை வென்ற வானூர்தி நிலையம் எது?

அ) சத்ரபதி சிவாஜி பன்னாட்டு வானூர்தி நிலையம்

**ஆ) கொச்சி பன்னாட்டு வானூர்தி நிலையம் ☑**

இ) இந்திரா காந்தி பன்னாட்டு வானூர்தி நிலையம்

ஈ) கெம்பேகவுடா பன்னாட்டு வானூர்தி நிலையம்

- ✓ 2022 – WINGS இந்தியா நிகழ்வில், கொச்சின் பன்னாட்டு வானூர்தி நிலையமானது 'COVID சாம்பியன்' விருதை வென்றது. இது சிவில் வான்போக்குவரத்து அமைச்சகம் மற்றும் FICCI இணைந்து நடத்தும் உள்நாட்டு விமானப் போக்குவரத்து தொடர்பான ஆசியாவின் மிகப்பெரிய நிகழ்வாகும். கொச்சி விமான நிலையத்தில் பாதுகாப்பான பயணத்தை உறுதிசெய்வதற்காக COVID தொற்றுபோது 'Mission Safeguarding' என்ற திட்டத்தை செயல்படுத்தியத –ற்காக கொச்சி விமான நிலையம் தேர்ந்தெடுக்கப்பட்டது.

---

**9.** 2022 – SAFF U–18 மகளிர் சாம்பியன்ஷிப்பை வென்ற நாடு எது?




அ) வங்காளதேசம்

**ஆ) இந்தியா ☑**

இ) இலங்கை

ஈ) ஜப்பான்

- ✓ வங்காளதேசத்திடம் 0–1 என்ற கணக்கில் வீழ்ந்தாலும், 2022 – SAFF U–18 மகளிர் சாம்பியனாக இந்திய அணி அறிவிக்கப்பட்டது. சிறப்பான கோல் வித்தியாசம் காரண –மாக இம்முடிவு அறிவிக்கப்பட்டது.
- ✓ வங்காளதேசத்தின் +3 உடன் ஒப்பிடுகையில் இந்தியா +11 என்ற சிறந்த கோல் வித்தியாசத்தை கொண்டிருந்தது. போட்டியின் மதிப்புமிக்க வீராங்கனை மற்றும் அதிக கோல் அடித்தவராக லிண்டா கோம் இருந்தார். அவர் 5 கோல்களை அடித்திருந்தார்.

---

**10.** 'நலகர் மருத்துவ சாதன பூங்கா' என்பது எந்த இந்திய மாநிலம்/யூனியன் பிரதேசத்தின் திட்டமாகும்?



அ) சிக்கிம்

**ஆ) ஹிமாச்சல பிரதேசம் ☑**

இ) ஜம்மு–காஷ்மீர்

ஈ) பீகார்

- ✓ சோலன் மாவட்டத்தில் உள்ள நலகர் என்ற இடத்தில் அமையவிருக்கும் மருத்துவ சாதன பூங்காவின் அறிவுசார் பங்காளராக இருப்பதற்காக ஹிமாச்சல பிரதேச அரசு, மொகாலியின் தேசிய மருந்துக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்துடன் (NIPER) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. மின்னல் பற்றி எச்சரிக்கை செய்ய டாமினி செயலி**

2020இல் டாமினி மின்னல் செயலிகளை புனே ஐஐடிஎம் உருவாக்கியது. இந்தச் செயலி இந்தியா முழுவதுமான மின்னல்பற்றிய தகவல்களை கண்காணித்து 20 கிமீ மற்றும் 40 கிமீ சுற்றுவட்டாரத்தில் ஜிபிஎஸ் அறிவிப்புடன் மின்னல் பற்றிய எச்சரிக்கையை வெளியிடுகிறது.

அடுத்த 40 நிமிடங்களில் மின்னல் உருவாகும் இடம் பற்றிய எச்சரிக்கையையும் அது அளிக்கிறது. இந்தச் செயலியை இந்தியா முழுவதும் ஐந்து இலட்சத்திற்கும் அதிகமானோர் பதிவிறக்கம் செய்துள்ளனர்.

---

**2. பார்சலை வீடு வீடாக அனுப்பவிருக்கும் இரயில்வே**

இந்தியா போஸ்ட் மற்றும் இந்திய ரயில்வே இணைந்த பார்சல் சேவை உருவாக்கப்பட்டுள்ளது. பார்சலை வாங்கும் இடத்திலும், பார்சலை கொடுக்கும் இடத்திலும் அஞ்சல் துறை சேவை செய்யும். இந்தப் பார்சலை இரயில் நிலையங்களுக்கிடையே கொண்டுசெல்லும் சேவையை இரயில்வே செய்யும்.

இந்தத் திட்டத்தின் நோக்கம் வணிகர்களிடமிருந்து வணிகர்களுக்கு மற்றும் வணிகர்களிடமிருந்து வாடிக்கையாளர்களுக்கு என்பதாகும். அதாவது அனுப்புகின்றவரின் இடத்திலிருந்து கொண்டுசென்று பெறுகின்றவரின் இடத்தில் அளிப்பதாகும்.

முன்னோட்ட அடிப்படையில் இந்தத்திட்டம் தொடங்கப்பட்டு உள்ளது. இதன் முதல் சேவை 2022 மார்ச் 31இல் சூரத்–வாரணாசி இடையே நடைபெற்றது.

---

**3. தமிழ்நாட்டுக்கு என தனித்த கல்விக்கொள்கையை வடிவமைக்க குழு: முதல்வர் மு க ஸ்டாலின் அறிவிப்பு**

தமிழ்நாட்டு அரசுக்கென தனித்த கல்விக் கொள்கையை வடிவமைக்க குழு அமைக்கப்பட்டுள்ளதாக முதல்வர் மு க ஸ்டாலின் தெரிவித்தார். அவரது அறிவிப்பு விவரம்:

இந்தக்குழுவின் தலைவராக தில்லி உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி த முருகேசன் செயல்படுவார்.

**4. பிரதமரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் தமிழ்நாட்டுக்கு ₹440 கோடி**

பிரதமரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 2021-22-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டுக்கு ₹440 கோடி வழங்கப்பட்டுள்ளது.

பிரதமரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், நிகழாண்டு மார்ச்.31 வரை நாடு முழுவதும் 7,88,185 கிமீ சாலைகள் மற்றும் 9,509 பாலங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு 7,01,205 கிமீ சாலைகள் மற்றும் 6,852 பாலங்களை அமைக்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டுக்கு 2018-19 ஆண்டில் ₹619.14 கோடி, 2019-20 ஆண்டில் ₹308.46 கோடி, 2020-21 ஆண்டில் ₹265.38 கோடி, 2021-22-இல் ₹440 கோடி வழங்கப்பட்டுள்ளது.

---

**5. ஆதிச்சநல்லூர் அகழாய்வுப் பணியில் சங்க காலத்தைச் சேர்ந்த நெல் உமிகள் கண்டெடுப்பு: மத்திய தொல்லியல் துறையினர் ஆய்வு**

தூத்துக்குடி மாவட்டம் ஆதிச்சநல்லூரில் கிடைத்த முது மக்கள்தாழியில் இருந்து அதிகளவில் நெல் உமிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

மத்திய தொல்லியல் துறை சார்பில், ஆதிச்சநல்லூரில் அகழாய்வுப் பணி கடந்த 2021 அக்டோபரில் தொடங்கி நடைபெற்று வருகிறது. மூன்று இடங்களில் 32 குழிகள் தோண்டப்பட்டுள்ளன. 62-க்கும் மேற்பட்ட முதுமக்கள் தாழிகள் எடுக்கப்பட்டுள்ளன. குடுவைகள், பானைகள், இரும்புப்பொருட்கள், மணிகள் என ஏராளமான தொல்லியல் பொருட்கள் கிடைத்துள்ளன.

கடந்த இரு தினங்களுக்கு முன்னர் அகழாய்வுப் பணியில் பாண்டியர் காலத்தைச் சேர்ந்த இரண்டு நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அகழாய்வு நடைபெறும் மூன்று பகுதிகளில் ஓர் இடம் தாமிரபரணி ஆற்றின் கரையோரம் அமைந்துள்ளது. கடந்த 1902ஆம் ஆண்டு அலெக்சாண்டர் ரியா என்ற ஆங்கிலேயர் அகழாய்வு செய்த இடத்தின் அருகே, இந்த அகழாய்வுப் பணி நடந்து வருகிறது. இந்த இடத்தில் கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் பெரிய முதுமக்கள் தாழி கண்டெடுக்கப்பட்டது.

இந்தத் தாழியிலிருந்து, நெல் உமிகள் கண்டெடுக்கப்பட்டு உள்ளன. தாழியைச் சுற்றி 100-க்கும் மேற்பட்ட மண் கலயங்கள், சிறுபானைகள், இரும்பு வாள் ஆகியவை கிடைத்தன. எனவே, பழங்காலத்தில் வாழ்ந்த தலைவன் அல்லது போர்வீரனின் தாழியாக இது இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. இந்தப் பணி விரைவில் நிறைவுற்று, அருங்காட்சியகம் அமைக்கும் பணி தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

**1.** '**உலக மக்கள்தொகை நிலை' குறித்த அறிக்கையை வெளியிடுகிற நிறுவனம் எது?**

அ) UNICEF

**ஆ) UNFPA ☑**

இ) IMF

ஈ) உலக வங்கி

✓ ஐநா மக்கள்தொகை நிதியம் (UNFPA) சமீபத்தில், 'State of World Population: Seeing the Unseen: The case for action in the neglected crisis of unintended pregnancy' என்ற அறிக்கையை வெளியிட்டது.

✓ இந்த அறிக்கையின்படி, உலகெங்கும் ஆண்டுதோறும் உண்டாகும் மொத்தம் 121 மில்லியன் கருவுறுதலில் கிட்டத்தட்ட சரிபாதி, திட்டமிடப்படாதவை ஆகும். உலக அளவில், கருவுறுதலைத் தவிர்க்க விரும்பும் 257 மில்லியன் பெண்கள், பாதுகாப்பான மற்றும் நவீன கருத் தடை முறைகளைப் பயன்படுத்துவதில்லை.

---

**2.** '**Fast and Secured Transmission of Electronic Records (FASTER)' என்ற டிஜிட்டல் தளத்தை அறிமுகப்படுத்திய அமைப்பு எது?**

அ) இந்திய ரிசர்வ் வங்கி

**ஆ) இந்திய உச்சநீதிமன்றம் ☑**

இ) இந்திய தேர்தல் ஆணையம்

ஈ) மத்திய புலனாய்வுப் பணியகம்

✓ இந்திய தலைமை நீதிபதி NV ரமணா, டிஜிட்டல் தளமான 'Fast and Secured Transmission of Electronic Records (FASTER)'ஐ அறிமுகஞ்செய்துவைத்தார்.

✓ இந்தத் தளம் நீதிமன்ற அதிகாரிகளால் பாதுகாக்கப்பட்ட மின்னணு தகவல்தொடர்பு அலைவரிசைமூலம் வழக்கு சம்பந்தப்பட்டவர்களுக்கு உடனடியாக ஆணைகளின் மின் நகல்களை அனுப்ப பயன்படும். இது நீதிமன்றத்தின் அனைத்து வகையான ஆணைகளையும் உள்ளடக்கியது.

---

**3.** '**மந்தன்' என்ற ஐடியாதானை தொடங்கிய ஒழுங்காற்று அமைப்பு எது?**

அ) RBI

ஆ) NABARD

**இ) SEBI ☑**

ஈ) IRDAI

✓ SEBI தலைவர் மாதபி பூரி புச் BSE, NSE, NSDL, CDSL, KFintech, CAMS, LinkInTime மற்றும் MCX உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களுடன் இணைந்து ஆறு வார கால 'மந்தன்' என்னும் ஐடியாதானை அறிமுகப்படுத்தினார். இந்தியாவில் பத்திரச்சந்தை தொடர்பான யோசனைகள் மற்றும் புதுமையான தீர்வுகளை உருவாக்க இது உதவும்.

---

**4.** '**பிரதான் மந்திரி சங்கராலயா' அமைந்துள்ள மாநிலம் / UT எது?**

**அ) புது தில்லி ☑**



ஆ) உத்தர பிரதேசம்

இ) உத்தரகாண்ட்

ஈ) குஜராத்

✓ இந்தியப் பிரதமர்களுக்காக அர்ப்பணிக்கப்பட்ட 'பிரதான் மந்திரி சங்கராலயா அருங்காட்சியகம், B R அம்பேத்கரின் பிறந்தநாளையொட்டி ஏப்.14 அன்று திறக்கப்படவுள்ளது.

✓ தில்லியில் உள்ள நேரு நினைவு அருங்காட்சியகத்தை ஒட்டி 10,000 ச மீட்டர் நிலப்பரப்பில் கட்டப்பட்டுள்ள இந்த அருங்காட்சியகம் இதுவரை 14 இந்தியப் பிரதமர்களின் வாழ்க்கையை உள்ளடக்கியது.

---

**5.** 2022 – '**MSMEகள் குறித்த பிரம்மாண்ட சர்வதேச உச்சிமாநாட்டை' நடத்துகிற நகரம் எது?**

அ) மும்பை

ஆ) சென்னை

**இ) புது தில்லி ☑**

ஈ) டேராடூன்

✓ MSME அமைச்சகம், இந்திய அரசு மற்றும் அகமதாபாத்தில் உள்ள இந்திய தொழில்முனைவோர் வளர்ச்சி நிறுவனம் (EDII), ஆகியவை புது தில்லியில் அமைந்துள்ள இந்திய பன்னாட்டு மையத்தில், 'MSMEகள் குறித்த பிரம்மாண்ட சர்வதேச உச்சிமாநாட்டை' ஏற்பாடு செய்தன.

✓ இரண்டு நாள் உச்சிமாநாட்டில் இந்தியா மற்றும் உலகம் முழுவதும் உள்ள தொழில்முனைவோர், கல்வியாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள், தொழில்துறை தலைவர்கள், தொழிற்சங்கங்கள், துளிர் நிறுவனங்கள், சமூக தாக்க நிறுவனங்கள், MSMEகள் மற்றும் சுயஉதவி குழுக்கள் பங்கேற்றன.

---

**6. கடலோரங்களில் தட்பவெப்ப நிலையை மேம்படுத்தும் புதிய திட்டம் தொடங்கப்பட்டுள்ள மாநிலங்கள் எவை?**

அ) தமிழ்நாடு, மகாராஷ்டிரா & ஒடிஸா



**ஆ) ஆந்திரா, மகாராஷ்டிரா & ஒடிஸா ☑**

இ) ஆந்திரா, மகாராஷ்டிரா & கேரளா

ஈ) கர்நாடகா, மகாராஷ்டிரா & ஒடிஸா

✓ ஆந்திர பிரதேசம், மகாராஷ்டிரா மற்றும் ஒடிஸா ஆகிய மாநிலங்களின் கடலோரப் பகுதிகளின் காலநிலைத் தன்மையை மேம்படுத்தும் திட்டத்தை நடுவண் அரசு தொடங்கியுள்ளது.

✓ இத்திட்டம் மொத்தம் $130.269 மில்லியன் டாலர் (சுமார் ₹1,000 கோடி) செலவில் மேற்கொள்ளப்படுகிறது. இதில் 43.419 மில்லியன் டாலர் மானியமும் அடங்கும்.

---

**7.** **உலக ஆட்டிசம் விழிப்புணர்வு நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ) ஏப்ரல்.01

**ஆ) ஏப்ரல்.02 ☑**

இ) ஏப்ரல்.03

ஈ) ஏப்ரல்.04




- ✓ உலக ஆட்டிசம் விழிப்புணர்வு நாளானது ஆட்டிசம் உள்ளவர்கள் அன்றாடம் சந்திக்கும் சவால்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக்கொண்டு உள்ளது. ஆட்டிசம் ஸ்பெக்ட்ரம் கோளாறு (ASD) பற்றிய விழிப்புணர்வை பரப்புவதற்காக ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல்.2ஆம் தேதி உலக ஆட்டிசம் விழிப்புணர்வு நாள் கொண்டாடப்படுகிறது.
- ✓ 'Inclusion in the Workplace' என்பது நடப்பு 2022ஆம் ஆண்டில் வரும் உலக ஆட்டிசம் விழிப்புணர்வு நாளுக்கா–னக் கருப்பொருளாகும்.

---

**8.** **'தேசிய கடல்சார் நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ) ஏப்ரல்.01

ஆ) ஏப்ரல்.03

**இ) ஏப்ரல்.05 ☑**

ஈ) ஏப்ரல்.07




- ✓ ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல்.5 அன்று தேசிய கடல்சார் நாளை இந்தியா கொண்டாடுகிறது. இந்த ஆண்டு இதன் 59ஆவது நாளைக் குறிக்கிறது. "Sustainable Shipping beyond Covid–19" என்பது இந்த ஆண்டில் (2022) வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும். சர்வதேச வர்த்தகம் மற்றும் பொருளாதாரம்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த 1964ஆம் ஆண்டில் இந்நாள் முதலில் அனுசரிக்கப்பட்டது.

---

**9.** **உலக சுகாதார நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**

அ) ஏப்ரல்.01

ஆ) ஏப்ரல்.03

இ) ஏப்ரல்.05

**ஈ) ஏப்ரல்.07 ☑**




- ✓ உலக சுகாதார அமைப்பு மற்றும் இன்னபிற தொடர்புடைய அமைப்புகளின் அனுசரணையின்கீழ் உலகம் முழுவதும் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஏப்.7 உலக சுகாதார நாளாகக் கொண்டாடப்படுகிறது. "Our Planet, Our Health" என்பது நடப்பு 2022ஆம் ஆண்டில் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும்.

---

**10.** **'டைம்100 – இம்பாக்ட் விருதுகளில்' இடம்பெற்றுள்ள இந்திய ஆளுமை யார்?**

அ) விராட் கோலி

ஆ) சிவகார்த்திகேயன்

**இ) தீபிகா படுகோன் ☑**

ஈ) PV சிந்து



- ✓ இந்திய நடிகை தீபிகா படுகோன், 'Live Love Laugh' அறக்கட்டளைமூலம் தாம் மேற்கொண்ட மனநலந்தொடர்–பான தனது பணிக்காக, 'TIME 100 – இம்பாக்ட் விருது' வழங்கி கௌரவிக்கப்பட்டார். இது, தீபிகா படுகோன், டைம் இதழிடமிருந்து பெறும் இரண்டாவது விருது ஆகும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. ஒமைக்ரானின் புதிய வகை: மும்பையில் முதல் பாதிப்பு**

ஒமைக்ரானின் புதிய உருமாற்ற வகையான எக்ஸ்இ கரோனா தீநுண்மியால் பாதிக்கப்பட்டுள்ள முதல் நபர் மும்பையில் கண்டறியப்பட்டுள்ளார்.

ஒமைக்ரான் வகையான பிஏ.2 தீநுண்மியைவிட எக்ஸ்இ வகை தீநுண்மி 10 சதவீதம் வேகமாகப் பரவக்கூடியது. இந்தப் புதிய வகை தீநுண்மி முந்தைய கரோனா வகைகளைவிட வேகமாகப் பரவக்கூடியது என்று உலக சுகாதார அமைப்பும் தெரிவித்துள்ளது.

---

**2. மூன்று மாதங்களில் கடலில் விடப்பட்ட21,000 ஆலிவ் ரிட்லி ஆமைக் குஞ்சுகள்**

சென்னையில் வனத்துறை சார்பில் அமைக்கப்பட்ட பொறிப்பகம்மூலம் கடந்த மூன்று மாதங்களில் 21,338 ஆலிவ் ரிட்லி ஆமைக் குஞ்சுகள் கடலில் விடப்பட்டுள்ளன.

உலகில் உள்ள 7 வகையான கடல் ஆமைகளில் மிகவும் சிறிய உடல் அமைப்பைக் கொண்டுள்ளது ஆலிவ் ரிட்லி ஆமைகள். பங்குனி மாதத்தில் இவை முட்டை இடுவதால் 'பங்குனி ஆமைகள்' என்றும் தமிழில் இவை அழைக்கப்படுகின்றன.

அழியும் நிலையில் உள்ள உயிரினமாக சர்வதேச இயற்கை பாதுகாப்புச் சங்கத்தால் பட்டியலிடப்பட்டுள்ள இவை, 2 ½ அடி நீளமும், அகலமும் கொண்டவையாகும். 12 முதல் 15 ஆண்டுகளில் பருவத்தை அடையும் இந்த ஆமைகள், தான் பிறந்த கடற்கரைக்கு வந்து முட்டையிட்டு குஞ்சு பொறிக்கும் தன்மை கொண்டதாகும். தமிழகத்தின் கடற்கரைகளில் ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை முட்டையிடும். ஒரு பெண் ஆமை 50 முதல் 190 வரை முட்டையிட்டு 45 நாள் முதல் 60 நாள்களுக்குள் குஞ்சு பொறிக்கும்.

**அச்சுறுத்தல்:** 1,000 ஆலிவ் ரிட்லி ஆமைக்குஞ்சுகள் பிறந்தால் அதில் 1 மட்டுமே உயிர்வாழ்வதாக ஆய்வுகள் கூறுகின்றன. மீன்பிடிக்கப் பயன்படும் இழுவை வலையில் சிக்கி உயிரிழப்பது, வெளிச்சத்தை நோக்கி நகருந்தன்மைகொண்ட ஆமைக்குஞ்சுகள் கடலோரத்தில் பொருத்தப்பட்டுள்ள அதிக திறனுள்ள மின்விளக்குகளை நோக்கிச்செல்வதால் பிற இரை உன்னிகள், நீர்ச்சத்து குறைபாட்டால் உயிரிழக்கின்றன. கடற்கரையில் இடும் முட்டைகளை நாய், நரி உண்பது, பொதுமக்கள் சிலர் எடுத்துச்செல்வதுபோன்ற காரணங்களாலும், சுற்றுச் சூழல் பாதிப்பாலும் இவற்றின் இனப்பெருக்கம் குறைந்து வருகிறது.

**21,000 ஆமைக் குஞ்சுகள்:** தற்போது வரை 21,338 ஆமைக் குஞ்சுகள் கடலில் விடப்பட்டுள்ளன.

**3. 2023ஆம் ஆண்டு இறுதியில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு: முதல்வர் மு க ஸ்டாலின் அறிவிப்பு**

2023–ஆம் ஆண்டு இறுதியில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு தமிழ்நாட்டில் நடத்தப்படும் எனப் பேரவையில் முதல்வர் மு க ஸ்டாலின் கூறினார்.

தமிழ்நாடு சட்டப்பேரவையில் 110–ஆவது விதியின் கீழ் முதல்வர் மு க ஸ்டாலின் வெளியிட்ட அறிவிப்பு:

**உலக முதலீட்டாளர்கள் மாநாடு:** வரும் மே மாதத்தில் சுவிட்சர்லாந்து நாட்டில் நடக்கவுள்ள உலகப்பொருளாதார அமைப்பின் வருடாந்திர கூட்டத்திலும், ஜெர்மனி நாட்டில் ஹானோவர் நிகழ்விலும், ஜூன் மாதத்தில் இங்கிலாந்தில் நடைபெறவுள்ள 'Global of Shore Wind' நிகழ்விலும், ஜூலை மாதத்தில் அமெரிக்கா நாட்டிலும், முன்னணி முதலீட்டாளர்களைச் சந்தித்து, தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான முதலீடுகளை ஈர்ப்பதற்கான முயற்சிகள் ஏற்கெனவே தொடங்கியுள்ளன.

எல்லாவற்றுக்கும் முத்தாய்ப்பாக 2023–ஆம் ஆண்டு இறுதியில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு தமிழகத்தில் சிறப்பாக நடத்தப்படும் என்றார் முதல்வர் மு க ஸ்டாலின்.

---

**4. தமிழகத்தில் புதைசாக்கடைகள் தூய்மைப்படுத்தும் பணியில் 214 பேர் பலி: நாட்டில் அதிகபட்சம்**

கடந்த 1993–ஆம் ஆண்டு முதல் இதுவரை, நாட்டில் அதிகபட்சமாக தமிழ்நாட்டில் 214 பேர் புதைசாக்கடையை தூய்மைப்படுத்தும் பணியின்போது உயிரிழந்ததாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

கடந்த 1993–ஆம் ஆண்டு முதல் இதுவரை, நாட்டில் 971 பேர் புதைசாக்கடைகளைத் தூய்மைப்படுத்தும் பணியின் போது இறந்துள்ளனர். அதிகபட்சமாக தமிழ்நாட்டில் 214 பேர் உயிரிழந்தனர். அதனைத்தொடர்ந்து குஜராத்தில் 156 பேர், உத்தர பிரதேசத்தில் 106 பேர் பலியாகியுள்ளனர்.

---

**5. இந்தியாவில்தான் சாலை விபத்துகளால் அதிக உயிரிழப்பு: நிதின் கட்கரி**

பன்னாட்டளவில் இந்தியாவில்தான் சாலை விபத்துகளால் அதிக உயிரிழப்புகள் ஏற்படுவதாக நாடாளுமன்றத்தில் மத்திய சாலைப் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் நிதின்கட்கரி கவலை தெரிவித்தார்.

ஜெனீவாவில் உள்ள சர்வதேச சாலைக்கூட்டமைப்பு வெளியிட்ட உலக சாலை விபத்துகள் புள்ளிவிவரங்கள் – 2018–இன்படி, சாலை விபத்துகளின் எண்ணிக்கையில் இந்தியா மூன்றாமிடம் வகிக்கிறது. சாலை விபத்தில் பலியானோர்களின் எண்ணிக்கையில் இந்தியா முதல் இடமும், காயமடைந்தவர்களின் எண்ணிக்கையில் 3ஆம் இடமும் வகிக்கிறது.

மேலும் கடந்த 2020–இல் சாலை விபத்தில் பலியானவர் –களில் 69.8 சதவீதத்தினர் 18–45 வயதுக்குட்பட்டோர் ஆவர். நாட்டில் 22 பசுமைவழி நெடுஞ்சாலைகளை (₹1,63,350 கோடி மதிப்பில் 2,485 கிமீ தூர 5 விரைவுச் சாலைகள், ₹1,92,876 கோடி மதிப்பில் 5,816 கிமீ அணுகு நெடுஞ்சாலைகள்) மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

---

**6. வேளாண் ஏற்றுமதி ₹3.79 லட்சம் கோடியை எட்டி சாதனை**

இந்தியாவின் வேளாண் பொருள்களின் ஏற்றுமதி ₹3.79 லட்சம் கோடியை (5,000 கோடி டாலர்) எட்டி வரலாற்று உச்சத்தைத் தொட்டுள்ளது.

அரிசி, கோதுமை, சர்க்கரை, இதர தானியங்கள் மற்றும் இறைச்சிபோன்ற முக்கிய பொருள்கள் இதுவரை இல்லாத அளவுக்கு அதிகமாக ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த நிதியாண்டில் (2021–22)–இல் வேளாண் பொருள்களின் ஏற்றுமதி (கடல் & தோட்டப்பொருட்கள் உட்பட) 5,000 கோடி டாலர்களை (சுமார் ₹3.79 லட்சம் கோடி) கடந்துள்ளது. இது வேளாண் ஏற்றுமதியில் இதுவரை எட்டப்படாத அதிகபட்ச அளவாகும்.

வணிக நுண்ணறிவு மற்றும் புள்ளியியல் துறை தலைமை இயக்குநர் வெளியிட்ட புள்ளிவிவரங்களின்படி, 2021–22 ஆண்டில் வேளாண் ஏற்றுமதி 19.92% அதிகரித்து 5,021 கோடி டாலர்களைத் தொட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளின் வருவாயை மேம்படுத்தும் பிரதமரின் தொலைநோக்குப் பார்வையை நனவாக்க கடந்த இரு ஆண்டுகளில் இந்தச் சாதனை பெரிதும் உதவிடும். அரிசி ₹73,321 கோடி (965 கோடி டாலர்), கோதுமை ₹16,639 கோடி (219 கோடி டாலர்), சர்க்கரை ₹34,951 கோடி (460 கோடி டாலர்) மற்றும் பிற தானியங்கள் ₹8,205 கோடி (108 கோடி டாலர்) போன்ற முக்கிய பொருள்கள் இதுவரை இல்லாத வகையில் அதிக ஏற்றுமதி எட்டப்பட்டுள்ளன. அரிசிக்கு உலகச் சந்தையில் கிட்டத்தட்ட 50 சதவீத பங்களிப்பை இந்தியா கைப்பற்றியுள்ளது.

கடல்சார் பொருள்களின் ஏற்றுமதி ₹58,581 கோடியாக (771 கோடி டாலர்) உள்ளது. இதன்மூலம் மேற்கு வங்கம், ஆந்திர பிரதேசம், ஒடிசா, தமிழ்நாடு, கேரளம், மகாராஷ்டிரம், குஜராத் ஆகிய கடலோர மாநிலங்களில் உள்ள விவசாயிகள் பயனடைகின்றனர்.

மசாலா பொருள்களின் ஏற்றுமதி தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக (₹30,392 கோடி) 400 கோடி டாலர்களை எட்டியுள்ளது. மிகப்பெரிய அளவில் விநியோகப் பிரச்னைகளை எதிர்கொண்டபோதிலும், காபி ஏற்றுமதி முதல் முறையாக ₹7,598 கோடியை (100 கோடி டாலர்) கடந்துள்ளது. இதன்மூலம் கர்நாடகம், கேரளம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் உள்ள காபி விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

மத்திய செய்தி தகவல் பிரிவு வெளியிட்ட செய்திக்குறிப்பில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**7. முகேஷ் அம்பானி முதலிடம், அதானி இரண்டாம் இடம்: இந்தியாவின் டாப் 10 கோடீஸ்வரர்கள் யார் யார்? – போர்ப்ஸ் பட்டியல்**

2022–க்கான இந்தியாவின் டாப் 10 கோடீஸ்வரர்கள் பட்டியலை வெளியிட்டுள்ளது போர்ப்ஸ். இதில் முகேஷ் அம்பானி முதலிடத்திலும், அதானி இரண்டாம் இடத்திலும் உள்ளனர்.

அமெரிக்காவின் பிரபல வணிக பத்திரிகை நிறுவனமான 'போர்ப்ஸ்' ஆண்டுதோறும் உலகின் முதல்நிலை கோடீஸ்வரர்கள் பட்டியலை வெளியிடுவது வழக்கம். அந்த வகையில் நடப்பாண்டுக்கான பட்டியலையும் போர்ப்ஸ் வெளியிட்டுள்ளது. இந்தப் பட்டியலில் மொத்தம் 2,668 கோடீஸ்வரர்கள் இடம்பெற்றுள்ளனர். அவர்களின் மொத்த சொத்து மதிப்பு 12.7 டிரில்லியன் அமெரிக்க டாலர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் $219 பில்லியன் டாலர்களை தனது சொத்து மதிப்பாக கொண்டுள்ள டெஸ்லா நிறுவனர் எலான் மஸ்க் உலக கோடீஸ்வரர்களில் முதலிடத்தில் உள்ளார். அமேசான் நிறுவனர் ஜெப் பெசோஸ் $171 பில்லியன் டாலர்கள் சொத்து மதிப்புடன் 2ஆவது இடத்தில் உள்ளார். உலக அளவில் கோடீஸ்வரர்களை அதிகம் கொண்டுள்ள நாடுகளில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது.

**போர்ப்ஸ் பட்டியலில் இடம்பெற்றுள்ள இந்தியாவின் முதல் 10 கோடீஸ்வரர்கள் யார் யார்?**

10ஆம் இடத்தில் கோட்டக் மகிந்திரா வங்கியின் நிர்வாக இயக்குநர் உதய் கோட்டக், 9ஆமிடத்தில் மருந்துகளைத் தயாரித்து வரும் சன் பார்மா நிறுவனர் திலீப் சாங்க்வி, 8ஆம் இடத்தில் ஆதித்யா பிர்லா, 7ஆவது இடத்தில் ஓ பி ஜிண்டால், 6ஆவது இடத்தில் ஆர்சிலர் மிட்டல் நிறுவனத் தலைவராக உள்ள லட்சுமி மிட்டல், 5ஆவது இடத்தில் டி–மார்ட் நிறுவனர் ராதாகிஷன் தமானி, 4ஆவது இடத்தில் சீரம் இன்ஸ்டிடியூட் நிர்வாக இயக்குநர் சைரஸ் பூனவல்லா, 3ஆவது இடத்தில் தமிழகத்தில் பிறந்தவரான HCL நிறுவனத்தின் நிறுவனர் ஷிவ் நாடார், 2ஆவது இடத்தில் துறைமுகங்கள், விமான நிலையங்கள், நிலக்கரி, மின் உற்பத்தி மற்றும் ரியல் எஸ்டேட் முதலான தொழில்களில் ஈடுபட்டு வரும் அதானி குழும நிறுவனர் கௌதம் அதானி, முதல் இடத்தில் பெட்ரோ கெமிக்கல், எண்ணெய் மற்றும் எரிவாயு, டெலிகாம் மற்றும் ரீடெயில் மாதிரியான தொழில்களில் ஈடுபட்டு வரும் ரிலையன்ஸ் குழுமத் தலைவர் முகேஷ் அம்பானி உள்ளனர்.

டாப் 10 உலக கோடீஸ்வரர்களில் பத்தாவது இடத்தில் உள்ளார் அம்பானி.

---

**8. கல்கி வாழ்க்கை வரலாறு ஆங்கிலத்தில் வெளியீடு**

புகழ்பெற்ற 'பொன்னியின் செல்வன்' நாவலைப் படைத்த எழுத்தாளர் கல்கி கிருஷ்ணமூர்த்தியின் வாழ்க்கை வரலாறு ஆங்கிலத்தில் படைக்கப்பட்டுள்ளது.

'Kalki Krishnamurthy: His Life on Times' என்னும் பெயரில் அந்நூல் படைக்கப்பட்டுள்ளது. முதல் நூலை பெற்றுக் கொண்டார் சென்னை உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி கே சந்துரு.

கல்கியின் வாழ்க்கை வரலாறு கடந்த 1973இல் தமிழில் வெளியீடு கண்டது. அந்நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார் கல்கியின் பேத்தியான கௌரி இராமநாராயணன்.

---

**1. எஃகு கழிவுகளால் ஆன முதல் சாலையைப் பெறவுள்ள இந்திய நகரம் எது?**



அ) மும்பை

**ஆ) சூரத் ☑**

இ) ஜெய்ப்பூர்

ஈ) சண்டிகர்

✓ எஃகுக்கழிவுகளாலான சாலை வாய்க்கப்பெற்ற இந்தியா –வின் முதல் நகரமாக சூரத் ஆனது. இது நிலையான வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாகக் கருதப்படுகிறது. CSIR இந்தியா (அறிவியல் & தொழிற்துறை ஆராய்ச்சிக் கழகம்) மற்றும் CRRI (மத்திய சாலை ஆராய்ச்சி நிறுவனம்) உடன் ஆர்செலர் மிட்டல் நிப்பான் ஸ்டீல் இந்தியாவால் இணைந்து இந்தச் சாலை அமைக்கப்பட்டது.

✓ இது எஃகு அமைச்சகம் மற்றும் இந்திய அரசாங்க மதியு –ரையகமான NITI ஆயோக்கின் ஆதரவின்கீழ் உள்ளது.

---

**2. பாரதிய ரிசர்வ் வங்கி நோட் முத்ரன் தனியார் லிட்'இன் 'வர்னிகா' மை உற்பத்திப் பிரிவானது கீழ்காணும் எந்த நகரத்தில் திறக்கப்பட்டுள்ளது?**



அ) சென்னை

**ஆ) மைசூரு ☑**

இ) புது தில்லி

ஈ) கொல்கத்தா

✓ இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) ஆளுநர் சக்திகாந்த தாஸ், மைசூரில் உள்ள பாரதிய ரிசர்வ் வங்கி நோட் முத்ரன் தனியார் நிறுவனத்தின் (BRBNMPL) மை உற்பத்திப் பிரிவான 'வர்னிகா'வை நாட்டுக்கு அர்ப்பணித்தார். இது இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) முழு–உரிமையுடைய துணை நிறுவனமாகும்.

---

**3. 'பாலிகாத்தான்' என்பது அமெரிக்கப் படைகளுக்கும் கீழ்காணும் எந்நாட்டிற்கும் இடையே நடைபெறும் கூட்டு இராணுவப் பயிற்சியாகும்?**



அ) இத்தாலி

**ஆ) பிலிப்பைன்ஸ் ☑**

இ) ஜப்பான்

ஈ) இலங்கை

✓ அமெரிக்கா மற்றும் பிலிப்பைன்ஸின் தற்காப்புப் படைகள் பிலிப்பைன்ஸில், 'பாலிகாத்தான் – 2022' என்ற பெயரில் மிகப்பெரிய கூட்டு இராணுவப் பயிற்சியை தொடங்கின.

✓ 12 நாள் நடக்கும் இந்தப் பயிற்சியில் கிட்டத்தட்ட 9,000 பிலிப்பைன்ஸ் மற்றும் அமெரிக்க வீரர்கள் ஈடுபடுத்தப்பட் –டுள்ளனர்.

---

**4. இந்தியா சமீபத்தில் எந்த நாட்டுடனான பொருளாதார ஒத்துழைப்பு & வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது?**

அ) ஜப்பான் ஆ) ஜெர்மனி

**இ) ஆஸ்திரேலியா ☑** ஈ) பிரான்ஸ்




✓ இந்தியாவும் ஆஸி'உம் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக ஒப்பந்தத்தில் (IndAus ECTA) கையெழுத்திட்டன. இது ஆஸ்திரேலியாவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் இந்தியப் பொருட்களுக்கு 96% வரி அணுகலை வழங்க எண்ணுகிறது. ஏற்றுமதியில் பொறியியல் பொருட்கள், இரத்தினங்கள் மற்றும் நகைகள், ஜவுளி, ஆடை மற்றும் தோல் பொருட்கள் ஆகியவை அடங்கும்.

✓ இந்த ஒப்பந்தம் ஐந்து ஆண்டுகளில் $45–50 பில்லியன் டாலர்கள் வரை பொருட்கள் மற்றும் சேவைகளில் இரு தரப்பு வர்த்தகத்தை அதிகரிக்கும். மேலும், இந்தியாவில் 1 மில்லியனுக்கும் அதிகமான வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

**5. பொருளாதார நெருக்கடி தொடர்பான எதிர்ப்புகளுக்கு இடையே நாடு தழுவிய அவசரநிலையை அறிவித்துள்ள ஆசிய நாடு எது?**



அ) மியான்மர்

ஆ) ஆப்கானிஸ்தான்

**இ) இலங்கை ☑**

ஈ) பாகிஸ்தான்

✓ இலங்கையில் ஏற்பட்டுள்ள மோசமான பொருளாதார நெருக்கடிக்கு இடையே இலங்கை அதிபர் கோத்தபய இராஜபக்ச நாடு தழுவிய அவசரநிலையை அறிவித்து உள்ளார். இந்த அறிவிப்பு ஏப்ரல்.1 முதல் உடனடியாக அமலுக்கு வரும்.

---

**6. 'சாஜிபு நோங்மா பண்பா' என்பது எந்த மாநிலத்தின் பாரம்பரிய விழாவாகும்?**



அ) மேற்கு வங்காளம்

ஆ) ஒடிஸா

**இ) மணிப்பூர் ☑**

ஈ) அஸ்ஸாம்

✓ 'சாஜிபு நோங்மா பண்பா' என்பது நிலவுப் புத்தாண்டாக மணிப்பூரில் உள்ள சனாமாஹிசம் மதத்தைப் பின்பற்று –வோரால் கொண்டாடப்படும் ஒரு பாரம்பரிய பண்டிகை ஆகும். இந்நாள் பெரும்பாலும் சந்திர மாதமான சாஜிபுவின் முதல் நாளில் அனுசரிக்கப்படுகிறது.

✓ 'மீதேய் செய்ரவ்பா' அல்லது 'சாஜிபு செய்ரவ்பா' என்றும் அழைக்கப்படும் இவ்விழா, மணிப்பூரின் மிகப்பெரிய இன சமூகங்களில் ஒன்றான மெய்டே இன மக்களால் கொண்டாடப்படுகிறது.

---

**7. 'நவீன தடுப்பாற்றலியல் பயிற்சி தொடர்பான உலகளா –விய ஒத்துழைப்பு'க் கூட்டத்தை நடத்திய நகரம் எது?**



அ) நியூயார்க்

**ஆ) ஜெனிவா ☑**

இ) பெர்லின்

ஈ) பாரிஸ்

✓ 'நவீன தடுப்பாற்றலியல் பயிற்சி தொடர்பான உலகளா – விய ஒத்துழைப்பு'க்கூட்டமானது சமீபத்தில் ஜெனிவாவில்

நடைபெற்றது. இக்கூட்டத்தில், உலகம் முழுவதும் உள்ள சுகாதாரப்பணியாளர்களுக்கான அடிப்படை தடுப்பாற்றலி –யல் பயிற்சியின் அவசியம் குறித்து விவாதிக்கப்பட்டது.

✓ தேசிய நோய்த்தடுப்பு தொழினுட்ப ஆலோசனை குழுவில் (NTAGEI) COVID–19 பணிக்குழுவின் தலைவரான Dr NK அரோரா இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தினார்.

---

**8. உட்கட்டமைப்பு குத்தகை மற்றும் நிதி சேவைகளின் (IL&FS) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராக நியமனம் செய்யப்பட்டுள்ளவர் யார்?**



அ) உர்ஜித் படேல்

**ஆ) C S இராஜன் ☑**

இ) இரகுராம் இராஜன்

ஈ) விரால் ஆச்சார்யா

✓ மத்திய அரசானது C S இராஜனை ஆறு மாத காலத்திற்கு உட்கட்டமைப்பு குத்தகை மற்றும் நிதி சேவைகள் (IL&FS) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராக நியமித்துள்ளது.

✓ மார்ச் இறுதி வரை, இந்நிறுவனம் 55,000 கோடி ரூபாய் கடனுக்குத் தீர்வுகண்டுள்ளது. இதில், சொத்துக்களைப் பணமாக்குதல் மற்றும் கடனைத் திருப்பிச் செலுத்துதல் ஆகியவற்றின்மூலம் ₹21,000 கோடி விடுவிக்கப்பட்டு உள்ளது. தீர்க்கப்பட்ட கடனானது தீர்க்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட மொத்த கடனில் 90% ஆகும்.

---

**9. 'வினய சமரசிய யோஜனா'வை அறிவித்துள்ள இந்திய மாநிலம் / UT எது?**




அ) ஆந்திர பிரதேசம்

**ஆ) கர்நாடகா ☑**

இ) கேரளா

ஈ) குஜராத்

✓ கர்நாடக மாநில அரசு, மாநிலம் முழுவதும் உள்ள கிராமப் பஞ்சாயத்துகளில் தீண்டாமையை ஒழிப்பதற்கான விழிப்புணர்வு திட்டமான, 'வினய சமரஸ்ய யோஜனா' என்ற திட்டத்தை அறிவித்துள்ளது. இந்தத் திட்டத்திற்கு 3 வயது தலித் சிறுவன் வினயின் பெயர் இடப்பட்டுள்ளது.

---

**10. பெண்களுக்கு இலவச சட்ட உதவி வழங்குவதற்காக, 'DSLSA சட்ட உதவியகத்தை'த்தொடங்கிய அமைப்பு எது?**

அ) ஐநா பெண்கள்

**ஆ) தேசிய பெண்கள் ஆணையம் ☑**

இ) UNICEF

ஈ) NITI ஆயோக்

✓ தேசிய பெண்கள் ஆணையமானது (NCW) தில்லி மாநில சட்ட சேவைகள் ஆணையத்துடன் (DSLSA) இணைந்து 'சட்ட உதவியகம்' என்றவொன்றைத் தொடங்கியுள்ளது.

✓ பெண்களுக்கு இலவச சட்ட உதவிகளை வழங்கி அவர்தம் குறைகளைத் தீர்க்க ஒற்றைச்சாளர வசதியாக இது செயல்படும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தூய்மையான உணவுவளாகம் திட்டத்தின்கீழ் ICF–க்கு ஐந்து நட்சத்திர தரச்சான்றிதழ்**

சென்னை இணைப்பு பெட்டி தொழிற்சாலைக்கு (ICF) இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரக்கட்டுப்பாட்டு நிறுவனத்தின் 'தூய்மையான உணவு வளாகத்துக்கான' 5 நட்சத்திர தரச்சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

இந்திய அரசின் உடல்நலம் மற்றும் குடும்பநல அமைச்சகத்தின் கட்டுப்பாட்டின் கீழ், இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரக்கட்டுப்பாட்டு நிறுவனம் (ஊநநஅஐ) செயல்படுகிறது. இந்த நிறுவனம், பொதுமக்கள் உடல்நல பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், நாடு முழுவதும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

'தூய்மையான உணவு வளாகம்' என்னும் திட்டத்தின் கீழ், இந்நிறுவனம் சார்பில், பல்வேறு பள்ளிகள், பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள், மருத்துவமனைகள், பணியிடங்கள் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளுக்கு தரச்சான்றிதழ் வழங்கப்படுகிறது.

---

**2. நடமாடும் மருத்துவ வாகன சேவை**

'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டத்தின்கீழ் ₹70 கோடி செலவில் சென்னை மெரினாவில் நடமாடும் மருத்துவ வாகன சேவை திட்டத்தை முதல்வர் மு க ஸ்டாலின் கொடியசைத்து தொடக்கி வைத்தார்.

₹70 கோடி செலவில் 389 மருத்துவ வாகனங்களை முதல்வர் சென்னையில் கொடியசைத்து தொடக்கினார்.

---

**3. காலணி வடிவமைப்பு, உற்பத்தி: தைவான் நிறுவனத்துடன் ₹1,000 கோடியில் அரசு ஒப்பந்தம்**

தைவானின் புகழ்பெற்ற காலணி வடிவமைப்பு, உற்பத்தி நிறுவனமான ஹாங்பூ தமிழ்நாட்டில் தனது ஆலையை அமைக்கவுள்ளது. இதற்கான ஒப்பந்தம் முதலமைச்சர் முன்னிலையில் தமிழ்நாடு அரசுடன் செய்யப்பட்டது.

₹1,000 கோடி முதலீட்டில் 20,000 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்க ஒப்பந்தத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

---

**4. அமெரிக்க உச்சநீதிமன்றத்துக்கு முதல் கருப்பின பெண் நீதிபதி நியமனம்**

அமெரிக்க உச்சநீதிமன்றத்தின் நீதிபதியாக கருப்பினத் –தைச் சேர்ந்த கேதன்ஜி பிரௌன் ஜாக்சனை நியமிக்க அந்நாட்டு நாடாளுமன்ற மேலவை ஒப்புதல் அளித்தது. அமெரிக்க உச்சநீதிமன்றத்தின் முதல் கருப்பின பெண் நீதிபதி என்ற பெருமையை இவர் பெறுகிறார்.

தற்போது தலைநகர் வாஷிங்டனில் உள்ள கொலம்பியா மாவட்ட மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாக உள்ள கேதன்ஜி பிரௌன் ஜாக்சன் (51) அமெரிக்க உச்சநீதி மன்றத்தின் மூன்றாவது பெண் நீதிபதியாக இருப்பார்.

---

**1. 2022இல் 5ஆவது BIMSTEC உச்சிமாநாட்டை நடத்தும் நாடு எது?**

அ) இந்தியா

**ஆ) இலங்கை ☑**

இ) மியான்மர்

ஈ) பூடான்

✓ ஐந்தாவது BIMSTEC (Bay of Bengal Initiative for Multi–Sectoral Technical and Economic Cooperation) உச்சி மாநாடு இலங்கையால் நடத்தப்பட்டது. பிரதமர் நரேந்திர மோடி, இந்த மாநாட்டில் மெய்நிகராக கலந்துகொண்டார். மேலும், BIMSTEC செயலகத்தின் பட்ஜெட்டை மேம்படுத்து –வதற்காக $1 மில்லியன் டாலர்கள் நிதியுதவியையும் அவர் அறிவித்தார்.

✓ "*Bimstec–Towards a Resilient Region, Prosperous Economies, Healthy Peoples*" என்பது கொழும்புவில் நடந்த இந்த உச்சிமாநாட்டின் கருப்பொருளாகும்.

---

**2. 'ஹுருன் உலகளாவிய U–40 தானே உருவான பில் –லியனர்கள்–2022'இல் இந்தியாவின் தரநிலை என்ன?**



அ) இரண்டாவது

ஆ) மூன்றாவது

**இ) நான்காவது ☑**

ஈ) ஆறாவது

✓ 'ஹுருன் உலகளாவிய U–40 தானே உருவான பில்லிய –னர்கள்–2022' பட்டியலில், இந்தியா நான்காமிடத்தில் உள்ளது. 37 பில்லியனர்களுடன் அமெரிக்கா முதலிடத்தி –லும், 25 பேருடன் சீனா இரண்டாமிடத்திலும், எட்டு பேருடன் இங்கிலாந்து மூன்றாவது இடத்திலும் உள்ளது. இந்தியாவில் 6 U–40 பில்லியனர்கள் உள்ளனர்.

✓ $76 பில்லியன் டாலர்களுடன் 40 வயதுக்குட்பட்டோருள் மார்க் ஜூக்கர்பெர்க் (37) உலகின் நம்பர்.1ஆக உள்ளார். டிக்டாக் நிறுவனர் ஜாங் யிமிங் (39), $54 பில்லியன் டாலர்களுடன் இரண்டாவது இடத்தில் உள்ளார்.

---

**3. 'ஹுருன் தானே உருவான செல்வச் சீமாட்டிகள் – 2022' பட்டியலில், இந்திய அளவில் முதலிடம் பிடித்த இந்திய சீமாட்டி யார்?**

அ) கிரண் மஜும்தார்–ஷா



**ஆ) பால்குனி நாயர் ☑**

இ) இராதா வேம்பு

ஈ) மிருதுளா பரேக்

✓ 'ஹுருன் தானே உருவான செல்வச் சீமாட்டிகள் – 2022' பட்டியலின்படி, உலகில் தற்போது 124 செல்வச்சீமாட்டிகள் உள்ளனர். இந்த எண்ணிக்கை கடந்த ஆண்டைவிட 6 குறைவாகும். இந்தப் பட்டியலில், நைக்காவைச் சேர்ந்த பால்குனி நாயர், பயோகானின் கிரண் மஜும்தார்–ஷா மற்றும் ஜோஹோவின் ராதா வேம்பு ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

✓ பால்குனி நாயர், நீண்டகாலமாக இந்தியாவின் நம்பர்.1 செல்வச்சீமாட்டியாக இருந்துவரும் கிரண் மஜும்தார் ஷாவை பின்னுக்குத் தள்ளி, இந்தியாவின் செல்வச் சீமாட்டி ஆனார்.

---

**4. மாநில பல்லுயிர் உத்தி மற்றும் செயல்திட்டத்தை (SBSAP) உருவாக்க, WWF இந்தியாவுடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட இந்திய மாநிலம் எது?**

அ) கர்நாடகா

ஆ) அஸ்ஸாம்

**இ) அருணாச்சல பிரதேசம் ☑**

ஈ) கேரளா

✓ மாநில பல்லுயிர் உத்தி & செயல்திட்டத்தை (SBSAP) உருவாக்க அருணாச்சல பிரதேசம் WWF இந்தியாவுடன் ஓர் ஒப்பந்தம் செய்துள்ளது. SBSAP ஆனது 2020–க்குப் பிந்தைய உலகளாவிய பல்லுயிர் கட்டமைப்பு மற்றும் பக்கே பிரகடனம் ஆகியவற்றுக்கு இணக்கமாக இருக்கும்.

---

**5. இந்தியாவில் ஒளிபரப்பு தொடர்பான சேவைகளுக்காக தொடங்கப்பட்ட இணையதளத்தின் பெயர் என்ன?**

**அ) பிராட்காஸ்ட் சேவா போர்டல் ☑**

ஆ) பாரத் பிராட்காஸ்ட்

இ) ஆத்மநிர்பர் பிராட்காஸ்ட்

ஈ) இ–பிராட்காஸ்ட் போர்டல்

✓ ஒளிபரப்பு உரிமங்கள், அனுமதிகள் & பதிவுகளுக்கான விண்ணப்பங்களை விரைவாக தாக்கல்செய்வதற்கும் செயலாக்குவதற்கும் அரசாங்கம் புதிய ஒளிபரப்பு சேவை இணையதளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

✓ 'பிராட்காஸ்ட் சேவா போர்டல்' என்ற பெயரிலான இது செயற்கைக்கோள் தொலைக்காட்சி அலைவரிசைகள், டெலிபோர்ட் ஆபரேட்டர்கள், MSO–கள், சமூக வானொலி நிலையங்கள் மற்றும் தனியார் FM சேனல்களுக்கு உதவும். பயன்பாடுகளைக் கண்காணிப்பதற்கும், கட்டண –ங்களைக் கணக்கிடுவதற்கும், பணஞ்செலுத்துவதற்கும் இது பயன்படுகிறது.

---

**6. விக்டர் ஓர்பன் என்பவர் கீழ்காணும் எந்த நாட்டின் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டார்?**



அ) உக்ரைன்

**ஆ) ஹங்கேரி ☑**

இ) பெலாரஸ்

ஈ) போலந்து

✓ ஹங்கேரியின் தேசியவாத பிரதமரான விக்டர் ஓர்பன் தொடர்ந்து நான்காவது முறையாக மீண்டும் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். 1989இல் பொதுவுடைமைத் தத்துவத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் நாட்டின் மிகநீண்ட காலம் பணியாற்றிய தலைவர் ஆவார் அவர்.

---

**7. சாலைப் பாதுகாப்புத் திட்டத்தின் ஒருபகுதியாக, செயற்கை நுண்ணறிவில் (AI) இயங்கும் கேமராக்களால் சூழப்பட்டிருக்கும் இந்திய நகரம் எது?**



அ) சென்னை

**ஆ) கோழிக்கோடு ☑**

இ) மும்பை

ஈ) புது தில்லி

- ✓ மாநில அளவிலான சாலைப் பாதுகாப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக, கேரளாவின் கோழிக்கோடு நகரைச் சுற்றி சுமார் அறுபது செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான கேமராக்கள் நிறுவப்படவுள்ளன.
- ✓ போக்குவரத்து விதிமீறல்களை வெளிப்படுத்தவும், உறுதி –யான டிஜிட்டல் ஆதாரங்களுடன் பதிவு செய்யவும் இந்த நடவடிக்கை செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்திற்காக கேரள மாநில அரசு ₹225 கோடி செலவிடும்.

---

**8. அஸ்ஸாம் மாநிலமானது சமீபத்தில், மாநில எல்லையில் உள்ள வேறுபாடுகளுக்குத் தீர்வுகாண்பதற்காக, எந்த மாநிலத்துடனான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது?**



அ) சிக்கிம்

**ஆ) மேகாலயா ☑**

இ) மணிப்பூர்

ஈ) அருணாச்சல பிரதேசம்

- ✓ மேகாலயா மற்றும் அஸ்ஸாம் இடையே கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, 18.33 சதுர கிலோமீட்டர் மேகாலயாவுடனும், 18.46 சதுர கிலோ மீட்டர் அஸ்ஸாம் மாநிலத்துடனும் இருக்கும்.

---

**9. இந்தியப் பெருங்கடல் கடற்படை கருத்தரங்கின் (IONS) முதல் கடல்சார் பயிற்சி – 2022 (IMEX–22) நடைபெற்ற இடம் எது?**



அ) விசாகப்பட்டினம்

**ஆ) கோவா ☑**

இ) புனே

ஈ) டேராடூன்

- ✓ இந்தியப் பெருங்கடல் கடற்படை கருத்தரங்கம் (IONS) அதன் முதலாவது கடல்சார் பயிற்சி – 2022 (IMEX–22)'ஐ கோவாவிலும் அரபிக்கடலிலும் நடத்தியது.
- ✓ ஆஸ்திரேலியா, வங்காளதேசம், பிரான்ஸ், இந்தியா, இலங்கை, ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் இங்கிலாந்து உட்பட 15 IONS உறுப்பினர் கடற்படைகளைச் சேர்ந்த 22 பார்வையாளர்களும் பயிற்சியில் பங்கேற்றனர். IMEX – 22 ஆனது 2 கட்டங்களாக கோவாவின் மர்மகோவா துறைமுகத்திலும் அரபிக்கடலிலும் நடத்தப்பட்டது.

---

**10. அண்மையில் புவிசார் குறியீடு பெற்ற ஷாஹி லிச்சி சார்ந்த இந்திய மாநிலம் எது?**

**அ) பீகார் ☑** ஆ) உத்தர பிரதேசம்

இ) மத்திய பிரதேசம் ஈ) உத்தரகாண்ட்



- ✓ வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA)மூலம் நடுவண் அரசு, இந்தியாவின் முதன்மையான புவிசார் குறியீடு பெறப்பட்ட உழவுப்பொருட்களை புதிய உலகளாவிய சந்தைகளில் சோதனை முறையில் ஏற்றுமதி செய்கிறது.
- ✓ பீகாரின் GI குறியிடப்பட்ட ஷாஹி லிச்சி கடந்த ஆண்டு பீகாரின் முசாபர்பூர் மாவட்டத்திலிருந்து இலண்டனுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இன்றுவரை, 417 பதிவுசெய்யப்ப –ட்ட GI தயாரிப்புகள் உள்ளன. அவற்றுள் சுமார் 150 GI குறியிடப்பட்ட தயாரிப்புகள் விவசாயம் மற்றும் உணவுப் பொருட்கள் ஆகும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. மாற்றுத்திறனாளிகளுக்கான செயற்கை முழங்கால்: சென்னை ஐ.ஐ.டி., கண்டுபிடிப்பு**

மாற்றுத்திறனாளிகளின் பயன்பாட்டுக்காக, உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட முதலாவது பன்மைய செயற்கை முழங்காலை, சென்னை ஐ.ஐ.டி., அறிமுகம் செய்துள்ளது.

'கதம்' எனப் பெயரிடப்பட்ட இந்தச் செயற்கை முழங்காலை, சொசைட்டி பார் பயோமெடிக்கல் டெக்னாலஜி, மொபிலிட்டி இந்தியா நிறுவனங்களுடன் இணைந்து சென்னை ஐஐடி உருவாக்கியுள்ளது.

---

**2. வங்கி கடன்களுக்கான வட்டி விகிதங்களில் மாற்றம் இல்லை: ரிசர்வ் வங்கி**

ரிசர்வ் வங்கி தொடர்ந்து 11ஆவது முறையாக வங்கி கடன்களுக்கான வட்டி விகிதங்களில் மாற்றம் செய்யாமல் பழைய நிலையிலேயே தொடரும் எனத் தெரிவித்துள்ளது.

நிதிக்கொள்கை தொடர்பான முடிவுகளை இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர் சக்திகாந்த தாஸ் வெளியிட்டு பேசியதாவது:

**ரெப்போ 4 சதவீதம்:** ரிசர்வ் வங்கி நிதிக் கொள்கைக் குழு எடுத்த முடிவுகளின்படி, இம்முறையும் வங்கிக் கடன்களு –க்கான வட்டி விகிதங்களில் மாற்றமில்லை. இதை அடுத்து, ரிசர்வ் வங்கி வணிக வங்கிகளுக்கு வழங்கும் குறுகியகால கடனுக்கான வட்டி விகிதமான 'ரெப்போ ரேட்' முன்னெப்போதும் இல்லாத குறைந்தபட்ச அளவான 4 சதவீதம் என்ற அளவிலேயே தொடர்ந்து நீடிக்கும்.

அதேபோன்று, வங்கிகளிடமிருந்து ரிசர்வ் வங்கி பெறும் கடனுக்கான 'ரிவர்ஸ் ரெப்போ ரேட்' விகிதமும் முந்தைய அளவான 3.35 சதவீதமாகவே இருக்கும்.

**இலக்கை விட அதிகம்:** பன்னாட்டு அளவில் அதிகரித்து வரும் பதற்றங்களால் நடப்பு நிதியாண்டில் பணவீக்க விகிதம் ரிசர்வ் வங்கியின் இலக்கைக் காட்டிலும் (4.5 சதவீதம்), 5.7% என்ற அளவில் கணிசமாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

**பொருளாதார வளர்ச்சி:** தற்போது நிலவும் கடினமான சூழலையடுத்து, நடப்பு 2022–23ஆம் நிதியாண்டுக்கான பொருளாதார வளர்ச்சி மதிப்பீடு 7.8 சதவீதத்திலிருந்து 7.2 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. ஒரு பீப்பாய் கச்சா

எண்ணெய் விலை $100 டாலர் என்பதன் அடிப்படையில் இந்த மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றார் அவர்.

---

### 3. 2022 நிதியாண்டில் வரி வசூல் 34% அதிகரிப்பு

நிறுவன வரி, சுங்கவரி, ஜிஎஸ்டி வரி வசூல் அதிகரிப்பு காரணமாக கடந்த மார்ச்.31 வரையிலான நிதியாண்டு முடிவின்படி, நாட்டின் மொத்த வரி வசூல் ₹27.07 லட்சம் கோடியை எட்டி 34% உயர்ந்திருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

கடந்த 1999-க்குப் பின்னர் தற்போது மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான வரி வீதம் 11.7 சதவீதம் அதிகரித்துள்ளது. இதுவே கடந்த 2020-21 நிதியாண்டில் 10.3 சதவீதமாக இருந்தது.

---

### 4. 2021-22-இல் ₹3.72 இலட்சம் கோடிக்கு வேளாண் பொருள்கள் ஏற்றுமதி; சவால்களுக்கிடையே 19.92% உயர்வு

நாட்டில் ஒட்டு மொத்தமாக வேளாண் பொருள்கள், ₹3.72 லட்சம் கோடிக்கு ($50 பில்லியன் அமரிக்க டாலர்) ஏற்றுமதி செய்யப்பட்டு இந்தியா குறிப்பிடத்தக்க சாதனையைப் புரிந்துள்ளது.

நோய்த்தொற்றுக் காலக்கட்டத்தில் ஏற்பட்ட பல்வேறு தளவாட வசதி சவால்களுக்கிடையேயும் சுமார் 19.92% ஏற்றுமதி உயர்ந்துள்ளாக மத்திய வர்த்தகம் தொழில் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

---

### 5. உலக ஸ்குவாஷ் இரட்டையர் சாம்பியன்ஷிப்: இந்தியா சாம்பியன்

உலக ஸ்குவாஷ் இரட்டையர் சாம்பியன்ஷிப் போட்டி மகளிர், கலப்பு இரட்டையர் பிரிவில் முதன்முறையாக இந்தியா சாம்பியன் பட்டம் வென்றது. இதில் தீபிகா பல்லிக்கல் இரட்டை சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

**இந்தியா உலக சாம்பியன்:**

கலப்பு இரட்டைர் பிரிவு இறுதிச்சுற்றில் தீபிகா-சௌரவ் கோஷல் இணை 11-6, 11-8 என்ற புள்ளிக்கணக்கில் இங்கிலாந்தின் அட்ரியன் வாலர்-அலிஸன் வாட்டர்ஸ் இணையை வீழ்த்தி முதன்முறையாக சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

அதேபோல் மகளிர் இரட்டையர் பிரிவு இறுதிச்சுற்றில் தீபிகா-ஜோஷ்னா இணை 11-9, 4-11, 11-8 என்ற புள்ளிக் கணக்கில் இங்கிலாந்தின் சாரா ஜேன்-அலிஸன் வாட்டர்ஸ் இணையை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது. உலக சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது இந்தியாவுக்கு இதுவே முதன்முறையாகும்.

---

**1. அண்மையில் தொடங்கப்பட்ட, 'அன்பாக்ஸ் மீ பிரச்சாரம்' என்பதுடன் தொடர்புடைய நாள் எது?**

**அ) திருநங்கையரை இனங்காணும் உலக நாள் ☑**

ஆ) பாகுபாடுகள் ஒழிப்பு நாள்

இ) உலக மனிதாபிமான நாள்




ஈ) ஆப்பிரிக்க வம்சாவளி மக்களுக்கான உலக நாள்

✓ திருநங்கையரை இனங்காணும் உலக நாளானது மார்ச் 31 அன்று அனுசரிக்கப்படுகிறது. USAID ஆனது திருநங் –கையரின் உரிமைகளுக்காக வாதிடும், 'அன்பாக்ஸ் மீ பிரச்சாரம்' என்ற முன்னெடுப்பைத் தொடங்கியது.

✓ இது குழந்தைப் பருவத்தில் பாலின அடையாளங்குறித்த விழிப்புணர்வை பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் சமுதாயத்தினரிடையே ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தொண்ணூறு சதவீதத்திற்கும் மேலான திருநங்கையர் தங்கள் வீட்டைவிட்டு வெளியேறும் இந்தியாவில்தான் இந்தப் பிரச்சாரம் உருவானது.

---

**2. இந்திய ரிசர்வ் வங்கியின் தரவுகளின்படி, 2021 ஏப்ரல்–டிசம்பர் மாதங்களில், அதிக மோசடிகளை எதிர்கொண்ட வங்கி எது?**

அ) பாரத வங்கி

**ஆ) பஞ்சாப் தேசிய வங்கி ☑**

இ) பாங்க் ஆப் இந்தியா

ஈ) மகாராஷ்டிரா வங்கி

✓ இந்திய ரிசர்வ் வங்கியின் தரவுகளின்படி, மொத்தம் 27 அட்டவணைப்படுத்தப்பட்ட வணிக வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் 96 மோசடி வழக்குகள் பதிவாகியுள்ளன. இதில் 2021 ஏப்ரல்–டிசம்பரில் மட்டும் மொத்தம் ₹34,097 கோடி நிதி மோசடி செய்யப்பட்டது. பஞ்சாப் தேசிய வங்கி அதிகபட்ச மதிப்பைப் பதிவு செய்துள்ளது.

---

**3. 2022 – சௌதி அரேபிய கிராண்ட் பிரிக்ஸ் போட்டியில் வென்ற பந்தய ஓட்டுநர் யார்?**

**அ) மேக்ஸ் வெர்ஸ்டாப்பன் ☑**

ஆ) சார்லஸ் லெக்லெர்க்

இ) லூயிஸ் ஹாமில்டன்



ஈ) செபாஸ்டியன் வெட்டல்

✓ பெல்ஜிய–டச்சு பந்தய ஓட்டுநரான மேக்ஸ் வெர்ஸ்டாப்பன் 2022 – சௌதி அரேபிய கிராண்ட் பிரிக்ஸை வென்றார். பெராரியின் கார்லோஸ் சைன்ஸ் மற்றும் ரெட் புல்லின்

✓ செர்ஜியோ பெரெஸ் மூன்றாவது மற்றும் நான்காவது இடத்தைப் பிடித்தனர். மெர்சிடஸ் அணியின் ஜார்ஜ் ரஸ்ஸல் ஐந்தாமிடத்தைப் பிடித்தார். மேலும், லூயிஸ் ஹாமில்டன் 10ஆமிடத்தைப் பிடித்தார்.

---

**4. புதுப்பிக்கத்தக்க எரிசக்திக் கொள்கையை (2022–27) அங்கீகரித்துள்ள மாநிலம் எது?**

**அ) கர்நாடகா ☑** ஆ) அஸ்ஸாம்

இ) குஜராத் ஈ) ஒடிஸா



✓ கர்நாடக மாநில அமைச்சரவை புதுப்பிக்கத்தக்க எரிசக்திக் கொள்கைக்கு (2022–27) ஒப்புதல் அளித்துள்ளது.

✓ புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தொடர்பான உபகரணங்களை உற்பத்தி செய்யும் மையமாக கர்நாடக மாநிலத்தை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. அடுத்த ஐந்தாண்டுகளில் மாநிலத்தின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தித் திறனை 10 ஜிகாவாட்டாக உயர்த்தவும் இந்தக் கொள்கை எண்ணுகிறது.

---

**5. 'MyGov' இணையதளத்தை அறிமுகப்படுத்திய முதல் யூனியன் பிரதேசம் எது?**

அ) புதுச்சேரி

ஆ) இலட்சத்தீவுகள்

**இ) ஜம்மு–காஷ்மீர் ☑**

ஈ) சண்டிகர்

✓ ஜம்மு மற்றும் காஷ்மீர் அதன் 'MyGov' இணையதளத்தை அறிமுகப்படுத்திய இந்தியாவின் முதல் யூனியன் பிரதேசம் ஆகும். இதை துணைநிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா தொடங்கிவைத்தார். இத்தளம் குடிமக்களின் ஈடுபாட்டை நோக்கமாகக் கொண்டது மற்றும் 'நல்லாட்சி' என்ற இலக்கை அடைகிறது. இது, 2014'இல் பிரதமர் மோடியால் தொடங்கப்பட்டது.

---

**6.** 2022 – **தேசிய கடல்சார் நாளுக்கான கருப்பொருள் என்ன?**

அ) International trade and Economy

**ஆ) Sustainable Shipping beyond COVID–19 ☑**



இ) Gratitude towards Navy

ஈ) Atmanirbhar Maritime Force

✓ இந்தியா சமீபத்தில் ஏப்.5 அன்று 59ஆம் தேசிய கடல்சார் நாளைக் கொண்டாடியது. "*Sustainable Shipping beyond COVID–19*" என்பது நடப்பு ஆண்டில் (2022) வரும் இந்த நாளுக்கான கருப்பொருளாகும். பன்னாட்டு வர்த்தகம் மற்றும் பொருளாதாரம்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த 1964இல் இந்நாள் முதன்முதலில் கொண்டாடப்பட்டது.

---

**7. 'எழுந்து நில் இந்தியா' திட்டத்தை மேற்பார்வையிடுகிற மத்திய அமைச்சகம் எது?**

அ) MSME அமைச்சகம்

**ஆ) நிதி அமைச்சகம் ☑**

இ) வணிகம் & தொழிற்துறை அமைச்சகம்

ஈ) அறிவியல் & தொழில்நுட்ப அமைச்சகம்

✓ கிரீன்பீல்ட் நிறுவனத்தைத் தொடங்குதற்கு உதவுதற்காக, பெண்கள், பட்டியலிடப்பட்ட சாதிகள் (SC) மற்றும் பழங்குடி (ST) பிரிவினர் மத்தியில் தொழில்முனைவோரை மேம்படுத்துவதை நோக்கமாகக்கொண்ட, 'ஸ்டாண்ட் அப் இந்தியா' திட்டத்தை நடுவண் அரசின் நிதி அமைச்சகம் மேற்பார்வையிடுகிறது. இந்தத் திட்டம் 6 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.

**8.** **கங்கௌர் திருவிழா கொண்டாடப்படுகிற மாநிலம் எது?**



அ) சிக்கிம்

**ஆ) இராஜஸ்தான் ☑**

இ) மணிப்பூர்

ஈ) அருணாச்சல பிரதேசம்

- ✓ கங்கௌர் திருவிழாவானது இராஜஸ்தான் மாநிலத்தில் கொண்டாடப்படுகிறது. COVID தொற்றுநோய் காரணமாக ஈராண்டு இடைவெளிக்குப் பிறகு ராஜஸ்தான் சுற்றுலாத் துறை இவ்விழாவை ஏற்பாடு செய்தது.
- ✓ ஏப்ரல்.3ஆம் தேதி தொடங்கிய இந்த விழா தொடர்ந்து 18 நாட்கள் நடைபெறுகிறது.

---

**9.** **இந்தியாவின் புதிய வெளியுறவுச் செயலராக நியமனம் செய்யப்பட்டவர் யார்?**



**அ) வினய் மோகன் குவாத்ரா ☑**

ஆ) ருத்ரேந்திர டாண்டன்

இ) தினேஷ் பாட்டியா

ஈ) சந்தோஷ் ஜா

- ✓ இந்திய வெளியுறவுத்துறையின் மூத்த அதிகாரி வினய் மோகன் குவாத்ராவை புதிய வெளியுறவுச் செயலாளராக இந்திய அரசு நியமித்தது. 1988ஆம் ஆண்டுத் தொகுதி IFS அதிகாரியான இவர், தற்போது 2020 ஜனவரி முதல் காத்மாண்டுவில் தூதராகப் பணியாற்றி வருகிறார்.
- ✓ தற்போதைய வெளியுறவுச் செயலாளர் ஹர்ஷ் வர்தன் ஷிரிங்லாவுக்குப் பதிலாக வினய் நியமிக்கப்படுகிறார்.

---

**10.** **ரிக்கி கேஜ் மற்றும் பல்குனி ஷா ஆகியோர் சமீபத்தில் கீழ்காணும் எந்த விருதை வென்றனர்?**



அ) அகாதமி விருதுகள்

**ஆ) கிராமி விருதுகள் ☑**

இ) பிரிட்ஸ்கர் கட்டடக்கலை பரிசு

ஈ) ஆபெல் பரிசு

- ✓ 64ஆவது ஆண்டு கிராமி விருதுகளில் இரண்டு இந்திய இசைக்கலைஞர்கள் விருது வென்றனர்.
- ✓ அதில், 'டிவைன் டைட்ஸ்' என்ற பாடல் தொகுப்புக்காக பெங்களூரைச் சேர்ந்த ரிக்கி கெஜ், 'சிறந்த புதிய ஆல்பம்' என்ற பிரிவில் கிராமி விருதை வென்றார். ரிக்கி கெஜ் பெறும் இரண்டாவது கிராமி விருது இதுவாகும். பல்குனி ஷா, 'சிறார்களுக்கான சிறந்த ஆல்பம்' என்ற பிரிவில், 'எ கலர்புல் வேர்ல்டு' பாடலுக்காக கிராமி விருதைப்பெற்றார்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. கல்வித்தரத்தில் தமிழகத்துக்கு 22ஆவது இடம்**

தேசிய அளவில் கல்வித்தரத்தில் தமிழ்நாடு 22ஆவது இடத்திலிருப்பதாக அண்ணா பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் இ பாலகுருசாமி தெரிவித்தார்.

கல்வி, சுகாதாரம், தனிநபர் வருமானம் உள்ளிட்ட காரணிகளை உள்ளடக்கிய மனித வளர்ச்சிக் குறியீட்டில், மொத்தமுள்ள 180 நாடுகளின் பட்டியலில் இந்தியா 130 ஆவது இடத்திலேயே உள்ளது. தனி நபர் வருமானத்தில் 12 ஆண்டுகளில் மட்டும் இந்தியாவைவிட சீனா 8 மடங்கு முன்னேற்றம் அடைந்துள்ளது.

நவோதயா பள்ளிகள் அமையும் பட்சத்தில், அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5% சிறப்பு ஒதுக்கீடு என்ற தேவை இருக்காது. தமிழகத்தில் கல்விகற்போரின் எண்ணிக்கை அதிகமாக இருந்தாலும் கூட, தரத்தின் அடிப்படையில் இந்திய அளவில் 22ஆவது இடத்திலேயே தமிழ்நாடு உள்ளது என்றார்.

---

**2. குஜராத்தில் எல்லைச்சுற்றுலா: அமித்ஷா தொடக்கி வைத்தார்**

குஜராத் மாநிலத்தில் 'சீமாதர்ஷன்' என்ற எல்லை சுற்றுலாத் திட்டத்தை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தொடக்கிவைத்தார்.

நாட்டின் எல்லையைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள எல்லைப் பாதுகாப்புப் படையினரின் வாழ்க்கைமுறைபற்றி சாமானிய மக்கள் தெரிந்து கொள்ளும் நோக்கில் ₹125 கோடியில் இந்தச் சுற்றுலாத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

---

**3. தேசிய கூடைப்பந்து போட்டி: தமிழக அணி சாம்பியன்**

71ஆவது தேசிய சீனியர் கூடைப்பந்து சாம்பியன்ஷிப் போட்டி கடந்த ஒரு வாரமாக சென்னையில் நடந்தது. இதில் ஆண்கள் பிரிவில் தமிழ்நாட்டு அணி 87–69 என்ற புள்ளிக்கணக்கில் நடப்பு சாம்பியன் பஞ்சாப்வை வீழ்த்தி கோப்பையை தட்டிச் சென்றது.

---

**1.** சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'மெஸ் ஜனாக் தளம்' மற்றும் 'பாமியானின் புத்தர்கள்' ஆகியவை அமைந்துள்ள நாடு எது?



அ) நேபாளம்

ஆ) சீனா

**இ) ஆப்கானிஸ்தான் ☑**

ஈ) இந்தியா

- ✓ 'மெஸ ஜனாக் தளம்' மற்றும் 'பாமியானின் புத்தர்கள்' ஆகியன ஆப்கானிஸ்தானில் அமைந்துள்ளன.
- ✓ ஆப்கானிஸ்தானின் மெஸ் ஐனாக்கில் உள்ள புராதன பௌத்த சிலைகளை பாதுகாப்பதாக தலிபான் அரசு அறிவித்துள்ளது. தலிபான்கள் ஆப்கானிஸ்தானில் ஆட்சி செய்தபோது, பீரங்கி, வெடிபொருட்கள் மற்றும் ஏவுகணை –களைப் பயன்படுத்தி பல நூற்றாண்டுகள் பழமையான பௌத்த சிலைகளை பாமியானில் தகர்த்தனர். UNESCO, 2003–இல் உலக பாரம்பரிய தளங்களின் பட்டியலில் பாமியன் பௌத்த சிலைகளின் எச்சங்களைச் சேர்த்தது.

---

**2.** 'அம்பேத்கர் இளம் தொழில்முனைவோர் – வழிகாட்டி திட்டம்' என்பது கீழ்காணும் எந்த மத்திய அமைச்சகத்தின் புதிய திட்டமாகும்?



**அ) சமூக நீதி & அதிகாரமளித்தல் அமைச்சகம் ☑**

ஆ) நிதி அமைச்சகம்

இ) பெண்கள் & குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

ஈ) கல்வி அமைச்சகம்

- ✓ கூட்டு மூலதன நிதிய (VCF) திட்டமான அம்பேத்கர் இளம் தொழில்முனைவோர் திட்டமானது சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் திட்டமாகும். இது SC மற்றும் OBC–களைச்சேர்ந்த ஆர்வமுள்ள தொழில்முனை –வோருக்கு உதவுவதற்காக உருவாக்கப்பட்டது.
- ✓ இத்திட்டத்தின் செயல்திறன் திருப்திகரமாக இல்லாததால், அமைச்சகம் 'வழிகாட்டி' திட்டத்தைத் தொடங்கவுள்ளது.

---

**3.** கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்தை அமைக்க, இந்தியா, எந்த நாட்டுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது?



அ) ஜப்பான்

ஆ) நேபாளம்

**இ) இலங்கை ☑**

ஈ) வங்காளதேசம்

- ✓ கொழும்புவில் நவீன கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்தை அமைப்பதற்காக இந்திய பொதுத்துறை நிறுவனமான பாரத் மின்னணு லிட் நிறுவனத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இந்தியாவும் இலங்கையும் கையெழுத்திட்டுள்ளன. இந்த ஒப்பந்தம் இந்தியாவின் சாகர் முயற்சியின் ஒருபகுதியாக உள்ளது.

---

**4.** 2022 – தேசிய நீர் விருதுகளில், 'சிறந்த மாநிலம்' விருதை வென்ற மாநிலம் எது?



**அ) உத்தர பிரதேசம் ☑**

ஆ) அஸ்ஸாம்

இ) குஜராத்

ஈ) ஒடிஸா

- ✓ குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த் சமீபத்தில் 2022 – தேசிய நீர் விருதுகளை வழங்கினார். 'சிறந்த மாநிலம்' விருது உத்தர பிரதேச மாநிலத்துக்கு வழங்கப்பட்டது.
- ✓ நீர்சேமிப்பில் அனைத்து இந்திய மாநிலங்களிலும் உத்தர பிரதேசம் முதலிடத்திலும், ராஜஸ்தான் மற்றும் தமிழ்நாடு முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்திலும் உள்ளன. வடக்கு மண்டலம், தெற்கு மண்டலம், கிழக்கு மண்டலம் மற்றும் மேற்கு மண்டலத்திற்கான சிறந்த மாவட்டப் பிரிவில் உத்தர பிரதேச மாநிலத்தின் முசாபர் நகர், கேரளத்தின் திருவனந்தபுரம், பீகாரின் கிழக்கு சாம்ப்ரான் மாவட்டம் மற்றும் மத்திய பிரதேசத்தின் இந்தூர் ஆகியவை முறையே முதலிடம் பிடித்துள்ளன.

---

**5.** 'வருணா' என்பது இந்தியாவிற்கும் எந்த நாட்டிற்கும் இடையிலான இருதரப்பு கடற்படை பயிற்சியாகும்?



**அ) பிரான்ஸ் ☑**

ஆ) ஜப்பான்

இ) ஓமான்

ஈ) ஐக்கிய அரபு அமீரகம்

- ✓ இந்தியாவும் பிரான்சும் அரபிக்கடலில், 'வருணா' என்ற இருதரப்பு கடற்படை பயிற்சியின் 20ஆவது பதிப்பை சமீபத்தில் தொடங்கின. இரு கடற்படைகளின் கடற்படை கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள், கடற்புற ரோந்து வானூர்திகள், போர் வானூர்திகள் மற்றும் உலங்கு வானூர்திகள் இந்தப் பயிற்சியில் பங்கேற்கின்றன.
- ✓ இரண்டு கடற்படைகளுக்கும் இடையிலான இருதரப்பு கடற்படைப்பயிற்சிகள் கடந்த 1993இல் தொடங்கப்பட்டன. இந்தப் பயிற்சிக்கு 2001ஆம் ஆண்டு, 'வருணா' என்று பெயர்சூட்டப்பட்டது.

---

**6.** 'பிராகிருதி' என்பது எந்தத் துறையில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அண்மையில் வெளியிடப்பட்டது?



**அ) நெகிழி மாசுபாடு ☑**

ஆ) ஆண், பெண் சமத்துவம்

இ) LGBTQ உரிமைகள்

ஈ) திறன் மேம்பாடு

- ✓ மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் பூபேந்தர் யாதவ் 'பிராகிருதி' என்ற சின்னத்தை அறிமுகப்படுத்தினார். இது, நெகிழி மாசைக்கட்டுப்படுத்தக்கூடிய சிறிய மாற்றங்கள் குறித்த விழிப்புணர்வைப் பரப்புகிறது. நாட்டில் பயனுள்ள நெகிழிக் கழிவு மேலாண்மையை உறுதிசெய்வதற்காக சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் மற்றும் மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் (CPCB) அமைச்சகம்

எடுத்த பல்வேறு பசுமை முயற்சிகளையும் இது எடுத்துக் காட்டுகிறது.

---

**7. உலக நலவாழ்வு அமைப்பின் வளி தர தரவுத்தளத்தின் புதுப்பிப்பின்படி, உலகில் எத்தனை சதவீதத்தினர் நலம் அற்ற காற்றைச் சுவாசிக்கின்றனர்?**

அ) 25

ஆ) 49

இ) 75

**ஈ) 99 ☑**




- ✓ உலக நலவாழ்வு அமைப்பின் வளி தர தரவுத்தளத்தின் 2022 புதுப்பிப்பின்படி, உலக மக்கள்தொகையில் 99% பேர் WHOஇன் காற்றின் தர வரம்புகளை மீறும் காற்றைச் சுவாசிக்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்டுகிறது.
- ✓ தற்போதைய நிலவரப்படி, 117 நாடுகளில் உள்ள 6,000 நகரங்களில் காற்றின் தரம் கண்காணிக்கப்படுகிறது.

---

**8. ஹைட்ரஜனை எரித்து 'பசுமை' எஃகு தயாரிக்கும் முன்னோடித் திட்டத்தைத் தொடங்கியுள்ள நாடு எது?**

அ) ஆஸ்திரேலியா

**ஆ) சுவீடன் ☑**

இ) போலந்து

ஈ) இத்தாலி



- ✓ கற்கரியாக்க நிலக்கரியை எரிப்பதற்குப்பதிலாக ஹைட்ரஜனை எரித்து அதன்மூலம் எஃகு உற்பத்தியில் ஏற்படும் கார்பன் உமிழ்வைக் குறைக்க சுவீடன் ஒரு சோதனைத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- ✓ HYBRIT அல்லது Hydrogen Breakthrough Iron-making Technology – இது எஃகு நிறுவனமான SSAB, சுரங்க நிறுவனமான LKAB மற்றும் சுவீட அரசுக்குச் சொந்தமான மின் நிறுவனமான Vattenfall ஆகியவற்றின் கூட்டு முயற்சியாகும். உலக எஃகு சங்கத்தின் கூற்றுப்படி, உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு மெட்ரிக் டன் எஃகும் இரண்டு மடங்கு கரியமில வாயுவை வெளியிடுகிறது.

---

**9. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற நீல நைல் நதி உருவாகின்ற நாடு எது?**

**அ) எத்தியோப்பியா ☑**

ஆ) சிலி

இ) மெக்சிகோ

ஈ) தென்னாப்பிரிக்கா



- ✓ நைல் நதியின் துணையாறான நீல நைல் நதி எத்தியோப்பியாவில் உள்ள டானா ஏரியில் உருவாகி எத்தியோப்பியா மற்றும் சூடான் வழியாக பயணிக்கிறது.
- ✓ சூடானின் சென்னார் மாகாணத்தில், நீல நைல் நதியில் கப்பல் விபத்துக்குள்ளானதில் 23 பேர் இறந்தனர். அவர்கள் அனைவரும் பெண்களாவர். நீல நைல் என்பது ஆப்பிரிக்க நாடுகளில் வாழும் மக்களுக்கும் அவர்தம் சரக்குகளுக்குமான ஒரு முதன்மையான போக்குவரத்து பாதையாக திகழ்கிறது.

**10. 'வாக்னர் குரூப்' என்பது எந்த நாட்டின் தனியார் இராணுவ நிறுவனமாகும்?**

அ) அமெரிக்கா

**ஆ) ரஷ்யா ☑**

இ) ஜெர்மனி

ஈ) சீனா



- ✓ 'வாக்னர் குரூப்' என்பது ரஷ்யாவின் தனியார் இராணுவ நிறுவனமாகும். பிரிட்டிஷ் இராணுவ உளவுத்துறையின் கூற்றுப்படி, 'வாக்னர் குழு'வைச் சேர்ந்த 1,000 கூலிப் படையினர் கிழக்கு உக்ரைனுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.
- ✓ இக்குழு உக்ரைன், சிரியா மற்றும் ஆப்பிரிக்க நாடுகளில் கடந்த எட்டு ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. இதன் மேல் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் எனப் பலமுறை குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. 2014இல் கிரிமியாவை ரஷ்யா இணைத்தபோது வாக்னர் குழுமம் முதன்முதலில் செயல்பாட்டிற்கு வந்தது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. எரிசக்தி, பருவநிலை தரவரிசையில் குஜராத், கேரளம், தில்லி முன்னிலை: எரிசக்தி சேமிப்பில் தமிழகம் முதலிடம்**

எரிசக்தி, பருவநிலை குறியீடுகளில் மாநிலங்களின் செயல்பாடுகளில் ஒட்டுமொத்த தரவரிசையில் குஜராத், கேரளம், பஞ்சாப் ஆகிய மாநிலங்கள் முன்னிலையில் உள்ளதாக NITI ஆயோக் அறிவித்துள்ளது. இதில் எரிசக்தி சேமிப்பு பிரிவில் தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளது.

NITI ஆயோக்கின் மாநில எரிசக்தி ஆற்றல் மற்றும் பருவநிலை குறியீடு தரவரிசை பட்டியல் வெளியிடப்பட்டது. இதை இந்த அமைப்பின் துணைத் தலைவர் Dr. இராஜீவ் குமார் வெளியிட்டார். இந்தத் தரவரிசைப் பட்டியல் குறித்து NITI ஆயோக்கின் கூடுதல் செயலாளர் டாக்டர் இராகேஷ் சர்வால் விளக்கினார். அது வருமாறு: இது, மாநில எரிசக்தி மற்றும் பருவநிலை குறியீடுகளின் முதல் சுற்று. இதில் மாநிலங்களின் செயல்பாடுகள் ஆறு அளவுகோல்கள், குறிகாட்டிகளைக் கொண்டு தரவரிசை செய்யப்பட்டுள்ளது.

இவை பெரிய மாநிலங்கள், சிறிய மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் என மூன்றாக பிரிக்கப்பட்டு தரவரிசை வழங்கப்பட்டுள்ளது.

1. மின்பகிர்மான நிறுவன செயல்பாடு (டிஸ்காம்). 2. மக்களுக்கு எரிசக்தி எளிதில் கிடைத்தல், குறைந்த செலவில் நம்பகத்தன்மையோடு கிடைப்பது. 3. தூய்மை எரிசக்திக்கான நடவடிக்கைகள். 4. எரிசக்தி சேமிப்பு. 5. மின்னுற்பத்தியில் நீடித்த சுற்றுச்சூழல். 6. மின் அளவீடு, மாற்று எரிசக்தி, மின்சார சார்ஜிங் ஆகியவற்றில் புதிய முன்முயற்சிகள் போன்றவை இந்த அளவுகோல்களாகும்.

இதில் இந்த ஆறு அளவுகோல்களிலும் ஒட்டு மொத்தமாக அதிகப் புள்ளிகள் பெற்று தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் பெரிய மாநிலங்களில் குஜராத் (50.1 புள்ளிகள்) முதலிடத்தில் உள்ளது. இரண்டாவது இடத்தில் கேரளம் (49.1 புள்ளிகள்), மூன்றாவதாக பஞ்சாப் (48.6 புள்ளிகள்) இடம் பெற்றுள்ளன. சிறிய மாநிலங்கள் வரிசையில்

கோவா (51.4 புள்ளிகள்), திரிபுரா (45 புள்ளிகள்) ஆகிய மாநிலங்களும் யூனியன் பிரதேசங்களில் சண்டீகர் (55.7 புள்ளிகள்), தில்லி (55.6 புள்ளிகள்), டாமன் – டையூ (53.2 புள்ளிகள்), புதுச்சேரி (48.5 புள்ளிகள்) ஆகியவையும் முன்னிலையில் உள்ளன. இந்த ஒட்டுமொத்த தரவரிசையில் தமிழ்நாடு 43.4 புள்ளிகளுடன் 9–ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. அதே சமயத்தில் எரிசக்தி ஆற்றல் சேமிப்புப் பிரிவில் தமிழகம் 85.4 புள்ளிகள் பெற்று முதல் இடம்பெற்றுள்ளது என்றார் அவர்.

---

**2. 6,029 அரசுப்பள்ளிகளில் ஆங்கில மொழி ஆய்வகங்கள், 7,500 ஸ்மார்ட் வகுப்பறைகள் – பள்ளிக் கல்வித் துறையின் 34 அறிவிப்புகள்**

ரூ.150 கோடியில் 7,500 திறன் வகுப்பறைகள் (Smart Class Room), உயர்தொழில்நுட்ப கணினி ஆய்வகங்கள், ஆங்கில மொழி ஆய்வகங்கள், செம்மைப் பள்ளிகள் உள்ளிட்ட அம்சங்களுடன் தமிழக சட்டப்பேரவையில் பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கை மீது விவாதத்தின்போது அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழக சட்டப்பேரவையில் இன்று நடந்த பள்ளிக் கல்வித்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது, பாரம்பரிய கட்டடங்களைப் புதுப்பித்தல், நடமாடும் அறிவியல் ஆய்வகங்கள், பள்ளிகளில் காய்கறித் தோட்டம், பள்ளி சதுரங்க ஒலிம்பியாட், கணினித் தேர்வு மையங்கள், நூலகங்களில் Wi–fi வசதி, வயது வந்தோருக்கான புதிய எழுத்தறிவுத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு முக்கிய அறிவிப்புகளையும், அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி விவரங்களையும் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவித்தார். அதில் இடம்பெற்ற 34 முக்கிய அறிவிப்புகள்:

> திறன் வகுப்பறைகள்: 2022–23ஆம் கல்வியாண்டு தொடங்கி நான்கு ஆண்டுகளில் தமிழகத்திலுள்ள அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளிலும் திறன் வகுப்பறைகள் (Smart Class Room) ஏற்படுத்தும் முயற்சியின் முதற்கட்டமாக நடப்பாண்டில் லட்சக்கணக்கான மாணவர்கள் பயன்பெறும் வகையில் ரூ.150 கோடி மதிப்பீட்டில் 7,500 திறன் வகுப்பறைகள் உருவாக்கப்படும்.

> உயர் தொழில் நுட்ப கணினி ஆய்வகங்கள் அமைத்தல்: 2713 நடுநிலைப் பள்ளிகளில் உயர் தொழில் நுட்ப கணினி ஆய்வகங்கள் ரூ.210 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும். இதனால் 10 லட்சத்திற்கும் அதிகமான மாணவர்களும் ஆசிரியர்களும் பயன்பெறுவர்.

> பள்ளிப் பராமரிப்புக்கென தனி நிதி: பள்ளி வளாகங்கள், வகுப்பறைகள், கழிவறைகளைத் தூய்மை செய்தல், இரவுக்காவல் பணியினை மேற்கொள்ளல் போன்ற சேவைகள் வெளிப்பணியமர்த்துதல் (Outsourcing) வாயிலாக செயல்படுத்தப்படும். அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 15 லட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் முதற்கட்டமாக இத்திட்டம் 2022–23ஆம் கல்வியாண்டு முதல் ரூ.100 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

> ஆங்கில மொழி ஆய்வகங்கள்: அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் ஆங்கிலத்தில் சரளமாக பேச, படிக்க, எழுத மற்றும் புரிந்துகொள்ளும் திறனை மேம்படுத்த 6,029 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஆங்கில மொழி ஆய்வகங்கள் ரூ.30 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

> விரிவான பள்ளிக் கட்டமைப்புத் திட்டம்: 1000 மாணவர்களுக்கு மேல் உள்ள அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளின் அனைத்துத் தேவைகளையும் வசதிகளையும் உள்ளடக்கிய முழுமையான கட்டமைப்பு ஏற்படுத்தப்படும். முதல் கட்டமாக நடப்பாண்டில் ரூ.90 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

> செம்மைப் பள்ளி (School of Excellence): அரசுப் பள்ளி மாணவர்களிலிருந்து அடுத்த தலைமுறை தலைவர்களை உருவாக்குவதை இலக்காகக் கொண்டு கல்வி, கவின்கலை, அறிவியல், இலக்கியம், விளையாட்டு என கல்வி மற்றும் இணைச் செயல்பாடுகளுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கும் வகையில் உலகத் தரத்திலான பள்ளி சென்னையில் அமைக்கப்படும். சுமார் ரூ.7 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

> பாரம்பரிய பள்ளிக் கட்டடங்கள் புதுப்பித்தல்: தமிழ் அறிஞர்கள், தலைவர்கள், விளையாட்டு வீரர்கள், பல்துறை சாதனையாளர்கள், அறிவியல் அறிஞர்கள் படித்த பள்ளிகளும், 100 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ள பாரம்பரிய பள்ளிக் கட்டடங்களும் அவற்றின் தனிச்சிறப்பு மாறாமல் புதுப்பிக்கப்படும்.

நூற்றாண்டு காணும் பள்ளிகளைச் சிறப்பிக்கும் வகையில் நூற்றாண்டு விழாக்கள் கொண்டாடப்படும். இப்பள்ளி நூலகங்களிலுள்ள அரிய நூல்கள் மற்றும் முக்கிய தலைவர்கள் குறித்த ஆவணங்கள் மின்னுருவாக்கம் செய்யப்பட்டு பாதுகாக்கப்படும். இத்திட்டம் ரூ.25 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்

> பள்ளிக் கல்வி அலுவலர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்தல்

> சிறந்த பள்ளித் தலைமை ஆசிரியருக்கான அறிஞர் அண்ணா தலைமைத்துவ விருது

> ஆசிரியர்களுக்கு தொல்லியல் பயிற்சி: தமிழர் நாகரிகம், பண்பாடு, கலாச்சாரம், தொன்மையின் சிறப்பு, குடியேற்றப் பகுதிகளின் காலக்கண்ணாடியென கீழடி, சிவகளை உள்ளிட்ட தமிழகமெங்கும் விரவியிருக்கும் தொல்லியல் தலங்கள் குறித்த தகவல்களை அடுத்த தலைமுறைக்கு சிறப்பாகக் கொண்டு சேர்க்கும் வண்ணம் தொல்லியல் துறை வாயிலாக ஆர்வமுடைய 1000 அரசுப்பள்ளி ஆசிரியர்களுக்கு ரூ.3 கோடி மதிப்பீட்டில் பயிற்சி அளிக்கப்படும்.

> நடமாடும் அறிவியல் ஆய்வகங்கள்: அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் அறிவியல் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் நடமாடும் அறிவியல் ஆய்வகங்கள் மூலம் மாதந்தோறும் அறிவியல் பரிசோதனைகள் உரிய வழிகாட்டுதலுடன் மாணவர்களுக்குக் கற்பிக்கப்படுவதுடன் மாணவர்களே உருவாக்கிய அறிவியல் கருவிகளும் காட்சிப்படுத்தப்படும். 25 லட்சம்

மாணவர்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் ரூ.25 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

> மாணவர்களுக்கு கல்விச் சுற்றுலா

> கோடைக் கொண்டாட்டம் – சிறப்புப் பயிற்சி முகாம்

> சாரண சாரணியர் முகாம்களுக்கு (Jamboree) நிதி ஒதுக்கீடு

> மாணவர் மன்றங்களைப் புதுப்பித்தல்

> கலைத் திருவிழா

> கணினி நிரல், எந்திரனியல் மன்றங்கள் மற்றும் ஹேக்கத்தான்: மாறிவரும் தொழில்நுட்ப மாற்றங்களுக்கு ஏற்ப அரசுப் பள்ளி மாணவர்களுக்குத் தொழில் நுட்ப அறிவு மற்றும் கணினி மொழி மீதான ஆர்வத்தை ஏற்படுத்த கணினி நிரல் மன்றங்கள் (Computer Coding Club) மற்றும் எதிர்காலத் தொழில்நுட்பமான எந்திரனியலைக் (Robotics) கற்றுக்கொள்ள எந்திரனியல் மன்றங்கள் (Robotics Club) பள்ளிகளில் ஏற்படுத்தப்படும். மேலும் இணையப் பாதுகாப்பு மற்றும் Ethical Hacking தொடர்பான பயிற்சி அளிக்கப்பட்டு ஆண்டுதோறும் மாநில அளவிலான ஹேக்கத்தான் போட்டிகள் நடத்தப்படும்.

> பள்ளிகளில் விழிப்புணர்வு வாரம்

> மாணவர்களின் உடல்நலன் காக்க சிறப்புப் பயிற்சிகள்

> பள்ளிகளில் காய்கறித் தோட்டம்: அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு செயல்வழிக் கற்றலை ஊக்குவிக்கும் வகையில் அனைத்து அரசுப் பள்ளிகளிலும் காய்கறித் தோட்டம் மாணவர்களால் ஏற்படுத்தப்படும். அவற்றில் விளையும் காய்கறிகள், பழங்கள், கீரைகள் அப்பள்ளிகளின் சத்துணவில் பயன்படுத்தப்படும். இத்திட்டம் ரூ.25 லட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்

> பள்ளி சதுரங்க ஒலிம்பியாட்: ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் சென்னையில் நடைபெறும் சர்வதேச சதுரங்க ஒலிம்பியாட் போட்டிகளைத் தொடர்ந்து அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடையே சதுரங்கம் குறித்து ஆர்வத்தை ஏற்படுத்தும் வண்ணம் பள்ளி, வட்டாரம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் சதுரங்கப் போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றிபெறும் மாணவர்கள் சர்வதேச விளையாட்டு வீரர்களுடன் கலந்துரையாட ஏற்பாடு செய்யப்படும். இத்திட்டம் ரூ.1 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

> சிறார் பருவ இதழ் மற்றும் ஆசிரியர் மாத இதழ்: மாணவர்களின் வாசிப்புத் திறனை ஊக்குவிக்கவும் அவர்களின் உள்ளார்ந்த படைப்புத் திறன்களை வெளிப்படுத்தும் வகையிலும் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் தொடக்க வகுப்பு மாணவர்களுக்கு ஊஞ்சல் இதழும், உயர்வகுப்பு மாணவர்களுக்கு தேன்சிட்டு இதழும் மாதமிருமுறை வெளியிடப்படும். மேலும், ஆசிரியர்களுக்கான படைப்புத் தளத்தை உருவாக்கவும் சிறந்த கற்றல் கற்பித்தல் முறைகளைப் பரிமாறிக் கொள்ளவும் கனவு ஆசிரியர் என்ற மாத இதழ் வெளியிடப்படும். சுமார் ரூ.7 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

> மேல்நிலை கணினிப் பிரிவு மாணவர்களுக்கு கட்டண விலக்கு: அரசு மேல்நிலை வகுப்புகளில் கணினி அறிவியல் பாடத்தை விருப்பப் பாடமாக பயிலும் மாணவர்களிடம் 2022–23ஆம் கல்வி ஆண்டிலிருந்து, ரூ.200 தனிக் கட்டணமாக வசூலிக்கப்படுவது முழுமையாக ரத்து செய்யப்படும். இதனால் ஆண்டுதோறும் 3 லட்சம் மாணவர்கள் பயனடைவர். இதற்கென ஆகும் செலவினம் ரூ.6 கோடியை அரசே ஏற்கும்.

> மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு இருப்பிடத்திலேயே கல்வி: பல்வகைக் குறைபாடுகள் காரணமாக (Children with multiple disabilities voitorflebo) வர இயலாத 10,146 மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு கல்வி மற்றும் இயன்முறை மருத்துவம் உள்ளிட்ட சிகிச்சைகளை அவர்களின் வீடுகளுக்கே சென்று வழங்கி அவர்களின் கற்றல் சூழலை மேம்படுத்த ரூ.8.11 கோடி மதிப்பீட்டில் திட்டம் செயல்படுத்தப்படும்

> அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் மாதாந்திர பெற்றோர் கூட்டம்

> கணினித் தேர்வு மையங்கள் அமைத்தல்: ஆசிரியர் தேர்வு வாரிய போட்டித் தேர்வுகளைத் திட்டமிட்ட கால அட்டவணைப்படி விரைந்து நடத்திடவும், போட்டித்தேர்வு நடைபெறாத காலங்களில் அரசுப்பள்ளி மாணவர்கள் பயன்படுத்தும் வகையிலும் அரசுப் பள்ளிகளில் கணினி ஆய்வகங்கள் ரூ.30 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

> நூலக நண்பர்கள் திட்டம்

தமிழகத்தில் உள்ள கிராமங்கள் மற்றும் நகரப் பகுதிகளில் நூலக சேவை கிடைக்கப்பெறாத இடங்களில் நூலக நண்பர்கள் என்ற புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு தன்னார்வலர்கள் வாயிலாக நூலக சேவை வழங்கப்படும். இத்திட்டம் 15 லட்சம் வாசகர்கள் பயன்பெறும் வகையில் ரூ.56.25 லட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

> மெய்நிகர் நூலகம் (Virtual Reality Library): நூலகங்களைப் பயன்படுத்தும் குழந்தைகள் மற்றும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் நவீன தொழில்நுட்பத்தை உள்ளடக்கிய மெய்நிகர் தொழில்நுட்ப நூலகம் (Virtual Reality Library) 76 நூலகங்க ளில் ஏற்படுத்தப்படும். இத்திட்டம் ஆண்டுக்கு ஒரு லட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் ரூ.57.20 லட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

> நூலகங்களில் wi–fi வசதி: தமிழக அரசு பொது நூலகங்களை நாடிவரும் வாசகர்கள் மற்றும் போட்டித் தேர்வு மாணவர்கள் பயன்பெறும் வகையில் 352 நூலகங்களில் இலவச wi–fi இணைய வசதி ஏற்படுத்தப்படும். இத்திட்டம் 75,000 வாசகர்கள் பயன்பெறும் வகையில் ரூ.23.40 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

> TN talk: அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் ஒருங்கிணைப்பில் சர்வதேச அளவில் பல்துறை நிபுணர்கள், அறிவியல் ஆய்வாளர்கள் மற்றும் புகழ்பெற்ற அறிஞர்களின் உரைகள் மிகச்சிறந்த தொழில்நுட்பம் மற்றும் அரங்க அமைப்புடன் TN talk என்ற பெயரில் நிகழ்த்தப்படும். இணையம் வாயிலாக உலகெங்கும்

உள்ள தமிழர்களைச் சென்றடையும் வகையில் இத்திட்டம் ரூ.37.50 லட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

> நாளைய தலைமுறைக்கு நாட்டுடைமை நூல்கள்: பள்ளி, கல்லூரி மாணவர்கள், கல்வியாளர்கள், இதழாளர்கள் மற்றும் பொது வாசகர்களிடையே தமிழ், கலை மற்றும் பண்பாட்டு ஆர்வத்தை வளர்க்கும் வகையில், தமிழக அரசால் நாட்டுடையாக்கப்பட்ட பல்வேறு அறிஞர்களின் படைப்புகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 20 நூல்கள் ரூ.30 லட்சம் மதிப்பீட்டில் வெளியிடப்படும்.

> கலைக்களஞ்சியங்கள் ஆவணப்பதிப்பு: வரலாறு மற்றும் பண்பாட்டு ஆர்வலர்கள், மாணவர்கள், ஆய்வாளர்கள் மற்றும் அறிவியல் தமிழ் ஆர்வலர்கள் பயன்பெறும் வகையில், அறிஞர் பெரியசாமி தூரன் அவர்கள் தொகுத்த கலைக்களஞ்சியங்கள் 10 தொகுதிகளும் சிறார் களஞ்சியங்கள் 10 தொகுதிகளும் ஆவணப்பதிப்பாக ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் வெளியிடப்படும்.

> நூற்றாண்டு காணும் படைப்பாளிகளின் நூல் வெளியீடு: நூற்றாண்டு காணும் படைப்பாளிகளின் பிறந்த நாள் மற்றும் நினைவு நாளைப் போற்றும் வகையில் அவர்தம் எழுத்துத்திறன் மற்றும் சமூகப் பங்களிப்பு போன்றவற்றை இளைய தலைமுறையினர் உணர்ந்துகொள்ளும் வகையில் அவர்களது தலைசிறந்த படைப்புகள் தெரிவுசெய்யப்பட்டு ரூ.20 லட்சம் மதிப்பீட்டில் வெளியிடப்படும். இத்திட்டத்தின் வாயிலாக குழந்தைகள், இலக்கிய மற்றும் நாடக ஆர்வலர்கள் பயன்பெறுவர்.

> வயது வந்தோருக்கான புதிய எழுத்தறிவுத் திட்டம்: தமிழகத்தில் 15 வயதுக்கு மேற்பட்ட முற்றிலும் எழுதப் படிக்கத் தெரியாத 4.80 லட்சம் நபர்களுக்கு அடிப்படை எழுத்தறிவுக் கல்வி வழங்கிடும் வகையில் ரூ.9.83 கோடி மதிப்பீட்டில் புதிய எழுத்தறிவுத் திட்டம் செயல்படுத்தப்படும்.

---

**3. தமிழ்நாடு மாநில காட்டுயிர் வாரியத்துக்கு புதிய உறுப்பினர்கள் நியமனம்**

தமிழ்நாடு மாநில காட்டுயிர் வாரியத்துக்கு புதிய உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

முதலமைச்சர் தலைமையிலான காட்டுயிர் வாரிய உறுப்பினர்களாக, சமஉ கம்பம் இராமகிருஷ்ணன், உதய சூரியன், ஐ பி செந்தில்குமார் ஆகிய மூவர் நியமிக்கப்பட்ட –னர். அரசுசாரா உறுப்பினர்களாக சுற்றுச்சூழல் ஆர்வலர் –கள் பிரதிம் ராய், ஓசை காளிதாசன், இராஜ்குமார் நியமிக்கப்பட்டுள்ளனர்.

---

**1.** **ஆசிய வளர்ச்சிக் கண்ணோட்டம் – 2022'இன்படி, 2023–24'இல் இந்தியாவின் மதிப்பிடப்பட்ட வளர்ச்சி விகிதம் என்ன?**

அ) 10.5%

ஆ) 9%

**இ) 8% ☑**

ஈ) 6.5%

8

✓ மணிலாவைச் சார்ந்த ஆசிய வளர்ச்சி வங்கி சமீபத்தில் அதன் ஆசிய வளர்ச்சிக் கண்ணோட்டம் – 2022'ஐ வெளியிட்டது. தெற்காசியாவின் மிகப்பெரிய பொருளாதார –மான இந்தியா, நடப்பு நிதியாண்டில் (2022–23) 7.5 சதவீதமும், அடுத்த ஆண்டு (2023–24) எட்டு சதவீதமும் வளரும் என்று அது கணித்துள்ளது.

---

**2.** **2022 – உலக சுகாதார நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

**அ) Our Planet, Our Health ☑**




ஆ) Climate Change Matters

இ) Personal Hygiene and Public Hygiene

ஈ) Take Care of You and Earth

✓ 1948இல் முதலாவது சுகாதார சபையில் உலக சுகாதார நிறுவனம் (WHO) உருவாக்கப்பட்டதைக் கொண்டாடும் விதமாக ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல்.7 அன்று உலக சுகாதார நாள் அனுசரிக்கப்படுகிறது.

✓ உடல்நலன் தொடர்பான சிக்கல்களைப்பற்றி விவாதிக்க –வும், குறிப்பிட்ட உடல்நலச் சிக்கல்கள் குறித்து சிறப்பு கவனத்தை ஈர்க்கவுமாக WHO இதனை வழிநடத்துகிறது. "*நமது கோள், நமது நலன்*" என்பது இந்த ஆண்டு (2022) உலக சுகாதார நாளுக்கானக் கருப்பொருள் ஆகும்.

---

**3.** **"Braving the Storms: East Asia and Pacific Economic Update" என்ற தலைப்பிலான அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?**

அ) பன்னாட்டு பண நிதியம்

**ஆ) உலக வங்கி ☑**

THE WORLD BANK

இ) ஆசிய வளர்ச்சி வங்கி

ஈ) BRICS வங்கி

✓ உலக வங்கியானது *"Braving the Storms: East Asia and Pacific Economic Update"* என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டது.

✓ இந்த அறிக்கையின்படி, அமெரிக்காவில் நிதி இறுக்கம், சீனாவில் கட்டமைப்பு மந்தநிலை மற்றும் உக்ரைனில் போர் ஆகிய மூன்று இடர்கள் கிழக்காசியா மற்றும் பசிபிக் பிராந்தியத்திற்கு முன்னுள்ளன. இவ்வறிக்கையின் ஏப்ரல் 2022 இதழ், அபாயங்களைத் தவிர்க்கவும் வாய்ப்புகளைப் புரிந்துகொள்ளவும் துணிச்சல் மிகுந்த சீர்திருத்தங்களைப் பரிந்துரைக்கிறது.

---

**4.** **2021–22ஆம் ஆண்டில் இந்தியாவின் வேளாண்மைப் பொருட்கள் ஏற்றுமதி, எந்தச் சாதனையை எட்டியுள்ளது?**

அ) $10 பில்லியன்



ஆ) $20 பில்லியன்

**இ) $50 பில்லியன் ☑**

ஈ) $100 பில்லியன்

✓ 2021–22ஆம் ஆண்டில் $50 பில்லியன் டாலர்களைக் கடந்து இந்தியாவின் விவசாயப் பொருட்களின் ஏற்றுமதி புதிய மைல்கல்லை எட்டியது. இதுவே இந்தியாவிலிருந்து விவசாய ஏற்றுமதியில் இதுவரை எட்டப்பட்ட அதிகபட்ச அளவாகும். வேளாண் ஏற்றுமதி 2021–22இல் 19.92% அதிகரித்து $50.21 பில்லியன் டாலர்களைத் தொட்டுள்ளது.

✓ தரவுகளின்படி, அரிசி ($9.65 பில்லியன்), கோதுமை ($2.19 பில்லியன்), சர்க்கரை ($4.6 பில்லியன்) போன்ற முக்கியப் பொருட்கள் இதுவரை இல்லாத அளவுக்கு அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

---

**5.** **'ஒன் ஹெல்த்' கட்டமைப்பானது எந்த மாநிலத்தில் ஒரு சோதனைத்திட்டமாக தொடங்கப்பட்டுள்ளது?**

**அ) உத்தரகாண்ட் ☑**

ஆ) குஜராத்

இ) கோவா

ஈ) ஹரியானா

✓ கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறையானது உத்தரகாண்ட் மாநிலத்தில் ஒரு சுகாதாரக் கட்டமைப்பை ஒரு சுகாதார ஆதரவு அலகுமூலம் செயல்படுத்துதற்கான ஒரு சோதனைத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இந்தப் பிரிவின் முக்கிய நோக்கம், கற்றல்களின் அடிப்படையில் தேசிய அளவிலான ஒரு சுகாதார செயல்திட்டத்தை உருவாக்குவதாகும்.

---

**6.** **2022 – உலக ஆட்டிசம் விழிப்புணர்வு நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

**அ) Inclusion in the Workplace ☑**



ஆ) Quality Education for All

இ) Leaving No one Behind

ஈ) Disorder, Not a disease

✓ உலக ஆட்டிசம் விழிப்புணர்வு நாளானது ஆட்டிசம் உள்ளவர்கள் நாடோறும் எதிர்கொள்ளும் சிக்கல்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ ஆட்டிசம் ஸ்பெக்ட்ரம் கோளாறுபற்றிய விழிப்புணர்வை பரப்புவதற்காக ஆண்டுதோறும் ஏப்ரல்.2 அன்று உலக ஆட்டிசம் விழிப்புணர்வு நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. "*Inclusion in the Workplace*" என்பது இந்த ஆண்டு (2022) வரும் உலக ஆட்டிசம் விழிப்புணர்வு நாளுக்கானக் கருப் பொருள் ஆகும்.

---

**7.** 2022 – உலக வானிலை நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

**அ) Early Warning and Early Action ☑**




ஆ) Climate and Water

இ) The Sun, the Earth and the Weather

ஈ) The Ocean, Our climate and Weather

- ✓ 'உலக வானிலை அமைப்பு (WMO)' நிறுவப்பட்ட நாளை நினைவுகூரும் வகையில் உலக வானிலை நாள் அனுசரிக்கப்படுகிறது. WMO, தற்போது 193 உறுப்பு நாடுகளையும் பிரதேசங்களையும் கொண்டுள்ளது.
- ✓ WMO ஆனது 1961ஆம் ஆண்டு முதல், மார்ச்.23ஆம் தேதி அன்று உலக வானிலை நாளைக்கடைபிடித்து வருகிறது. "*Early Warning and Early Action*" என்பது இந்த ஆண்டு (2022) உலக வானிலை நாளுக்கானக் கருப்பொருள் ஆகும்.

---

**8.** ஒரு சமீப அறிக்கையின்படி, ஆசியா முழுவதும் காப்பீட்டு ஊடுருவல் விகிதம் குறைவாகவுள்ள நாடு எது?



அ) இலங்கை

ஆ) ஆப்கானிஸ்தான்

**இ) இந்தியா ☑**

ஈ) நேபாளம்

- ✓ சுற்றுச்சூழல் தளமான கிளைமேட் டிரெண்ட்ஸ் தயாரித்த ஒரு சமீபத்திய அறிக்கையின்படி, மொத்த ஆசியாவிலும் காப்பீட்டு ஊடுருவலில் இந்தியா மிகக்குறைந்த விகிதத்தைக் கொண்டுள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ளது.
- ✓ 2021 மேயில் மேற்கு வங்காளத்தைத் தாக்கிய ஆம்பன் சூறாவளிக்குப் பின், இந்தியக் காப்பீட்டு நிறுவனங்கள் காப்பீட்டுத் தொகையில் ¾ பகுதியைச் செலுத்தத் தவறின. இதுவே இம்மிகக்குறைந்த விகிதத்திற்குக் காரணமாகும்.

---

**9.** கேலோ இந்தியா – பல்கலைக்கழக விளையாட்டுக்கள் – 2021'ஐ (KIUG 2021) நடத்துகிற நகரம் எது?




அ) சென்னை

**ஆ) பெங்களூரு ☑**

இ) ஹைதராபாத்

ஈ) டேராடூன்

- ✓ கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டுக்கள் – 2021'க்கான (KIUG 2021) இலச்சினை, ஜெர்சி, சின்னம் மற்றும் கீதம் ஆகியவற்றை மத்திய இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் அனுராக் தாக்கூர் வெளியிட்டார்.
- ✓ சின்னமானது 'வீரா' என்ற யானையைக் கொண்டுள்ளது. பெங்களூரில் நடைபெறவிருந்த இந்நிகழ்வு, கடந்தாண்டு COVID நெருக்கடி காரணமாக ஒத்திவைக்கப்பட்டது. இது KIUG–இன் 2ஆவது பதிப்பாகும். இதில் முதன்முறையாக யோகாசனம் மற்றும் மற்கம்பம் ஆகியவை இடம்பெறும்.

---

**10.** 2022 – ICC மகளிர் உலகக்கோப்பையை வென்ற நாடு எது?




அ) இங்கிலாந்து

**ஆ) ஆஸ்திரேலியா ☑**

இ) தென்னாப்பிரிக்கா

ஈ) இந்தியா

- ✓ ஆஸ்திரேலிய அணி இறுதிப்போட்டியில் இங்கிலாந்தை 71 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி ஏழாவது ICC மகளிர் கிரிக்கெட் உலகக்கோப்பையை வென்றது.
- ✓ ஆஸ்திரேலியாவின் அலிசா ஹீலி 170 ரன்களை விளாச, இறுதிப்போட்டியில் இங்கிலாந்துக்கு எதிராக ஆஸி., ஐந்து விக்கெட் இழப்புக்கு 356 ரன்கள் எடுத்தது. மற்றொரு வீரர் நாட் ஸ்கிவர் 148 ரன்களுடன் ஆட்டமிழக்காமலிருந்தார். இங்கிலாந்து அணியால் 43.4 ஓவரில் 285 ரன் மட்டுமே எடுக்க முடிந்தது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. விக்டோரியாவில் 2026 காமன்வெல்த் போட்டிகள்: முதன்முறையாக பல நகரங்களில் நடைபெறுகிறது**

23ஆவது காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள், ஆஸ்திரேலியாவின் விக்டோரியா மாகாணத்தில் 2026ஆம் ஆண்டு நடைபெறவுள்ளது.

வழக்கமாக ஒரே நகரத்தில் நடைபெறும் இந்த விளையாட்டுப் போட்டிகள், அந்த ஆண்டு விக்டோரியா மாகாணத்தின் ஒன்றுக்கும் மேற்பட்ட நகரங்களில் நடைபெறவுள்ளது. இதற்காக மெல்போர்ன், கீலாங், பெண்டிகோ, பலாரத், கிப்ஸ்லேண்ட் ஆகிய நகரங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

அந்தந்த நகரங்களில் இருக்கும் பிரத்யேக விளையாட்டு கிராமங்களில் போட்டிகள் நடைபெறும். தொடக்க நிகழ்ச்சி மார்ச் மாதத்தில் மெல்போர்ன் கிரிக்கெட் மைதானத்தில் நிகழவுள்ளது. அப்போட்டிக்காக 16 விளையாட்டுகளைக் கொண்ட முதல் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

அதில் டி20 கிரிக்கெட் இடம்பெற்றுள்ள நிலையில், துப்பாக்கி சுடுதல், மல்யுத்தம், வில்வித்தை போன்ற விளையாட்டுகள் இடம்பெறவில்லை. இந்தியா இவற்றில் சிறந்து விளங்குவது நினைவுகூரத்தக்கது. எனினும், வரும் நாள்களில் போட்டியை நடத்தும் நகரங்களின் விருப்பத்தின் அடிப்படையில் இன்னும் சில விளையாட்டுகள் பட்டியலில் சேர்க்கப்படும்.

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் ஆஸ்திரேலியாவில் நடைபெற இருப்பது, இது 6ஆவது முறையாகும். இதற்குமுன் 2018 (கோல்டு கோஸ்ட், 2006 (மெல்போர்ன்), 1982 (பிரிஸ்பேன்), 1962 (பெர்த்), 1938 (சிட்னி) ஆகிய இடங்களில் நடத்தப்பட்டுள்ளன.

---

**2. புதுப்பிக்கப்பட்ட தேசிய கிராம சுயராஜ்ய திட்டத்தை 01.04.2022 முதல் 31.03.2026 வரை தொடர அமைச்சரவை ஒப்புதல்**

தேசிய கிராம சுயராஜ்யம் என்னும் புதுப்பிக்கப்பட்ட மத்திய நிதியுதவித் திட்டத்தை 01.04.2022 முதல் 31.03.2026 வரை (பதினைந்தாவது நிதி ஆணையக் காலத்தில்) தொடர்வதற்கு பிரதமர் தலைமையிலான பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக்குழு ஒப்புதல் அளித்துள்ளது. பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளின் நிர்வாக திறன்களை மேம்படுத்தும் நோக்கத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

**நிதி தாக்கங்கள்:**

இத்திட்டத்தின் மொத்த நிதிச் செலவு ₹5911 கோடி, இதில் மத்தியப் பங்கு ₹3700 கோடி மற்றும் மாநிலப் பங்கு ₹2211 கோடி.

**வேலைவாய்ப்பு உருவாக்கம் உட்பட முக்கிய தாக்கம்:**

நாடு முழுவதும் உள்ள பாரம்பரிய அமைப்புகள் உட்பட 2.78 லட்சத்திற்கும் அதிகமான கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு, உள்ளாட்சி நிர்வாகத்தின் மூலம் நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான நிர்வாக திறன்களை மேம்படுத்துவதற்கு இத்திட்டம் உதவும்.

கிராமங்களில் வறுமை இல்லாத மற்றும் மேம்பட்ட வாழ்வாதாரம், நலமான கிராமம், குழந்தைகளுக்கு நட்பான கிராமம், போதுமான தண்ணீர் வசதி கொண்ட கிராமம், சுத்தமான மற்றும் பசுமை கிராமம், கிராமத்தில் தன்னிறைவான உள்கட்டமைப்பு, சமூக பாதுகாப்பு கிராமம், நல்லாட்சியுடன் கூடிய கிராமம், மற்றும் கிராமத்தில் உருவாக்கப்படும் வளர்ச்சி உள்ளிட்ட இலக்குகளை எட்ட இது உதவும்.

பட்டியல் பிரிவுகள், பழங்குடியினர் மற்றும் பெண்களின் பிரதிநிதித்துவத்தை பஞ்சாயத்துகள் கொண்டிருப்பதாலும், அடித்தட்டு மக்களுக்கு நெருக்கமான அமைப்புகளாக இருப்பதாலும், பஞ்சாயத்துகளை வலுப்படுத்துவது சமூக நீதி மற்றும் சமூகத்தின் பொருளாதார வளர்ச்சியுடன் சமத்துவத்தையும் உள்ளடக்கிய தன்மையையும் ஊக்குவிக்கும்.

பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளின் மின்–ஆளுமையின் அதிகரித்த பயன்பாடு மேம்பட்ட சேவை வழங்கல் மற்றும் வெளிப்படைத்தன்மையை அடைய உதவும். கிராம சபைகளை இத்திட்டம் வலுப்படுத்தும். திட்டத்தை செயல்படுத்துவதை மேற்பார்வையிடவும், திட்டத்தின் கீழ் இலக்குகளை அடைவதற்காக மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களுக்கு தொழில்நுட்ப ஆதரவை வழங்கவும் தேவை அடிப்படையிலான ஒப்பந்தப் பணியாளர்கள் வழங்கப்படலாம்.

**பயனாளிகளின் எண்ணிக்கை:**

நாடு முழுவதும் உள்ள பாரம்பரிய அமைப்புகள் உள்ளிட்ட கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட 60 லட்சம் பிரதிநிதிகள், செயல்பாட்டாளர்கள் மற்றும் இதர பங்குதாரர்கள் இத்திட்டத்தின் நேரடிப் பயனாளிகளாக இருப்பார்கள்.

---

**3. அம்பேத்கர் பிறந்தநாள் சமத்துவ நாளாகக் கொண்டாட்டம்: முதல்வர் மு க ஸ்டாலின் அறிவிப்பு**

அம்பேத்கர் பிறந்தநாள் சமத்துவ நாளாகக் கொண்டாடப்ப –டும் என முதல்வர் மு க ஸ்டாலின் அறிவித்தார். மேலும், அவரது எழுத்துகள் தமிழில் மொழிபெயர்க்கப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

---

**4. ஐ.நா. பொருளாதாரம்–சமூக கவுன்சிலின் 4 முக்கிய அமைப்புகளுக்கு இந்தியா தேர்வு**

ஐநா பொருளாதாரம் மற்றும் சமூக கவுன்சிலின் 4 முக்கிய அமைப்புகளுக்கு இந்தியா தேர்வு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 1945–ஆம் ஆண்டு ஐநா பொருளாதாரம் மற்றும் சமூக கவுன்சில் நிறுவப்பட்டது. இது ஐநா அமைப்பின் 6 முக்கிய உறுப்புகளில் ஒன்றாகும். ஐநாவின் 54 உறுப்பு நாடுகளை இந்தக் கவுன்சில் உள்ளடக்கியுள்ளது.

இந்நிலையில், ஐநாவுக்கான இந்திய தூதரகம் டுவிட்டரில் வெளியிட்ட பதிவில், 'ஐநா பொருளாதாரம் மற்றும் சமூக கவுன்சிலின் சமூக மேம்பாட்டு ஆணையம், தன்னார்வ அமைப்புகளுக்கான குழு, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி ஆணையம் ஆகியவற்றுக்கு இந்தியா தேர்வாகி உள்ளது. இதுதவிர, பொருளாதாரம்–சமூகம்–பண்பாட்டு உரிமைகள் குழுவில் இடம்பெற இந்திய தூதர் பிரீத்தி சரண் மீண்டும் தேர்வுசெய்யப்பட்டுள்ளார்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக ஐநா உறுப்புநாடுகளுக்கு இந்திய தூதரகம் நன்றி தெரிவித்துள்ளது.

---

**5. ரெய்க்யாவிக் ஓபன் செஸ்: பிரக்ஞானந்தா சாம்பியன்**

ஐஸ்லாந்தில் நடைபெற்ற ரெய்க்யாவிக் ஓபன் செஸ் போட்டியில் இந்திய வீரரும், சென்னையைச் சேர்ந்தவரு –மான ஆர் பிரக்ஞானந்தா சாம்பியன் பட்டம் வென்றார்.

9 சுற்றுகள் கொண்ட இந்தப் போட்டியில் பிரக்ஞானந்தா 7.5 புள்ளிகள் பெற்று வெற்றியாளரானார். இறுதிச்சுற்றில் அவர் சக இந்திய கிராண்ட்மாஸ்டரான டி குகேஷை வீழ்த்தினார்.

---

**6. நாட்டின் ஏற்றுமதி 42,000 கோடி டாலரை எட்டியது**

நாட்டின் ஏற்றுமதி கடந்த நிதியாண்டில் 42,000 கோடி டாலரை எட்டியுள்ளதாக மத்தி அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வர்த்தக அமைச்சகம் வெளியிட்ட புள்ளி விவரத்தில் தெரிவித்துள்ளதாவது:

பெட்ரோலிய தயாரிப்புகள், பொறியியல், தோல் உள்ளிட்ட துறைகளின் செயல்பாடுகள் ஆரோக்கியமான நிலையில் இருந்ததையடுத்து நாட்டின் ஏற்றுமதி கடந்த மார்ச் மாதத்தில் 4,222 கோடி டாலர் அளவிற்கு அதிகரித்தது. இது, முந்தைய 2021ஆம் ஆண்டின் மார்ச் மாத ஏற்றுமதியான 3,526 கோடி டாலருடன் ஒப்பிடுகையில் 19.76 சதவீதம் அதிகமாகும்.

அதேபோன்று, இறக்குமதியும் கடந்த மார்ச்சில் 24.21% உயர்ந்து 6,074 கோடி டாலராக காணப்பட்டது.

இதையடுத்து, வர்த்தக பற்றாக்குறை 1,851 கோடி டாலராக அதிகரித்தது. 2021 மார்ச் மாதத்தில் வர்த்தக பற்றாக்குறை 1,364 கோடி டாலராக காணப்பட்டது.

ஒட்டுமொத்த அளவில் கடந்த நிதியாண்டில் (2021–22) நாட்டின் ஏற்றுமதி வரலாற்று உச்சமாக 41,965 கோடி டாலரைத் தொட்டுள்ளது. இது இந்திய மதிப்பில் ₹31.50 லட்சம் கோடியாகும்.

மேலும், கடந்த நிதியாண்டில் இறக்குமதியும் 61,189 கோடி டாலராக அதிகரித்தது. இதையடுத்து வர்த்தக பற்றாக்குறை அந்த நிதியாண்டில் 19,224 கோடி டாலர் (₹15 லட்சம் கோடி) என்ற அளவில் இருந்தது.

2020–21இல் வர்த்தக பற்றாக்குறை (இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்கு இடையிலான வித்தியாசம்) 10,263 கோடி டாலர் என்ற அளவில் காணப்பட்டது.

இந்தியாவின் மாதாந்திர ஏற்றுமதி முதல்முறையாக நடப்பாண்டு மார்ச் மாதத்தில்தான் 4,000 கோடி டாலர் என்ற மைல்கல்லை கடந்து 4,200 கோடி டாலரை தொட்டதாக வர்த்தக அமைச்சகம் புள்ளிவிவரத்தில் தெரிவித்துள்ளது.

---

**7. 20 சிறந்த கைவினைஞர்களுக்கு மாநில அரசு விருதுகள்: முதல்வர் மு க ஸ்டாலின் வழங்கினார்**

கைவினைத் தொழில்களுக்காகவே தங்களது வாழ்வை அர்ப்பணித்துக்கொண்ட 10 சிறந்த கைவினைஞர்களுக்கு 'வாழும் கைவினைப் பொக்கிஷம்' விருது வழங்கப்பட்டு வருகிறது. இந்த விருதானது 8 கிராம் தங்கப்பதக்கம், தாமிர பத்திரம், சான்றிதழ், ₹1 லட்சம் காசோலை அடங்கியது.

இதேபோன்று, சிறந்த கைவினைஞர்களின் பங்களிப்பை ஊக்குவிக்கும் வகையில், 'பூம்புகார் மாநில விருது' அளிக்கப்பட்டு வருகிறது. இந்த விருதானது ₹50,000 பரிசுத்தொகை, 4 கிராம் தங்கப்பதக்கம், தாமிர பதக்கம், தகுதிச்சான்று கொண்டது.

---

**8. ஒரே நேரத்தில் சூரிய அஸ்தமனம், சந்திரோதயம்: கன்னியாகுமரியில் அபூர்வ காட்சியை 16இல் பார்க்கலாம்**

கன்னியாகுமரி முக்கடல் சங்கமத்தில் நின்றவாறு, ஒரே நேரத்தில் சூரியன் மறையும், சந்திரன் உதயமாகும் அபூர்வ காட்சியை சனிக்கிழமை (ஏப்.16) பார்க்கலாம்.

ஆண்டுதோறும் சித்திரை மாத பௌர்ணமி நாளில் கன்னியாகுமரி கடலில் சூரியன் மறைவதும், சந்திரன் உதயமாவதும் ஒரேநேரத்தில் நிகழுகிறது. நிகழாண்டு அத்தகைய அபூர்வ காட்சி சனியன்று (ஏப்.16) நிகழவுள்ள –து. இந்தக் காட்சியை இந்தியாவில் கன்னியாகுமரியில் மட்டுமே பார்க்கலாம் என்பதால் ஆயிரக்கணக்கான சுற்றுலாப்பயணிகள் முக்கடல் சங்கமத்தில் திரளுவது வழக்கம்.

---

**9. அந்தமான் – நிக்கோபர் தீவு இணைப்புத் திட்டம்.**

அந்தமான்–நிக்கோபார் தீவுகளில் தேசிய நெடுஞ்சாலை – 4இல் உள்ள பியோட்னாபாத் முதல் பெரார்கஞ்ச் வரையிலான பகுதியில் சாலை அமைக்கும் பணிகள் கடந்த 2019ஆம் ஆண்டு நிறைவடைந்ததாக கட்கரி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்தி: இந்த 26 கிமீ நீளமுள்ள சாலை அந்தமான் – நிக்கோபார் தீவு இணைப்பு திட்டத்தின்கீழ் ₹170 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

பயன்பாட்டை மேம்படுத்துவதன்மூலம், போர்ட் பிளேயரில் இருந்து அந்தமான் மாவட்டத்தின் பிற நகரங்களுக்கு தடையற்ற போக்குவரத்து உறுதிசெய்யப்பட்டுள்தாக அவர் கூறினார். தேசிய நெடுஞ்சாலை–4 எனப்படும் 'அந்தமான் ட்ரங்க் சாலை' தீவுகளின் உயிர்நாடி என்றும், அந்தமான் – நிக்கோபார் தீவுகளின் சமூக–பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

---

**1. இந்தியாவின் அயல்நாட்டு வர்த்தகக் கொள்கையுடன் தொடர்புடைய மத்திய அமைச்சகம் எது?**

அ) வெளியுறவு அமைச்சகம்

ஆ) MSME அமைச்சகம்

**இ) வணிகம் & தொழிற்துறை அமைச்சகம் ☑**

ஈ) உள்துறை அமைச்சகம்

✓ மத்திய வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள அயல்நாட்டு வர்த்தக இயக்குநரகம், இந்திய நாட்டின் அயல்நாட்டு வர்த்தகக் கொள்கைக்கு பொறுப்பு ஆகும். தற்போதுள்ள அயல்நாட்டு வர்த்தகக் கொள்கை 2015-20, மார்ச் 31, 2022 வரை செல்லுபடியாகும் என அறிவிக்கப்பட்டிருந்தது. அது தற்போது 2022 செப்.30 வரை நீட்டிக்கப்படும் என DGFT அறிவித்தது.

---

**2. குறைகடத்தி திட்டத்தின் வழிகாட்டும் ஆலோசனைக் குழுவின் தலைவர் யார்?**

அ) நந்தன் நிலேகனி

**ஆ) அஸ்வினி வைஷ்ணவ் ☑**



இ) சுந்தர் பிச்சை

ஈ) சத்யா நாதெல்லா

✓ ₹76,000 கோடி மதிப்பிலான குறைகடத்தி திட்டத்திற்கு வழிகாட்ட மத்திய மின்னனு மற்றும் தகவல் தொழினுட்ப அமைச்சகம் பதினேழு உறுப்பினர்களைக் கொண்ட ஆலோசனைக் குழுவை அமைத்தது. இந்தக் குழுவின் தலைவராக மின்னனு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் இருப்பார்.

✓ NITI ஆயோக் உறுப்பினர் வி கே சரஸ்வத், முதன்மை அறிவியல் ஆலோசகர் மற்றும் வெளியுறவு அமைச்சகம், செலவினம், பொருளாதார விவகாரங்கள் மற்றும் தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தகத்தை மேம்படுத்துதல் ஆகிய துறைகளின் செயலாளர்கள் இந்தக் குழுவில் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

---

**3. மின்சார வாகனக் கொள்கையில் இ-மிதிவண்டிகளை சேர்க்கவுள்ள முதல் மாநிலம்/UT எது?**

அ) தெலுங்கானா

**ஆ) புது தில்லி ☑**



இ) குஜராத்

ஈ) ஒடிஸா

✓ தில்லி அரசாங்கம் அதன் மின்சார வாகனங்களுக்கானக் கொள்கையின்கீழ் இ-மிதிவண்டிகளைச் சேர்த்துள்ளது. மேலும், இ-மிதிவண்டிகளை வாங்கும் முதல் 10,000 நபர்களுக்கு தலா ₹5,500 மானியம் வழங்குவதாகவும் தில்லி அரசு அறிவித்துள்ளது.

---

**4. சமீபத்தில் கண்டறியப்பட்ட, 'K2-2016-BLG-0005Lb' என்ற புறக்கோள், எந்தக் கோளைப் போலவே உள்ளது?**

அ) சனி **ஆ) வியாழன் ☑**

இ) செவ்வாய் ஈ) நெப்டியூன்



✓ நமது வியாழன் கோளைப் போன்ற ஒரு புறக்கோளை வானியலாளர்கள் சமீபத்தில் கண்டுபிடித்துள்ளனர். "K2-2016-BLG-0005Lb" எனப் பெயரிடப்பட்ட இந்தக் கோள், பூமியிலிருந்து 17,000 ஒளியாண்டுகள் தொலைவில் அமைந்துள்ளது. NASA இன் கெப்ளர் விண்வெளி தொலை நோக்கிமூலம் பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் வானியற்பியலாளர்கள் குழு இதனைக்கண்டறிந்துள்ளது.

---

**5. CEEW-இன் அண்மைய ஆய்வின்படி, கடந்த இருபது ஆண்டுகளில் அதிக எண்ணிக்கையிலான காட்டுத்தீ நிகழ்வுகளைக் கண்ட மாநிலம் எது?**

அ) இராஜஸ்தான்

**ஆ) மிசோரம் ☑**

இ) மேற்கு வங்காளம்

ஈ) அருணாச்சல பிரதேசம்

✓ எரிசக்தி, சுற்றுச்சூழல் மற்றும் நீர் கவுன்சில் (CEEW) வெளியிட்ட ஆய்வின்படி, கடந்த இருபது ஆண்டுகளில் காட்டுத்தீயின் நிகழ்வும் அதன் தீவிரமும் அதிகரித்துள்ளது.

✓ 'மாறும் காலநிலையில் காட்டுத்தீயை நிர்வகித்தல்' என்ற ஆய்வில், கடந்த இருபதாண்டுகளில் காட்டுத்தீ 10 மடங்கு அதிகரித்துள்ளது. இந்திய மாநிலங்களில் 62 சதவீதத்திற்-கும் அதிகமானவை அதிதீவிரங்கொண்ட காட்டுத்தீக்கு ஆளாகியுள்ளன. கடந்த இருபது ஆண்டுகளில் மிசோரம் மாநிலத்தில் அதிக எண்ணிக்கையிலான காட்டுத்தீ ஏற்பட்டுள்ளது.

---

**6. 2022 ஏப்ரலில் நடைபெற்ற பணவியல் கொள்கைக் குழு கூட்டத்திற்குப் பிறகு, ரெப்போ விகிதம் என்ன?**

அ) 4.50%

ஆ) 4.25%




**இ) 4.00% ☑**

ஈ) 3.75%

✓ இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) பணவியல் கொள்கைக் குழு தொடர்ந்து 11ஆவது முறையாக ரெப்போ விகிதத்தை 4 சதவீதமாக மாற்றாமல் வைத்துள்ளது. ரிசர்வ் வங்கியின் ஆளுநர் சக்திகாந்த தாஸ், இணக்கமான நிலைப்பாட்டை பராமரிக்க, குழு ஒருமனதாக வாக்களித்ததாக அறிவித்தார். மேலும் தலைகீழ் ரெப்போ விகிதமும் மாறாமல் 3.35 சதவீதமாக இருக்கும் என்றும் கூறினார்.

---

**7. 2022 நிலவரப்படி, சொத்துக்களின் அடிப்படையில் இந்தியாவின் மிகப்பெரிய தனியார் துறை வங்கி எது?**

அ) ஐசிஐசிஐ வங்கி

**ஆ) HDFC வங்கி ☑**

இ) ஆக்சிஸ் வங்கி

ஈ) கோடக் மஹிந்திரா வங்கி

✓ HDFC வங்கி மற்றும் HDFC லிட் ஆகியன சமீபத்தில் அதன் இணைவை அறிவித்தன. இந்தியாவின் மிகப்பெரிய தனியார் துறை வங்கியான HDFC வங்கியின் சொத்து மதிப்பு ₹8.35 டிரில்லியன் ஆகும்.

✓ ₹5.26 டிரில்லியன் மதிப்புள்ள சொத்துகள் மேலாண்மை மற்றும் ₹4.44 டிரில்லியன் சந்தை மூலதனங்கொண்ட இந்தியாவின் மிகப்பெரிய வீட்டு நிதி நிறுவனமான HDFC லிட், HDFC வங்கியுடன் இணையும். HDFC லிமிடெட்டின் துணை அல்லது இணைகளும் ஒழுங்குமுறை ஒப்புதல்களுக்குப் பிறகு HDFC வங்கிக்கு மாற்றப்படும்.

---

**8. NASA'இன் SpaceX Crew–4 வானூர்தியின் புதிய பெயர் என்ன?**

அ) Inspire

**ஆ) Freedom ☑**

இ) Aspiration

ஈ) Triumph



✓ NASAஇன் வணிகக்குழு திட்டத்தின் ஒருபகுதியாக NASA மற்றும் SpaceX ஆகியவை பன்னாட்டு விண்வெளி நிலையத்திற்கு விண்வெளி வீரர்களை அனுப்பவுள்ளன.

✓ இந்தப் பணி ஒரு புதிய டிராகன் விண்கலத்தை ஏவும். இந்த விண்கலத்திற்கு குழு–4 விண்வெளி வீரர்களால் 'Freedom' என்று பெயரிடப்பட்டுள்ளது.

---

**9. 'Neu' என்பது பின்வரும் எந்த இந்தியக் குழுமத்தின் சூப்பர் செயலியின் பெயராகும்?**

அ) ரிலையன்ஸ் ஜியோ

ஆ) அமேசான்

இ) ITC லிட்

**ஈ) TATA குழுமம் ☑**

✓ 'TATA Neu' என்பது இந்தியாவின் முன்னணி நிறுவனமான TATA குழுமத்தின் சூப்பர் செயலியாகும். இது TATA'இன் அனைத்து டிஜிட்டல் சேவைகள் மற்றும் பயன்பாடுகளை ஒரே இடத்தில் கொண்டுவருகிறது.

✓ AirAsia India, Air India, Taj Group, BigBasket, 1mg, Croma மற்றும் Westside போன்ற TATA குழுமத்தின் பல்வேறு டிஜிட்டல் சேவைகள் 'Tata Neu' செயலியில் இடம்பெறும்.

---

**10. பெண்கள் மற்றும் மாணவிகளுக்கு பாதுகாப்பான போக்குவரத்துச் சேவையை வழங்குவதற்காக, 'She Auto' நிலையங்களை அறிமுகப்படுத்திய இந்திய மாநிலம் எது?**

அ) கேரளா

**ஆ) ஆந்திர பிரதேசம் ☑**

இ) புது தில்லி

ஈ) ஒடிஸா




✓ ஆந்திர பிரதேச மாநிலம் சித்தூரின் காவல்துறையானது மாநிலத்திலேயே முதன்முறையாக 'She Auto' நிலையங்–களை அமைத்துள்ளது. இது பெண்கள் மற்றும் மாணவிகளுக்கு பாதுகாப்பான போக்குவரத்துச் சேவையை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ மாநிலத்திலேயே பெண்களுக்கென பிரத்யேக ஆட்டோ நிலையங்கள் அமைக்கப்பட்ட முதலிடம் திருப்பதியாகும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டம்: பொது சுகாதாரத் துறைமூலம் செயல்படுத்த முடிவு**

தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டத்தை இனி தமிழ்நாட்டில் பொது சுகாதாரத் துறை செயல்படுத்தவுள்ளது. இதற்கான அரசாணையை மாநில மக்கள் நல்வாழ்வுத் துறை பிறப்பித்துள்ளது.

இதுவரை காசநோய் ஒழிப்புத் திட்டமானது மாநில மருத்துவம் மற்றும் ஊரக சேவைகள் இயக்ககத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இருந்து வந்த நிலையில், தேசிய நல்வாழ்வுக் குழுமத் திட்ட இயக்குநர் அளித்த பரிந்துரை மற்றும் நிர்வாகக் காரணங்களுக்காக இந்த மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன.

காசநோயை முழுமையாக ஒழிக்கும் நோக்கில் மத்திய, மாநில அரசுகள் பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றன. அதுமட்டுமன்றி, 2025–க்குள் அந்நோயை முற்றிலும் ஒழிக்க வேண்டும் என்ற இலக்குடன் தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டம் அனைத்து மாநிலங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

---

**1.** 'முக்கிய மந்திரி பக்வானி பீமா யோஜனா' திட்டத்தைச் செயல்படுத்துகிற மாநிலம் எது?

அ) புது தில்லி

**ஆ) ஹரியானா ☑**

இ) இராஜஸ்தான்

ஈ) பஞ்சாப்

- ✓ ஹரியானாவின் வேளாண் அமைச்சர், 'முக்கிய மந்திரி பக்வானி பீமா யோஜனா' என்ற தளத்தைத்தொடங்கினார். இத்திட்டத்தின்கீழ், இயற்கைப் பேரிடர்களால் உழவர்தம் பயிர்களுக்கு ஏற்படும் சேதங்களுக்கு இழப்பீடு வழங்கப்படும். அம்மாநில உழவுத் துறையின் கூற்றுப்படி, இந்தத் திட்டத்திற்கான தொடக்க நிலை மூலதனமாக ₹10 கோடியை அம்மாநில அரசு கொண்டிருக்கும்.

---

**2.** ஸ்பேஸ்எக்ஸின் பால்கன்–9 ஏவுகலம்மூலம் தனது முதல் வணிக செயற்கைக்கோளை ஏவிய இந்திய விண்வெளி தொழில்நுட்ப துளிர் நிறுவனம் எது?

**அ) பிக்ஸ்ஸல் (Pixxel) ☑**

ஆ) அக்னிகுல்

இ) ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ்

ஈ) துருவா ஸ்பேஸ்

- ✓ இந்திய விண்வெளி தொழில்நுட்ப துளிர் நிறுவனமான 'Pixxel', 'சகுந்தலா' அல்லது 'Pixxel TD–2' என அழைக்கப் படும் அதன் முதல் வணிக செயற்கைக்கோளை வெற்றிகரமாக ஏவியது.
- ✓ அமெரிக்காவின் கேப் கனாவரலிலிருந்து ஸ்பேஸ்X'இன் டிரான்ஸ்போர்ட்டர்–4 மிஷனில் எலோன் மஸ்க் இயக்கும் ஸ்பேஸ்X'இன் பால்கன்–9 ஏவுகலம்மூலம் இந்தச் செயற்கைக்கோள் ஏவப்பட்டது.

---

**3.** ஐநா, 'அரசுசாரா நிறுவனங்களின் நிகர–சுழிய உமிழ்வு உறுதிகள்' குறித்த உயர்நிலை வல்லுநர் குழுவில் நியமி–க்கப்பட்டுள்ள இந்தியர் யார்?

அ) இரமேஷ் சந்த்

ஆ) இராஜீவ் குமார்

**இ) அருணாபா கோஷ் ☑**



ஈ) அரவிந்த் பனகாரியா

- ✓ அருணாபா கோஷ், ஐநா பொதுச்செயலர் அன்டோனியோ குட்டெரஸால், 'அரசுசாரா நிறுவனங்களின் நிகர–சுழிய உமிழ்வு உறுதிப்பாடுகள் குறித்த உயர்நிலை வல்லுநர் குழு'வுக்கு நியமிக்கப்பட்டார்.
- ✓ அருணாபா கோஷ் ஆனவர் காலநிலை மற்றும் ஆற்றல் மதியுரைக்குழுவான ஆற்றல், சுற்றுச்சூழல் மற்றும் நீர் கவுன்சிலின் (CEEW) தசெஅ (CEO) ஆவார். இவ்வல்லுநர் குழுவிற்கு கனடா சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்ற முன்னாள் அமைச்சர் கேத்தரின் மெக்கென்னா தலைமை தாங்குவார்.

---

**4.** சமீபத்தில் 13 புதிய மாவட்டங்களை உருவாக்கி, அதன் மாவட்டங்களின் மொத்த எண்ணிக்கையை 26ஆக உயர்த்திய இந்திய மாநிலம் எது?

அ) தெலுங்கானா




**ஆ) ஆந்திர பிரதேசம் ☑**

இ) ஒடிஸா

ஈ) மேற்கு வங்கம்

- ✓ ஆந்திர பிரதேச மாநில முதலமைச்சர் YS ஜெகன் மோகன் ரெட்டி, மாநிலத்தில் 13 புதிய மாவட்டங்களை உருவாக்கி அதன் மொத்த எண்ணிக்கையை 26ஆக உயர்த்தினார். அவ்வனைத்து புதிய மாவட்டங்களும் ஏப்ரல் 4 முதல் நடைமுறைக்கு வந்தன.
- ✓ ஆந்திர பிரதேச மாவட்டங்கள் உருவாக்கும் சட்டத்தின் பிரிவு 3 (5)–இன் கீழ் பதிமூன்று புதிய மாவட்டங்களை உருவாக்குவதற்கான அதிகாரப்பூர்வ அரசிதழ் அறிவிப்பை அம்மாநில அரசு வெளியிட்டது.

---

**5.** 2022ஆம் ஆண்டு நிலவரப்படி, உலகின் மிகப்பெரிய அபின் உற்பத்தி செய்யும் நாடு எது?

அ) சீனா



ஆ) இந்தியா

**இ) ஆப்கானிஸ்தான் ☑**

ஈ) நேபாளம்

- ✓ ஆப்கானிஸ்தான் தற்போது உலகின் மிகப்பெரிய அபின் உற்பத்தியாளராக உள்ளது.
- ✓ அண்மையில், ஆப்கானிஸ்தானில் கசகசா பயிரிட தடை விதிப்பதாக தலிபான்கள் அறிவித்தனர். மற்ற போதைப் பொருட்களை உற்பத்தி செய்வது, பயன்படுத்துவது அல்லது கொண்டு செல்வதும் தடைசெய்யப்பட்டது. ஐநா மதிப்பீட்டின்படி, 2017ஆம் ஆண்டில் ஆப்கானிஸ்தானின் அபின் உற்பத்தி $1.4 பில்லியன் டாலர்களாக இருந்தது.

---

**6.** இந்திய ரிசர்வ் வங்கியின் பணவியல் கொள்கை 2022 ஏப்ரலின்படி, 2022–23–க்கான உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சிக் கணிப்பு என்ன?

அ) 9.5 சதவீதம்




ஆ) 8.1 சதவீதம்

**இ) 7.2 சதவீதம் ☑**

ஈ) 6.9 சதவீதம்

- ✓ இந்திய ரிசர்வ் வங்கி ஓர் இணக்கமான நிலைப்பாட்டை பராமரித்து, 2022–23–க்கான உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சிக் கணிப்பை முந்தைய கணிப்பு 7.8 சதவீதத்திற்கு எதிராக 7.2%ஆகக்குறைத்தது.
- ✓ 2022–23 நிதியாண்டின் பணவீக்க முன்கணிப்பு 4.5 சதவீதத்திலிருந்து 5.7 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. உலகளாவிய கச்சா எண்ணெய் விலையில் அதிக ஏற்ற இறக்கம் மற்றும் உருவாகி வரும் புவிசார் அரசியல் பதட்டங்கள் மீதான தீவிர நிச்சயமற்ற தன்மை ஆகியவை இதற்கான காரணங்களாம்.

---

**7. ஆயுஷ்மான் பாரத் – பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனாவைச் (PMJAY) செயல்படுத்துவதற்கான மைய முகமை எது?**

அ) தேசிய மருத்துவ ஆணையம்

ஆ) இந்திய மருத்துவ கவுன்சில்

**இ) தேசிய நலவாழ்வு ஆணையம் ☑**

ஈ) எய்ம்ஸ்

- ✓ தேசிய நலவாழ்வு ஆணையமானது (NHA) தேசிய அளவில் PM–JAY–ஐ செயல்படுத்துவதற்கான மைய முகமையாக அமைக்கப்பட்டது. தேசிய நலவாழ்வு ஆணையம், PM JAY இன்கீழ், ஹெல்த் பெனிபிட் பேக்கேஜ், 2022–இன் புதிய பதிப்பைச் சமீபத்தில் அறிமுகப்படுத்தியுள்ளது.
- ✓ இது 365 புதிய நடைமுறைகளைச் சேர்த்து மொத்த எண்ணிக்கையை 1,949 ஆக மாற்றியது.

---

**8. அண்மையில், 'AVSAR' திட்டத்தை அறிமுகப்படுத்திய நிறுவனம் எது?**

**அ) இந்திய வானூர்தி நிலையங்கள் ஆணையம் ☑**

ஆ) இந்திய ரிசர்வ் வங்கி

இ) இந்திய உச்சநீதிமன்றம்

ஈ) இந்திய தேர்தலாணையம்

- ✓ இந்திய வானூர்தி நிலையங்கள் ஆணையமானது (AAI) அண்மையில் விமான நிலையத்தை பிராந்தியத்தின் திறமையான கைவினைஞர்களுக்கான இடமாக (Airport as Venue for Skilled Artisans of the Region – AVSAR) ஐ அறிமுகப்படுத்தியுள்ளது.
- ✓ இது விமான நிலையங்களில், சுய உதவி குழுக்கள் தாங்கள் தயாரித்த பொருட்களை விற்பனை செய்வதற்கு (அ) காட்சிப்படுத்துவதற்கு இடம் ஒதுக்குவதை நோக்கம் எனக்கொண்டுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ், AAIஆல் இயக்கப்படும் ஒவ்வொரு விமான நிலையத்திலும், 100–200 சதுர அடி பரப்பளவு ஒதுக்கப்பட்டுள்ளது.

---

**9. அனிமேஷன், விஷுவல் எபெக்ட்ஸ், கேமிங் மற்றும் காமிக்ஸ் துறையின் ஊக்குவிப்புக்கான பணிக்குழுவின் தலைவர் யார்?**

**அ) தகவல் & ஒலிபரப்பு அமைச்சக செயலர் ☑**



ஆ) மின்னணு & IT அமைச்சர்

இ) வணிகம் & தொழிற்துறை அமைச்சர்

ஈ) மின்னணு மற்றும் IT செயலர்

- ✓ அனிமேஷன், விஷுவல் எபெக்ட்ஸ், கேமிங் மற்றும் காமிக்ஸ் துறையின் ஊக்குவிப்புக்கான பணிக்குழுவை தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் அமைத்துள்ளது.
- ✓ தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்தின் செயலாளரால் வழிநடத்தப்படும் ஊக்குவிப்பு பணிக்குழு, திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகம்; கல்வி அமைச்சகத்தின் உயர்கல்வித்துறை; மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் மற்றும் தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை ஆகியவற்றின் செயலாளர்களைக் கொண்டிருக்கும்.

**10. ரிசர்வ் வங்கியின் சமீபத்திய அறிவிப்பின்படி, அட்டை இல்லாமல் பணம் எடுக்கும் முறை எதன் ஊடாக முன் மொழியப்படுகிறது?**

அ) USSD

**ஆ) ஒருங்கிணைந்த கட்டண இடைமுகம் (UPI) ☑**

இ) ஆதார் அடிப்படையிலான கட்டண முறை (AePS)

ஈ) உடனடி கட்டண சேவை (IMPS)

- ✓ ரிசர்வ் வங்கியின் (RBI) கூற்றுப்படி, ஒரு சில வங்கிகளால் மட்டுமே வழங்கப்பட்ட அட்டையில்லா ரொக்கம் பெறுதல் சேவை தற்போது அனைத்து வங்கிகளிலும் ATM'களிலும் யூனிஃபைட் பேமெண்ட்ஸ் இன்டர்ஃபேஸ் (யுபிஐ)மூலம் கிடைக்கப்பெறும்.
- ✓ வாடிக்கையாளர் அங்கீகாரத்திற்காக UPI பயன்படுத்தப்ப –டும், மேலும் இந்நடவடிக்கை பணப்பரிவர்த்தனைகளை எளிதாக்கும் மற்றும் நிதி மோசடிகளை ஒழிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 'உடான்' மண்டல இணைப்புத் திட்டத்தின் கீழ் கேஷோத் – மும்பை வழித்தடத்தில் விமான சேவை தொடங்கப்பட்டது**

மத்திய அரசின் மண்டல இணைப்புத் திட்டமான 'உடான்' திட்டத்தின்கீழ் கேஷோத்–மும்பை வழித்தடத்தில் விமான சேவைகளை சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம் தொடங்கியது. இந்தத் திட்டத்தின் 4.1 ஏல முறையின்கீழ் அலையன்ஸ் விமான நிறுவனத்திற்கு இந்த வான் வழித் தடம் வழங்கப்பட்டுள்ளது. இதனையடுத்து, உடான் – மண்டல இணைப்புத்திட்டத்தின்கீழ் 417 வழித்தடங்களில் விமான சேவைகள் இயக்கப்படும்.

---

**2. புதுச்சேரி பல்கலைக்கு பசுமை சாம்பியன் விருது**

மத்திய அரசின் உயர்கல்வித் துறை அமைச்சகம், 2021–22ஆம் ஆண்டுக்கான 'மாவட்ட பசுமை சாம்பியன்' என்ற விருதை புதுச்சேரி பல்கலைக்கு வழங்கி அங்கீகரித்தது.

இந்தப் பல்கலைக்கழகமானது கடந்த 4 ஆண்டுகளாக பசுமை வளாகம், (கிரீன் கேம்பஸ்) என்ற திட்டத்தின் கீழ், பல நிலையான வளர்ச்சி, பருவநிலைமாற்ற தொடர்பான முயற்சிகளைச் செயல்படுத்தி வருகிறது.

---

**3. ஏப்.20–இல் 'வாகஷீர்' அறிமுகம்: ஸ்கார்பீன் திட்டத்தின் கீழ் 6ஆவது நீர்மூழ்கிக்கப்பல்**

பி75 ஸ்கார்பீன் திட்டத்தின்கீழ் 6ஆவது நீர்மூழ்கிக் கப்பலான 'வாகஷீர்' ஏப்.20ஆம் தேதி அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

கடந்த 2005–ஆம் ஆண்டு இந்தியா–பிரான்ஸ் இடையே 3.75 பில்லியன் டாலர்கள் (சுமார் ₹28,600 கோடி) மதிப்பில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்கீழ், இந்திய கடற்படைக்காக 6 ஸ்கார்பீன் ரக தாக்குதல் நீர்மூழ்கிக் கப்பல்களைக் கட்ட திட்டமிடப்பட்டது. அந்தக் கப்பல்கள்

டீசல் மற்றும் மின்சார உதவியுடன் இயங்குபவை. பிரான்ஸில் உள்ள நேவல் குரூப் நிறுவனத்தின் உதவியுடன் மும்பையில் உள்ள மஸகான் டாக் கப்பல் கட்டுமான பொதுத்துறை நிறுவனத்தால் அந்தக் கப்பல்கள் கட்டப்பட்டன. அவற்றில் ஐஎன்எஸ் கல்வரி, ஐஎன்எஸ் கன்டேரி, ஐஎன்எஸ் கரஞ், ஐஎன்எஸ் வேலா ஆகிய 4 ஸ்கார்பீன் கப்பல்கள் ஏற்கெனவே பயன்பாட்டுக்கு வந்துள்ளன. 'வாகீர்' என்ற பெயர்கொண்ட ஐந்தாவது ஸ்கார்பீன் கப்பல் தற்போது சோதனை ஓட்டத்திலுள்ளது.

---

**4. 144 தொல்காப்பியம் தொடர்பான நூல்கள் பதிவேற்றம்**

தொல்காப்பியம் குறித்த 144 நூல்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாக தமிழநாட்டின் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் மனோ தங்கராஜ் தெரிவித்தார்.

இதுகுறித்து, அவர் சனிக்கிழமை டுவிட்டர் பதிவில் கூறியிருப்பதாவது: தொல்காப்பியரின் 2,733ஆவது பிறந்த தினம் சனிக்கிழமை கொண்டாடப்படுகிறது.

---

**1. நான்காவது இந்தியா–அமெரிக்கா 2+2 அமைச்சர்கள் நிலையிலான பேச்சுவார்த்தையை நடத்தும் நகரம் எது?**

அ) புது தில்லி

**ஆ) வாஷிங்டன் ☑**

இ) காந்தி நகரம்

ஈ) நியூயார்க்



✓ பாதுகாப்பு அமைச்சர் இராஜ்நாத் சிங் தனது ஐந்து நாள் அமெரிக்க பயணத்தின் ஒருபகுதியாக வாஷிங்டன் DC சென்றடைந்தார். இதில் இந்தியா–அமெரிக்கா 2+2 அமைச்சர்கள் நிலையிலான பேச்சுவார்த்தை அடங்கும்.

✓ 2+2 உரையாடலில் பாதுகாப்பு அமைச்சர் இராஜ்நாத் சிங், வெளியுறவு அமைச்சர் S ஜெய்சங்கர் மற்றும் அமெரிக்க பாதுகாப்பு மற்றும் வெளியுறவு அமைச்சர் இடையேயான சந்திப்புகள் அடங்கும்.

---

**2. 'மாதவ்பூர் மேளா' கொண்டாடப்படுகிற மாநிலம் எது?**

அ) கர்நாடகா

**ஆ) குஜராத் ☑**

இ) இராஜஸ்தான்

ஈ) பஞ்சாப்



✓ குஜராத் மாநிலத்தின் கடற்கரை கிராமமான மாதவ்பூரில் ஆண்டுதோறும் ஐந்து நாள் நடக்கும் 'மாதவ்பூர் மேளா' என்னும் கலாச்சார கண்காட்சியை இந்தியக் குடியரசுத் தலைவர் இராம்நாத் கோவிந்த் தொடங்கி வைத்தார்.

✓ இந்துக்கடவுளான கிருஷ்ணருக்கு ருக்மிணியுடன் நடந்த திருமணத்தை இது கொண்டாடுகிறது.

---

**3. நம்பிக்கையில்லா தீர்மானத்திற்குப்பின் பாகிஸ்தானின் 23ஆவது பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்?**

**அ) ஷாபாஸ் ஷெரீப் ☑**

ஆ) ஷா மஹ்மூத் குரேஷி

இ) நவாஸ் ஷெரிப்

ஈ) ஆசிப் அலி சர்தாரி



✓ பாகிஸ்தான் முஸ்லீம் லீக் (N) தலைவர் ஷாபாஸ் ஷெரீப் பாகிஸ்தானின் புதிய பிரதமராக பதவியேற்றார். அவருக்கு முன் பிரதமராக இருந்த இம்ரான் கானுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரப்பட்டதை அடுத்து ஷாபாஸ் பிரதமரானார்.

✓ மூன்று முறை முன்னாள் பிரதமரான நவாஸ் ஷெரீப்பின் இளைய சகோதரர் ஷாபாஸ், பாகிஸ்தானின் 23ஆவது பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

---

**4. உலகில் தங்கத்தை அதிகம் பயன்படுத்தும் நாடு எது?**

அ) இந்தியா

**ஆ) சீனா ☑**

இ) அமெரிக்கா

ஈ) ஆஸ்திரேலியா



✓ சீனாவுக்கு அடுத்தபடியாக, உலகின் இரண்டாவது பெரிய தங்க பயன்பாட்டை இந்தியா கொண்டுள்ளது.

✓ அதிக தேவை காரணமாக 2021-22 நிதியாண்டில் இந்தியாவின் தங்கம் இறக்குமதி 33.34% அதிகரித்து ₹46.14 பில்லியனாக உள்ளது. முந்தைய நிதியாண்டில், தங்கம் இறக்குமதி மதிப்பு ₹34.62 பில்லியனாக இருந்தது.

---

**5. காலநிலை மாற்றத்திற்கான அரசுகளுக்கிடையேயான குழு அதன் சமீபத்திய மதிப்பீட்டறிக்கையில் நிலையான போக்குவரத்துக்கான இந்திய நகரமாகக் குறிப்பிட்டுள்ள நகரம் எது?**

அ) சென்னை

ஆ) புது தில்லி

**இ) கொல்கத்தா ☑**

ஈ) மும்பை



✓ காலநிலை மாற்றத்திற்கான அரசுகளுக்கிடையேயான குழுவானது (IPCC) சமீபத்தில் தனது ஆறாவது மதிப்பீட்டு அறிக்கையின் பகுதி C–ஐ வெளியிட்டது.

✓ சமீபத்திய IPCC அறிக்கையின் முக்கிய கண்டறிவு என்ன –வெனில், புதைபடிவ எரிபொருளைச் சார்ந்திருப்பதைக் குறைத்துக்கொள்வதில் உலகம் தனது கவனத்தைச் செலுத்த வேண்டும். கொல்கத்தாவின் போக்குவரவை முற்றிலுமாக பொதுப் போக்குவரத்திற்கு மாற்றுவது குறித்து இந்த அறிக்கை குறிப்பிடுகிறது.

---

**6. "ஒருங்கிணைந்த உயிரி–சுத்திகரிப்பு நிலையங்கள்" திட்டம் என்பது பின்வரும் எந்த மத்திய அமைச்சகத்தின் முன்முயற்சியாகும்?**

**அ) அறிவியல் & தொழில்நுட்ப அமைச்சகம் ☑**

ஆ) புதிய & புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம்

இ) MSME அமைச்சகம்

ஈ) எரிசக்தி அமைச்சகம்




✓ மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், 'ஒருங்கிணைந்த உயிரி–சுத்திகரிப்பு நிலையங்களை'த் தொடங்கினார்.

✓ இது புதுப்பிக்கத்தக்க எரிபொருள்கள் மற்றும் குறைந்த அளவிலான கரிமத்தை வெளியிடும் எதிர்காலத்திற்கான இரசாயனங்களின் கண்டுபிடிப்புகளை ஊக்கப்படுத்தும். இது, 'தூய ஆற்றல்' என்ற அடிப்படையில், ஒரு PPP (பொது தனியார் பங்கேற்பு) மாதிரி முன்முயற்சியாக உள்ளது.

---

**7. பங்குச்சந்தைகளில் நிருவாக விதிமுறைகளை வலுப்படுத்துவதற்கான SEBI குழுவின் தலைவர் யார்?**

அ) UK சின்ஹா

ஆ) அஜய் தியாகி

**இ) G மகாலிங்கம் ☑**

ஈ) உர்ஜித் படேல்



✓ பங்குச்சந்தைகள் மற்றும் பிற சந்தை உட்கட்டமைப்பு நிறுவனங்களில் (MIIs) நிருவாக விதிமுறைகளை மேலும் வலுப்படுத்துவதற்கான பரிந்துரைகளை மதிப்பாய்வு

செய்வதற்கும் பரிந்துரை செய்வதற்கும் ஒரு குழுவை மூலதனச் சந்தைக் கட்டுப்பாட்டாளரான SEBI அமைத்தது.

- ✓ அறுவர்கொண்ட இக்குழுவிற்கு SEBIஇன் முன்னாள் முழு நேர உறுப்பினரான G மகாலிங்கம் தலைமைதாங்குவார்.

---

**8. கனடாவின் பெரும் கட்டண அமைப்பான '*Payments Canada*' உடன் கூட்டிணைந்துள்ள இந்திய நிறுவனம் எது?**

அ) இன்போசிஸ்

**ஆ) TATA கன்சல்டன்சி சர்வீசஸ் (TCS) ☑**

இ) விப்ரோ

ஈ) NPCI

- ✓ TATA கன்சல்டன்சி சர்வீசஸ் (TCS) ஆனது கனடாவின் மிகப்பெரிய கட்டண அமைப்பான, '*Payments Canada*' உடன் கூட்டிணைந்துள்ளது.
- ✓ இக்கூட்டாண்மை அதன் கட்டண முறைச்செயல்பாடுக–ளை அடுத்த கட்டத்திற்கு கொண்டுசெல்வதையும், Real–Time Rail (RTR)–ஐச் செயல்படுத்துவதில் உதவுவதையும் நோக்கமெனக் கொண்டுள்ளது. RTR என்பது ஒரு புதிய நிகழ்நேர கட்டண முறைமையாகும்.

---

**9. அரசாங்கப்பள்ளிகளில், 'ஹாபி ஹப்ஸ்' அமைக்கும் திட்டத்தைத் தொடங்கியுள்ள மாநிலம்/UT எது?**



அ) தமிழ்நாடு

ஆ) கேரளா

**இ) புது தில்லி ☑**

ஈ) பஞ்சாப்

- ✓ தில்லி அரசுப்பள்ளிகளில், 'ஹாபி ஹப்ஸ்' அமைக்கும் திட்டம் உள்ளது. இது பள்ளிவேளைக்குப் பிறகு நடனம், இசை, கலை மற்றும் கைவினை பயிற்சிகளைக் கற்றுத் தரும். 2022–2023 கல்வியாண்டில் அரசுப்பள்ளிகளில் இந்தத்திட்டம் செயல்படுத்தப்படும்.

---

**10. 'டெம்பிள் 360' இணையதளத்தை அறிமுகப்படுத்திய மத்திய அமைச்சகம் எது?**

அ) MSME அமைச்சகம்

**ஆ) கலாச்சார அமைச்சகம் ☑**

இ) ஜவுளி அமைச்சகம்

ஈ) உள்துறை அமைச்சகம்

- ✓ மத்திய கலாச்சார அமைச்சகமானது 'டெம்பிள் 360' என்ற புதிய இணையதளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம் பக்தர்கள் முதன்மையான யாத்திரை தலங்களின் பூசைகளை இணையவழியில் மேற்கொள்ளலாம்.
- ✓ இந்தியாவில் உள்ள அனைத்துக் கோவில்களின் முழு நேரலையும் இந்த இணையதளத்தில் கிடைக்கப்பெறும். தற்போது, சோமநாத் (குஜராத்), காசி விஸ்வநாதர் (உபி), திரிம்பகேஷ்வர் மற்றும் கிரிஷ்னேஷ்வர் (இரண்டும் மகாராஷ்டிரா) ஆகிய 4 கோவில்களின் பூசைகளின் நேரடி ஒளிபரப்பை இதில் காணலாம்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. ஜாம்நகரில் பாரம்பரிய மருந்துகளுக்கான உலக சுகாதார அமைப்பின் உலகளாவிய மையத்தைப் பிரதமர் நாளை தொடங்கி வைப்பார்**

குஜராத் மாநிலம் ஜாம்நகரில் உலகிலேயே இந்த வகையில் முதலாவதாக பாரம்பரிய மருந்துகளுக்கான உலக சுகாதார அமைப்பின் உலகளாவிய மையம் 2022 ஏப்.19 அன்று தொடங்கப்படவுள்ளது. இந்த மையத்தின் தொடக்க விழா நிகழ்வுடன் உலகளாவிய ஆயுஷ் முதலீடு மற்றும் புதிய கண்டுபிடிப்பு உச்சிமாநாடும் நடக்கவுள்ளது.

---

**2. இந்திய இராணுவத்தின் தலைமைத் தளபதியாக லெப்டினண்ட் ஜெனரல் மனோஜ் பாண்டே நியமனம்**

இந்திய இராணுவத்தின் புதிய தலைமைத் தளபதியாக, இராணுவத்தின் துணைத் தளபதி லெப்டினண்ட் ஜெனரல் மனோஜ் சி பாண்டே நியமிக்கப்பட்டுள்ளார்.

மனோஜ் சி பாண்டே 1982 டிசம்பர் 24ஆம் தேதி இராணுவத்தின் பொறியாளர் பிரிவில் இணைந்தார். தனது 39 வருட பணி அனுபவத்தில், பல்வேறு முக்கியப் பொறுப்புகளில் பணியாற்றியுள்ளார். மேலும், அந்தமான் நிகோபார் தீவுகள் ராணுவக் கமாண்டர் ஆகவும், கொல்கத்தாவை தலைமையிடமாகக் கொண்ட கிழக்கு பிராந்திய ராணுவத் தலைமையகத்தின் தலைமைக் கமாண்டர் ஆகவும் பணியாற்றியுள்ளார்.

---

**3. தமிழ்நாட்டில் மேலும் ஐந்து இடங்களில் அகழ்வாராய்ச்சி நடத்தப்படவுள்ளன: தொல்லியல் கண்காணிப்பாளர் அமர்நாத் இராமகிருஷ்ணா தகவல்**

தமிழ்நாட்டில் சிவகளை, வெம்பக்கோட்டை, வைகை ஆற்றங்கரை உட்பட 5 இடங்களில் அகழ்வாராய்ச்சிகள் நடத்தப்படவுள்ளன என்று தென்னிந்திய கோயில் ஆய்வுத் துறையின் தொல்லியல் கண்காணிப்பாளர் அமர்நாத் இராமகிருஷ்ணா தெரிவித்தார்.

---

**4. பூந்தமல்லி–கலங்கரை விளக்கம் இடையே மெட்ரோ இரயில் திட்டம்: 78 பெட்டிகள் தயாரிக்க அல்ஸ்ட்ராம் நிறுவனத்துக்கு ஒப்பந்தம்**

இரண்டாம் கட்ட மெட்ரோ இரயில் திட்டத்தில், பூந்தமல்லி–கலங்கரை விளக்கம் இடையேயான மெட்ரோ இரயில் சேவைக்கு 78 இரயில் பெட்டிகள் தயாரிக்க அல்ஸ்ட்ராம் நிறுவனத்துக்கு ஒப்பந்தம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

**இரண்டாம் கட்ட மெட்ரோ இரயில் திட்டம்:**

சென்னையில், இரண்டாம் கட்ட மெட்ரோ இரயில் திட்டப் பணி ₹63,246 கோடியில் 118.9 கிமீ தூரத்துக்கு நடைபெறுகிறது. இந்தத் திட்டத்தில் கலங்கரைவிளக்கம்–பூந்தமல்லி வரை 26.1 கிமீ தொலைவுக்கும், மாதவரம்–சோழிங்கநல்லூர் வரை 47 கிமீ தொலைவுக்கும், மாதவரம்–சிறுசேரி சிப்காட் வரை 45.8 கிமீ

தொலைவுக்கும் 3 வழித்தடங்களில் மெட்ரோ இரயில் திட்டப்பணிகள் செயல்படுத்தப்படுகின்றன.

**78 பெட்டிகள் தயாரிக்க ஒப்பந்தம்:**

இந்த நிலையில், பூந்தமல்லி–கலங்கரை விளக்கம் இடையேயான மெட்ரோ இரயில் திட்டப்பணி முடிந்து, இங்கு மெட்ரோ இரயில் சேவைக்கு 78 பெட்டிகள் அல்ஸ்ட்ராம் நிறுவனத்துக்கு ஒப்பந்தம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

---

**5. இராணுவத் தளபதிகளின் ஐந்துநாள் மாநாடு இன்று தொடக்கம்**

இராணுவத் தளபதிகள் பங்கேற்கும் ஐந்து நாள் மாநாடு ஏப்ரல்.18 தில்லியில் தொடங்குகிறது. ரஷியா – உக்ரைன் போருக்கிடையே நடைபெறும் இந்த மாநாட்டில் இந்திய எல்லைகளின் சவால்கள் குறித்தும் விவாதித்து மதிப்பிடப்படும் என்று பாதுகாப்புத் துறை வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டன.

இந்த மாநாடு ராணுவத் தலைமைத் தளபதி எம் எம் நரவணே தலைமையில் தில்லியில் ஏப்ரல் 18 முதல் 22 ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது. ஆண்டுதோறும் ஏப்ரல், அக்டோபர் மாதங்களில் நடத்தப்படும் இராணுவத் தளபதிகள் மாநாடு என்பது பாதுகாப்புத் துறையின் உயர் நிலை மாநாடாகும்.

---

**6. தேசிய ஹாக்கி: தமிழ்நாட்டுக்கு வெள்ளி**

12–ஆவது சீனியர் ஆடவர் தேசிய ஹாக்கி சாம்பியன்ஷிப் –பில் தமிழக அணி வெள்ளிப்பதக்கம் பெற்றது.

மத்திய பிரதேச மாநிலம், போபாலில் கடந்த 6–ஆம் தேதி தொடங்கி நடைபெற்று வந்த இப்போட்டியில் தமிழக அணி இறுதி ஆட்டத்துக்கு முன்னேறியிருந்தது.

அதில் ஹரியானா அணியிடம் வீழ்ந்து இரண்டாமிடம் பிடித்தது. கர்நாடக அணி வெண்கலம் வென்றது.

---

**7. 17–04–2022: 'தீரன்' சின்னமலை அவர்களின் 266ஆவது பிறந்தநாள்.**

---

**1. சட்லஜ்–யமுனா இணைப்புக்கால்வாயை நிறைவேற் –றக்கோரி தீர்மானம் நிறைவேற்றியுள்ள மாநிலம் எது?**

அ) உத்தர பிரதேசம்

**ஆ) ஹரியானா ☑**

இ) குஜராத்

ஈ) இராஜஸ்தான்



✓ சட்லஜ்–யமுனா இணைப்புக் கால்வாயை கட்டி முடிக்கக் கோரி ஹரியானாவின் விதான் சபை தீர்மானம் நிறை –வேற்றியுள்ளது. ஹரியானா மற்றும் பஞ்சாப் இடையே நதிநீர் பங்கீடு தொடர்பாக நீண்டகாலமாக நிலுவையில் உள்ளது. சண்டிகரில் உரிமைகோரும் வகையில் பஞ்சாப் விதான் சபை நிறைவேற்றிய தீர்மானத்தை எதிர்த்து, ஹரியானா சட்டப்பேரவை ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றியது.

✓ இருமாநிலங்களுக்கு இடையே நிலவும் சமநிலையை சீர் குலைக்கும் வகையில் மத்திய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கக்கூடாது என அதில் கோரப்பட்டுள்ளது.

---

**2. அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற புச்சா நகரம் உள்ள நாடு எது?**

அ) ரஷ்யா

**ஆ) உக்ரைன் ☑**

இ) இலங்கை

ஈ) ஆப்கானிஸ்தான்



✓ உக்ரைனின் புச்சா நகரின் தெருக்களில் பொதுமக்களின் உடல்களின் படங்கள் கண்டெடுக்கப்பட்டதை அடுத்து, உலகம் முழுவதும் பெருஞ்சீற்றம் ஏற்பட்டுள்ளது.

✓ உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கி, ஐநாவில் உள்ள இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி T S திருமூர்த்தி ஆகியோர் உரையாற்றிய உக்ரைன் குறித்த UNSC கூட்ட –த்தில், புச்சா பொதுமக்கள் படுகொலைகளைக் கண்டித்து தன்னிச்சையான விசாரணைக்கு அழைப்பு விடுத்தனர்.

---

**3. 'மாநிலக்கல்விக்கொள்கை'யை உருவாக்குவதற்காக குழுவொன்றை அமைத்த மாநில அரசு எது?**

**அ) தமிழ்நாடு ☑**

ஆ) கேரளம்

இ) ஒடிஸா

ஈ) மேற்கு வங்கம்



✓ தமிழ்நாடு அரசு சமீபத்தில் மாநிலக்கல்விக்கொள்கையை வகுக்க 13 பேர்கொண்ட ஒரு குழுவை அமைத்தது. தில்லி உயர்நீதிமன்றத்தில் பணிசெய்து ஓய்வுபெற்ற தலைமை நீதிபதி டி முருகேசன் தலைமையிலான குழுவில் கல்வி நிபுணர்கள், எழுத்தாளர் எஸ் ராமகிருஷ்ணன், முன்னாள் செஸ் உலக சாம்பியன் விஸ்வநாதன் ஆனந்த், கர்நாடக இசைக்கலைஞர் டி எம் கிருஷ்ணா உள்ளிட்டோர் இடம் பெற்றுள்ளனர்.

---

**4. 'ஹைப்பர்சானிக் ஏவுகணைத் தாக்குதல் மற்றும் பாதுகாப்புத் திறன்' தொடர்பான ஒத்துழைப்பை அறிவித்த உலகளாவிய கூட்டணி எது?**

அ) கரீபியன் சமூகம் (CARICOM)

**ஆ) AUKUS பாதுகாப்பு கூட்டணி ☑**

இ) ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (SCO)

ஈ) வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு (NATO)



✓ அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஆஸ்திரேலியா ஆகியவை ஐப்பர்சானிக் ஏவுகணைத் தாக்குதல் மற்றும் பாதுகாப்புத் திறன் ஆகியவற்றில் இணைந்து செயல்படத் தொடங்குவ –தாக அறிவித்தன. இது அவர்களின் போட்டியாளர்களான ரஷ்யாவும் சீனாவும் ஹைப்பர்சானிக் தொழில்நுட்பத்தில் வேகமாக முன்னேறி வருவதற்கான பதிலடியாகும்.

---

**5. 2022 – போர்ப்ஸ் பில்லியனர்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ள இந்தியர்களின் எண்ணிக்கை எவ்வளவு?**

அ) 28

ஆ) 75

**இ) 166 ☑**

ஈ) 321




✓ 2022 – போர்ப்ஸ் பில்லியனர்கள் பட்டியலின்படி, கடந்த ஆண்டு 140ஆக இருந்த இந்திய பில்லியனர்களின் எண்ணிக்கை இந்த ஆண்டில் 166ஆக உயர்ந்துள்ளது. அவர்களின் மொத்த சொத்து மதிப்பு $760 பில்லியன் டாலர்கள் ஆகும்.

✓ ரிலையன்ஸ் தொழிற்துறையின் தலைவரும் நிர்வாக இயக்குநருமான முகேஷ் அம்பானி $90.7 பில்லியன் டாலர் நிகர மதிப்புடன் இந்திய அளவில் தொடர்ந்து முதல் இடத்தில் நீடிக்கிறார். உலக அளவில் 10ஆவது இடத்தைப் பிடித்துள்ளார் அவர். டெஸ்லா & ஸ்பேஸ் எக்ஸ் தலைவர் எலோன் மஸ்க் உலகின் பெருஞ்செல்வந்தராக உள்ளார்.

---

**6. ககன்யான் வன்பொருளின் முதல் தொகுப்பை இந்திய விண்வெளி & ஆய்வு மையத்திடம் (ISRO) ஒப்படைத்த நிறுவனம் எது?**

அ) DRDO

**ஆ) HAL ☑**

இ) ஸ்பேஸ் X

ஈ) பிக்சல் ஸ்பேஸ்

✓ ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிட் (HAL) ககன்யான் வன்பொருளின் முதல் தொகுப்பை இந்திய விண்வெளி மற்றும் ஆய்வு மையத்திடம் (ISRO) ஒப்படைத்தது. PS–2 நிலை என்பது PSLV ஏவுகணையின் 2ஆம் கட்டமாகும். இதில் பூமியில் வைக்கப்பட்டிருக்கும் உந்து அமைப்பு உந்துவிசைக்கு பயன்படுத்தப்படுகின்றன.

✓ 2021 அக்டோபரில், HALஆல் இதுவரை தயாரிக்கப்பட்ட மிகக்கனமான செமி–கிரையோஜெனிக் புரொப்பல்லன்ட் டேங்க் (SC120–LOX) இஸ்ரோவிடம் வழங்கப்பட்டது.

---

**7.** **பெண்கள் டென்னிஸ் சங்கத்தின் உலகின் நம்பர்.1 வீராங்கனையான இகா ஸ்வியாடெக் சார்ந்த நாடு எது?**



அ) ஆஸ்திரேலியா

**ஆ) போலந்து ☑**

இ) ஜெர்மனி

ஈ) பிரான்ஸ்

✓ 20 வயதான இகா ஸ்வியாடெக் அண்மையில் பெண்கள் டென்னிஸ் சங்கத்தின் உலகின் நம்பர்.1 வீராங்கனை ஆன முதல் போலந்து வீராங்கனை ஆனார். அவர் சமீபத்தில் மியாமி ஓப்பனை வென்றார். ஒரு பருவத்தில் முதல் மூன்று 'WTA 1000' நிகழ்வுகளை வென்ற முதல் வீராங்கனை ஆனார். 2020–இல், 28 ஆண்டுகளில் ரோலண்ட் கரோஸை வென்ற முதல் இளம்பெண் என்ற பெருமையையும் இகா ஸ்விடெக் பெற்றார்.

---

**8.** **NITI ஆயோக்கின் மாநில எரிசக்தி மற்றும் பருவநிலை குறியீடு – சுற்று 1இல் முதலிடம் பிடித்த மாநிலம் எது?**



அ) கேரளா

ஆ) பஞ்சாப்

**இ) குஜராத் ☑**

ஈ) ஒடிஸா

✓ NITI ஆயோக்மூலம் மாநில எரிசக்தி மற்றும் பருவநிலை குறியீடு சுற்று–1 வெளியிடப்பட்டது.

✓ இதில் மாநிலங்களின் செயல்பாடு 6 அளவுகோல்களை கொண்டு தரவரிசை செய்யப்பட்டுள்ளது. 1) டிஸ்காம் செயல்பாடு 2) எரிசக்தி எளிதில், குறைந்த செலவில் நம்பகத்தன்மையோடு கிடைத்தது 3) தூய்மை எரிசக்திக்கான நடவடிக்கைகள் 4) எரிசக்திக்கென 5) சுற்றுச்சூழல் நீடித்திருத்தல் 6) புதிய முன்முயற்சிகள்.

✓ குஜராத், கேரளா, பஞ்சாப் ஆகியவை தரவரிசையில் முதல் 3 பெரிய மாநிலங்களாக உள்ளன. தமிழ்நாடு இந்தத் தர வரிசையில் 43.4 சராசரி புள்ளிகளுடன் 9ஆமிடத்தைப் பெற்றுள்ளது. நன்றாக செயல்பட்ட சிறிய மாநிலங்களின் தரவரிசையில் கோவா முதலிடத்தைப் பிடித்துள்ளது.

---

**9.** **'PM–DAKSH யோஜனா'வைச் செயல்படுத்துகிற மத்திய அமைச்சகம் எது?**

அ) உள்துறை அமைச்சகம்

ஆ) திறன் மேம்பாடு & தொழில்முனைவோர் அமைச்சகம்

**இ) சமூக நீதி & அதிகாரமளித்தல் அமைச்சகம் ☑**

ஈ) மகளிர் & குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

✓ மத்திய சமூக நீதி & அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் செயல்படுத்தப்படும் PM–DAKSH (*Pradhan Mantri Dakshta Aur Kushalta Sampann Hitgrahi*) யோஜனா, விளிம்புநிலை ஆட்களின் திறமைக்கான தேசியத்திட்டமாகும்.

✓ இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், நீண்டகால மற்றும் குறுகிய கால திறன்களை வழங்குவதன்மூலம் இலக்கு இளைஞர்களின் திறனளவை அதிகரிப்பதாகும். அதைத் தொடர்ந்து ஒரு வேலைவாய்ப்பு/சுய வேலைவாய்ப்பும் அளிக்கப்படும். ஐந்து ஆண்டுகளில் சுமார் 2.71 லட்சம் பேர் பயிற்சிபெறுவார்கள். 2021–22 நிதியாண்டுக்கு ₹79.48 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

---

**10.** **'மனிதனின் விண்வெளிப் பயணங்குறித்த உலக நாள்' நினைவுகூரப்படுகிற தேதி எது?**




அ) ஏப்ரல்.10

**ஆ) ஏப்ரல்.12 ☑**

இ) ஏப்ரல்.14

ஈ) ஏப்ரல்.15

✓ ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை ஏப்ரல்.12 ஆம் தேதியை 'மனிதனின் விண்வெளிப் பயணங்குறித்த உலக நாள்' என நிறுவியது. ஏப்ரல் 12, 1961–இல், ரஷ்ய விண்வெளி வீரர் யூரி ககாரின் வோஸ்டாக் 1 விண்கலத்தில் பூமியைச் சுற்றிவந்தார். மனிதகுலத்தின் நலனுக்காக விண்வெளி ஆய்வுக்கு வழிவகுத்த இந்த நிகழ்வை நினைவுகூரும் வகையில், 'மனிதனின் விண்வெளிப் பயணங்குறித்த உலக நாள்' கொண்டாடப்படுகிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. வருவாய்த்துறை செயலி மூலம் வறட்சி நிலை கண்காணிப்பு: ஜூன் முதல் புதிய திட்டம் துவக்கம்**

வறட்சி நிலையையும் செயலி வழியாகக் கண்காணிக்கும் புதிய திட்டம் ஜூன் மாதம் முதல் நடைமுறைக்கு வரும் என்று வருவாய்த் துறை தெரிவித்துள்ளது. இதுகுறித்து, பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட அந்தத் துறையின் கொள்கை விளக்கக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

கடந்த 2021–22–ஆம் ஆண்டில் செயலிமூலம் மின்னல் தொடர்பான எச்சரிக்கை செய்திகளை அனுப்ப வழிவகை செய்யப்பட்டுள்ளது. வறட்சி நிலையினை கண்காணித்து தகவல் அளிக்கை வசதியையும் அந்தச் செயலியில் ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது ஜூன் முதல் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

---

**2. கடந்த 15 மாதங்களில் தமிழகத்தில் 131 யானைகள் உயிரிழப்பு**

தமிழகத்தில் கடந்த 15 மாதங்களில் 131 யானைகள் உயிர் இழந்துள்ளதாக யானைகள் இறப்பு தொடர்பாக அமைக்கப் பட்ட குழு அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

தமிழ்நாடு முழுவதும் 2021 ஜன.1 முதல் டிச.31 வரை 101 யானைகளும், 2022 ஜன.1 முதல் மார்ச் 15 வரை 30 யானைகளும் உயிரிழந்துள்ளன. இதில், அதிகபட்சமாக சத்தியமங்கலம் வனக்கோட்டத்தில் இருபது யானைகள், கோயம்புத்தூர் வனக்கோட்டத்தில் 18 யானைகள் உயிரிழந்துள்ளன.

---

**3. சேதி தெரியுமா?**

**மார்ச் 26:** டெஸ்ட் கிரிக்கெட்டில் 8 ஆயிரம் ரன்களை (151 இன்னிங்ஸ்கள்) விரைவாகக் கடந்த வீரர் என்கிற

சாதனையை ஆஸ்திரேலியாவின் ஸ்டீவ் ஸ்மித் படைத்தார்.

**மார்ச் 27:** சுவிஸ் சூப்பர் ஓபன் பாட்மிண்டன் தொடர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் பி.வி. சிந்து பட்டம் வென்றார்.

**மார்ச் 28:** கோவா மாநில முதல்வராக பிரமோத் சாவந்த் இரண்டாவது முறையாகப் பொறுப்பேற்றார். அவருக்கு ஆளுநர் · தரன் பிள்ளை பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

**மார்ச் 28:** அமெரிக்காவில் நடைபெற்ற 94–வது ஆஸ்கர் விழாவில் 2022–ஆம் ஆண்டுக்கான சிறந்த படத்துக்கான விருது 'CODA' படத்துக்கு வழங்கப் பட்டது. சிறந்த நடிகராக 'கிங் ரிச்சர்டு' படத்துக்காக வில் ஸ்மித்தும் சிறந்த நடிகையாக 'தி ஐஸ் ஆஃப் டாமி ஃபே' படத்துக்காக ஜெசிகா சாஸ்டெய்னும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**மார்ச் 29:** கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக முதல் பெண் துணைவேந்தராக வி. கீதா லட்சுமியைத் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி நியமித்தார்.

**மார்ச் 29:** தேசிய நீர் விருதுகள் வழங்கும் விழாவில் நீர் சேமிப்பில் இந்தியாவில் முதலிடம் பிடித்த உத்தரப் பிரதேசத்துக்குக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் சிறந்த மாநிலத்துக்கான விருது வழங்கினார்.

**மார்ச் 29:** தமிழகத்தில் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த ராஜ கண்ணப்பன் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சராகவும், பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை அமைச்சராக இருந்த சிவசங்கர் போக்குவரத்துத் துறை அமைச்சராகவும் நியமிக்கப் பட்டனர்.

**மார்ச் 30:** கத்தாரில் நடைபெற உள்ள உலகக் கோப்பை கால்பந்துப் போட்டிக்கு 36 ஆண்டுகளுக்குப் பிறகு கனடா அணி தகுதி பெற்றது.

**மார்ச் 31:** தமிழகத்தில் வன்னியர் களுக்கான 10.5 சதவீத இட ஒதுக்கீட்டை ரத்துசெய்த சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் தீர்ப்பை உச்ச நீதிமன்றம் உறுதிசெய்தது.

**மார்ச் 31:** நாகாலாந்து, அசாம், மணிப்பூர் ஆகிய மாநிலங்களில் ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டத்தின் (AFSPA) கீழ் உள்ள பகுதிகளைக் குறைக்க மத்திய அரசு முடிவு செய்தது.

**ஏப்.1:** இந்தியப் புவியியல் ஆய்வு மையத்தின் (ஜிஎஸ்ஐ) இயக்குநர் ஜெனரலாக டாக்டர் எஸ். ராஜு பொறுப்பேற்றார்.

**ஏப்.2:** ஆந்திரப் பிரதேசத்தின் லெபக்ஷியில் உள்ள ஸ்ரீ வீரபத்ர சுவாமி கோவில் மற்றும் ஒற்றைக்கல் நந்தி யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய தற்காலிகப் பட்டியலில் சேர்க்கப்பட்டது.

**ஏப்.3:** நியூசிலாந்தில் நடைபெற்ற 50 ஓவர் மகளிர் உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் இங்கிலாந்தை வீழ்த்தி ஆஸ்திரேலியா கோப்பையை வென்றது. இது ஆஸ்திரேலியா வெல்லும் ஏழாவது கோப்பை.

**ஏப்.4:** பிஹாரில் உள்ள ஜெய்நகரையும் நேபாளத்தின் குர்தாவையும் இணைக்கும் 35 கி.மீ. குறுக்கு ரயில் பாதையில் தொடக்க ஓட்டம் நடைபெற்றது.

**ஏப்.4:** 2022 மியாமி ஓபன் டென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டியில் ஜப்பானின் நவோமி ஒசாகாவை வீழ்த்தி போலந்து வீராங்கனை இகா ஷ்வாடெக் பட்டம் வென்றார்.

**ஏப்.5:** ஹிமாச்சல பிரதேசத்தில் 9ஆம் வகுப்பு முதல் அனைத்துப் பள்ளி மாணவர்களுக்கும் பகவத் கீதை கற்பிக்கப்படும் என்று அம்மாநில கல்வி அமைச்சர் கோவிந்த் சிங் தாக்கூர் தெரிவித்தார்.

**ஏப்.7:** தமிழகத்தில் மருத்துவக் கல்லூரிகளில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படும் 7.5 சதவீத இட ஒதுக்கீடு செல்லும் என்று சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

**ஏப்.7:** தமிழகத்தில் புதிய கல்விக் கொள்கையை வடிவமைப்பது குறித்து ஆய்வு செய்ய டெல்லி உயர் நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி த.முருகேசன் தலைமையில் குழு அமைக்கப்பட்டது.

**ஏப்.8:** ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் இருந்து ரஷ்யாவை இடைநீக்கம் செய்யும் தீர்மானத்துக்கு ஐ.நா. பொதுச் சபை ஒப்புதல் அளித்தது. தீர்மானத்துக்கு ஆதரவாக 93 வாக்குகளும் எதிராக 24 வாக்குகளும் கிடைத்தன. இந்தியா உட்பட 58 நாடுகள் வாக்களிக்கவில்லை.

**ஏப்.8:** அமெரிக்க உச்ச நீதிமன்றத்தின் முதல் கறுப்பினப் பெண் நீதிபதியாக கேதன்ஜி பிரவுன் ஜாக்சனை நியமிக்க அந்நாட்டு நாடாளுமன்ற மேலவை ஒப்புதல் அளித்தது.

**ஏப்.9:** தாய்லாந்தின் புக்கெட் நகரில் நடைபெற்ற சர்வதேச குத்துச்சண்டை ஓபன் தொடரில் இந்திய அணி 3 தங்கம், 4 வெள்ளி, 3 வெண்கலம் என 10 பதக்கங்களை வென்றது.

**ஏப்.10:** கிளாஸ்கோ நகரில் நடைபெற்ற உலக இரட்டையர் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் தீபிகா பள்ளிக்கல் மகளிர் இரட்டையர் பிரிவில் ஜோஸ்னா சின்னப்பாவுடனும் கலப்பு இரட்டையர் பிரிவில் சவுரவ் கோஷலுடனும் இணைந்து பட்டம் வென்றார். உலக இரட்டையர் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் தொடரை இந்தியா முதன் முறையாக வென்றது குறிப்பிடத்தக்கது.

**ஏப்.11:** இந்தியாவில் காய்கறி உற்பத்தியில் உத்தரப் பிரதேச மாநிலம் மீண்டும் முதலிடத்தைப் பிடித்தது. இதேபோலப் பழங்கள் உற்பத்தியில் ஆந்திரப் பிரதேசம் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

**ஏப்.12:** மருத்துவமனைகள் மற்றும் சுகாதார சேவை வழங்குநர்களுக்கான தேசிய அங்கீகார வாரியத்தின் (NABH) புதிய தலைவராக டாக்டர் மகேஷ் வர்மா நியமிக்கப்பட்டார்.

**1.** **சமீபத்தில் எந்த இந்திய மாநிலத்தில், பெருங்கற்கால கல் ஜாடிகள் கண்டுபிடிக்கப்பட்டன?**

அ) தமிழ்நாடு

**ஆ) அஸ்ஸாம் ☑**

இ) உத்தர பிரதேசம்

ஈ) மேற்கு வங்கம்



- ✓ அஸ்ஸாம் மாநிலத்தில் இதுவரை அறியப்படாத நான்கு இடங்களில், டசன் கணக்கிலான பெருங்கற்கால கல் ஜாடிகள் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
- ✓ இந்தக் கண்டறிவானது இந்தியாவின் வடகிழக்கிற்கும் தென்கிழக்கு ஆசியாவிற்கும் இடையிலான சாத்தியமான சம்பந்தங்களை எடுத்துக்கூறுகிறது.

---

**2.** **உலக வர்த்தக அமைப்பின் கூற்றுப்படி, 2022-23 நிதி ஆண்டில் உலகின் வர்த்தக வளர்ச்சி எவ்வளவு இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது?**

அ) 2.5%

**ஆ) 3% ☑**

இ) 4%

ஈ) 5.5%




- ✓ உலக வர்த்தக அமைப்பானது (WTO) 2022-23 நிதி ஆண்டில் உலகின் வர்த்தக வளர்ச்சி மூன்று சதவீதமாக இருக்கும் எனத் தெரிவித்துள்ளது. இதற்கு முன் இந்தக் கணிப்பு 4.7% எனக் கணிக்கப்பட்டிருந்தது.
- ✓ ரஷ்யா – உக்ரைன் போரின் தாக்கம் காரணமாக இந்தக் குறைப்பேற்பட்டுள்ளது. விலைவாசி உயர்வால் உணவுப் பஞ்சம் ஏற்படக்கூடும் என்றும் WTO எச்சரித்துள்ளது. 2023ஆம் ஆண்டில் உலகின் வர்த்தக வளர்ச்சி 3.4%ஆக உயரும் என்றும் அது கணித்துள்ளது.

---

**3.** **இந்தியாவில் 2021-22 நிதியாண்டில் சொத்துக்களைப் பணமாக்குதலிலிருந்து திரட்டப்பட்ட வருவாய்கள் மற்றும் முதலீடுகளின் மொத்தத்தொகை என்ன?**

அ) ₹36000 கோடி

ஆ) ₹45000 கோடி

இ) ₹75000 கோடி

**ஈ) ₹96000 கோடி ☑**



- ✓ நிலக்கரி மற்றும் கனிமத் தொகுதிகள், நெடுஞ்சாலை நீட்சிகள் மற்றும் மின் பரிமாற்ற வடங்கள் ஆகியவற்றின் வலுவான செயல்திறன் காரணமாக, நடுவணரசின் சொத்துக்களைப் பணமாக்குதல் இயக்கமானது 2021-22 நிதியாண்டில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விட 12% அதிகமாக ஈட்டியுள்ளது.
- ✓ மொத்தத்தில், 2021-22இல் சொத்தைப் பணமாக்குதலின் மூலம் திரட்டப்பட்ட வருவாய்கள் மற்றும் முதலீடுகள் ₹96,000 கோடியாக இருந்தது.

---

**4.** **எந்த நாட்டுடன் இணைந்து, 'கல்வி மற்றும் திறன் மேம்பாட்டு பணிக்குழு'வினை அமைக்க இந்தியா முடிவு செய்துள்ளது?**

**அ) அமெரிக்கா ☑**

ஆ) பிரான்ஸ்

இ) ஜெர்மனி

ஈ) பின்லாந்து



- ✓ இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து புதிய, 'இந்தியா–அமெரிக்கா கல்வி மற்றும் திறன் மேம்பாட்டு பணிக்குழு' ஒன்றை நிறுவ முடிவுசெய்துள்ளன. இந்தக் கூட்டு முயற்சி மூலம் கல்வி மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தப்படும்.

---

**5.** **'ஸ்வநிதி சே சம்ரிதி' என்ற திட்டத்துடன் தொடர்புடைய மத்திய அமைச்சகம் எது?**

அ) உள்துறை அமைச்சகம்

**ஆ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகார அமைச்சகம் ☑**

இ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

ஈ) நிதி அமைச்சகம்

- ✓ மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம் 14 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 126 நகரங்களில், 'ஸ்வநிதி சே சம்ரிதி' திட்டத்தைத் தொடங்கியுள்ளது. பிரதம அமைச்சர் ஸ்வநிதியின் கூடுதல் திட்டமான, 'ஸ்வநிதி சே சம்ரிதி' கடந்த ஆண்டு முதல் கட்டமாக 125 நகரங்களில் சுமார் 35 லட்சம் தெருவோர வியாபாரிகள் மற்றும் அவர்களது குடும்பங்களை உள்ளடக்கியதாக தொடங்கப்பட்டது.
- ✓ தெரு வியாபாரிகளுக்கு மலிவு விலையில் செயல்பாட்டு மூலதனக்கடனை வழங்குவதை பிரதமர் சுவநிதி திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**6.** **NSO வெளியிட்ட தரவுகளின்படி, கடந்த மார்ச் மாதத்தில் இந்தியாவின் சில்லறை பணவீக்க விகிதம் என்ன?**

அ) 5.20%

ஆ) 5.85%

**இ) 6.95% ☑**

ஈ) 7.20%

- ✓ தேசிய புள்ளியியல் அலுவலகம் (NSO) வெளியிட்ட தரவு –களின்படி, இந்தியாவில் சில்லறை பணவீக்கம் கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் 6.95 சதவீதமாக உயர்ந்துள்ளது.
- ✓ தொடர்ந்து மூன்றாவது மாதமாக இந்திய ரிசர்வ் வங்கியின் ஏற்பமைவு வரம்பைவிட இந்த விகிதம் அதிகமாக உள்ளது. தொழிற்துறை உற்பத்திக் குறியீடு (IIP) பிப்ரவரியில் ஆண்டளவில் 1.7% உயர்ந்தது; ஆனால் மாதத்தளவில் 4.7 சதவீதம் எனச் சுருங்கியது.

---

**7.** 'பிரதமர் சங்கராலயா' அருங்காட்சியகம் அமைந்துள்ள நகரம் எது?

அ) காந்தி நகர்

**ஆ) புது தில்லி ☑**

இ) சென்னை

ஈ) கொல்கத்தா



- ✓ பிரதமர்களின் அருங்காட்சியகத்தை (சங்கராலயா) பிரதமர் மோடி தொடங்கிவைத்தார். இந்த அருங்காட்சியகம், இந்தியப் பிரதமர்களின் வாழ்க்கை மற்றும் பங்களிப்புகள் மூலம் விடுதலைக்கு பிந்தைய இந்தியாவின் வரலாற்றை எடுத்துரைக்கும். இவ்வருங்காட்சியகத்தில் மொத்தம் 43 காட்சியகங்கள் உள்ளன. 'சங்கராலயா', பிரதமர்களின் சாதனைகளை எடுத்துக்காட்டுகிறது.

---

**8.** ராஷ்ட்ரிய கிராம சுவராஜ் அபியானைச் செயல்படுத்தும் மத்திய அமைச்சகம் எது?

அ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

MINISTRY OF PANCHAYATI RAJ
GOVERNMENT OF INDIA

**ஆ) பஞ்சாயத்து இராஜ் அமைச்சகம் ☑**

இ) உள்துறை அமைச்சகம்

ஈ) மகளிர் & குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

- ✓ இந்தியப் பிரதமர் மோடி பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தின் கீழ், 'ராஷ்ட்ரிய கிராம சுவராஜ் அபியான்', 'முன்னேற விழையும் மாவட்டங்களின் மாற்றம்' என்ற திட்டத்தைத் தொடங்கினார். 2018ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட இது, தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களை முன்னேற்றவும், 2.78 இலட்சம் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகள் நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைய உதவுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ✓ இராஷ்ட்ரிய கிராம சுவராஜ் அபியானுக்கு (RGSA) ₹5,911 கோடி நிதி ஒதுக்கீட்டிற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. 2022 ஏப்ரல்.1 முதல் 2026 மார்ச்.31 வரை இந்தத் திட்டத்தைத் தொடர நடுவணரசு ஒப்புதலளித்தது.

---

**9.** யாருக்கு, '2021 – தொழுநோய்க்கான சர்வதேச காந்தி விருது' வழங்கப்பட்டுள்ளது?

**அ) Dr பூஷன் குமார் ☑**

ஆ) Dr G P தல்வார்

இ) Dr M D குப்தே

ஈ) Dr அதுல் ஷா



- ✓ சண்டிகரைச் சேர்ந்த Dr பூஷன் குமாருக்கும், குஜராத்தின் சகயோக் குஷ்தா யக்னா அறக்கட்டளைக்கும், 2021ஆம் ஆண்டுக்கான தொழுநோய்க்கான சர்வதேச காந்தி விருதை குடியரசுத்துணைத்தலைவர் வெங்கையா வழங்கினார்.
- ✓ காந்தி நினைவு தொழுநோய் அறக்கட்டளையால் ஆண்டு தோறும் இந்த விருது வழங்கப்படுகிறது. தேசிய தொழு நோய் ஒழிப்புத்திட்டமானது இந்தியாவில் தொழுநோயை முற்றாக ஒழிக்க முயற்சி செய்து வருகிறது.

---

**10.** Dr B R அம்பேத்கரின் பிறந்தநாளான ஏப்ரல்.14 அன்று 'சமத்துவ நாள்' எனக் கொண்டாடப்படும் என அறிவித்த மாநிலம் எது?

**அ) தமிழ்நாடு ☑**

ஆ) மகாராஷ்டிரா

இ) புது தில்லி

ஈ) ஒடிஸா

- ✓ Dr B R அம்பேத்கரின் பிறந்தநாளான ஏப்ரல்.14ஆம் தேதி இந்த ஆண்டு முதல் சமத்துவ நாளாகக் கொண்டாடப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாட்டு முதல்வர் மு க ஸ்டாலின் சட்டப்பேரவையில் அறிவித்தார். அன்றைய நாள் மாநிலம் முழுவதும் உறுதிமொழி எடுக்கப்படும் என்றும் முதல்வர் கூறினார். Dr B R அம்பேத்கரின் தேர்ந்தெடுக்கப்பட்ட சில நூல்களை தமிழில் மொழிபெயர்த்து வெளியிடவும் தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. பொது நிர்வாகத்தில் சிறந்து விளங்குவதற்கான பிரதமரின் விருது விமான போக்குவரத்து அமைச்சகத்தின் உடான் திட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளது**

பொது நிர்வாகத்தில் சிறந்துவிளங்குவதற்கான பிரதமரின் விருது விமான போக்குவரத்து அமைச்சகத்தின் உடான் திட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. புதுமைகள் (பொது) மத்திய பிரிவில் இந்த விருதிற்கு உடான் திட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

அரசின் மாவட்டங்கள் மற்றும் அமைப்புகளால் செய்யப்படும் அசாதாரணமான மற்றும் புதுமையான பணிகளை அங்கீகரித்து, வெகுமதி அளிக்க இந்திய அரசு இந்த விருதைத் தொடங்கியுள்ளது. நல்ல நிர்வாகம், சிறப்பான சாதனைகள் மற்றும் கடைசி மைல் இணைப்பு ஆகியவற்றை இந்தத் திட்டம் வலியுறுத்துகிறது. கோப்பை, பாராட்டு பத்திரம் மற்றும் ஊக்கத்தொகையாக ₹10 லட்சம் ஆகியவற்றை தாங்கி இந்த விருது வருகிறது.

---

**2. இந்தியாவின் பாஸ்மதி அல்லாத அரிசி ஏற்றுமதி 2013–14இலிருந்து 109% அதிகரித்து 6115 மில்லியன் அமெரிக்க டாலர்களாக உள்ளது**

இந்தியாவின் பாஸ்மதி அல்லாத அரிசி ஏற்றுமதி 2013–14 நிதியாண்டில் 2925 மில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்த நிலையில் 2021–22 நிதியாண்டில் 6115 மில்லியன் அமெரிக்க டாலர்களாக 109% அசுர வளர்ச்சியைக் கண்டுள்ளது.

வணிக நுண்ணறிவு மற்றும் புள்ளியியல் தலைமை இயக்குநரக தரவுகளின்படி, 2021–22–ல் உலகம் முழுவதும் 150 நாடுகளுக்கு இந்தியா அரிசியை ஏற்றுமதி செய்துள்ளது. 2021–22–ல் 150 நாடுகளில் 76 நாடுகளுக்கு ஒரு மில்லியன் அமெரிக்க டாலர்களுக்கு மேல் இந்தியா ஏற்றுமதி செய்துள்ளது, இந்தியாவின் அரிசி ஏற்றுமதியின் பன்முகத்தன்மையை இது குறிக்கிறது.

---

**3. முதல் செமிகான் இந்தியா 2022 மாநாடு ஏப்ரல் 29 முதல் மே 1 வரை பெங்களூருவில் நடைபெறுகிறது**

முதல் செமிகான் இந்தியா 2022 மாநாட்டை ஏப்.29 முதல் 1 மே 2022 வரை பெங்களூருவில் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் நடத்தவுள்ளது.

"உலகத்திற்காக இந்தியாவில் வடிவமைப்பு மற்றும் உற்பத்தி: இந்தியாவை செமிகண்டக்டர் தேசமாக மாற்றுதல்" என்பது இதன் மையக்கருவாகும்.

---

**4. பால் உற்பத்தியில் இந்தியா முதலிடம்: பிரதமர் மோடி**

ஆண்டுக்கு ₹8.5 இலட்சம் கோடி மதிப்புக்கு பால் உற்பத்தி செய்து, உலகிலேயே இந்தியா முதலிடத்தில் உள்ளதாகப் பிரதமர் மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

---

**5. தொழிற்துறையின் பெயர் மாற்றம்; கிருஷ்ணகிரியில் ₹1800 கோடியில் புதிய SIPCOT தொழிற்பூங்கா; சட்டப் பேரவையில் அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவிப்பு**

பேரவையில் நேற்று தொழில்துறை மானியக் கோரிக்கையின்போது தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வெளியிட்ட அறிவிப்பு:

* தமிழகத்தில் தொழில்துறை இனி, 'தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை' எனப் பெயர்மாற்றம் செய்யப்படும்.

* தொழில்துறையின்கீழ் மாநில அளவில் ஒரு முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்கல் ஆணையரகம் புதிதாக உருவாக்கப்படும். சுற்றுச்சூழலின் தரத்தை மேம்படுத்த 'எத்தனால் கொள்கை 2022' வெளியிடப்படும். தமிழ்நாடு தொழிற்கொள்கை 2021'ன்கீழ் வழங்கப்படும் நிலையான ஊக்க சலுகைகளுடன் கூடுதலாக தொழில்நுட்ப ஜவுளிகள் மற்றும் ஆடைகள் உற்பத்தி துறைக்கான சிறப்பு திட்டம் ஒன்று வெளியிடப்படும்.

* கிருஷ்ணகிரி மாவட்டத்தில் புதிய SIPCOT தொழிற்பூங்கா ஒன்று ₹1800 கோடி திட்ட மதிப்பீட்டில் 3000 ஏக்கர் பரப்பளவில் உருவாக்கப்படும். இதன்மூலம் ₹21 ஆயிரம் கோடி முதலீடு ஈர்க்கப்படுவதுடன் 16,800 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு உருவாக்கும்.

* திருப்பெரும்புதூர் சிப்காட் தொழிற்பூங்காவில் ₹7 கோடி மதிப்பீட்டில் வணிகவளாகம் மற்றும் உணவகம் தனியார் பங்களிப்புடன் அமைக்கப்படும். காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் அருகே சுமார் 250 ஏக்கர் பரப்பில் பல் துறை தொழிற்பூங்கா அமைக்கப்படும். தமிழ்நாட்டில் அதிவேக இரயில் வழித்தடத்தை அடையாளம் காண்பதற்கான சாத்தியக்கூறு ஆய்வு ₹3 கோடி செலவில் மேற்கொள்ளப்படும். வான்வெளி மற்றும் பாதுகாப்பு தொழில்கள் தொடர்பாக ஒரு பொது வசதி மையம் சுமார் ₹500 கோடி மதிப்பீட்டில் கோவையில் அமைக்கப்படும். மாநிலத்தில் பல விமானங்களை இயக்க பயிற்சி தரும் நிறுவனங்களை அமைக்க டிட்கோ துணை புரியும்.

* புதிய ஏர்போர்ட்

சென்னை அருகே புதிய பன்னாட்டு விமான நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக தொழில் துறை கொள்கை விளக்க குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

**தமிழ் உச்சரிப்புக்கு விருது**

* மாணவர்களின் தமிழ் ஆர்வத்தை அதிகரிக்க, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி ஆகியவற்றில் மாணவர் தமிழ் மன்றங்கள் அமைத்து மாணவர்களிடையே தமிழ் சார்ந்த போட்டிகள் ஆண்டுதோறும் நடத்தப்படும்.

இதற்கென ஒவ்வொரு கல்லூரிக்கும் ₹5 இலட்சம் வீதம் 100 கல்லூரிகளுக்கு ₹5 கோடியும், இவ்வாண்டு போட்டிகள் நடத்திட ₹36 லட்சமும் என மொத்தம் ₹5.36 கோடி வழங்கப்படும்.

* தமிழைச் சிறப்பாக உச்சரிக்கும் செய்தி ஊடகங்களுக்கு மாநில அளவில் சிறந்த தமிழ் உச்சரிப்பு விருது வழங்கப்படும். இதற்கென ₹5 லட்சம் வழங்கப்படும்.

---

**1. உலக வங்கியின் ஏப்ரல் அறிக்கையின்படி, 2022–23 நிதியாண்டிற்கான இந்தியாவின் GDP கணிப்பு என்ன?**

அ) 7.5%

**ஆ) 8.0% ☑**

இ) 8.5%

ஈ) 9.0%




✓ 2022–23 நிதியாண்டிற்கான இந்தியாவின் ஜிடிபி (GDP) முன்கணிப்பை உலக வங்கி 8.7%இலிருந்து 8%ஆகக் குறைத்துள்ளது. இது உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பால் ஏற்படும் மோசமான விநியோகத் தடைகள் மற்றும் அதிகரித்து வரும் பணவீக்க இடர்களை மேற்கோளிட்டுள்ளது. உலக வங்கி, ஆப்கானிஸ்தானைத் தவிர்த்து தெற்காசியாவிற்கான அதன் வளர்ச்சி மதிப்பீட்டை 6.6%ஆகக் குறைத்தது.

✓ ஆசிய வளர்ச்சி வங்கி கண்ணோட்டம் – 2022 ஆனது முன்னதாக, இந்தியா 2022–23 நிதியாண்டில் 7.5% வளர்ச்சியைக்கொண்டிருக்கும் என மதிப்பிட்டது.

---

**2.** 2023 – **COP28 காலநிலை உச்சிமாநாடு நடைபெறும் நாடு எது?**

அ) இந்தியா

**ஆ) ஐக்கிய அரபு அமீரகம் ☑**

இ) ஆஸ்திரேலியா

ஈ) UK




✓ 2023 – COP28 காலநிலை உச்சிமாநாட்டை நடத்தும் நாடாக ஐக்கிய அரபு அமீரகம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. ஐநா காலநிலை உச்சிமாநாடானது அபுதாபியில் நடைபெற உள்ளது. அபுதாபியில் வரும் ஜூன் மாதம் முதல் 1 முறை மட்டுமே பயன்படுத்தும் நெகிழிப் பைகளுக்கு தடை விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

✓ 2050ஆம் ஆண்டுக்குள் கார்பன் நடுநிலையை அடைவதை UAE தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**3.** 'SMBHAV' **என்னும் தனது டிஜிட்டல் மாற்ற திட்டத்தை அறிமுகப்படுத்திய இந்திய பொதுத்துறை வங்கி எது?**

அ) பாரத வங்கி

ஆ) கனரா வங்கி

**இ) யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா ☑**

ஈ) பஞ்சாப் தேசிய வங்கி

✓ யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா ஆனது அண்மையில் 'UnionNXT' மற்றும் டிஜிட்டல் மாற்ற திட்டமான, 'SMBHAV' என்ற அதன் சூப்பர்–செயலியையும் அறிமுகப்படுத்தியது. 2022–23 நிதியாண்டில் சுமார் ₹1,000 கோடி முதலீட்டில் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

---

**4. 'கஞ்சார்' என்பது இந்தியாவிற்கும் எந்த நாட்டிற்கும் இடையே நடக்கும் கூட்டு சிறப்புப்படைப்பயிற்சியாகும்?**

அ) ஓமான் ஆ) சிங்கப்பூர்

**இ) கிர்கிஸ்தான் ☑** ஈ) நேபாளம்



✓ இந்தியா மற்றும் கிர்கிஸ்தானுக்கு இடையே வளர்ந்து வரும் பாதுகாப்பு உறவுகளின் பிரதிபலிப்பாக 2 வார கால கூட்டு சிறப்புப் படைப் பயிற்சியை மேற்கொண்டன.

✓ இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள பக்லோவில் நடைபெற்ற இப்பயிற்சி சமீபத்தில் நிறைவடைந்தது. போர் துப்பாக்கிச் சூடு, துப்பாக்கிச் சூடு, மலைகளில் பிழைத்திருப்பது மற்றும் பணயக்கைதிகள் மீட்புப்பயிற்சிகள் ஆகியவை பயிற்சியின்போது பயிற்சி செய்யப்பட்டன.

---

**5. உலக அளவில் அதிகளவு பனையெண்ணெயை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யும் நாடு எது?**

அ) இந்தியா

ஆ) சீனா

**இ) இந்தோனேசியா ☑**

ஈ) ஐக்கிய அரபு அமீரகம்



✓ இந்தோனேசியா உலகில் அதிகளவு பனையெண்ணெய் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி செய்யும் நாடாக உள்ளது. தற்போது, உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பால், பனையெண்ணெய் நெருக்கடியை இந்தோனேசியா எதிர்கொண்டு வருகிறது.

✓ உக்ரைன் போரினால் ஏற்பட்ட உணவு & எரிசக்திக்கான விலையேற்றம் 40 மில்லியனுக்கும் அதிகமான மக்களை தீவிர வறுமையில் தள்ளும். உலகில் அதிகளவு சமையல் எண்ணெயை நுகரும் நாடான இந்தியா, அதன் பாமாயில் இறக்குமதிக்கு சரிபாதிக்கும் மேல் இந்தோனேசியாவை சார்ந்துள்ளது.

---

**6. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'மிஷன் ரப்தார்' என்பதுடன் தொடர்புடைய நிறுவனம் எது?**

அ) NITI ஆயோக்

**ஆ) இந்திய இரயில்வே ☑**

இ) இந்திய தேர்தல் ஆணையம்

ஈ) இந்திய கடலோர காவல்படை



✓ 2016–17இல் இந்திய இரயில்வே அறிமுகப்படுத்திய 'மிஷன் ரப்தார்', 2021–22க்குள் அஞ்சல்/விரைவு இரயில்களுக்கு சராசரியாக 50 கிமீ வேகத்தையும், சரக்கு இரயில்களுக்கு மணிக்கு 75 கிமீ வேகத்தையும் இலக்காகக் கொண்டது.

✓ கம்ப்ட்ரோலர் மற்றும் ஆடிட்டர் ஜெனரல் (சிஏஜி) சமீபத்தில் நடத்திய தணிக்கையில், கடந்த சில ஆண்டுகளாக இரயில்களின் பயண நேரம் அதிகரித்துள்ளதையும், ஒட்டு மொத்த இரயில்களின் வரும் நேரம் குறைந்துள்ளதும் கண்டறியப்பட்டது. அஞ்சல்/விரைவு இரயில்களின் நேரக் கட்டுப்பாடு 79 சதவீதத்திலிருந்து (2012–13) 69.23%ஆக (2018–19) நிறுத்த நிலையங்களில் குறைந்துள்ளது.

---

**7. விளையாட்டில் ஊக்கமருந்தின் பயன்பாட்டை ஒழிப்பத–ற்காக, $72,124–ஐ இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகம் கீழ்காணும் எந்நிறுவனத்திடம் வழங்கியது?**

அ) உலக வங்கி ஆ) சர்வதேச ஒலிம்பிக் சங்கம்


**இ) UNESCO ☑** ஈ) UNICEF

- ✓ மத்திய இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகம், விளையாட்டில் ஊக்கமருந்துப்பயன்பாட்டை ஒழிப்பதற்காக UNESCO நிதியத்திற்கு $72,124 அமெரிக்க டாலர்களை வழங்கியது.
- ✓ கடந்த 2021ஆம் ஆண்டில் முதன்முறையாக இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டமைச்சகம் UNESCO நிதியத்திற்கு $28172 டாலர்களை வழங்கியது.
- ✓ விளையாட்டில் ஊக்கமருந்தின் பயன்பாட்டை எதிர்ப்பது தொடர்பான 'கோபன்கேகன் பேரறிவிப்பை' கடந்த 2003 இல் இந்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டது.

---

**8. '1994ஆம் ஆண்டு துட்ஸி இனப்படுகொலை குறித்த பன்னாட்டு பிரதிபலிப்பு நாளானது' எந்நாட்டில், ஐநா'ஆல் ஏப்.7 அன்று அனுசரிக்கப்படுகிறது?**

**அ) ருவாண்டா ☑**




ஆ) தென்னாப்பிரிக்கா

இ) எத்தியோப்பியா

ஈ) எகிப்து

- ✓ கடந்த 1994ஆம் ஆண்டு ருவாண்டாவில் நிகழ்ந்த துட்ஸி இனப்படுகொலையின் குறித்த பன்னாட்டு நாளை ஏப்.7 அன்று UNESCO நினைவுகூருகிறது. 2003'இல் ஐநா பொதுச்சபையால் இந்நாள் நிறுவப்பட்டது.
- ✓ ஹூட்டு தீவிரவாத தலைமையிலான அரசாங்கத்தால் சிறுபான்மையினரான துட்சி உறுப்பினர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலையை இந்நாள் குறிக்கிறது.

---

**9. விநியோகச் சங்கிலி நிதியளிப்பை ஆதரிப்பதற்காக ஆசிய வளர்ச்சி வங்கியுடனான (ADB) பகுதி உத்தரவாத ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட வங்கி எது?**

அ) YES வங்கி

**ஆ) ஆக்சிஸ் வங்கி ☑**

இ) HDFC வங்கி

ஈ) பாரத ஸ்டேட் வங்கி

- ✓ ஆக்சிஸ் வங்கியானது ஆசிய வளர்ச்சி வங்கியுடன் (ADB) இணைந்து $150 மில்லியன் டாலர்கள் மதிப்பிலான ஒரு பகுதி உத்தரவாத ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது. இவ்வொப்பந்தத்தின்கீழ் சுற்றுச்சூழல், சமூக & நிர்வாகம் மற்றும் பிற முன்னுரிமைத் துறைகளில் சிறப்பு கவனம் செலுத்தப்படும்.

---

**10. ஒரு புதிய நூலான, "*The Maverick Effect*", எந்த இந்திய நிறுவனத்தின் உருவாக்கத்தை விவரிக்கிறது?**

அ) NITI ஆயோக்

**ஆ) NASSCOM ☑**

இ) ISRO

ஈ) FICCI

- ✓ "*The Maverick Effect*" என்ற தலைப்பிலான ஒரு நூல் மென்பொருள் மற்றும் IT சேவை நிறுவனங்களின் உச்ச அமைப்பான மென்பொருள் & சேவை நிறுவனங்களின் தேசிய சங்கம் (NASSCOM) உருவானதை விவரிக்கிறது.
- ✓ இது NASSCOM–இன் இணை நிறுவனரும் முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவருமான ஹரிஷ் மேத்தாவால் எழுதப்பட்டது. தற்போது, இந்திய தகவல் தொழில்நுட்பத் துறையின் மதிப்பு $200 பில்லியன் டாலர்களாகும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. சுமார்ட் சிட்டி 2020: சென்னை மாநகராட்சிக்கு 2 விருது**

நீர்நிலைகள் சீரமைப்பு, கரோனா தடுப்புக்கான உட்கட்டமைப்பு உள்ளிட்டவற்றில் சிறந்து விளங்கியதற்காக மத்திய அரசின் ஸ்மார்ட் சிட்டி 2020 என்ற தலைப்பில் இரண்டு விருதுகளை பெருநகர சென்னை மாநகராட்சி பெற்றுள்ளது.

மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை சார்பில் நாடு முழுவதும் சிறந்து விளங்கும் நகரங்களுக்கு ஸ்மார்ட் சிட்டி விருது வழங்கப்படுகிறது.

---

**2. அமெரிக்க துணை அதிபர் கமலா ஹாரீஸின் பாதுகாப்பு ஆலோசகராகிறார் இந்திய வம்சாவளி பெண்**

அமெரிக்க துணை அதிபர் கமலா ஹாரீஸின் பாதுகாப்பு ஆலோசகராக, அமெரிக்க போர் கப்பலின் கமாண்டராக பணியாற்றிய இந்திய வம்சாவளி பெண் சாந்தி சேதி நியமிக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்காவின் நெவடா மாகாணத்தில் உள்ள ரெனோ நகரில் பிறந்தவர் சாந்தி சேதி. இவரது தாய் கனடாவைச் சேர்ந்தவர். தந்தை இந்தியாவிலிருந்து கடந்த 1960களில் அமெரிக்காவுக்கு குடிபெயர்ந்தவர்.

சாந்தி சேதி கடந்த 1993–ம் ஆண்டில், அமெரிக்க கடற்படையில் சேர்ந்தார். கடந்த 2010 முதல் 2012–ம் ஆண்டு வரை யுஎஸ்எஸ் டெகாடர் என்ற அமெரிக்க போர் கப்பலின் கமாண்டராக பணியாற்றினார். இந்தியா வந்த, அமெரிக்க போர் கப்பலின் முதல் பெண் கமாண்டரும் இவர்தான். தற்போது அமெரிக்க துணை அதிபர் கமலா ஹாரீஸின் செயலாளராகவும், பாதுகாப்பு ஆலோசகராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

---

**3. புதுவைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் அ. தினகர ராவ், தேசிய அளவிலான 'புகழ்பெற்ற விஞ்ஞானி' விருது பெற்றார்**

வி எச் என் செந்திகுமார நாடார் தன்னாட்சி கல்லூரியில் "தாவரத்தின் சமீபத்திய போக்குகள் மற்றும் சவால்கள்" என்ற தலைப்பில் நடைபெற்ற தேசிய மாநாட்டில், புதுவைப் பல்கலைக்கழகத்தின் உயிரி தகவலியல் துறை பேராசிரியர் அ தினகரராவுக்கு தாவர அறிவியலில் அவரது பங்களிப்பிற்காக தாவர ஆராய்ச்சிக்கான சங்கத்தின் மதிப்புமிக்க 'புகழ்பெற்ற விஞ்ஞானி' விருது வழங்கப்பட்டது.

---

**1.** 'Gaofen-3 03' என்ற புவி கண்காணிப்பு செயற்கைக் கோளை ஏவிய நாடு எது?



அ) ரஷ்யா

ஆ) இஸ்ரேல்

**இ) சீனா ☑**

ஈ) ஐக்கிய அரபு அமீரகம்

✓ 'Gaofen-3 3' என்ற புதிய புவி கண்காணிப்பு செயற்கைக் கோளை லாங் மார்ச்-4C ஏவுகலம்மூலம் சீனா வெற்றிகர -மாக விண்ணில் செலுத்தியது. இந்தச்செயற்கைக்கோள் அதன் தரை-கடல் ரேடார் செயற்கைக்கோள் தொகுப்பின் ஒருபகுதியாக மாறும்.

✓ மேலும் நாட்டின் கடல்சார் நலன்களைப் பாதுகாக்க உதவும் சிறந்த தெளிவுத்திறன் படங்களை இது பிடிக்கும். இந்தச் செயற்கைக்கோள் 'Gaofen-3' மற்றும் 'Gaofen-3 02' செயற்கைக்கோள்களுடன் இணைக்கப்பட்டு, தரை-கடல் ரேடார் செயற்கைக்கோள் குழுமத்தை உருவாக்கும்.

---

**2.** 'Expanding Heat Resilience – விரிவு வெப்ப நெகிழ்வு' அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?

அ) இந்திய வானிலை ஆய்வு மையம்

ஆ) உணவு மற்றும் உழவு அமைப்பு

இ) NITI ஆயோக்

**ஈ) இயற்கை வளங்கள் பாதுகாப்பு கவுன்சில் ☑**

✓ ஒரு இலாபநோக்கற்ற அமைப்பான இயற்கை வளங்கள் பாதுகாப்பு கவுன்சில், 'Expanding Heat Resilience' என்ற அறிக்கையை எழுதியுள்ளது. இவ்வறிக்கையின்படி, வெப்ப அலைகள் வரலாறு காணாத மாநிலங்களான இமாச்சல பிரதேசம் மற்றும் கேரளாவில் தீவிர வெப்பநிலை பதிவாகி வருகிறது.

✓ வெப்ப அலைகளால் பாதிக்கப்பட்ட மாநிலங்களின் எண்ணிக்கை கடந்த 2019-இல் 28-ஆக இருந்தது. அதற்கு முந்தைய ஆண்டு இது 19-ஆக இருந்தது.

---

**3.** சாலிட் பியூயல் டக்டட் ராம்ஜெட் பூஸ்டரை விமானத்தில் சோதனை செய்த அமைப்பு எது?

அ) HAL

**ஆ) DRDO ☑**

இ) ISRO

ஈ) BEL

✓ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனம் (DRDO) ஒடிஸாவின் கடற்கரையில் உள்ள சந்திப்பூரில் உள்ள ஒருங்கிணைந்த சோதனைத் தளத்தில் சாலிட் பியூயல் டக்டட் ராம்ஜெட் பூஸ்டரை (SFDR) விமானத்தில் சோதனை செய்தது. SFDR-அடிப்படையிலான உந்துவிசையானது சூப்பர்சானிக் வேகத்தில், மிகநீண்ட தூரத்தில் வான்வழி இடர்களை இடைமறிக்க ஏவுகணைக்கு உதவுகிறது.

---

**4.** இந்தியாவிற்கு, 'MH-60 ரோமியோ' என்ற பல-பாத்திர உலங்கு வானூர்திகளை வழங்கும் நாடு எது?



அ) ரஷ்யா

**ஆ) அமெரிக்கா ☑**

இ) இஸ்ரேல்

ஈ) பிரான்ஸ்

✓ ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்துடனான ₹15,000 கோடி மதிப்பிலான ஒப்பந்தத்தின் ஒருபகுதியாக, இந்தியா, 24 MH-60 ரோமியோ பல பாத்திர ஹெலிகாப்டர்களை வாங்குகிறது. 'MH-60 ரோமியோ' ஹெலிகாப்டர்களை இயக்குவதற்கான பயிற்சியை இந்திய கடற்படையின் முதல் தொகுதி வான்படையினர் ஐக்கிய அமெரிக்காவில் முடித்துள்ளனர்.

---

**5.** 'Corruption-Free App – 1064'ஐ அறிமுகப்படுத்திய மாநில அரசு எது?




அ) கர்நாடகா

ஆ) தெலுங்கானா


**இ) உத்தரகண்ட் ☑**

ஈ) ஜம்மு-காஷ்மீர்

✓ உத்தரகண்ட் முதல்வர் புஷ்கர் சிங் தாமி, 'Corruption-Free App-1064'ஐ அறிமுகப்படுத்தினார். இந்தச் செயலியானது மாநிலத்தை ஊழலற்ற மாநிலமாக மாற்றுவதையும், மாநிலத்தில் நிர்வாகம் வெளிப்படைத் தன்மையுடன் நடைபெறுவதை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தச் செயலி ஆங்கிலம் மற்றும் இந்தி ஆகிய இருமொழிகளிலும் கிடைக்கும்.

---

**6.** பன்னாட்டு புக்கர் பரிசுக்கு தேர்வு செய்யப்பட்ட முதல் ஹிந்தி நாவல் எது?



**அ) டோம்ப் ஆஃப் சாண்ட் ☑**

ஆ) சாம்ராட் அசோக்

இ) சீலேட்டி ஹியூ அப்னே கோ

ஈ) பாரிஜாதம்

✓ எழுத்தாளர் கீதாஞ்சலி ஸ்ரீயின் 'டோம்ப் ஆஃப் சாண்ட்' என்ற நாவல் சர்வதேச புக்கர் பரிசுக்கு தேர்வு செய்யப்பட்ட முதல் ஹிந்தி மொழி புனைகதை படைப்பாகும்.

✓ டெய்சி இராக்வெல் என்பவரால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்ட இந்நூல், எழுத்தாளர் மற்றும் மொழிபெயர் -ப்பாளருக்கிடையே பகிர்ந்துகொள்ளப்படும் மதிப்புமிக்க 50,000 பவுண்டுகள் இலக்கியப்பரிசுக்காக உலகெங்கும் உள்ள மற்ற ஐந்து தலைப்புகளுடன் போட்டியிடும்.

---

**7.** ஜதின் கோஸ்வாமி, சோனல் மான்சிங் மற்றும் கல்யாணசுந்தரம் ஆகியோர் கீழ்காணும் எந்த விருது / பெல்லோஷிப்பைப் பெற்றுள்ளனர்?

**அ) சங்கீத நாடக அகாடமி பெல்லோஷிப் ☑**

ஆ) கிராமி விருதுகள்

இ) சாகித்ய அகாடமி

ஈ) பத்மஸ்ரீ

- ✓ கடந்த 2018ஆம் ஆண்டிற்கான சங்கீத நாடக அகாடமி பெல்லோஷிப் மற்றும் சங்கீத நாடக விருதுகளை, சிறந்த கலைஞர்களுக்கு இந்தியக்குடியரசுத்துணைத்தலைவர் வெங்கையா வழங்கினார்.
- ✓ சங்கீத நாடக அகாடமி பெல்லோஷிப் 4 கலைஞர்களுக்கு வழங்கப்பட்டது: தபேலா மேதை ஜாகிர் உசேன், நடன இயக்குநர் ஜதின் கோஸ்வாமி, நடனக்கலைஞர் சோனல் மான்சிங் மற்றும் நடன ஆசிரியர் திருவிடைமருதூர் குப்பையா கல்யாணசுந்தரம். மேலும் 40 பேருக்கு சங்கீத நாடக அகாடமி விருதுகள் மற்றும் லலித் கலா அகாடமி விருதுகளும் வழங்கப்பட்டன.

---

**8. அண்மையில் கலப்பு இரட்டையர் மற்றும் பெண்கள் இரட்டையர் பட்டத்தை வென்ற தீபிகா பல்லிகல் சார்ந்த விளையாட்டு எது?**



அ) டேபிள் டென்னிஸ்

**ஆ) ஸ்குவாஷ் ☑**

இ) பாட்மிண்டன்

ஈ) டென்னிஸ்

- ✓ தீபிகா பல்லிகல், 2018 அக்டோபருக்குப் பிறகு தனது முதல் போட்டி நிகழ்வில் சௌரவ் கோஷலுடன் இணைந்தார். மேலும், இங்கிலாந்தின் அட்ரியன் வாலர் மற்றும் அலிசன் வாட்டர்ஸை வென்றதன்மூலம் கலப்பு இரட்டையர் பட்டத்தையும் அவர் வென்றார்.
- ✓ மகளிர் இரட்டையர் பிரிவு இறுதிப் போட்டியில் தீபிகா மற்றும் ஜோஷ்னா சின்னப்பா ஜோடி, இங்கிலாந்தின் சாரா ஜேன் பெர்ரி மற்றும் வாட்டர்ஸ் ஜோடிக்கு எதிராக வென்றது. இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுத்த ஆறு மாதங்களுக்குள் தீபிகா இச்சாதனையை நிகழ்த்தினார்.

---

**9. 2022–இல் தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத்தின் கூட்டத்தை நடத்துகிற மாநிலம் எது?**

அ) இராஜஸ்தான்

**ஆ) அருணாச்சல பிரதேசம் ☑**

இ) குஜராத்

ஈ) அஸ்ஸாம்

- ✓ தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத்தின் இருபதாவது கூட்டம் அருணாச்சல பிரதேச மாநிலத்தில் உள்ள பக்கே புலிகள் காப்பகத்தில் மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சர் பூபேந்தர் தலைமையில் நடைபெற்றது. வரலாற்றில் முதன்முறையாக NTCA கூட்டம் தேசிய தலைநகரத்துக்கு வெளியே நடைபெற்றது.

---

**10. ஒற்றை வனவிலங்குகளின் சட்டப்பூர்வ உரிமைகளை அங்கீகரித்த முதல் நாடு எது?**



அ) தென்னாப்பிரிக்கா

**ஆ) ஈக்வடார் ☑**

இ) சிலி

ஈ) ஆஸ்திரேலியா

- ✓ தென்னமெரிக்காவில் அமைந்துள்ள ஈக்வடார், ஒற்றை வனவிலங்குகளின் சட்டப்பூர்வ உரிமைகளை அங்கீகரித்த முதல் நாடாக வரலாறு படைத்துள்ளது. எஸ்ட்ரெல்லிட்டா என்ற பெயர்கொண்ட கம்பளி குரங்குக்கு இயற்கையின் அனைத்து உரிமைகளும் உள்ளதென அந்நாட்டின் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. வாடகைத்தாய்மூலம் குழந்தை பெறும் அரசு பெண் ஊழியர்களுக்கு 270 நாள்கள் விடுப்பு**

வாடகைத்தாய்மூலம் குழந்தை பெறும் அரசு பெண் ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 270 நாள்களுக்கு விடுப்பு வழங்கப்படும் என்று சமூக நலத்துறை அமைச்சர் கீதா ஜீவன் அறிவித்தார்.

---

**1.** UPSCஇன் புதிய தலைவராக நியமிக்கப்பட்டவர் யார்?



அ) ரொமிலா தாப்பர்

ஆ) அர்ஜுன் தேவ்

**இ) மனோஜ் சோனி ☑**

ஈ) பிபின் சந்திரா

✓ அரசியல் அறிவியல் அறிஞர் மனோஜ் சோனி, மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் (UPSC) புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். மனோஜ் சோனி சர்வதேச உறவுகளில் நிபுணத்துவம் பெற்றவர் மற்றும் Dr பாபாசாகேப் அம்பேத்கர் திறந்தநிலை பல்கலைக்கழகம் மற்றும் பரோடாவின் MS பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக பணியாற்றினார். விடுதலை இந்தியாவின் இளைய துணைவேந்தரும் ஆவார்.

---

**2.** 2022 – ஆஸ்திரேலிய கிராண்ட் பிரிக்ஸ் போட்டியில் வென்ற பந்தய ஓட்டுநர் யார்?



அ) மேக்ஸ் வெர்ஸ்டாப்பன்

**ஆ) சார்லஸ் லெக்லெர்க் ☑**

இ) லூயிஸ் ஹாமில்டன்

ஈ) செர்ஜியோ பெரெஸ்

✓ மொனாகன் பந்தய கார் ஓட்டுநர் சார்லஸ் லெக்லெர்க் ஆஸ்திரேலிய கிராண்ட் பிரிக்ஸில் வெற்றி பெற்று உலக சாம்பியன்ஷிப்பில் தலைமை நிலைக்கு முன்னேறினார்.

✓ ரெட்புல் அணியின் செர்ஜியோ பெரெஸ், மெர்சிடிஸ் அணியின் ஓட்டுநர்கள் ஜார்ஜ் ரசல் மற்றும் லூயிஸ் ஹாமில்டன் ஆகியோர் இரண்டாமிடத்தைப் பிடித்தனர்.

---

**3.** சமீபத்திய செய்திகளில் இடம்பெற்ற, 'மாஸ்க்வா' என்பது எந்த நாட்டின் புகழ்பெற்ற போர்க்கப்பலாகும்?



அ) உக்ரைன்

**ஆ) ரஷ்யா ☑**

இ) சீனா

ஈ) ஜெர்மனி

✓ ரஷ்யாவின் ராணுவ ஆற்றலின் அடையாளமாக இருந்த 510 பேர்கொண்ட ஏவுகணைக் கப்பல், 'மாஸ்க்வா' உக்ரைன் ஏவுகணைகளால் தாக்கப்பட்டதாகக் கூறப்படு–கிறது. ரஷ்ய இராணுவ ஆதாரங்களின்படி, உக்ரைன் மீதான கடற்படைத் தாக்குதலை முன்னெடுத்துச் சென்றபோது அப்போர்க்கப்பல் வெடித்துச் சேதமடைந்ததோடு தீயில் மூழ்கியது. 12,490 டன் எடையுள்ள இந்தக் கப்பல் 2ஆம் உலகபோருக்குப்பிறகு, செயலிலிருந்தபோது மூழ்கிய மிகப்பெரிய ரஷ்ய போர்க்கப்பலாகும்.

---

**4.** இந்தியாவில், 'ஹிமாச்சல் திவாஸ்' கொண்டாடப்படுகிற தேதி எது?



அ) ஏப்ரல்.12

ஆ) ஏப்ரல்.14

**இ) ஏப்ரல்.15 ☑**

ஈ) ஏப்ரல்.16

✓ ஹிமாச்சல் நாளானது ஆண்டுதோறும் ஏப்ரல்.15 அன்று கொண்டாடப்படுகிறது. கடந்த 1948ஆம் ஆண்டு இதே நாளில்தான், 28 சிறிய சமஸ்தானங்களின் ஒருங்கிணை–ப்பை அடுத்து, ஹிமாச்சலப்பிரதேசம் இந்தியாவின் ஒரு மாநிலமாக உருவாக்கப்பட்டது.

---

**5.** இந்திய வானிலை ஆய்வுத்துறையால் பருவமழையை முன்னறிவிக்க பயன்படுத்தப்படும், 'LPA'இன் விரிவாக்கம் என்ன?



**அ) Long Period Average ☑**

ஆ) Least Period Average

இ) Long Prime Average

ஈ) Least Prime Average

✓ இந்திய வானிலை ஆய்வுத் துறையானது (IMD) இந்த ஆண்டுக்கான அதன் முதல் நீள்நெடுக்கக் காலநிலை முன்கணிப்பில் (LRF) தொடர்ந்து நான்காவது ஆண்டாக நாட்டில் சாதாரண பருவமழைபெய்ய வாய்ப்புள்ளது எனத் தெரிவித்துள்ளது.

✓ 2019, 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளிலும் ஜூன்–செப் வரையிலான தென்மேற்குப்பருவமழைப் பருவத்தில் இயல்பான அளவில் மழை பெய்தது.

---

**6.** சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'நெப்டியூன் ஏவுகணை அமைப்பு'டன் தொடர்புடைய நாடு எது?



அ) ஏமன்

ஆ) சௌதி அரேபியா

**இ) உக்ரைன் ☑**

ஈ) ஐக்கிய அரபு அமீரகம்

✓ கப்பலின்மீது நிகழ்ந்த ஏவுகணைத் தாக்குதலுக்குப் பிறகு, ரஷ்ய கருங்கடல் கடற்படைக் கப்பலான 'மாஸ்க்வா' ஒடெசா கடலில் மூழ்கியது. அக்கப்பலில் வெடிகுண்டுகள் வெடித்ததாக ரஷ்ய தரப்பும், நெப்டியூன் கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகளைப்பயன்படுத்தி திட்டமிட்டு இதனை மேற்கொண்டதாக உக்ரேனிய தரப்பும் கூறியுள்ளது.

---

**7.** உற்பத்தியுடன் இணைக்கப்பட்ட ஊக்கத்தொகை (PLI) திட்டத்தின்கீழ், எவ்வளவு ஆண்டுகளுக்கு உற்பத்திக்கா–ன நிதியுதவியை மத்திய அரசு வழங்குகிறது?




அ) 3 ஆண்டுகள்

**ஆ) 5 ஆண்டுகள் ☑**

இ) 7 ஆண்டுகள்

ஈ) 10 ஆண்டுகள்

✓ ஜவுளித்துறையில் உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகை பெறுவதற்காக பெறப்பட்ட 67 விண்ணப்பங்களி–ல் 61 விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

✓ ஊக்கத்தொகை பெற தேர்ந்தெடுக்கப்பட்ட 61 விண்ணப்ப–ங்கள்மூலம், மொத்த முதலீடு ₹19,077 கோடியாகவும், 5 ஆண்டுகளில் ₹184,917 கோடி அளவிற்கு விற்றுவரவும் கிடைக்கப்பெறும்.

---

**8.** CUET'க்கு (மத்திய பல்கலைக்கழகங்களுக்கான பொது நுழைவுத் தேர்வு) எதிராக தீர்மானம் நிறைவேற்றிய மாநிலம் எது?



**அ) தமிழ்நாடு ☑**

ஆ) கேரளா

இ) ஆந்திர பிரதேசம்

ஈ) மத்திய பிரதேசம்

- ✓ CUET (மத்திய பல்கலைக்கழக்கங்களுக்கான பொதுவான நுழைவுத்தேர்வு) திட்டத்தை கைவிட வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தி தமிழ்நாடு சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- ✓ இந்தத் தீர்மானத்தின்படி, NEETஐப்போன்று CUETஉம் விளிம்புநிலை மாணாக்கரை ஓரங்கட்டுகிறது. 2022–2023ஆம் கல்வியாண்டு முதல் அனைத்து மத்திய பல்கலைக்கழகங்களிலும் பல்வேறு படிப்புகளுக்கான மாணாக்கர் சேர்க்கை CUET மூலம் மட்டுமே நடத்தப்படும் என்று பல்கலைக்கழக மானியக் குழு அறிவித்துள்ளது.

---

**9.** அண்மையில் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பால் (DRDO) சோதனை செய்யப்பட்ட, 'ஹெலினா' என்பது எந்த வகை ஏவுகணையாகும்?

**அ) பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டு ஏவுகணை ☑**

ஆ) நீர்மூழ்கிக் கப்பலிலிருந்து ஏவப்படும் எறிகணை

இ) தரைப்பரப்பிலிருந்து வானிலக்கைத்தாக்கும் ஏவுகணை

ஈ) இடைமறிக்கும் ஏவுகணை

- ✓ பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டு ஏவுகணையான 'ஹெலினா', உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஹெலிகாப்டரிலிருந்து மிகவுயரத்தில் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது. இந்தச் சோதனையை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (DRDO), இந்திய இராணுவம் மற்றும் இந்திய வான்படை ஆகியவை கூட்டாக மேற்கொண்டன. இந்த ஏவுகணை உலகிலேயே மிக நவீனமான பீரங்கி எதிர்ப்பு சாதனங்களில் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

---

**10.** யாரின் பிறந்தநாளான ஏப்ரல்.11 அன்று இந்தியாவில், 'தேசிய பாதுகாப்பான தாய்மை நாள்' கொண்டாடப்படுகிறது?



அ) அன்னை தெரசா

**ஆ) கஸ்தூரிபாய் காந்தி ☑**

இ) இந்திரா காந்தி

ஈ அன்னி பெசன்ட்

- ✓ இந்திய அரசு கடந்த 2003ஆம் ஆண்டு ஏப்.11 அன்று தேசிய பாதுகாப்பான தாய்மை நாளாக அறிவித்தது. இந்த நாள் கஸ்தூரிபாய் காந்தியின் பிறந்தநாளையும் குறிக்கிறது.
- ✓ இந்தியாவில் ஆண்டுதோறும் இந்நாள் கொண்டாடப்படுகி–றது. பிரசவத்திற்கு முன்பும், பிரசவத்திற்குப் பின்பும், கர்ப்பிணிப் பெண்ணுக்குத் தேவையான கவனிப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. பாதுகாப்புத் துறையில் தற்சார்பு: இந்தியாவுக்கு ஆதரவு**

பாதுகாப்புத்துறையில் தற்சார்பு அடைவதற்கான இலக்கை இந்தியா அடைவதற்கு பிரிட்டன் போதுமான ஆதரவை வழங்கும் என்று பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சன் உறுதியளித்தார்.

நவீன போர்விமானங்களைத் தயாரிப்பதற்கான தொழில் நுட்பத்தை உருவாக்குவதில் இந்தியாவும் பிரிட்டனும் இணைந்து செயல்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

---

**2. ஓராண்டுக்கு ஆறு கிராம சபை கூட்டம் நடத்தப்படும்: பேரவையில் முதல்வர் மு க ஸ்டாலின் அறிவிப்பு**

அரசின் பல்வேறு திட்டங்களை கிராம அளவில் ஒருங்கே இணைத்து செயல்படுத்த முதற்கட்டமாக இந்த ஆண்டு 600 ஊராட்சிகளில், 'கிராம செயலகங்கள்' கட்டப்படும் என்று முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார். ஆண்டுக்கு 6 கிராமசபை கூட்டங்கள் நடத்தப்படும், நவ.1ஆம் தேதி 'உள்ளாட்சி நாள்' கொண்டாடப்படும் என்றும் முதல்வர் அறிவித்தார்.

இந்த ஆண்டு முதல் ஆண்டுக்கு 6 கிராமசபை கூட்டங்கள் நடத்தப்படும். அந்த வகையில் ஜன.26 குடியரசு நாள், மே.1 தொழிலாளர் நாள், ஆகஸ்ட்.15 சுதந்திர நாள், அக்.2 காந்தி பிறந்தநாள் ஆகிய நாட்களுடன் இனி வரும் காலங்களில் கூடுதலாக மார்ச்.22 – உலக தண்ணீர் நாள், நவம்பர்.1 உள்ளாட்சி நாள் ஆகிய நாட்களிலும் கிராம சபை கூட்டங்கள் நடத்தப்படும்.

இந்த ஆண்டு முதல் 'உத்தமர் காந்தி கிராம ஊராட்சி' விருது வழங்கப்படும். மாவட்டத்துக்கு ஒன்றுவீதம் சிறந்த 37 கிராம ஊராட்சிகளுக்கு ₹10 லட்சம் வீதம் வழங்கப்படும்.

இவ்வாறு முதல்வர் தெரிவித்தார்.

---

**3. கரோனாவுக்கு எதிராக செயல்படும் புதிய மருந்து: சென்னை ஐஐடி ஆய்வில் தகவல்**

மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்ட லேசான மற்றும் மிதமான கரோனா தொற்று ஏற்பட்ட நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதில் 'இன்டோமெதசின்' மருந்துக்கு செயல்திறன் இருப்பதை சென்னை ஐஐடி வடிவமைத்த சோதனை வெளிப்படுத்துகிறது.

கரோனா தொற்றால் பாதிக்கப்பட்டோருக்கு அளிக்கப்படும் அழற்சி எதிர்ப்பு மருந்தான 'இன்டோமெதசின்' மிகச்சிறந்த செயல்திறனைக் காட்டுகிறது என, அண்மையில் வெளியான நேச்சர் சயின்டிபிக் ரிப்போர்ட்ஸ் இதழில் மதிப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

---

**4. 22-04-2022: உலக புவி நாள்**

**கருப்பொருள்:** *Invest In Our Planet.*

---

**5. உலக பாரம்பரிய நீர்ப்பாசன கட்டமைப்பின் மூன்று விருதுகளுக்கு தமிழ்நாடு அரசு தேர்வு: நீர்வளத் துறைச் செயலர் சந்தீப் சக்சேனா தகவல்**

நீர்வளத்துறைச் செயலர் சந்தீப் சக்சேனா வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

சர்வதேச நீர்ப்பாசனம் மற்றும் வடிகால் ஆணையம் ஒவ்வோர் ஆண்டும் உலக பாரம்பரிய நீர்ப்பாசனக் கட்டமைப்புகள் & நீர் சேமிப்பு விருதுகளை அறிவிக்கிறது.

இந்திய தேசிய நீர்ப்பாசனம் மற்றும் வடிகால் குழுமம், ஒவ்வோர் ஆண்டும் இந்திய மாநிலங்களில் இருந்து, தகுதியான முன்மொழிவுகளை ஐசிஐடி அமைப்புக்கு பரிந்துரைக்கிறது.

இதன்படி, கடந்த ஆண்டு ஜூலை மாதம் தமிழக நீர்வளத் துறை சார்பில்கல்லணை, காளிங்கராயன் அணைக்கட்டு, வீராணம் நீர்த்தேக்கம், பேச்சிப்பாறை அணை, மதுராந்தக ஆம் ஏரி, செம்பரம்பாக்கம் ஏரி ஆகிய ஆறு நீர்த்தேக்கக் கட்டமைப்புகளை உலக பாரம்பரிய கட்டமைப்புகளாக அறிவிக்கக் கோரி விண்ணப்பிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு டிசம்பரில் சர்வதேச நீர்ப்பாசன மற்றும் வடிகால் ஆணைய ஆய்வுக்குழு, தமிழக நீர்வளத் துறை விண்ணப்பித்த கட்டமைப்புகளை நேரில் ஆய்வு செய்தது. இதன் தொடர்ச்சியாக, உலக பாரம்பரிய நீர்ப்பாசனக் கட்டமைப்புகளுக்கான விருதுகளுக்கு கல்லணை, வீராணம் ஏரி, காளிங்கராயன் அணைக்கட்டு ஆகிய 3 கட்டமைப்புகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

ஒவ்வொரு நாட்டுக்கும் 4 விருதுகள் சர்வதேச அமைப்பால் ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. கடந்த ஆண்டு இந்தியாவுக்கு 4 விருதுகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இதில், தமிழகம் 3 விருதுகள் பெறுவது குறிப்பிடத்தக்கது.

கல்லணை: வரலாற்றுச் சிறப்பு மிக்க கல்லணை கிபி 2ம் நூற்றாண்டில் சோழ மன்னன் கரிகாலனால் காவிரி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட பழமையான அணையாகும். இது உலகின் 4ஆவது பழமையான நீர்மாற்று அமைப்பு அல்லது நீர் ஒழுங்குபடுத்தும் கட்டமைப்பாகும். இன்னும் பயன்பாட்டில் உள்ள பழமையான கட்டமைப்பாகும்.

வீராணம் நீர்த்தேக்கம்: கடலூர் மாவட்டத்தில் உள்ள வீராணம் நீர்த்தேக்கம் 9ஆம் நூற்றாண்டில் முதலாம் பராந்தக சோழன் காலத்தில் உருவாக்கப்பட்டது.

காளிங்கராயன் அணைக்கட்டு: ஈரோடு மாவட்டத்தில் உள்ள பவானி ஆற்றின் குறுக்கே காளிங்கராயன் அணைக்கட்டு 740 ஆண்டுகளுக்கு முன்பு கொங்கு பகுதி மன்னரான காளிங்கராயக் கவுண்டரால் கட்டப்பட்ட பழமையான அணையாகும். இந்தியாவில் இன்னும் பயன்பாட்டில் உள்ள பழமையான கட்டமைப்பாகும். தமிழகத்துக்கான 3 விருதுகளும் வரும் நவம்பர் 7ஆம் தேதி வழங்கப்பட உள்ளது.

நீர்ப்பாசனக் கட்டமைப்புகளைப் பராமரித்தல் மற்றும் நீர்சேமிப்பை ஊக்குவிக்கும் வகையில், சர்வதேச அமைப்பால் இத்தகு விருது வழங்கப்படுவது மாநிலங்களை ஊக்குவிக்கும் வகையில் அமைந்துள்ளது.

இதேபோல, 2022ஆம் ஆண்டுக்கான விருதுக்கு தமிழகம் சார்பில் மேலும் 10–க்கும் மேற்பட்ட பாரம்பரிய நீர்ப்பாசனக் கட்டமைப்புகளுக்கான முன்மொழிவு அனுப்பப்பட உள்ளது.

**1.** 2022 – 'போர்ப்ஸின் முப்பத்தாறாம் ஆண்டு உலக செல்வந்தர்கள் பட்டியலில் முதலிடம் பிடித்தவர் யார்?

அ) ஜெப் பெசோஸ்



**ஆ) எலோன் மஸ்க் ☑**

இ) வாரன் பபெட்

ஈ) பில் கேட்ஸ்

✓ 2022இல் தனது 36ஆம் ஆண்டு உலக செல்வந்தர்கள் பட்டியலை போர்ப்ஸ் வெளியிட்டது. இது 236 புதியவர்கள் உட்பட உலகின் 2,668 செல்வந்தார்களை பட்டியல் இட்டுள்ளது. கடந்த ஆண்டு பட்டியலில், புதியவர்களின் எண்ணிக்கை 493ஆக இருந்தது.

✓ எலோன் மஸ்க், உலக செல்வந்தர்கள் தரவரிசையில் முதன்முறையாக $219 பில்லியன் மதிப்புடன் முதல் இடத்தில் உள்ளார். ஜெப் பெசோஸ் மற்றும் பெர்னார்ட் அர்னால்ட் ஆகியோர் மஸ்க்குக்குப் பின்னுள்ளனர்.

---

**2.** இந்த ஆண்டுக்கான ஓ ஹென்றி பரிசு பெற்ற அமர் மித்ரா சார்ந்த மொழி எது?

அ) ஹிந்தி



ஆ) உருது

**இ) பெங்காலி ☑**

ஈ) மராத்தி

✓ பெங்காலி எழுத்தாளர் அமர் மித்ராவின், 'கான்புரோ' என்ற சிறுகதைக்கு இவ்வாண்டுக்கான மதிப்புமிக்க ஓ ஹென்றி பரிசு வழங்கப்பட்டது. இது 1977–இல் அமர் மித்ரா எழுதிய வங்காள சிறுகதையாகும். ஆதிவாசி கலாச்சாரம் மற்றும் அவர்களின் போராட்டமே அமர் மித்ராவின் விருதுபெற்ற இக்கதையின் பின்னணி. அமர் மித்ராவுக்கு கடந்த 2006 ஆம் ஆண்டில் சாகித்திய அகாதமி விருது வழங்கப்பட்டது.

---

**3.** இந்தியா, கீழ்காணும் எந்த நாட்டுடனான புதிய 'விண்வெளி சூழ்நிலை விழிப்புணர்வு ஏற்பாட்டில்–*Space Situational Awareness Arrangement*' கையெழுத்திட்டது?

அ) ஆஸ்திரேலியா



**ஆ) அமெரிக்கா ☑**

இ) பிரான்ஸ்

ஈ) ஜப்பான்

✓ வாஷிங்டனில் நடைபெற்று வரும் 2+2 அமைச்சர்கள் பேச்சுவார்த்தையின்போது, இந்தியாவும் அமெரிக்காவும் புதிய 'விண்வெளி சூழ்நிலை விழிப்புணர்வு ஏற்பாட்டில்' கையெழுத்திட்டன. அமெரிக்காவும் இந்தியாவும் தகவல் பகிர்வு, தொடர்புப் பரிமாற்றங்கள் மற்றும் கூட்டுச்சேவை ஈடுபாடுகளில் உயர்நிலை, ஒருங்கிணைந்த செயல்பாடு–களை ஆதரிக்கும் முக்கிய இருதரப்பு முன்னெடுப்புகளை இறுதிசெய்துள்ளன.

---

**4.** 2026 – காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் நாடு எது?

அ) பிரான்ஸ்



**ஆ) ஆஸ்திரேலியா ☑**

இ) சீனா

ஈ) ரஷ்யா

✓ ஆஸ்திரேலியாவின் விக்டோரியா மாகாணமானது 2026 காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை நடத்தும். காமன்வெல்த் என்பது பெரும்பாலும் முந்தைய பிரிட்டிஷ் காலனிகளின் விளையாட்டுக் கூட்டமாகும். கடந்த ஐந்து பதிப்புகளுள் நான்கு, ஆஸ்திரேலியா அல்லது பிரிட்டனில் நடந்தன. ஆங்கில நகரமான பர்மிங்காம் ஜூலை.28 முதல் 2022 பதிப்பை நடத்துகிறது.

---

**5.** புலம்பெயர்தல் கண்காணிப்பு அமைப்பு பயன்பாட்டை உருவாக்கிய முதல் மாநிலம் எது?

அ) பீகார்



ஆ) குஜராத்

**இ) மகாராஷ்டிரா ☑**

ஈ) உத்தர பிரதேசம்

✓ பாதிக்கப்படக்கூடிய பருவகால புலம்பெயர்ந்த தொழிலாள–ர்களின் இயக்கத்தை வரைபடமாக்குவதற்காக, மகாராஷ்டிர மாநில அரசாங்கம் இணையதள அடிப்படையிலான புலம்பெயர்வு கண்காணிப்பு அமைப்பு செயலியை உருவாக்கியுள்ளது.

✓ மாநில பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை, பழங்குடியினர் அதிகம் உள்ள ஆறு மாவட்டங்களில் கடந்த ஆண்டு நவம்பரில் முன்னோடித்திட்டமாக இதை அறிமுகப்படுத்தியது.

---

**6.** 'ஏற்றுமதி ஊக்குவிப்பு மூலதனப் பொருட்கள் திட்டம்' என்பதுடன் தொடர்புடைய மத்திய அமைச்சகம் எது?

அ) MSME அமைச்சகம்

**ஆ) வணிக அமைச்சகம் ☑**

இ) வெளியுறவு அமைச்சகம்

ஈ) நிதி அமைச்சகம்

✓ ஏற்றுமதி ஊக்குவிப்பு மூலதனப் பொருட்கள் திட்டத்தின் கீழ் வணிக அமைச்சகம் பல்வேறு நடைமுறைகளை தளர்த்தியுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ், மூலதனப் பொருட்களின் இறக்குமதிகள் ஏற்றுமதித் தீர்வைக்கு உட்பட்டு, வரியின்றி அனுமதிக்கப்படுகின்றன. இணக்கத் தேவைகளைக் குறைப்பதற்கும் வணிகம் செய்வதை எளிதாக்குவதற்குமாகத் தளர்வுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

---

**7.** சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'Poison Pill' என்பதுடன் தொடர்புடைய துறை எது?

அ) மருத்துவ தொழிற்சாலை



ஆ) உணவு பாதுகாப்பு

**இ) நிறுவனத்தைக் கையகப்படுத்துதல் ☑**

ஈ) தீநுண்மவியல்

✓ இணைப்பு மற்றும் கையகப்படுத்தல் தொடர்பான நிதித் துறையில், வரையறுக்கப்பட்ட கால பங்குதாரர் உரிமைத் திட்டம், "விஷ மாத்திரை" என்றும் அழைக்கப்படுகிறது.

✓ சமீபத்தில், எலோன் மஸ்க்கின் கையகப்படுத்தும் முயற்சி –க்கு பதிலளிக்கும் விதமாக, டுவிட்டர் "விச மாத்திரையை" ஏற்றுக்கொண்டது. இது ஏற்கனவே உள்ள பங்குதாரர்கள் ஒரு நிறுவனத்தில் புதிதாக வழங்கப்பட்ட பங்குகளை வர்த்தக விலையில் தள்ளுபடியில் வாங்க அனுமதிக்கிறது. இது வாங்குதல் திட்டத்தை மிகவும் விலையுயர்ந்ததாகவும் சிக்கலானதாகவும் மாற்றும்.

---

**8. சித்தலிங்க சுவாமிகளின் பிறந்தநாளை 'ஒருங்கிணை –ப்பு நாள்' எனக் கொண்டாடவுள்ள மாநிலம் எது?**



அ) தமிழ்நாடு

ஆ) கேரளா

இ) ஆந்திர பிரதேசம்

**ஈ) கர்நாடகா ☑**

✓ கர்நாடக மாநில முதல்வர் பசவராஜ் பொம்மை, சித்தலிங்க சுவாமியின் பிறந்தநாளை, 'ஒருங்கிணைப்பு நாள்' எனக் கொண்டாடப்படும் என்று அறிவித்தார். கடக்கில் உள்ள தொண்டதர்ய மடத்தின் சித்தலிங்க சுவாமிகள் ஒரு சிந்தனையாளரும் தத்துவவாதியுமாவார்.

---

**9. பின்வரும் எவ்வமைப்பின்கீழ், ஆராய்ச்சி வடிவமைப்பு –கள் மற்றும் தரநிலைகள் அமைப்பு செயல்படுகிறது?**




அ) ISRO

ஆ) DRDO

**இ) இந்திய இரயில்வே ☑**

ஈ) இந்திய விமானப்படை

✓ ஆராய்ச்சி வடிவமைப்புகள் மற்றும் தரநிலைகள் அமைப்பு (RDSO) என்பது இந்திய இரயில்வேயின்கீழ் செயல்படும் ஓர் ஆராய்ச்சி அமைப்பாகும். B–5 பயோ–டீசல் கொண்ட டீசல் எஞ்சின்களின் இயக்கம் ஆராய்ச்சி வடிவமைப்புகள் மற்றும் தரநிலைகள் அமைப்பால் சோதிக்கப்பட்டதாக இந்திய இரயில்வே அறிவித்துள்ளது.

---

**10. இந்திய மாநிலங்களிலிருந்து 'பச்சரிசி'யைக் கொள்மு –தல் செய்யும் அமைப்பு எது?**

அ) NABARD

**ஆ) FCI ☑**

இ) ICAR

ஈ) IARI

✓ இந்திய உணவுப்பொருள் கழகமானது (FCI) இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்துடனும் 'பச்சரிசி' கொள்முதல் செய்ய ஒப்பந்தம் செய்துள்ளது. அண்மையில், உழவர்களுக்கு உதவும் வகையில், குறைந்தபட்ச ஆதரவு விலையில் அரிசியை தெலுங்கானா மாநிலத்திலிருந்து FCI கொள்முதல் செய்தது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. கடற்படைத்தளபதிகள் 4 நாள் மாநாடு**

ராணுவத் தளபதிகள் மாநாட்டைத் தொடர்ந்து, இந்திய கடற்படையின் உயர்நிலைத் தளபதிகளின் நான்கு நாள் மாநாடு தில்லியில் ஏப்.25 அன்று தொடங்குகிறது. நாட்டின் ஒட்டுமொத்த கடல்சார் பாதுகாப்பு, ரஷியா – உக்ரைன் மோதலால் இந்தியப் பெருங்கடல் பகுதியின் தாக்கங்கள், சீன ஊடுவல் உள்ளிட்டவை குறித்து இந்த மாநாட்டில் விரிவான ஆய்வு மேற்கொள்ளப்படும்.

---

**2. 25-04-2022 – உலக மலேரியா நாள்**

**கருப்பொருள்:** "*Harness innovation to reduce the malaria disease burden and save lives*" – உலக அளவில் மலேரியா நோய் பாதிப்பு சுமையை குறைப்பதற்கான புதுமை கண்டுபிடிப்புகளை மேற்கொள்ளுதல் மற்றும் உயிர்களை காப்பாற்றுதல்.

---

**1.** **வெப்பமண்டலப் புயலான மெகி தாக்கிய நாடு எது?**



அ) ஜப்பான்

**ஆ) பிலிப்பைன்ஸ் ☑**

இ) இந்தோனேசியா

ஈ) இலங்கை

✓ அண்மையில் பிலிப்பைன்ஸை வெப்பமண்டலப் புயலான 'மெகி' தாக்கியது. இப்புயலைத் தொடர்ந்து ஏற்பட்ட நிலச் சரிவு மற்றும் வெள்ளத்தில் சிக்கி ஐம்பத்தெட்டுப் பேர் உயிரிழந்துள்ளனர். தெற்கு மற்றும் கிழக்கு பிலிப்பைன்ஸ் தீவுகளில் 1,00,000-க்கும் மேற்பட்ட மக்கள் இப்புயலால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

---

**2.** **'கூட்டுறவுக் கொள்கைக்கான தேசிய மாநாடு' நடக்கும் இடம் எது?**



அ) வாரணாசி

ஆ) காந்தி நகர்

**இ) புது தில்லி ☑**

ஈ) புனே

✓ 'கூட்டுறவுக் கொள்கைக்கான தேசிய மாநாடு' சமீபத்தில் புது தில்லியில் ஏற்பாடு செய்யப்பட்டது. மாநாட்டில் மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் அமித் ஷா பேசினார். நாட்டில் புதிய கூட்டுறவுக் கொள்கையின் அவசியத்தை அவர் அப்போது வலியுறுத்தினார்.

✓ தொடக்க வேளாண்மைக் கடன் சங்கம் மற்றும் உயர் மட்ட கூட்டுறவுக் கூட்டமைப்புச் சிக்கலுக்குத் தீர்வுகாணும் புதிய கொள்கையை மத்திய அரசு அறிமுகப்படுத்தும் என்றும் அவர் அறிவித்தார்.

---

**3.** **2022ஆம் ஆண்டில், 'உலக மர நகரங்களுள்' ஒன்றென அங்கீகரிக்கப்பட்டுள்ள இந்திய நகரம் எது?**

அ) சென்னை

**ஆ) ஹைதராபாத் ☑**

இ) மதுரை

ஈ) திருவனந்தபுரம்

✓ தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக, ஹைதராபாத் நகரம் 'உலக மர நகரங்களுள் – Tree Cities of the World' ஒன்று என அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இது அர்பர் டே அறக்கட்டளை மற்றும் ஐநா-இன் உணவு மற்றும் உழவு அமைப்பால் வழங்கப்படும் ஓர் அங்கீகாரமாகும். கடந்த 2 ஆண்டுகளில் 3.50 கோடி மரக்கன்றுகள் நட்டதற்காக, அந்நகரத்துக்கு இந்த அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

---

**4.** **எதன் நினைவாக ஆண்டுதோறும் ஏப்ரல்.13 அன்று இந்திய ராணுவம் சியாச்சின் நாளை நினைவுகூர்கிறது?**



அ) ஆபரேஷன் விஜய்

**ஆ) ஆபரேஷன் மேகதூதம் ☑**

இ) ஆபரேஷன் புளூ நைல்

ஈ) ஆபரேஷன் கார்கில்

✓ 'ஆபரேஷன் மேகதூதத்தின்'கீழ் இந்திய இராணுவத்தின் வீரதீரத்தை நினைவுகூரும் வகையில், ஆண்டுதோறும் ஏப்.13 அன்று சியாச்சின் நாளை இந்திய இராணுவம் கொண்டாடுகிறது. 1984ஆம் ஆண்டு இந்திய இராணுவம் சால்டோரோ முகடு, சியா லா மற்றும் பிலாபோன்ட் லா ஆகிய முக்கிய கணவாய்களில் ஆதிக்கம் செலுத்தும் கட்டுப்பாட்டைப் பெற்றது.

---

**5.** **அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'ஜீரோ கோவிட் கொள்கை'யுடன் தொடர்புடைய நாடு எது?**



அ) இந்தியா

ஆ) ரஷ்யா

**இ) சீனா ☑**

ஈ) ஜெர்மனி

✓ அதன் 'ஜீரோ-கோவிட் கொள்கை'யின் மீதான உலகளாவிய விமர்சனங்களுக்கு இடையே, சீனா தனது கடுமையான கொரோனா வைரஸ் நடவடிக்கைகளை மேற்கொண்டது. அது பல்வேறு சீனத்து நகரங்களில் பெரும் இன்னல்களை ஏற்படுத்தியது. உலகளாவிய நிதி மையமான ஷாங்காய் கடுமையான நடவடிக்கைகளால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

---

**6.** **அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற சாமியா சுலுஹு ஹாசன், எந்த நாட்டின் முதல் பெண் அதிபராவார்?**



அ) தென்னாப்பிரிக்கா

**ஆ) தான்சானியா ☑**

இ) லிபியா

ஈ) எகிப்து

✓ தான்சானியாவின் முதல் பெண் அதிபர் சாமியா சுலுஹு ஹாசன் ஆவார். கிழை-ஆப்பிரிக்க பிராந்தியத்தில் உள்ள மிகப்பெரிய நாடான இது கிளிமஞ்சாரோ தேசியப் பூங்காவிற்குப் பெயர்பெற்றதாகும்.

✓ சமீபத்தில், அமெரிக்காவின் துணை அதிபராக பதவியேற்ற முதல் பெண்மணி கமலா ஹாரிஸை தான்சானிய அதிபர் சந்தித்தார். இந்தச் சந்திப்பு அதிக முதலீட்டாளர்களை தான்சானியா நோக்கி ஈர்க்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

**7.** **உலக வங்கி கூற்றுப்படி, ஒருவர் தீவிர வறுமையில் உள்ளதாக வகைப்படுத்தப்பட்டால் அவரது தினசரி செலவு வரம்பு எவ்வளவு?**



**அ) $1.90 ☑**

ஆ) $2.50

இ) $3.20

ஈ) $5.00

✓ உலக வங்கியின் கூற்றுப்படி, நாளொன்றுக்கு $1.90 டாலருக்கும் குறைவான (சுமார் ₹145) செலவினத்தைக் கொண்டு வாழ்க்கை நடத்துவோரின் எண்ணிக்கையின் அடிப்படையில் தீவிர வறுமை அளவிடப்படுகிறது.

✓ உலக வங்கியானது சமீபத்தில் "Poverty in India Has Declined over the Last Decade But Not As Much As

Previously Thought" என்ற தலைப்பிலான ஒரு திட்டமிடும் ஆவணத்தை வெளியிட்டது. இந்தியாவில், COVID–க்கு முந்தைய ஆண்டில் (2019) 10.2%ஆக தீவிர வறுமை இருந்தது. 2011–இல் அந்தச் சதவீதம் 22.5%ஆக இருந்தது.

---

**8. எந்த மத்திய அமைச்சகம், 1 இலட்சத்திற்கும் அதிகமான ஆயுஷ்மான் பாரத்–சுகாதாரம் மற்றும் நல மையங்களில் 'வட்டார அளவிலான நல விழாக்களை' நடத்தியது?**

அ) பெண்கள் & குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

**ஆ) சுகாதார அமைச்சகம் ☑**

இ) உள்துறை அமைச்சகம்

ஈ) கல்வி அமைச்சகம்

- ✓ மத்திய சுகாதார அமைச்சகம் நாடு முழுவதும் உள்ள ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட ஆயுஷ்மான் பாரத்–சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய மையங்களில் வட்டார அளவிலான நல விழாக்களை ஏற்பாடு செய்து வருகிறது.
- ✓ இது அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் மற்றும் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு, தகவல் மற்றும் ஒலிபரப்பு, பஞ்சாயத்து ராஜ், ஆயுஷ் மற்றும் கல்வி போன்ற தொடர்புடைய அமைச்சகங்களின் ஒத்துழைப்புடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- ✓ இவ்விழாக்கள் ஆயுஷ்மான் பாரத்–உடல்நலம் மற்றும் நல மையங்கள் மற்றும் தொலைமருத்துவ & தொலைநிலை ஆலோசனைகள்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் அமுதப் பெருவிழாவின் ஒருபகுதியாக உள்ளது.

---

**9.** 2022 – **பன்னாட்டு நீர் வாரம் – நீர் மாநாட்டை நடத்தும் நாடு எது?**

அ) இந்தியா

**ஆ) சிங்கப்பூர் ☑**

இ) நேபாளம்

ஈ) வங்காளதேசம்

- ✓ இந்தியாவின் தேசிய தூய்மை கங்கை திட்டத்தின் தலைமை இயக்குநர், சிங்கப்பூரில் நடந்தேறிய 2022 – பன்னாட்டு நீர் வாரம், நீர் மாநாட்டில் மெய்நிகராகப் பங்கேற்று, "இந்தியாவில் கழிவுநீர் உற்பத்தி, சுத்திகரிப்பு & மேலாண்மையின் நிலை" குறித்து விளக்கமளித்தார்.

---

**10. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற பிரவிந்த் குமார் ஜக்நாத் என்பவர் எந்த நாட்டின் பிரதமராவார்?**

அ) இலங்கை



**ஆ) மொரிஷியஸ் ☑**

இ) மாலத்தீவுகள்

ஈ) மலேசியா

- ✓ இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பின் பேரில் மொரீஷியசு பிரதமர் பிரவிந்த் குமார் ஜக்நாத், உயர்மட்டக் குழுவுடன் இந்தியா வந்தடைந்தார். ஜாம்நகரில் அமைய உள்ள WHO – உலகளாவிய பாரம்பரிய மையத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவிலும், காந்திநகரில் அமையவுள்ள உலகளாவிய ஆயுஷ் முதலீடு மற்றும் புத்தாக்க மாநாடு ஆகியவற்றிலும் ஜகநாத் பங்கேற்கவுள்ளார்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தேசிய அளவிலான தளவாடப் போக்குவரத்து தொடர்பான கருத்தரங்கு 'லோஜிசெம் வாயு – 2022' தில்லியில் நடைபெறுகிறது**

ஏப்ரல் 28ஆம் தேதி புது தில்லியில் உள்ள விமானப்படை அரங்கத்தில் தேசிய அளவிலான ஆயுத தளவாடப் போக்கு வரத்து தொடர்பான கருத்தரங்கிற்கு இந்திய விமானப் படை ஏற்பாடு செய்துள்ளது. இந்தக் கருத்தரங்கின் கருப் பொருள், "விமானப்போர் நடவடிக்கைகளுக்கான லாஜிஸ்டிக்ஸ் ஆதரவை ஒழுங்கமைத்தல்" என்பதாகும்.

---

**2. சென்னைக்கு வந்த வங்கதேச கடலோர காவல்படை ரோந்துக் கப்பல் பாரம்பரிய முறைப்படி வரவேற்பு**

வங்கதேச நாட்டின் கடலோர காவல்படை கப்பல் 'கமர் உஸ்மான்' சென்னை துறைமுகத்திற்கு நல்லெண்ணப் பயணமாக வந்தடைந்தது. இக்கப்பலுக்கு இந்திய கடலோரக் காவல் படை சார்பில் பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதுகுறித்து பாதுகாப்பு அமைச்சகம் சார்பில் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பு:

எட்டாவது தேசிய அளவிலான மாசு கட்டுப்பாடு குறித்த பயிற்சி முகாம் கடந்த ஏப்.18 முதல் 20–ஆம் தேதி வரை கோவாவில் நடைபெற்றது. இதில் பங்கேற்ற வங்கதேச கடலோர காவல் படை ரோந்துக் கப்பல் 'கமர் உஸ்மான்' பயிற்சி முகாமை முடித்துவிட்டு நாடு திரும்பும் வழியில் சென்னை துறைமுகத்திற்கு வந்தடைந்தது என செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

---

**3. சென்னையில் ₹2 கோடியில் குத்துச்சண்டை அகாதெமி: அமைச்சர் சிவ வீ மெய்யநாதன்**

சென்னையில் ₹2 கோடி செலவில் குத்துச்சண்டை அகாதெமி அமைக்கப்படும் என்று சுற்றுச்சூழல் துறை மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் சிவ வீ மெய்யநாதன் அறிவித்தார்.

---

**4. மலேரியா தடுப்பு நடவடிக்கைகள்: தமிழ்நாட்டுக்கு தேசிய விருது**

மலேரியா தடுப்பு நடவடிக்கைகளை சிறப்புற மேற்கொண்டதற்காக தமிழ்நாட்டுக்கு தேசிய விருது வழங்கப்பட்டுள்ளது. தில்லியில் நடைபெற்ற உலக மலேரியா நாள் விழாவில், மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா இவ்விருதை தமிழ்நாட்டு பொது சுகாதாரத்துறை இயக்குநர் Dr செல்வவிநாயகம் அவர்கட்கு வழங்கினார்.

இதுகுறித்து வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

2024ஆம் ஆண்டுக்குள் தமிழகத்தில் மலேரியா நோயை முழுமையாக ஒழித்திட மாநில அரசு மேற்கொண்ட

தொடர் நடவடிக்கைகளால் மலேரியா நோய் பாதிப்பு வெகுவாக குறைக்கப்பட்டு கட்டுக்குள்ளது. கொசுக்களால் பரவும் நோய்களான மலேரியா, டெங்கு, சிக்குன் குனியா, மூளைக்காய்ச்சல் மற்றும் யானைக்கால் நோய் உட்பட அனைத்து நோய்களும் தமிழக அரசின் தீவிர தொடர் தடுப்பு நடவடிக்கைகளால் குறைக்கப்பட்டு, தற்போது மலேரியா நோய் ஒழிக்கப்படும் தருவாயில் உள்ளது.

1990–களில் 1.20 லட்சமாக இருந்த மலேரியா நோய் பாதிப்புகள் 2011–ஆம் ஆண்டில் 22,171–ஆக குறைந்து தற்போது 772–ஆக உள்ளது.

கொசுவிலிருந்து பரவும் மலேரியா பிளாஸ்மோடியம் எனும் ஒட்டுண்ணியால் இந்நோய் உண்டாகின்றது. இந்த தொற்று அனாபிலிஸ் பெண் கொசுக்கள்மூலம் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு பரவுகிறது. இந்தியாவில் இரண்டு வகை மலேரியா ஒட்டுண்ணிகளான பிளாஸ்மோடியம் வைவாக்ஸ் மற்றும் பிளாஸ்மோடியம் பால்சிபாரம் மட்டுமே உள்ளது.

இந்தியாவில் மலேரியாவை 2030–ஆம் ஆண்டுக்குள் ஒழிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால் தமிழநாட்டில் வரும் 2024–ஆம் ஆண்டுக்குள் மலேரியா நோயை ஒழிக்க இலக்குடன் அதனை அடைவதற்கு பல்வேறு நடவடிக்கைகளும் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

---

### 5. ராணுவ செலவினத்தை 0.9% அதிகரித்துள்ள இந்தியா: சீனா 4.7% அதிகரிப்பு: சர்வதேச ஆய்வறிக்கையில் தகவல்

ராணுவத்துக்கான செலவினத்தை 2021–ஆம் ஆண்டில் ₹5.86 லட்சம் கோடியாக இந்தியா அதிகரித்துள்ளது. இது முந்தைய ஆண்டைக்காட்டிலும் 0.9% கூடுதலாகும்.

போர் மற்றும் ஆயுத கட்டுப்பாடு தொடர்பாக சர்வதேச அளவில் ஆய்வுகளை மேற்கொள்ளும் அமைப்பான 'ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதிக்கான ஆராய்ச்சி நிறுவனம் (SIPRI)' வெளியிட்ட ஆய்வறிக்கைமூலம் இந்தத் தகவல் தெரியவந்துள்ளது. அந்த ஆய்வறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது:

ராணுவத்துக்கு அதிக நிதி ஒதுக்குவதில் உலகிலேயே இரண்டாவது நாடான சீனா, 2021–ஆம் ஆண்டில் அந் நாட்டு பாதுகாப்புத் துறைக்கு ₹22.43 லட்சம் கோடி நிதியை ஒதுக்கியுள்ளது. இது முந்தைய ஆண்டைக் காட்டிலும் 4.7% கூடுதலாகும். 2012–ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 72 சதவீதம் கூடுதலாகும்.

அதுபோல, இந்தியாவும் ராணுவத்துக்கான செலவினத் –தை 2021–ஆம் ஆண்டில் ₹5.86 லட்சம் கோடியாக இந்தியா அதிகரித்துள்ளது. இது முந்தைய ஆண்டைக் காட்டிலும் 0.9% கூடுதலாகும். 2012–ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது இது 33% கூடுதலாகும்.

ராணுவத்துக்கு அதிக நிதி ஒதுக்கும் உலக நாடுகளில் இந்தியா மூன்றாமிடத்தில் உள்ளது. இந்தப் பட்டியலில் அமெரிக்கா முதலிடத்திலும், பிரிட்டன் நான்காமிடத்திலும், ஐந்தாவது இடத்தில் ரஷியாவும் உள்ளன.

உலகின் மொத்த ராணுவ செலவினத்தில் இந்த ஐந்து நாடுகளின் பங்களிப்பு 62 சதவீதமாகும். அதில் அமெரிக்கா, சீனா இரு நாடுகள் மட்டுமே 52% அளவு பங்களிப்பைக் கொண்டுள்ளன என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஆசியா – ஓசியானா ராணுவ செலவினமும் அதிகரிப்பு:**

ஆசியா மற்றும் ஆஸ்திரேலியா உள்பட 4 நாடுகளை உள்ளடக்கிய ஓசியானா பிராந்தியத்தின் ஒட்டுமொத்த ராணுவ செலவினமும் 2021–இல் கூடுதலாகியிருப்பது இந்த ஆய்வறிக்கைமூலம் தெரியவந்துள்ளது. இந்தப் பிராந்தியத்தின் 2021–ஆம் ஆண்டு ராணுவ செலவினம் ₹44.87 லட்சம் கோடியாகும். இது முந்தைய ஆண்டைக் காட்டிலும் 3.5% கூடுதலாகும். இதில் இந்தியா, சீனா இரு நாடுகளின் பங்கு மட்டும் 63 சதவீதமாகும்.

இந்தப் பிராந்தியத்தில் ராணுவ செலவினம் கடந்த 1989–ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக அதிகரிக்கப்பட்டு வந்துள்ளது என ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### 6. டுவிட்டர் நிறுவனத்தை கையகப்படுத்தினார் எலான் மஸ்க்

டுவிட்டர் நிறுவனத்தை டெஸ்லா தலைமைச் செயல் அதிகாரி எலான் மஸ்க் 44 பில்லியன் டாலர் அளித்து கையகப்படுத்த முடிவானது.

இது தொடர்பாக டுவிட்டர் – எலான் மஸ்க் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது.

டுவிட்டர் நிறுவனத்தை கையகப்படுத்துவதற்கு டெஸ்லா தலைமைச் செயல் அதிகாரி எலான் மஸ்க் அண்மையில் விருப்பம் தெரிவித்திருந்தார். இதற்காக 43 பில்லியன் டாலர் (சுமார் ₹3.10 லட்சம் கோடி) ரொக்கம் அளிக்கத் தயார் என்றும் அவர் கூறியிருந்தார். இதையடுத்து நிறுவனத்தை அவர் கையகப்படுத்த இயலாத வகையில் பங்கு ஒழுங்காற்று விதிமுறைகளின் கீழ் டுவிட்டர் நிர்வாகம் தடைகளை ஏற்படுத்தியது. எனினும், எலான் மஸ்க் அல்லது இதே போன்ற கையகப்படுத்தும் நோக்கத்துடன் முன்வரும் வேறு ஏதேனும் முதலீட்டாளரை நிரந்தரமாகத் தடுத்துவிட முடியாது என்ற நிலையில், டுவிட்டர் நிறுவனம் மனம் மாறியது.

பேச்சுவார்த்தையின் இறுதியில் 44 பில்லியன் டாலர் (சுமார் ₹3.36 லட்சம் கோடி) அளித்து டுவிட்டரின் முழுப் பங்குகளை எலான் மஸ்க் பெற முடிவானதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இந்தப் பேச்சுவார்த்தை விவரம் வெளியானதும் அமெரிக்கப் பங்குச் சந்தைகளில் டுவிட்டர் பங்கு விலை 3 சதவீதம் அதிகரித்தது.

---

**1. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற கிழக்கு திமோர், எந்த ஆண்டு ஐநாவால் அங்கீகரிக்கப்பட்டது?**

அ) 1982

ஆ) 1992

**இ) 2002 ☑**

ஈ) 2012




✓ கடந்த 2002ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அவையால் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட, 'திமோர் லெஸ்டே' என்றும் அழைக்கப்படுகின்ற கிழக்கு திமோர் சமீபத்தில் அதன் அதிபர் தேர்தலை நடத்தியது.

---

**2. சமீப செய்திகளில் இடம்பெற்ற அல்–அக்சா பள்ளிவாசல் அமைந்துள்ள நகரம் எது?**

அ) ரோம்

**ஆ) ஜெருசேலம் ☑**

இ) ரியாத்

ஈ) மஸ்கட்



✓ இசுலாமியர்கள் இரம்ஜான் கொண்டாடும் வேளையில், யூதர்களின் 'பாஸ்கா' என்ற பண்டிகையின்போது ஏற்பட்ட வன்முறையில் 17–க்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் படுகாயமடைந்தனர். ஜெருசேலமின் அல்–அக்ஸா மசூதி வளாகத்தில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

---

**3. இந்தியாவின் புதிய இராணுவத் தளபதி யார்?**

அ) லெப்டினன்ட் ஜெனரல் பிபின் ராவத்

ஆ) லெப்டினன்ட் ஜெனரல் எம் எம் நரவனே

**இ) லெப்டினன்ட் ஜெனரல் மனோஜ் பாண்டே ☑**

ஈ) லெப்டினன்ட் ஜெனரல் பிக்ரம் சிங்



✓ Lt Gen மனோஜ் பாண்டே புதிய இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டார். ஜெனரல் M M நரவனேவை அடுத்து அவர் பதவியேற்பார். இராணுவப் பொறியாளர் பதவியில் இருந்து இராணுவத் தளபதியான முதல் அதிகாரி இவர் ஆவார். ஜம்மு–காஷ்மீரின் பல்லன்வாலா பகுதியில், எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில், 'ஆபரேஷன் பராக்ரமுக்கு' அவர் தலைமை தாங்கினார்.

---

**4. சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'மகர்' சார்ந்த இனம்?**

அ) பாம்பு

**ஆ) முதலை ☑**

இ) ஆமை

ஈ) மரப்பல்லி



✓ 'மகர்' (அ) 'சதுப்புநில முதலைகள்' என்பன (*Crocodylus palustris*) நன்னீர் முதலைகளாகும். அவை தெற்காசியா & தென்கிழக்கு ஈரான் முழுவதும் காணப்படுகின்றன. இந்தியாவில், மத்திய கங்கைப் படுகை மற்றும் சம்பல் படுகைகளில் இவை அதிகம் காணப்படுகின்றன.

✓ சமீபத்தில், இராஜஸ்தானின் ஜவாய் அணையில் உள்ள 350க்கும் மேற்பட்ட சதுப்புநில முதலைகள், மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் நிலவும் கடுமையான வெப்பம் காரணமாக உயிர் பிழைக்க போராடி வருகின்றன. பல நீர்நிலைகள் வறண்டு கிடப்பதால், இந்திய இரயில்வே மேற்கு ராஜஸ்தானுக்கு நீர் விநியோகம் செய்து வருகிறது. ஜவாய் ஆறானது லூனி ஆற்றின் துணை ஆறு ஆகும்.

---

**5. இந்தியாவில், 'WHOஇன் பாரம்பரிய மருத்துவத்திற்கான உலகளாவிய மையம்' அமையவுள்ள இடம் எது?**

அ) மும்பை

ஆ) வாரணாசி

**இ) ஜாம்நகர் ☑**

ஈ) கொச்சி




✓ குஜராத் மாநிலத்தின் ஜாம்நகரில் அமையவுள்ள WHOஇன் பாரம்பரிய மருத்துவத்திற்கான உலகளாவிய மையத்திற்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், மொரீஷியசு பிரதமர் பிரவிந்த் ஜக்நாத், உலக சுகாதார அமைப்பின் (WHO) தலைமை இயக்குநர் டாக்டர் டெட்ரோஸ் கெப்ரேயஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

---

**6. ஆண்டுதோறும், 'உலக கலை நாள்' அனுசரிக்கப்படும் தேதி எது?**

**அ) ஏப்ரல் 15 ☑**

ஆ) ஏப்ரல் 16

இ) ஏப்ரல் 17

ஈ) ஏப்ரல் 18



✓ ஆண்டுதோறும், ஏப்.15 அன்று, UNESCO பங்காளரான பன்னாட்டு கலை சங்கத்தால் (IAA) 'உலக கலை நாள்' உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.

✓ கலையின் வளர்ச்சி, பரவல் மற்றும் அதன் இன்பத்தை மேம்படுத்துவதற்கான கொண்டாட்டம், 2019ஆம் ஆண்டு UNESCO மாநாட்டின் 40ஆம் அமர்வில் அறிவிக்கப்பட்டது.

---


**7. ஆண்டுதோறும், 'உலக சாகஸ் நாள்' அனுசரிக்கப்படும் தேதி எது?**

**அ) ஏப்ரல் 14 ☑**

ஆ) ஏப்ரல் 20

இ) ஏப்ரல் 24

ஈ) ஏப்ரல் 28




✓ 'அமெரிக்க டிரிபனோசோமியாசிஸ்' என்றுமழைக்கப்படும் உயிருக்கு ஆபத்தான நோயைப்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, ஆண்டுதோறும் ஏப்.14 அன்று உலக சாகஸ் நாளாக அனுசரிக்கப்படுகிறது. டிரிபனோசோமா கிரிசு என்ற ஒட்டுண்ணியால் இந்த நோய் ஏற்படுகிறது. இந்த நாள் முதன்முதலில் கடந்த 2020 ஏப்ரல்.14 அன்று அனுசரிக்கப்பட்டது.

---

**8.** 'கிருபான் சக்தி' ஒருங்கிணைந்த தீ ஆற்றல் பயிற்சி நடைபெற்ற மாநிலம் எது?



அ) உத்தரகாண்ட்

ஆ) மகாராஷ்டிரா

**இ) மேற்கு வங்கம் ☑**

ஈ) கேரளா

✓ மேற்கு வங்காளத்தில் சிலிகுரிக்கு அருகில் உள்ள டீஸ்டா பீல்ட் பைரிங் ரேஞ்சில் (TFFR) ஒருங்கிணைந்த தீ ஆற்றல் பயிற்சியான கிருபான் சக்தி பயிற்சியை திரிசக்தி கார்ப்ஸ் நடத்தியது. இந்தப் பயிற்சியானது இந்திய இராணுவம் மற்றும் மத்திய ஆயுதக் காவல் படைகளின் திறன்களை ஒன்றிணைத்து ஒருங்கிணைந்த போரை நடத்துவதை நோக்கமாகக் கொண்டது.

---

**9.** உள்ளூர் கண்டுபிடிப்பாளர்களுக்கு $2.2 மில்லியன் டாலர்களை காலநிலை நடவடிக்கை மானியமாக வழங்குவதாக அறிவித்துள்ள நிறுவனம் எது?

**அ) UNDP ☑**

ஆ) UNEP

இ) IMF

ஈ) உலக வங்கி

✓ ஐநா வளர்ச்சித் திட்டம் (UNDP) மற்றும் அடாப்டேஷன் இன்னோவேசன் மார்க்கெட்பிளேசின் (AIM) பங்காளர்கள் இந்தியா உட்பட 19 நாடுகளில் உள்ள 22 உள்ளூர் கண்டுபிடிப்பாளர்களுக்கு $2.2 மில்லியன் டாலர்களை காலநிலை நடவடிக்கை மானியமாக அறிவித்துள்ளனர்.

✓ இந்நிதியானது உள்ளூர் காலநிலை நடவடிக்கைகளை மேம்படுத்துவதோடு, பாரிஸ் ஒப்பந்தம் மற்றும் நீடித்த வளர்ச்சி இலக்குகளை எட்டுவதை துரிதப்படுத்தும்.

---

**10.** '2022 – ரெய்க்ஜாவிக் போட்டியை' வென்ற இந்திய செஸ் வீரர் யார்?



அ) பரத் சுப்ரமணியம்

ஆ) மித்ரபா குகா

**இ) பிரக்ஞானந்தா R ☑**

ஈ) இராஜா ரித்விக்

✓ அண்மையில் ஐஸ்லாந்தில் நடைபெற்ற, '2022 – விகா ரெய்க்ஜாவிக் ஓபன் போட்டியில் இந்திய கிராண்ட்மாஸ்டர் பிரக்ஞானந்தா R வெற்றி பெற்றார். 16 வயதான இந்திய கிராண்ட்மாஸ்டர், இறுதிச்சுற்றில் தனது சகநாட்டவரான GM குகேஷ் D (15)–க்கு எதிரான முக்கியமான ஆட்டத்தில் வென்றார். கடந்த 2018–இல் கிராண்ட்மாஸ்டர் பட்டத்தை அடைந்த உலகின் ஐந்தாவது மிக இளைய நபரானார் பிரக்ஞானந்தா R ஆவார்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. மாற்றுத்திறனாளிகள் துறையில் இந்தியா – சிலி நாடுகளிடையே ஒத்துழைப்பிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட அமைச்சரவை ஒப்புதல்**

மாற்றுத்திறனாளிகள் துறையில் இந்தியா – சிலி நாடுகளி–டையே ஒத்துழைப்பிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

மாற்றுத்திறனாளிகள் துறையில் பரஸ்பரம் இருநாடுகள் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம், இந்தியா – சிலி இடையே மேற்கொள்ளப்படும் கூட்டு முயற்சிகள்மூலம் அவர்களுக்கு அதிகாரமளிக்கும் வகையிலான நடவடிக்–கைகளுக்கு ஊக்கமளிக்கும். இது இந்தியா மற்றும் சிலி இடையே இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தும்.

இந்தியா–சிலி நாடுகளிடையேயான உறவுகள் பல்வேறு விவகாரங்களில் பொதுவான பார்வையின் அடிப்படையில் நட்புரீதியில் அமைந்துள்ளது. 2019–20ஆம் ஆண்டு இரு நாடுகளுக்கும் இடையே தூதரக ரீதியிலான உறவுகள் ஏற்பட்டு 70 ஆண்டுகள் நிறைவடைந்ததைக் குறிக்கிறது.

---

**2. 540 MW உற்பத்தித் திறனுள்ள குவார் புனல்மின் திட்டத்திற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது**

ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்தின் கிஷ்த்வார் மாவட்டத்தில் செனாப் ஆற்றின் குறுக்கே ₹4526.12 கோடி முதலீட்டில் 540 மெகாவாட் உற்பத்தி திறனுள்ள குவார் புனல்மின் திட்டத்திற்கு பொருளாதார விவகாரங்களுக்கா–ன அமைச்சரவை குழு ஒப்புதல் அளித்துள்ளது.

தேசிய புனல்மின் கழகம், ஜம்மு–காஷ்மீர் மாநில மின் உற்பத்தி மேம்பாட்டு கழகமும், செனாப் பள்ளத்தாக்கு மின் உற்பத்தி திட்டத்திற்கான தனியார் நிறுவனமும் இணைந்து இதனை அமலாக்கும். இதில் 51% தனியார் பங்களிப்பாகவும், 49% அரசு கழகங்களின் பங்காகவும் இருக்கும். இந்த மின்திட்டம் ஆண்டுக்கு 1975.54 மில்லியன் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யும்.

இந்தத் திட்டத்திற்கு அடிப்படை கட்டமைப்பு செலவுக்காக மத்திய அரசு ₹69.80 கோடி மானியமாக வழங்குகிறது. மேலும் ஜம்மு–காஷ்மீர் யூனியன் பிரதேசத்திற்கு உதவியாக ₹655.08 கோடி மானியமாக வழங்கப்படும். இம்மின்திட்டம் 54 மாத காலத்தில் செயல்படத்தொடங்கும்.

---

**3. 5–12 வயது சிறார்களுக்கு கரோனா தடுப்பூசி – மருந்துக் கட்டுப்பாட்டு அமைப்பு ஒப்புதல்**

சிறார்களிடையே கரோனா தொற்று பரவலைத் தடுக்கும் மத்திய அரசின் முயற்சிக்கு ஊக்கம் தரும் வகையில், 5 வயது முதல் 12 வயது வரையிலான சிறார்களுக்கு அவசர காலத்தில் பயன்படுத்த 2 தடுப்பூசிகளுக்கு இந்திய தலைமை மருந்துக் கட்டுப்பாட்டு அமைப்பு (டிசிஜிஐ) ஒப்புதல் அளித்துள்ளது.

6–12 வயது வரையிலான சிறார்களுக்கு பாரத் பயோடெக் நிறுவனத்தின் கோவேக்ஸின் தடுப்பூசியையும், 5–12 வயது வரையிலான சிறார்களுக்கு பயாலஜிகல்–இ

நிறுவனத்தின் கோர்பிவேக்ஸ் தடுப்பூசியையும் அவசர காலத்தில் நிபந்தனைகளுக்கு உள்பட்டு பயன்படுத்துவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு அமைப்பின் (சிடிஎஸ்சிஓ) நிபுணர் குழு அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில் டிசிஜிஐ ஒப்புதல் அளித்துள்ளது.

தற்சமயம், மத்திய அரசின் தேசிய தடுப்பூசித் திட்டத்தின் கீழ் 15–18 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு பாரத் பயோடெக் நிறுவனத்தின் தடுப்பூசியும், 12–15 வயதுக்கு உள்பட்டவர்களுக்கு பயாலஜிகல்–இ நிறுவனத்தின் தடுப்பூசியும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

கோவேக்ஸின் தடுப்பூசியை சிறார்களுக்குப் பயன்படுத்துவது தொடர்பாக நடத்தப்பட்ட பரிசோதனைகளை ஆய்வுசெய்த மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு அமைப்பு, கோவேக்ஸின் தடுப்பூசியை 2–18 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு பயன்படுத்த கடந்தாண்டு அக்டோபர் மாதம் பரிந்துரை செய்தது. இருப்பினும், 12–18 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு மட்டுமே அந்தத் தடுப்பூசியைப் பயன்படுத்த டிஜிசிஐ ஒப்புதல் அளித்தது.

இந்நிலையில், கோர்பிவேக்ஸ் தடுப்பூசியை 5–12 வயதுக்கு உள்பட்டவர்களுக்குப் பயன்படுத்த டிசிஜிஐயின் மருத்துவ நிபுணர் குழு கடந்த ஏப்ரல் 21–ஆம் தேதி பரிந்துரை செய்தது. 12–15 வயதுக்கு உள்பட்டவர்களுக்கு அந்தத் தடுப்பூசி தற்போது பயன்பாட்டில் உள்ளது.

தற்சமயம், பைசர் நிறுவனத்தின் தடுப்பூசியும் 12 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு செலுத்தப்பட்டு வருகிறது.

சைடஸ் நிறுவனத்தின் சைகோவ்–டி தடுப்பூசியை 12 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குப் பயன்படுத்த டிசிஜிஐ கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஒப்புதல் அளித்துவிட்டது. ஆனால், அந்தத் தடுப்பூசி இன்னும் தேசிய தடுப்பூசித் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை.

---

**4. இந்தியா–அமெரிக்கா நட்புறவின் 75–ஆவது ஆண்டு விடியோ வெளியீடு**

இந்தியா–அமெரிக்கா நட்புறவின் 75 ஆண்டுகள் கொண்டாட்டத்தையொட்டி, அமெரிக்காவில் உள்ள இந்தியர்களின் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை பிரதிபலிக்கும் வகையில் விடியோ பதிவு வெளியிடப்பட்டு உள்ளது.

---

**5. 27–04–2022 – 'வெள்ளுடை வேந்தர்' சர். பிட்டி. தியாகராயர் அவர்களின் 171–ஆவது பிறந்தநாள்.**

---

**1.** **2022-23 பயிராண்டுக்கு அறிவிக்கப்பட்ட உணவு தானிய உற்பத்தி இலக்கு என்ன?**

அ) 278 மில்லியன் டன்கள்



**ஆ) 328 மில்லியன் டன்கள் ☑**

இ) 378 மில்லியன் டன்கள்

ஈ) 428 மில்லியன் டன்கள்

✓ கரீப் இயக்கம் 2022-23-க்கான வேளாண்மை குறித்த தேசிய கருத்தரங்கை மத்திய வேளாண் அமைச்சர் நரேந்திர சிங் தோமர் புது தில்லியில் தொடங்கி வைத்தார்.

✓ 2022-23ஆம் ஆண்டுக்கான மொத்த உணவு தானிய உற்பத்திக்கு 3,280 இலட்சம் டன் இலக்கினையும், பருப்புகள் மற்றும் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி 295.5 மற்றும் 413.4 இலட்சம் டன்களாக இந்தக் கருத்தரங்கில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

✓ இரண்டாவது மதிப்பீட்டின்படி, (2021-22) மொத்த உணவு தானியங்கள் உற்பத்தி 3,160 இலட்சம் டன் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

---

**2.** **பின்வரும் எந்தத் திட்டத்தின் கீழ், 'தேசிய பயிற்சி மேளா' ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது?**

அ) பிரதமர் வேலைவாய்ப்பு திட்டம்

**ஆ) ஸ்கில் இந்தியா ☑**

இ) இந்தியாவில் தயாரிப்போம் திட்டம்

ஈ) தொடங்கிடு இந்தியா திட்டம்

✓ ஸ்கில் இந்தியா, பயிற்சிக்கான தலைமை இயக்குநரகத்து -டன் இணைந்து, நாடு முழுவதும் 700-க்கும் மேற்பட்ட இடங்களில் ஒரு நாள் முழுவதும், 'தொழில் பழகுநர் திருவிழா'வை நடத்துகிறது. இந்த முயற்சியானது ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட பயிற்சியாளர்களை பணியமர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**3.** **'NAPOLREX' என்ற தேசிய அளவிலான மாசு மறுமொழி பயிற்சியை ஏற்பாடு செய்கிற இந்திய ஆயுதப்படை எது?**

அ) இந்திய இராணுவம்



ஆ) இந்திய கடற்படை

இ) இந்திய வான்படை

**ஈ) இந்திய கடலோரக் காவல்படை ☑**

✓ கோவாவில் உள்ள மர்மகோவா துறைமுகத்தில் இந்திய கடலோரக் காவல்படைமூலம் தேசிய அளவிலான மாசு மறுமொழி பயிற்சி – 'NATPOLREX' நடத்தப்படுகிறது.

✓ மத்திய பாதுகாப்புச்செயலாளர் அஜய் குமார் இந்த இரண்டு நாள் பயிற்சியைத் தொடங்கி வைத்தார்.

---

**4.** **'தேசிய உலோகவியல் வல்லுநர் விருது – 2021' நிகழ்வை நடத்திய மத்திய அமைச்சகம் எது?**

அ) அறிவியல் & தொழில்நுட்ப அமைச்சகம்

**ஆ) எஃகு அமைச்சகம் ☑**

இ) MSME அமைச்சகம்

ஈ) வணிகம் & தொழிற்துறை அமைச்சகம்

✓ மத்திய எஃகு அமைச்சகமானது புது தில்லியில், "தேசிய உலோகவியல் விருது – 2021" நிகழ்வை நடத்தியது.

✓ இந்த நிகழ்ச்சிக்கு மத்திய உருக்குத்துறை அமைச்சர் ராம் சந்திர பிரசாத் சிங் தலைமைதாங்கினார். இரும்பு மற்றும் எஃகு துறையில் பணிபுரியும் உலோகவியலாளர்கள் மற்றும் பொறியியலாளர்களின் சிறந்த பங்களிப்பை அங்கீகரிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**5.** **ஆடவருக்கான T20 கிரிக்கெட்டில் 10,000 இரன்களை கடந்த முதல் இந்திய கிரிக்கெட் வீரர் யார்?**

அ) மகேந்திர சிங் தோனி



ஆ) விராத் கோலி

**இ) ரோகித் சர்மா ☑**

ஈ) இரவீந்திர ஜடேஜா

✓ ஆடவருக்கான T20 கிரிக்கெட்டில் 10,000 இரன்களை கடந்த இரண்டாவது இந்திய வீரர் என்ற பெருமையை டீம் இந்தியா மற்றும் மும்பை இந்தியன்ஸின் கேப்டன் ரோகித் சர்மா பெற்றுள்ளார். விராத் கோலி கடந்த ஆண்டு 10,000 T20 ரன்களை கடந்த முதல் இந்திய வீரர் ஆனார்.

✓ அதேவேளையில் மேற்கிந்திய தீவுகளின் கிறிஸ் கெய்ல் T20 கிரிக்கெட்டில் 5 இலக்க ரன்களை எட்டிய உலகின் முதல் கிரிக்கெட் வீரர் ஆவார். பஞ்சாப் கிங்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் ரோகித் சர்மா இந்த வரலாற்றுச் சாதனையை எட்டினார்.

---

**6.** **'உலகளாவிய ஆயுஷ் முதலீடு மற்றும் கண்டுபிடிப்பு உச்சிமாநாடு – 2022' நடத்தப்படுகிற நகரம் எது?**

அ) வாரணாசி

ஆ) கொச்சி

**இ) காந்திநகர் ☑**

ஈ) சிம்லா

✓ 'உலகளாவிய ஆயுஷ் முதலீடு மற்றும் கண்டுபிடிப்பு உச்சி மாநாடு – 2022' என்பது ஆயுஷ் அமைச்சகத்தால் இந்தத் துறையில் முதலீடுகளைத் தேடுவதற்கும் பாரம்பரிய மருத்துவ நடைமுறைகளுக்கான மையமாக இந்தியாவை மேம்படுத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. இது குஜராத்தின் காந்திநகரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

---

**7.** **இந்தியாவின் முதல் தூய பசுமை ஹைட்ரஜன் ஆலை திறக்கப்பட்டுள்ள மாநிலம் எது?**

அ) குஜராத்



**ஆ) அஸ்ஸாம் ☑**

இ) மேற்கு வங்கம்

ஈ) ஒடிஸா

✓ இந்திய எண்ணெய் நிறுவனம் (OIL) இந்தியாவின் முதல் 99.999% தூய பசுமை கைட்ரஜன் ஆலையை அஸ்ஸாம் மாநிலத்தில் நிறுவியது.

✓ இரண்டாவது பெரிய தேசிய உற்பத்தி மற்றும் ஆய்வு நிறுவனமான OIL, அதன் ஜோர்ஹட் பம்ப் நிலையத்தில்

பசுமை ஹைட்ரஜன் ஆலையை தொடங்கியது. இந்த ஆலை நாளொன்றுக்கு 10 கிகி ஹைட்ரஜனை உற்பத்தி செய்யும் திறன் கொண்டது. AEM (அயனி பரிமாற்ற சவ்வு) பயன்படுத்தும் இந்தியாவின் முதல் ஆலை இதுவாகும்.

---

**8. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, *Ariosoma indicum* சார்ந்த இனம் எது?**

அ) ஆமை

ஆ) தவளை



**இ) விலாங்கு மீன் ☑**

ஈ) மரப்பல்லி

- ✓ கேரளா மற்றும் மேற்கு வங்கத்தில் உள்ள மீன்பிடித் துறைமுகங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட மாதிரிகளில் இருந்து, '*Ariosoma indicum*' என்ற புதிய விலாங்கு மீன் இனத்தை இந்திய அறிவியலாளர்கள் குழு கண்டுபிடித்துள்ளது.
- ✓ புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட இந்த விலாங்கு மீன் இனம், காங்கிரிட் ஈல்ஸ் குழுவைச் சேர்ந்தது. இண்டிகம் என்ற சொல்லுக்கு இந்தியாவில் காணப்பட்டது என்று பொருள்.

---

**9. தொலைமருத்துவ சேவையை உறுதிசெய்வதற்காக கீழ்காணும் எந்தெந்த நிறுவனங்களில், 'இ–சஞ்சீவனி' வசதி தொடங்கப்படவுள்ளது?**

**அ) ஆயுஷ்மான் பாரத்–சுகாதார & நலவாழ் மையங்கள் ☑**

ஆ) நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள்

இ) மாவட்ட மருத்துவமனைகள்

ஈ) AIIMS மருத்துவமனைகள்

- ✓ தொலைதூரப் பகுதிகளைச் சேர்ந்த மக்களைப் பாதுகாக்க, 1 லட்சம் ஆயுஷ்மான் பாரத்–சுகாதாரம் மற்றும் நலவாழ்வு மையங்களில் தொலைமருத்துவ ஆலோசனை வசதி ஆன, 'இ–சஞ்சீவனி'ஐத் தொடங்க அரசு திட்டமிட்டுள்ளது.
- ✓ ஆயுஷ்மான் பாரத் உடல்நலம் & நலவாழ் மையங்களின் 4ஆவது ஆண்டு விழாவில், 1 இலட்சம் மையங்களில் 'இ–சஞ்சீவனி டெலி–கன்சல்டேஷன்' வசதி தொடங்கப்படும்.

---

**10. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற சென்னகேசவர் கோவில் அமைந்துள்ள மாநிலம் எது?**

அ) தமிழ்நாடு

ஆ) கேரளா



**இ) கர்நாடகா ☑**

ஈ) ஒடிஸா

- ✓ பேளூரில் அமைந்துள்ள சென்னகேசவர் கோவிலின் தேர்த்திருவிழா அதன் பாரம்பரியமான மௌலவி ஒருவர் குர்ஆன் பத்திகளை ஓதியதைத் தொடர்ந்து நிகழ்ந்தது. கர்நாடக மாநில அறநிலையத்துறை அதிகாரிகளும் இந்த நடைமுறைக்கு அனுமதியளித்தனர்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. முன்னேற்றத்தை விரும்பும் மாவட்டங்களின் திட்டம் குறித்த மாநாட்டிற்கு NITI ஆயோக் ஏற்பாடு**

விடுதலைப்பெருவிழாவின் ஒருபகுதியாக, முன்னேற்றத்–தை விரும்பும் மாவட்டங்களின் திட்டம் குறித்த ஒரு நாள் மாநாட்டிற்கு NITI ஆயோக் ஏற்பாடு செய்திருந்தது.

'பங்கேற்பின்மூலம் செழுமை' என்ற தலைப்பிலான இந்த மாநாட்டில், முன்னேற்றத்தை விரும்பும் மாவட்டங்களின் ஆட்சியர்கள் மற்றும் மத்திய அரசின் பொறுப்பு அதிகாரிகள், மத்திய அமைச்சகங்கள் மற்றும் NITI ஆயோக்கின் அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

'மாற்றத்தின் கதைகள்' என்ற தலைப்பில் முன்னேற்றத்–தைவிரும்பும் மாவட்டங்களின் 30 புதுமை முயற்சிகளும் இந்த மாநாட்டில் வெளியிடப்பட்டது. பழக்கவழக்க கொள்கைகள் பயன்பாடு, புதுமை கண்டுபிடிப்புகள், பிரதிபலிப்பு உள்ளிட்ட அம்சங்களின் அடிப்படையில் இப்புதுமை முயற்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

---

**2. திரைத்துறையினருக்கு கருணாநிதி பெயரில் விருது: அமைச்சர் மு பெ சாமிநாதன் அறிவிப்பு**

திரைத்துறையில் சிறந்து விளங்குவோருக்கு கருணாநிதி பெயரில் 'கலைத்துறை வித்தகர்' விருது வழங்கப்படும் என்று செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் மு பெ சாமிநாதன் அறிவித்தார்.

தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் ஊடக மையத்துக்கு புதிய நவீன தொழில்நுட்பக் கருவிகள், தற்போது வளர்ந்துவரும் நவீன அறிவியல் தொழில்நுட்பத்துக்கு ஏற்றவாறு ₹14 லட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து மேம்படுத்தப்படும்.

தமிழ்நாடு அரசு MGR திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் அமைந்துள்ள குளிர்சாதன வசதியுடன் கூடிய படப்பிடிப்புத்தளத்தை முழு அளவில் புனரமைக்கும் பணிகள், பழைய மாணவர் விடுதி, நீதி மன்றம், சிறைச்சாலை, காவல் நிலையம் ஆகிய படப் பிடிப்புக்கட்டடங்களைச்சீரமைக்கும் பணிகள், படப்பிடிப்புத் தளத்தில் மையப்படுத்தப்பட்ட குளிர்சாதனக் கருவிகள் புதிதாக அமைக்கும் பணிகள், இரண்டு புதிய மின் மாற்றிகள் நிறுவும் பணிகள், இதர மின்சீரமைப்புப் பணிகள் ஆகியவை ₹5.10 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

திரைப்படத்துறையில் மிகச்சிறப்பாகப் பணியாற்றி வருபவ–ர்களுக்கு 'கலைத்துறை வித்தகர்' விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ்த்திரையுலகில் சிறந்து விளங்கிய வாழ்நாள் சாதனையாளருக்கு கருணாநிதி பெயரில் கலைஞர் கலைத்துறை வித்தகர் விருது தமிழக அரசின் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் ஜூன்.3–இல் வழங்கப்படும். இந்த விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் விருதாளருக்கு ₹10 இலட்சம் மற்றும் நினைவுப்பரிசு வழங்கப்படும்.

---

**3. மாயூரம் வேதநாயகத்துக்கு அரங்கம், சிலை: அமைச்சர் மு பெ சாமிநாதன்**

தமிழில் முதல் நாவல் (பிரதாப முதலியார் சரித்திரம்) எழுதிய மாயூரம் முன்சீப் வேதநாயகத்துக்கு சிலை, அரங்கம் மயிலாடுதுறையில் அமைக்கப்படும் எனச் செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் மு பெ சாமிநாதன் அறிவித்தார்.

தமிழில் முதல் நாவல் (பிரதாப முதலியார் சரித்திரம் – எழுதப்பட்டது 1857; வெளியிடப்பட்டது 1879) எழுதிய மாயூரம் முன்சீப் வேதநாயகத்துக்கு மயிலாடுதுறையில் ₹3 கோடியில் அரங்கம், சிலை அமைக்கப்படும்.

வேலூரில் உள்ள அண்ணா கலையரங்கம், அண்ணா பல்நோக்கு கலையரங்கமாக ₹10 கோடி செலவில் மாற்றி புதிதாகக்கட்டப்படும். தருமபுரியில் அமைந்துள்ள அதிய–மான் கோட்டம் ₹1 கோடி செலவில் புனரமைக்கப்படும்.

---

**4. 2023–க்குள் 'எண்மச் செலாவணி' அறிமுகம்: மத்திய நிதியமைச்சர்**

இந்தியாவில் 2023–க்குள் 'எண்மச்செலாவணி' (டிஜிட்டல் கரன்சி) அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக மத்திய நிதியமைச்சகம் டுவிட்டரில் வெளியிட்ட பதிவுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அமெரிக்கா சென்றுள்ள மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், அங்குள்ள சான் பிரான்சிஸ்கோ நகரத்தில் 'இந்தியாவின் எண்ம (டிஜிட்டல்) புரட்சியில் முதலீடு' என்ற மையக்கருத்தில் நடைபெற்ற வட்டமேசை கூட்டத்தில் பங்கேற்றார். அப்போது அவர் பேசுகையில், இந்தியாவில் முதலீடு செய்ய முதலீட்டாளர்களின் தொழிற்சார்ந்த யோசனைகள் வரவேற்கப்படுகின்றன.

இந்தியாவில் அதிக அளவில் புதிய தொழில் (ஸ்டார்ட்–அப்) தொடங்கும் சூழலை உருவாக்க இந்திய அரசின் தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக துறை சார்பில் ஸ்டார்ட்–அப் பிரிவு தொடங்கப்பட்டுள்ளது. இந்தியாவில் புதிய தொழில் தொடங்க விரும்புவோர் டிபிஐஐடியை அணுகலாம்.

எண்மமயமாக்கல் முயற்சியில், இந்தியாவில் 2023–ஆம் ஆண்டுக்குள் எண்மச் செலாவணி அறிமுகப்படுத்தப்படும் என்று அரசு அறிவித்துள்ளது' என்றார் அவர்.

---

**1.** WTO பரிந்துரைத்தபடி, 'National Time Release Studies (TRS)'ஐ வெளியிட்ட துறை எது?

அ) DPIIT

**ஆ) CBIC ☑**

இ) CBDT

ஈ) GDFT



- ✓ மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரியத்தின் (CBIC) தலைவர் விவேக் ஜோரி, துறையால் நடத்தப்படும் நேர வெளியீட்டு ஆய்வுகளின் தொகுப்பை வெளியிட்டார்.
- ✓ TRS என்பது வர்த்தக வசதி ஒப்பந்தம் மற்றும் உலக சுங்க அமைப்பு (WCO) ஆகியவற்றின்கீழ் WTO பரிந்துரைத்தபடி, பன்னாட்டு வாணிபத்தின் சரக்கு அனுமதி செயல்முறையை மதிப்பிடுவதற்கான ஒரு செயல்திறன் அளவீட்டுக் கருவியாகும்.

---

**2.** 'இரும்புக்கற்றை (Iron Beam)' என்ற பெயரிலான புதிய லேசர் ஏவுகணை–பாதுகாப்பு அமைப்பை வெற்றிகரமாக சோதித்துள்ள நாடு எது?

அ) ரஷ்யா

ஆ) வட கொரியா

**இ) இஸ்ரேல் ☑**

ஈ) பிரான்ஸ்



- ✓ எறிகணைகள், ஏவுகணைகள், பீரங்கி–எதிர்ப்பு எறிகணைகள் மற்றும் ஆளில்லா வானூர்திகள்போன்ற பல வான்வழி பொருட்களை இடைமறித்து தாக்கும் 'இரும்புக்கற்றை – Iron Beam' என்ற பெயரிலான புதிய லேசர் ஏவுகணை–தற்காப்பு அமைப்பை இஸ்ரேல் வெற்றிகரமாக சோதித்துள்ளது.

---

**3.** 2023–ஆடவருக்கான FIH ஹாக்கி உலகக்கோப்பைப் போட்டிகளை நடத்துகிற இந்திய மாநிலம் எது?

அ) தமிழ்நாடு

**ஆ) ஒடிஸா ☑**

இ) புது தில்லி

ஈ) ஹரியானா



- ✓ 2023 – FIH ஆடவர் உலகக்கோப்பை ஹாக்கியை ஒடிஸா மாநிலம் நடத்துகிறது. நான்காண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் இப்போட்டி ஜன.13 முதல் 29 வரை புவனேஸ்வர் மற்றும் ரூர்கேலாவில் நடைபெறவுள்ளது.
- ✓ ஒடிஸாவின் முதல்வர் நவீன் பட்நாயக் அண்மையில் FIH ஒடிஸா ஆண்கள் உலகக்கோப்பை ஹாக்கி – 2023இன் அதிகாரப்பூர்வ இலச்சினையை வெளியிட்டார். நாட்டின் மிகப்பெரிய ஹாக்கி அரங்கம் ரூர்கேலாவில் கட்டப்பட்டு வருகிறது.

---

**4.** 'FYN' என்ற தனது புதிய நிறுவன இணையதளத்தை அறிமுகப்படுத்திய இந்திய தனியார் துறை வங்கி எது?

அ) YES வங்கி

ஆ) பெடரல் வங்கி

**இ) கோடக் மஹிந்திரா வங்கி ☑**

ஈ) ஆக்சிஸ் வங்கி

- ✓ கோடக் மஹிந்திரா வங்கியானது அண்மையில் வணிக வங்கியியல் மற்றும் பெருநிறுவன வாடிக்கையாளர்களு–க்காக பிரத்யேகமான அதன் புதிய நிறுவன இணைய தளமான 'Kotak FYN'–ஐ அறிமுகப்படுத்தியது.
- ✓ வங்கியின் வாடிக்கையாளர்கள் அனைத்து வர்த்தக மற்றும் சேவை பரிவர்த்தனைகளை மேற்கொள்ள இந்த இணையதளத்தைப் பயன்படுத்தலாம்.

---

**5.** 2022 – மால்கம் ஆதிசேஷையா விருதுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள இந்தியப் பொருளாதார வல்லுநர் யார்?

அ) ஜெயதி கோஷ்

**ஆ) பிரபாத் பட்நாயக் ☑**

இ) அபிஜீத் பானர்ஜி

ஈ) ஜீன் டிரேஸ்



- ✓ நடப்பு 2022ஆம் ஆண்டுக்கான மால்கம் ஆதிசேஷையா விருதுக்கு மூத்த பொருளாதார நிபுணர் பிரபாத் பட்நாயக் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இந்த விருது மால்கம் மற்றும் எலிசபெத் ஆதிசேஷையா அறக்கட்டளையால் ஆண்டு தோறும் வழங்கப்படுகிறது.
- ✓ கேரள மாநிலத்தின் திட்ட வாரியத்தின் துணைத் தலைவராகவும் இவர் பணியாற்றியுள்ளார்.

---

**6.** MyGov நடத்தும், 'சப்கா விகாஸ் மகா வினாடி–வினா' போட்டியின் கருப்பொருள் என்ன?

**அ) ஆத்மநிர்பார் பாரத் ☑**

ஆ) அரசின் திட்டங்களை அறியுங்கள்

இ) குடிமக்களை உணர்வூட்டல்

ஈ) MyGov உங்கள் அரசு



- ✓ மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின்கீழ் உள்ள 'MyGov', 'சப்கா விகாஸ் மகா வினாடி–வினா' தொடரை ஏற்பாடு செய்கிறது. இந்திய அரசாங்கத்தின் பல்வேறு வளர்ச்சி மற்றும் நலத்திட்டங்கள் மற்றும் நல்லாட்சிபற்றிய விழிப்புணர்வை குடிமக்களிடையே உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட நாட்டின் மிகப் பெரிய வினாடி–வினா போட்டி இதுவாகும்.
- ✓ PM கரீப் கல்யாண் அன்ன யோஜனா குறித்த தொடக்க வினாடி–வினாவுடன் இந்தப் போட்டி தொடங்கப்பட்டது. 'ஆத்மநிர்பர் பாரத்' என்ற கருப்பொருளின்கீழ் இப்போட்டி தொடங்கியது.

---

**7.** அலையன்ஸ் ஏரின் முதல் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட வணிக விமானமான, 'டார்னியர் 228' விமானத்தைத் தயாரித்த அமைப்பு எது?

அ) DRDO

**ஆ) HAL ☑**

இ) BEL

ஈ) BHEL



- ✓ அலையன்ஸ் ஏரின் முதல் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட, 'டார்னியர் 228' வானூர்தியானது திப்ரூகர்–பாசிகாட்

வழித்தடத்தில் தனது முதல் வணிகப் பயணத்தை மேற்கொண்டுள்ளது.

✓ 'டார்னியர் 228' விமானமானது இந்திய வான்படையால் இயக்கப்படும் 'Do–228'ஐ அடிப்படையாகக்கொண்டது இது இந்தியாவில் HALஆல் தயாரிக்கப்பட்டது ஆகும்.

---

**8.** 2022 – உலக புவி நாளுக்கானக் கருப்பொருள் யாது?

அ) Covid and Planet

**ஆ) Invest on our Planet ☑**




இ) Sustainable Living

ஈ) No to Pollution

✓ சுற்றுச்சூழலைக் காக்கவும், சேதமடைந்த சுற்றுச்சூழல் அமைப்புகளை மீட்டெடுக்கவும், மேலும் நிலையான வாழ்க்கையை வாழவும் மக்களை உணர்த்துவதற்காக ஆண்டுதோறும் ஏப்ரல்.22ஆம் தேதி அன்று உலக புவி நாள் கொண்டாடப்படுகிறது. புவி நாள், கடந்த 1970 முதல் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த நாள் முதன்முதலில் அமெரிக்காவில் அனுசரிக்கப்பட்டது.

✓ 2009ஆம் ஆண்டில், ஐநா அவை ஏப்ரல்.22–ஐ, 'சர்வதேச தாய்பூமி நாள்' என அறிவித்தது. "*Invest on our Planet*" என்பது இந்த ஆண்டில் வந்த உலக புவி நாளுக்கானக் கருப்பொருளாகும்.

---

**9. மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களுக்கான மின்கல மாற்ற வரைவுக் கொள்கையை வெளியிட்ட நிறுவனம் எது?**

அ) எரிசக்தி அமைச்சகம்

ஆ) புது & புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம்

NITI Aayog

**இ) NITI ஆயோக் ☑**

ஈ) ஆற்றல் திறன் பணியகம்

✓ முக்கியமாக மின்சார ஈருருளிகள் மற்றும் மூன்று சக்கர வண்டிகள் மின்சார தானிகளில் மின்கலங்களை மாற்றுவதை ஆதரிப்பதற்காக, இந்திய அரசாங்கத்தின் மதியுரையகமான NITI ஆயோக், மின்கல மாற்ற வரைவுக் கொள்கையைத் தயாரித்துள்ளது.

---

**10. 'பொது நிர்வாகத்தில் சிறந்து விளங்கியமைக்கான பிரதமரின் விருதுகள்' எந்தெந்தப் பிரிவுகள் / நபர்களுக்கு வழங்கப்படுகின்றன?**

அ) முதலமைச்சர்கள்

**ஆ) மாவட்டங்கள் / செயல்படுத்தும் அலகுகள் மற்றும் மத்திய / மாநிலஞ்சார் அமைப்புகள் ☑**

இ) முதலமைச்சர்கள் / ஆளுநர்கள்

ஈ) தலைமைப் பொறுப்புகளில் உள்ள வெளிநாடு வாழ் இந்தியர்கள்

✓ குடிமைப்பணிகள் நாளையொட்டி, 'பொது நிர்வாகத்தில் சிறந்து விளங்கியமைக்கான பிரதமரின் விருதுகளை'ப் பிரதமர் மோடி வழங்கினார். சாதாரண குடிமக்களின் நலனுக்காக மாவட்டங்கள் / செயல்படுத்தும் அலகுகள் மற்றும் மத்திய / மாநில அமைப்புகளால் செய்யப்பட்ட அசாதாரணமான பணிகளை அங்கீகரிக்கும் நோக்கில் இவ்விருதுகள் நிறுவப்பட்டன. இந்த ஆண்டு மொத்தம் 16 விருதுகள் வழங்கப்பட்டன.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. நீலப்புரட்சியின் திட்டத்தின்மூலம் நடப்பு நிதியாண்டில் 15 மில்லியன் டன் என்ற இலக்கை அடைய மத்திய அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது: மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன்**

நீலப்புரட்சியின் திட்டத்தின்மூலம் நடப்பு நிதியாண்டில் 15 மில்லியன் டன் என்ற இலக்கை அடைய மத்திய அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருவதாக மத்திய இணையமைச்சர் Dr L முருகன் தெரிவித்துள்ளார்.

மீனுற்பத்தியை அதிகரிக்கவும், கடல் & நிலப்பகுதிகளில் மீன்வளத்திற்கான அடிப்படை உட்கட்டமைப்பை உருவாக்கவும், மீன்வளம் & மீன்வளர்ப்பு உட்கட்டமைப்பு நிதி (FIDF) திட்டமிட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

---

**2. தேனி, இராமநாதபுரம் மாவட்டங்களில் கட்டாய ஹால்மார்க் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது: இந்திய தர நிர்ணய அமைவனம்**

இந்திய தர நிர்ணய அமைவனத்தால், 'ஹால்மார்க்' செய்வது கட்டாயமாக்கப்பட்ட பிறகு நாட்டின் 256 மாவட்டங்களில், தினமும் 3 இலட்சத்துக்கும் அதிகமான தங்கத்தலான பொருட்கள் HUID முத்திரையுடன் ஹால்மார்க் செய்யப்படுகின்றன. தற்போது 2022, ஜூன்.1 முதல் கட்டாய ஹால்மார்க் செய்வதன் 2ஆம் கட்டத்தை அமல்படுத்துவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

இதனால் மேலும் 32 புதிய மாவட்டங்களில் ஹால்மார்க் செய்யும் திட்டம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதன்படி தமிழ்நாட்டில் தேனி, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் கட்டாய ஹால்மார்க் செயல்படுத்தப்படவுள்ளது

நுகர்வோர் வாங்கும் HUID எண்ணுடன் கூடிய ஹால்மார்க் செய்யப்பட்ட தங்கநகைகளின் நம்பகத் தன்மை மற்றும் தூய்மையை, பிளே ஸ்டோரிலிருந்து பதிவிறக்கம் செய்யக்கூடிய 'BIS CARE' செயலியைப் பயன்படுத்தி நுகர்வோரே சரிபார்க்கலாம் என இந்திய தர நிர்ணய அமைவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**3. சித்த மருத்துவப் பல்கலை–க்கு முதல்வரே வேந்தர்: பேரவையில் மசோதா நிறைவேற்றம்**

தமிழகத்தில் சித்த மருத்துவப் பல்கலைக்கழகம் அமைக்கப்படுவதற்கான சட்ட மசோதா பேரவையில் நிறைவேற்றப்பட்டது. பல்கலைக்கழகத்தின் வேந்தராக மாநிலத்தின் முதல்வர் செயல்படும் வகையில் இந்த மசோதாவில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களில் துணை வேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்தை மாநில அரசுக்கு அளிக்க வகை செய்யும் சட்டத்திருத்த மசோதா சட்டப்

பேரவையயில் நிறைவேற்றப்பட்டது. இந்த நிலையில், புதிதாக அமைக்கப்படவிருக்கும் சித்த மருத்துவப் பல்கலைக்கழகத்தின் வேந்தராக மாநிலத்தின் முதல்வரே செயல்படும் வகையில் சட்ட மசோதா இப்போது நிறைவேற்றப்பட்டுள்ளது.

---

**4. நம்மாழ்வார் இயற்கை வேளாண் ஆராய்ச்சி மையம்: முதல்வர் மு க ஸ்டாலின் தொடக்கி வைத்தார்**

கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் நம்மாழ்வார் இயற்கை வேளாண் ஆராய்ச்சி மையத்தை முதல்வர் மு க ஸ்டாலின் திறந்து வைத்தார். தலைமைச் செயலகத்தில் காணொலி காட்சி வழியாக நடைபெற்ற நிகழ்ச்சி குறித்து, தமிழக அரசு வெளியிட்ட செய்தி:

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் கிருஷ்ணகிரி மாவட்டம் ஜீனூரில் புதிய தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், ஈரோடு மாவட்டம் பவானிசாகரில் புதிய மஞ்சள் ஆராய்ச்சி மையம், கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி மையம் ஆகியன அமைக்கப்பட்டுள்ளன. இவற்றை முதல்வர் மு க ஸ்டாலின் தொடக்கி வைத்தார்.

மேலும், கரூர், நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர், சிவகங்கை மாவட்டம் செட்டிநாடு ஆகிய மூன்று இடங்களில் புதிய வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களை முதல்வர் தொடக்கி வைத்தார்.

---

**5. சென்னையில் ₹10 கோடியில் சர்வதேச தரத்தில் வடிவமைப்பு நிலையம்: அமைச்சர் ஆர் காந்தி**

சென்னையில் ₹10 கோடியில் சர்வதேச தரத்தில் வடிவமைப்பு நிலையம் உருவாக்கப்படும் என்று கைத்தறித்துறை அமைச்சர் ஆர் காந்தி அறிவித்தார்.

இந்த வடிவமைப்பு நிலையம் இந்திய அரசு, தனியார் பங்குதாரர்கள் மற்றும் மாநில அரசிடமிருந்து நிதியைப் பெற்று கோ-ஆப்டெக்ஸ் வளாகத்தில் தோராயமாக ₹10 கோடி செலவில் பொது-தனியார் கூட்டாண்மை நிறுவனமாக உருவாக்கப்படும்.

சென்னையில் ஜவுளி நகரம் அமைப்பதற்கான சாத்தியக் கூறு ஆய்வு மற்றும் விரிவான செயல்திட்டம் ₹1 கோடியில் தயாரிக்கப்படும் என்றார்.

---

**6. ராணுவ துணை தலைமைத்தளபதியாக பி எஸ் ராஜு நியமனம்**

இந்திய இராணுவப் படையின் துணை தலைமைத் தளபதியாக Lt Gen பி எஸ் ராஜு நியமிக்கப்பட்டுள்ளார்.

இராணுவ தலைமைத் தளபதி எம் எம் நரவணேவின் பதவிக்காலம் ஏப்.30 அன்று நிறைவடைகிறது. இராணுவத்தின் அடுத்த தலைமைத்தளபதியாக Lt Gen மனோஜ் பாண்டே மே.1 பொறுப்பேற்கவுள்ளார். இந்த நிலையில், இராணுவத்தின் துணை தலைமைத் தளபதியாக பி எஸ் ராஜு நியமிக்கப்பட்டுள்ளார். மே 1-ஆம் தேதி அவர் பொறுப்பை ஏற்பார் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பயிற்சி பெற்ற ஹெலிகாப்டர் விமானியான பி எஸ் ராஜு, தற்போது ராணுவ செயல்பாடுகள் பிரிவின் இயக்குநராகப் பணியாற்றி வருகிறார். சீனாவுடன் பதற்ற சூழல் நிலவும் கிழக்கு லடாக் எல்லைப் பகுதியில் ராணுவப் படைகளின் ஒட்டுமொத்த தயார்நிலையை அவரே மேற்பார்வையிட்டார்.

பிரிட்டனில் உள்ள ராயல் பாதுகாப்புக் கல்லூரியில் பட்டம் பெற்றுள்ளார். பயங்கரவாதத் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பான மேற்படிப்பை அமெரிக்காவின் மான்டெரி நகரில் உள்ள கடற்படைக் கல்லூரியில் பயின்றார். சிறந்த சேவைகளுக்காக உத்தம் யுத் சேவா பதக்கம், அதி விசிஷ்ட சேவா பதக்கம், யுத் சேவா பதக்கம் ஆகியவற்றையும் அவர் பெற்றுள்ளார்.

---

**7. 29-04-2022 - 'பாவேந்தர்' பாரதிதாசன் அவர்களின் 132-ஆவது பிறந்தநாள்.**

---

**8. 'தேனீக்கள் ரீங்காரம்' திட்டம் இருந்தும் - 2019ஆம் ஆண்டில் இருந்து இதுவரை இரயிலில் அடிபட்டு 48 யானைகள் இறப்பு**

வனப்பகுதிகளில் யானைகள் செல்லும் பாதைகளில் இரயில் தண்டவாளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் இரயில்களில் அடிபட்டு யானைகள் தொடர்ந்து இறக்கின்றன. இதை தடுக்க, யானைகள் உள்ள பகுதிகளில் தண்டவாளங்கள் அருகே தேனீக்கள் ரீங்காரமிடும் ஒலியை வெளியிடும் கருவிகளை இரயில்வே பொருத்தியது. தேனீக்கள் ஒலி யானைகளுக்கு பிடிக்காது என்பதால் நாட்டின் பல பகுதிகளில் 'பிளான் பீ' என்ற பெயரில் இத்திட்டம் கடந்த 2017ஆம் ஆண்டு அமல்படுத்தப்பட்டது.

இதன்மூலம் அந்தக் கருவிகள் 600 மீட்டர் தூரம் வரை கேட்கும் அளவில் தேனீக்களின் ரீங்கார ஒலியை தொடர்ந்து எழுப்பும். அதை கேட்கும் யானைகள் தண்டவாளப் பகுதிக்கு வராமல் விலகிச் செல்லும் என்று எதிர் பார்க்கப்பட்டது. ஆனால், இத்திட் டத்தை செயல்படுத்தியும் கடந்த 2019ஆம் ஆண்டில் இருந்து இதுவரை 48 யானைகள் இரயில்களில் அடிபட்டு இறந்துள்ளன.

கடந்த 2019ஆம் ஆண்டில் இருந்து இதுவரை இரயில்கள் மோதி 48 யானைகள், 188 மற்ற விலங்குகள் இறந்துள்ளன. அதிகபட்சமாக தென்கிழக்கு மத்திய மண்டலத்தில் 72 விலங்குகள் இறந்துள்ளன.

---